https://telegram.me/aedahamlibrary

# இரகசியம் எவ்வாறு என் வாழ்க்கையை மாற்றியது

நிஜ மாந்தர்கள். உண்மைக் கதைகள்.

Tamil Edition

The Secret®

ரோன்டா பைர்ன்

https://telegram.me/aedahamlibrary



https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

# இரகசியம்

# எவ்வாறு என் வாழ்க்கையை மாற்றியது

நிஜ மாந்தர்கள். உண்மைக் கதைகள்.

ரோன்டா பைர்ன்

MANJUL

மஞ்சுள் பப்ளிஷிங் ஹவுஸ்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

*First published in India by*

MANJUL

**Manjul Publishing House**
*Corporate and Editorial Office*
2nd Floor, Usha Preet Complex, 42 Malviya Nagar, Bhopal 462 003 - India
*Sales and Marketing Office*
7/32, Ansari Road, Daryaganj, New Delhi 110 002 - India Website:
www.manjulindia.com
*Distribution Centres*
Ahmedabad, Bengaluru, Bhopal, Kolkata, Chennai, Hyderabad, Mumbai, New Delhi, Pune

**Tamil** translation copyright © 2019 by Manjul Publishing House Pvt. Ltd
This edition first published in 2019

*How The Secret Changed My Life* by *Rhonda Byrne*
Copyright © 2016 by Making Good LLC. THE SECRET word mark and logo are trademarks of Creste LLC.
www.thesecret.tv
All rights reserved.

Published by arrangement with the original publisher, Atria Books, a Division of Simon & Schuster, Inc.

**ISBN 978-93-89143-06-5**

Translation by PSV Kumarasamy

Cover design by Nic George for Making Good LLC and Albert Tang, art director for Atria Books
Book design concept by Nic George for Making Good LLC Interior design by Suet Y. Chong

Printed and bound in India by Replika Press Private Limited

The information contained in this book is intended to be educational and not for diagnosis, prescription or treatment of any health disorder whatsoever. This information should not replace consultation with a competent healthcare professional. The content of this book is intended to be used as an adjunct to a rational and responsible healthcare programme prescribed by a healthcare professional. The author and publisher are in no way liable for any misuse of the material.

https://telegram.me/aedahamlibrary

No part of this publication may be reproduced, stored in or introduced into a retrieval system, or transmitted, in any form, or by any means (electronic, mechanical, photocopying, recording or otherwise) without the prior written permission of the publisher. Any person who does any unauthorized act in relation to this publication may be liable to criminal prosecution and civil claims for damages.

https://telegram.me/aedahamlibrary

# உள்ளடக்கம்

முன்னுரை

கேட்டல், நம்புதல், பெறுதல்: இந்தப் படைப்புச் செயல்முறையை நான் எவ்வாறு பயன்படுத்தினேன்

மகிழ்ச்சியைக் கைவசப்படுத்துவதற்கு இரகசியத்தை நான் எவ்வாறு பயன்படுத்தினேன்

செல்வத்தைக் குவிப்பதற்கு இரகசியத்தை நான் எவ்வாறு பயன்படுத்தினேன்

உறவுகளில் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு இரகசியத்தை நான் எவ்வாறு பயன்படுத்தினேன்

ஆரோக்கியத்தைப் பேணுவதற்கு இரகசியத்தை நான் எவ்வாறு பயன்படுத்தினேன்

தொழில்வாழ்க்கையில் சிறப்புறுவதற்கு இரகசியத்தை நான் எவ்வாறு பயன்படுத்தினேன்

என் வாழ்க்கையை மாற்றுவதற்கு இரகசியத்தை நான் எவ்வாறு பயன்படுத்தினேன்

நன்றியுரை

பங்களித்துள்ளவர்கள் குறித்த விபரம்

https://telegram.me/aedahamlibrary

இந்நூல் உங்களுக்குக் காணிக்கை

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

# முன்னுரை

இரகசியம் இவ்வுலகில் வெளியிடப்பட்டதிலிருந்து, **இரகசியம்** புத்தகத்தில் இடம்பெற்றுள்ள கொள்கைகளைப் பயன்படுத்தி, தங்களுக்கு விருப்பமானதைத் தாங்கள் கவர்ந்திழுத்த விதத்தைப் பற்றிய கதைகளைப் பல்லாயிரக்கணக்கான மக்கள் எங்களுக்கு எழுதி எங்களுடன் பகிர்ந்து கொண்டுள்ளனர். ஆரோக்கியம், செல்வம், ஒரு கச்சிதமான வாழ்க்கைத்துணைவர், ஒரு கச்சிதமான தொழில் அல்லது வேலை, முறிந்து போன ஓர் உறவை அல்லது மணவாழ்க்கையைச் சீர்செய்தல், தொலைந்து போன ஒன்றைத் திரும்பப் பெறுதல், மனச்சோர்வு நீங்கி மகிழ்ச்சி கைவரப் பெறுதல் போன்ற பல்வேறு விஷயங்களை அவர்கள் கவர்ந்திழுத்துள்ளனர். **இரகசியம்** புத்தகத்தில் கொடுக்கப்பட்டுள்ள வழிமுறைகளைப் பின்பற்றியதன் மூலம், இவ்வுலகம் நெடுகிலும் உள்ள பல்வேறு கலாச்சாரங்களையும் பல்வேறு நாடுகளையும் சேர்ந்த இந்த மக்கள் தங்களுடைய வாழ்க்கையை அசாதாரணமான ஒன்றாக மாற்றியுள்ளனர். எது சாத்தியமில்லை என்று ஒரு சராசரி நபர் கூறியிருப்பாரோ, அதை இவர்கள் சாதித்துள்ளனர். ஏனெனில், **எல்லாமே** சாத்தியம்தான் என்பதை இவர்கள் அறிந்துள்ளனர்.

இரகசியம் தங்கள் வாழ்க்கையை எவ்வாறு மாற்றியது என்பதை விவரித்து, கடந்த பத்து ஆண்டுகளில் எங்களுக்கு வந்துள்ள கதைகளிலிருந்து நாங்கள் தேர்ந்தெடுத்துள்ளவை இப்புத்தகத்தில் இடம்பெற்றுள்ளன. இவை

https://telegram.me/aedahamlibrary

உற்சாகமும் உத்வேகமும் ஊட்டக்கூடிய உண்மைக் கதைகள். உங்கள் மனத்தின் எல்லைகளைத் தகர்த்தெறியக்கூடிய, மறக்க முடியாத ஒரு பயணத்திற்கு இவை உங்களை அழைத்துச் செல்லும். நீங்கள் யாராக இருந்தாலும் சரி, நீங்கள் எங்கே இருந்தாலும் சரி, இரகசியத்தைப் பயன்படுத்தி உங்களுக்கு விருப்பமான எதுவொன்றையும் உங்களால் உருவாக்க முடியும் என்பதை இக்கதைகள் தெளிவாக விளக்குகின்றன.

இக்கதைகளோடு கூடவே, இரகசியத்தின் ஞானமுத்துக்களின் உதவியோடு என்னுடைய வார்த்தைகள் இப்புத்தகம் நெடுகிலும் உங்களை வழிநடத்தும். இரகசியத்திற்கு நீங்கள் புதியவர் என்றால், அதன் கொள்கைகளை எப்படிப் பயன்படுத்த வேண்டும் என்பது பற்றிய விரிவான புரிதலை இது உங்களுக்குக் கொடுக்கும். இரகசியம் ஏற்கனவே உங்களுக்குப் பரிச்சயமாகியிருந்தால், நீங்கள் விரும்புகின்ற எல்லாவற்றையும் உள்ளடக்கிய ஒரு நல்ல வாழ்க்கையைக் கைவசப்படுத்துவதற்கு நீங்கள் செய்யக்கூடிய எளிய விஷயங்களை இது உங்களுக்கு நினைவுபடுத்தும்.

காலப்போக்கில் நான் என்னுடைய சொந்த வாழ்க்கையில் இரகசியத்தைப் பயன்படுத்தி என்னுடைய எண்ணற்றக் கனவுகளை நனவாக்கியுள்ளேன். ஆனால், இரகசியத்தைப் பயன்படுத்தித் தாங்கள் தங்கள் வாழ்க்கையை மாற்றிக் கொண்டுள்ள அதிசயகரமான வழிகளை மக்கள் எனக்குத் தெரியப்படுத்துவதுதான் தனிப்பட்ட முறையில் இரகசியம் எனக்கு வழங்கியுள்ள மிகப் பெரிய பரிசு என்பதில்

https://telegram.me/aedahamlibrary

எள்ளளவும் ஐயமில்லை. லௌகிகப் பொருட்கள் குதூகலமூட்டுபவைதான். உங்களுக்கு விருப்பமானவற்றை நீங்கள் கைவசப்படுத்த வேண்டும்தான். ஆனால், இன்னொருவர் ஒரு சிறப்பான வாழ்க்கையை வாழ உதவக்கூடிய விதத்தில் ஏதேனும் செய்ய முடிவது உங்களுக்கு நிரந்தரமான மகிழ்ச்சியைக் கொண்டுவரும். இறுதியில் எல்லோரும் விரும்புவது மகிழ்ச்சியைத்தானே!

உங்கள் வாழ்க்கையை உங்களால் சுலபமாக மாற்ற முடியும். அதற்காக நீங்கள் மிகவும் கஷ்டப்பட வேண்டியதில்லை. உங்கள் வாழ்க்கையை ஒரே ஒரு வழியில்தான் உங்களால் மாற்ற முடியும்: உங்கள் சிந்தனையை மாற்றுங்கள், அப்போது உங்கள் வாழ்க்கை மாறும்.

**ரோன்டா பைர்ன்**

https://telegram.me/aedahamlibrary

இரண்டு வகையான மக்கள் இருக்கின்றனர்: “நான் என் கண்ணால் பார்ப்பவற்றை மட்டுமே நம்புவேன்,” என்று கூறுவோர் ஒரு வகை. “நான் ஒன்றைப் பார்க்க வேண்டும் என்றால், நான் அதன்மீது நம்பிக்கை வைக்க வேண்டும்,” என்போர் இன்னொரு வகை.

**- இரகசியம் தினசரி போதனைகள்**

https://telegram.me/aedahamlibrary

## கேட்டல், நம்புதல், பெறுதல்: இந்தப் படைப்புச் செயல்முறையை நான் எவ்வாறு பயன்படுத்தினேன்

ஈர்ப்பு விதிதான் வாழ்வின் மாபெரும் இரகசியம். ஒத்தவை ஒத்தவற்றை ஈர்க்கும் என்று அவ்விதி கூறுகிறது. அதாவது, உங்கள் மனத்தில் நீங்கள் நிலைப்படுத்தியுள்ள எண்ணங்களையும் காட்சிகளையும் **ஒத்த** அனுபவங்களையும் சூழல்களையும் நீங்கள் உங்கள் வாழ்விற்குள் கவர்ந்திழுத்துக் கொண்டிருக்கிறீர்கள் என்று அதற்குப் பொருள். நீங்கள் தொடர்ந்து எதைப் பற்றிச் சிந்திக்கிறீர்களோ, அதையே நீங்கள் உங்கள் வாழ்விற்குள் கவர்ந்திழுக்கிறீர்கள்.

உங்களுக்கு என்ன வேண்டுமோ அதைப் பற்றிச் சிந்தித்து, தொடர்ந்து அதே சிந்தனையில் நீங்கள் மூழ்கியிருந்தால், அதை நீங்கள் உங்கள் வாழ்விற்குள் கொண்டுவருவீர்கள். மிகவும் சக்திவாய்ந்த இந்த விதியின் மூலமாக உங்களுடைய எண்ணங்கள் உங்கள் வாழ்வில் பொருட்களாக உருப்பெறுகின்றன. உங்களுடைய தற்போதைய எண்ணங்கள்தான் உங்களுடைய எதிர்கால வாழ்க்கையை உருவாக்கிக் கொண்டிருக்கின்றன. எனவே, நிகழ்கணத்தில் உங்கள் எண்ணங்களை மாற்றுவதன் மூலம், உங்கள் எதிர்கால வாழ்க்கையை உங்களால் மாற்ற முடியும்.

இரகசியத்தை நீங்கள் புரிந்து கொண்டீர்கள் என்றால், படைப்புச் செயல்முறையைப் பயன்படுத்தி உங்களுக்கு விருப்பமான எதுவொன்றையும் உங்களால் கவர்ந்திழுக்க

https://telegram.me/aedahamlibrary

முடியும், நீங்கள் கனவு காணுகின்ற வகையான வாழ்க்கையை உங்களால் வாழ முடியும். படைப்புச் செயல்முறை பின்வரும் மூன்று எளிய நடவடிக்கைகளை உள்ளடக்கியுள்ளது: கேட்டல், நம்புதல், மற்றும் பெறுதல்.

## முதலில் கேளுங்கள்

உங்கள் மனத்தில் நீங்கள் தொடர்ந்து நிலைப்படுத்துகின்ற எந்தவோர் எண்ணத்திற்கும் ஈர்ப்பு விதி செயல்விடை அளிக்கிறது. நீங்கள் எதைக் கேட்டாலும், நீங்கள் கேட்டது உங்களுக்குக் கிடைக்கும் என்பதில் நீங்கள் எவ்வித ஐயமும் கொள்ள வேண்டியதில்லை.

## ஸ்டீவி வொன்டருடன் இணைந்து பாடுதல்

வணக்கம். என் பெயர் ஜான் பெரைரா. **இரகசியம்** என் வாழ்வில் இவ்வழியில்தான் அற்புதத்தை நிகழ்த்தியது. ஒரு குறிப்பிட்டக் காலகட்டத்தில் நான் பெரும் மனச்சோர்வால் துன்புற்றுக் கொண்டிருந்தேன். நான் மிகவும் கோபப்பட்டேன். குறிப்பாக, நானும் என் சகோதரியும் கூட்டு சேர்ந்திருந்த வியாபாரக் கூட்டாளி ஒருவர்மீது நான் கடுங்கோபத்தில் இருந்தேன். **இரகசியம்** திரைப்படத்தை நான் பார்த்தே ஆக வேண்டும் என்று என் சகோதரி என்னிடம் வலியுறுத்திக் கொண்டே இருந்தாள். ஒருநாள், நாங்கள் எல்லோரும் எங்கள் வேலைகளை அப்படியே போட்டுவிட்டு, அத்திரைப்படத்தைப் பார்க்க வேண்டும் என்று அவள் எங்களைக் கட்டாயப்படுத்தி, அதைச் சாதிக்கவும் செய்தாள். அன்றிலிருந்து, இரகசியத்தின் கொள்கைகளைப் பயன்படுத்திப் பார்ப்பதென்று நான் தீர்மானித்தேன்.

இரண்டு நாட்களுக்குப் பிறகு, என்னுடைய உடற்பயிற்சி நிலையத்தில் நான் ஒரு செய்தித்தாளைப் படித்துக்

https://telegram.me/aedahamlibrary

கொண்டிருந்தபோது, ஸ்டீவி வொன்டர் என்ற பாடகருடைய கச்சேரி அக்டோபர் 22ம் நாளன்று நடைபெறவிருந்ததாகத் தெரிவித்த ஓர் அறிவிப்பை நான் கவனித்தேன். அக்டோபர் 22 என்னுடைய பிறந்தநாளும்கூட. நான் உடனே என் சகோதரியிடம், "நான் ஸ்டீவியை சந்திக்கப் போவதோடு மட்டுமல்லாமல், அவரோடு சேர்ந்து பாடவும் போகிறேன்," என்று கூறினேன்.

அமெரிக்கப் பாடகரான ஜார்ஜ் பென்சனை நான் சந்தித்திருந்தேன் என்றும், ஜமிரோக்வீ இசைக் குழுவினருடன் ஒரு கேளிக்கை விருந்தில் நான் கலந்து கொண்டிருந்தேன் என்றும், இப்போது ஸ்டீவி வொன்டருடன் சேர்ந்து நான் பாடவிருந்தேன் என்றும் நான் எல்லோரிடமும் கூறினேன். எனக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதாக எல்லோரும் நினைத்தனர். மறுநாள் நான் என்னுடைய சகோதரனைச் சந்திக்கச் சென்றபோது, அவனுக்குக் காபி தயாரிப்பதற்காக நான் எழுந்தேன். எனவே, தொலைக்காட்சியில் அப்போது நாங்கள் பார்த்துக் கொண்டிருந்த நிகழ்ச்சியைச் சிறிது நேரம் நிறுத்தி வைக்கும்படி நான் அவனிடம் கூறினேன். நான் காபி தயாரித்துவிட்டு மீண்டும் அந்த அறைக்கு வந்தபோது, தொலைக்காட்சித் திரையில், **மேடையில் ஸ்டீவி வொன்டருடன் நேரடியாக இணைந்து பாடுவதற்கு உங்களுக்கு ஒரு வாய்ப்பு** என்ற அறிவிப்பு இடம்பெற்றிருந்தது. அதை என்னால் நம்பவே முடியவில்லை.

நான் நேராக என் வீட்டிற்குச் சென்று, அந்தப் போட்டியில் கலந்து கொள்ளுவதற்குத் தேவையானவற்றைச் செய்யத் தொடங்கினேன். நான் ஏன் அவருடன் சேர்ந்து பாட விரும்பினேன் என்பது பற்றி நான் இருபது வார்த்தைகள் எழுத வேண்டியிருந்தது. நான் அதை எழுதிக் கணினியின் மூலம் அதைச் சமர்ப்பித்தேன். எதற்கும் இருக்கட்டும் என்று மீண்டும் ஒருமுறை நான் அதைச் சமர்ப்பிக்கவா என்று நான் என் காதலியிடம் கேட்டேன். சரியாக அந்நேரத்தில் என் கணினி

https://telegram.me/aedahamlibrary

பழுதானது. அது அதன் பிறகு சரியாகவே இல்லை. “கவலைப்படாதே, நான்தான் இப்போட்டியில் வெற்றி பெறப் போகிறேன். நான் மீண்டும் அதைச் சமர்ப்பிக்கத் தேவையில்லை,” என்று நான் என் காதலியிடம் கூறினேன்.

ஒரு வாரம் கழித்து, நான் என் நண்பர்கள் சிலருடன் வெளியே சென்றிருந்தேன். அவர்களில் ஒருவனிடம், “நான் ஸ்டீவி வொன்டருடன் சேர்ந்து பாடப் போகிறேன்,” என்று நான் கூறினேன். எனக்கு மறை கழன்றுவிட்டது என்பதுபோல அவன் என்னைப் பார்த்தான்.

மறுநாள், நான் என் வேலை முடிந்து மதியம் வீட்டிற்குப் போனவுடன், என் காதலியிடம், “நான் அவருடன் பாடும்போது நான் என்ன செய்ய வேண்டும்?” என்று கேட்டேன். அதற்கு அவள், “அக்கணத்தை முற்றிலுமாக அனுபவியுங்கள். ஏனெனில், கண்ணிமைக்கும் நேரத்திற்குள் எல்லாம் முடிந்துவிடும்,” என்று கூறினாள். சிறிது நேரம் தூங்கி ஓய்வெடுப்பதற்காக நான் என் அறைக்குச் சென்றபோது என்னுடைய தொலைபேசி ஒலிக்கத் தொடங்கியது. நான் அதற்கு பதிலளித்தபோது, “நீங்கள் ஜான் பெரைராவா? நீங்கள் ஒரு போட்டியில் கலந்து கொண்டீர்களா?” என்று மறுமுனையில் இருந்தவர் கேட்டார். “ஆமாம்,” என்று நான் பதிலளித்தேன். “வாழ்த்துக்கள்! தேசிய அளவில் நீங்கள் வெற்றி பெற்றுள்ளீர்கள்!” என்று அவர் கூறினார். நான் மகிழ்ச்சிக் கூக்குரலிட்டுக் கொண்டே என் காதலியை அந்தரத்தில் தூக்கிப் போட்டுப் பிடிக்கத் தொடங்கினேன். நான் என் பெற்றோரை அழைத்து அந்த மகிழ்ச்சியான செய்தியைக் கூறினேன். பிறகு என்னுடைய சகோதரியை அழைத்து நான் அச்செய்தியை உற்சாகத்துடன் கூறினேன். பிறகு என்னுடைய சகோதரனை அழைத்து நான் அச்செய்தியைக் கூறினேன். முந்தைய நாள் இரவில், நான் ஸ்டீவி வொன்டருடன் பாடவிருந்ததாக எந்த நண்பனிடம் நான் கூறியிருந்தேனோ, அவனிடம் இப்போது நான் இந்த

https://telegram.me/aedahamlibrary

இனிய செய்தியைத் தெரிவித்தபோது, அவனால் அதை நம்ப முடியவில்லை.

எனவே, யாரேனும் நம்பவில்லை என்றால், அதைப் பற்றிக் கவலைப்படாதீர்கள். **நம்புங்கள்** ! நான் அதற்கான ஒரு பெரிய சான்று! நான் ஸ்டீவி வொன்டருடன் சேர்ந்து பாடியதை நீங்கள் பார்க்க விரும்பினால், http://www.youtube.com/watch?v=IMftLNs_G6M என்ற இணையத்தள முகவரிக்குச் செல்லுங்கள்.

**- ஜான் பி., சிட்னி, ஆஸ்திரேலியா**

தனக்குப் பிடித்தமான ஒன்றை இரகசியத்தைப் பயன்படுத்திக் கவர்ந்திழுத்த இன்னொருவருடைய கதை மற்றுமோர் அற்புதமான எடுத்துக்காட்டு.

## இது ஓர் அதிசயம்

**இரகசியம்** பற்றி **ஓப்ரா வின்ஃபிரேயின் தொலைக்காட்சி நிகழ்ச்சி** மூலமாக எனக்குத் தெரிய வந்தது. அப்புத்தகத்தில் எழுதப்பட்டுள்ள ஒவ்வொரு வார்த்தையையும், அத்திரைப்படத்தில் பேசப்பட்ட ஒவ்வொரு வார்த்தையையும் நான் உண்மையிலேயே நம்பினேன். பிறகு ஒருநாள், **இரகசியம்** குழுவிடமிருந்து எனக்கு ஒரு மின்னஞ்சல் வந்தது. 'பிரபஞ்ச வங்கி'யிடமிருந்து ஒரு காசோலையைத் தரவிறக்கம் செய்யும்படி கூறி அதற்கான இணையத்தள இணைப்பு ஒன்று அந்த மின்னஞ்சலில் கொடுக்கப்பட்டிருந்தது. எனவே, நான் அந்தக் காசோலையைத் தரவிறக்கம் செய்து, வேடிக்கைக்காக அதில் ஒரு லட்சம் மலேசிய ரிங்கிட் (இந்திய ரூபாயில் சுமார் 18 லட்சம்) தொகையை நிரப்பி, என்னுடைய ஒப்பனை மேசைக்கு அருகே இருக்கும் சிறிய மனக்காட்சிப் பலகையில் அதைக் குத்தி வைத்தேன்.

பிறகு, நான் ஓர் ஒரு-ரிங்கிட் நோட்டை எடுத்து, அதில் ஒரு பேனாவைக் கொண்டு சில பூஜ்ஜியங்களை எழுதினேன். நான் 1,00,000.00 என்று எழுத விரும்பினேன்.

https://telegram.me/aedahamlibrary

ஆனால் இடப்பற்றாக்குறையின் காரணமாக, நான் வெறும் ஐந்து பூஜ்ஜியங்களை மட்டுமே எழுதினேன். இறுதியில் அது 1,000.00 என்று ஆயிற்று. ஆனாலும் அதைத் தூக்கியெறிய எனக்கு மனம் வரவில்லை. எனவே, அதையும் அந்தக் காசோலையோடு சேர்த்துக் குத்தி வைத்தேன்.

நான் அதை தினமும் பார்த்துவிட்டு, என்றேனும் ஒருநாள் நிச்சயமாக அது மெய்யாகும் என்று நான் நம்பியதாக எனக்கு நானே கூறிக் கொண்டேன். நான் மனக்காட்சிப்படைப்பில் ஈடுபட்ட விதம் சரிதானா என்று எனக்குத் தெரியவில்லை. ஆனாலும், நான் அவ்வப்போது அதைச் செய்தேன். உண்மையைக் கூற வேண்டும் என்றால், நாட்கள் செல்லச் செல்ல நான் அதைப் பற்றி மறந்துவிட்டேன்.

பிறகு, அக்டோபர் மாதத்தின் துவக்கத்தில் ஒருநாள், நான் என்னுடைய கடனட்டைக்கான தொகையை அதற்கான சேவை நிலையத்தில் செலுத்திக் கொண்டிருந்தபோது, அந்தக் கடனட்டை நிறுவனம் நடத்திக் கொண்டிருந்த ஒரு போட்டியைப் பற்றிய துண்டு அறிக்கை ஒன்றை அங்கு நான் கண்டேன். 1,00,000.00 மலேசிய ரிங்கிட் அதற்கான பரிசுத் தொகையாக அறிவிக்கப்பட்டிருந்தது. ஜூலை 5ம் நாளன்று தொடங்கிய அப்போட்டி அக்டோபர் 15ம் நாளன்று நிறைவுறவிருந்தது. ஆனால் அப்போட்டியைப் பற்றி முதன்முதலாக நான் அப்போதுதான் கேள்விப்பட்டேன். **நான் அப்போட்டியில் பங்கு கொள்ளுவதற்கு என்னுடைய நுழைவுக் கூப்பனை அனுப்ப இன்னும் இரண்டு வாரங்கள் மட்டுமே இருந்ததால்,** நான் உடனடியாக அந்தக் கூப்பனை நிரப்பி அனுப்பி வைத்தேன்.

அந்த மாதக் கடைசியில், அந்நிறுவனத்திடமிருந்து எனக்கு ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது. அக்டோபர் மாதத்திற்கான இரண்டாம் பரிசு எனக்குக் கிடைத்திருந்ததாக அவர்கள் கூறினர். பரிசுத் தொகையாக 1,000.00 மலேசிய ரிங்கிட் எனக்கு வழங்கப்படும் என்று அவர்கள் தெரிவித்தனர். இதைக்

https://telegram.me/aedahamlibrary

கேட்டு நான் மகிழ்ச்சியடைந்தேன். ஏனெனில், பெரிய போட்டிகளில் உண்மையில் எனக்கு ஒருபோதும் அவ்வளவு அதிர்ஷ்டம் வாய்த்ததில்லை. நான் என் கணவரிடம் இச்செய்தியைத் தெரிவித்தபோது அவரும் நானும் மகிழ்ச்சியில் துள்ளிக் குதித்தோம்.

இரண்டு மாதங்களுக்குப் பிறகு, அதே நிறுவனத்திடம் இருந்து எனக்கு இன்னொரு தொலைபேசி அழைப்பு வந்தது. 1,00,000.00 மலேசிய ரிங்கிட் பம்பர் பரிசுக்காகப் போட்டியிடத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்த பதினோரு இறுதிப் போட்டியாளர்களில் நானும் ஒருத்தி என்றும், அதில் வெற்றி பெறும் நபரின் பெயர் மறுவாரம் அறிவிக்கப்படும் என்றும் அவர்கள் கூறினர்.

அன்றிரவு நான் என் ஒப்பனை மேசையின் அருகே அமர்ந்திருந்தபோது, என்னுடைய மனக்காட்சிப் பலகை என் கண்ணில் பட்டது. மூன்று மாதங்களுக்கு முன்பு நான் எழுதியிருந்த 1,00,000.00 மலேசிய ரிங்கிட்டுக்கான காசோலை அதில் இடம்பெற்றிருந்தது. நான் 1,000.00 என்று எழுதியிருந்த அந்த ஒரு-ரிங்கிட் நோட்டையும் நான் கவனித்தேன்.

நான் அந்த நோட்டையும் காசோலையையும் எடுத்துக் கொண்டு என் கணவரிடம் சென்று, “இரண்டாம் பரிசான 1,000 ரிங்கிட் எனக்கு ஏன் கிடைத்தது என்று எனக்கு இப்போது புரிகிறது. ஒரு-ரிங்கிட் நோட்டுதான் அதற்குக் காரணம்! நான் தற்செயலாக அதை எழுதியிருந்தும்கூட, கடவுள் அதை எனக்கு உண்மையிலேயே அனுப்பி வைத்துள்ளார். இரகசியத்தின் பலன் இது!” என்று கூறினேன்.

பிறகு மகிழ்ச்சியில் என் கண்களில் நீர் பெருகியது. பம்பர் பரிசை நான் வெல்லுவேன் என்றும், அந்த 1,00,000.00 மலேசிய ரிங்கிட் பரிசு எனக்குக் கிடைப்பதற்குக் கடவுள் ஏற்பாடு செய்திருந்தார் என்றும் எனக்குள் ஒரு குரல் ஒலித்துக் கொண்டே இருந்தது.

பிறகு, இரகசியம் புத்தகத்தில் பணம் பற்றிய அத்தியாயத்தை நான் படித்தேன். இரகசியம்

https://telegram.me/aedahamlibrary

திரைப்படத்தையும் நான் மீண்டும் பார்த்தேன். பரிசு எனக்குக் கிடைக்குமா என்ற சந்தேகம் எனக்கு எழுந்தபோதெல்லாம், அந்த 1,00,000.00 ரிங்கிட்டுக்கான காசோலையை நான் என் கையில் ஏந்தியபடி அந்த மேடையில் புன்னகைத்துக் கொண்டு நின்றதுபோல நான் என் மனத்தில் காட்சிப்படுத்தினேன்.

ஒரு பிரம்மாண்டமான விழாவில் அந்த இறுதிப் போட்டிக்கான முடிவு அறிவிக்கப்படவிருந்த நாளன்று காலையில் நாங்கள் எங்கள் வீட்டைவிட்டுப் புறப்படுவதற்கு முன்பாக, என் கணவர் என்னிடம், "நீ எழுதிய 1,00,000.00 ரிங்கிட்டுக்கான காசோலையை எடுத்துக் கொள். உண்மையான காசோலையை இன்று நீ வெற்றி கொள்ளப் போகிறாய்," என்று கூறினார். எனவே, நான் அதை எடுத்துக் கொண்டேன்.

போட்டி அரங்கிற்குள் நுழைவதற்கு முன்பாக, நான் அந்தக் காசோலையை எடுத்துக் கடைசியாக ஒரு முறை பார்த்துவிட்டு, நான் வெற்றி பெறவிருந்ததாக என் மனத்தில் காட்சிப்படுத்தி, எனக்கிருந்த கொஞ்சநஞ்ச சந்தேகத்தையும் களைந்தெறிய முயற்சித்தேன். அப்போது அந்தக் காசோலையின்மீது '**மகிழ்ச்சியாக இருக்கவும்**' என்று எழுதப்பட்டிருந்ததை நான் கவனித்தேன். நான் உடனே என் கணவரின் ஐபோனை வாங்கி, அதில் என்னுடைய இரண்டு வயது மகளின் அழகான புகைப்படத்தைப் பார்த்தேன். அவளுடைய இனிமையான புன்னகையைக் கண்டது என்னுள் மகிழ்ச்சியைத் தூண்டியது. நான் சரியான பாதையில் போய்க் கொண்டிருந்ததை நான் அறிந்தேன். அந்த ஒட்டுமொத்த நிகழ்ச்சி நெடுகிலும், என்னுடைய மகளின் புன்னகையைப் பற்றி மட்டுமே நான் நினைத்தேன், நான் வெற்றி பெறவிருந்ததுபோல மனக்காட்சிப்படுத்தினேன்.

நான் உண்மையில் **அப்போட்டியில் வெற்றி பெற்றேன்!**

1,00,000.00 மலேசிய ரிங்கிட் பம்பர் பரிசை நான் வென்றேன். என் பெயர் அறிவிக்கப்பட்டபோது, அதை நான் ஏற்கனவே அனுபவித்திருந்த உணர்வை நான்

https://telegram.me/aedahamlibrary

பெற்றேன். ஏனெனில், அக்காட்சியை ஏற்கனவே பல முறை நான் என் மனத்தில் கற்பனை செய்திருந்தேன்.

என்னுடைய வெற்றிக் காசோலையின் மாதிரியை அந்நிகழ்ச்சியின் நடுவர் என்னிடம் வழங்கிவிட்டு, “மற்றப் பத்துப் போட்டியாளர்களோடு சேர்ந்து நீங்கள் இந்த அரங்கிற்குள் நுழைந்தபோது, எல்லோரையும்விட நீங்கள்தான் அதிக மகிழ்ச்சியாகக் காணப்பட்டீர்கள். நீங்கள்தான் வெற்றி பெறப் போகிறீர்கள் என்று நீங்கள் ஏற்கனவே அறிந்திருந்தீர்கள்போலும்!” என்று கூறினார்.

அது உண்மையிலேயே ஓர் அதிசயம்தான். ஆகஸ்டு 18ம் நாளன்று நான் தற்செயலாக ஓர் ஒரு-ரிங்கிட் நோட்டில் 1,000.00 ரிங்கிட் என்று எழுதினேன், 1,00,000.00 ரிங்கிட்டுக்கான ஒரு காசோலையையும் நான் எழுதினேன். டிசம்பர் 12ம் நாளன்று அவை இரண்டும் மெய்யாகியிருந்தன.

இதைப் பற்றி என் நண்பர்களிடமும் குடும்பத்தாரிடமும் நான் கூறியபோது, சந்தேகவாதிகள்கூட நம்பிக்கையாளர்களாக மாறினர்.

**- என்னி, கோலா லம்பூர், மலேசியா**

நீங்கள் கைவசப்படுத்த விரும்புகின்ற ஒன்று அடைவதற்குச் சாத்தியமற்றதுபோல உங்களுக்குத் தோன்றக்கூடும். ஆனால், ஈர்ப்பு விதியைப் பொருத்தவரை எல்லாமே சாத்தியம்தான். ஓர் அதிசயம் நிகழ வேண்டும் என்று நீங்கள் விரும்பினால், அதுவும் சாத்தியம்தான். தொலைந்து போன பாப்பை என்ற நாய்க்குட்டியின் கதை இதற்கான ஓர் அற்புதமான எடுத்துக்காட்டு.

## பாப்பை

எங்களுடைய இருபத்தோரு வயது மகளும் அவளுடைய நான்கு வயது நாயான பாப்பையும் நான்கு மாத காலமாக எங்களோடு வாழ்ந்து வந்திருந்தனர். அந்நேரத்தில்

https://telegram.me/aedahamlibrary

நான்தான் அந்த நாயை முழுவதுமாகப் பார்த்துக் கொண்டேன். என் மகள் தனிவீடு பார்த்துப் போனபோது, என் அன்புக்குரிய பாப்பையையும் அவள் தன்னோடு கூட்டிச் சென்றுவிட்டாள். சுமார் இரண்டு மாதங்களாக அவள் எங்களைத் தொடர்பு கொள்ளவில்லை. பாப்பையைப் பற்றி நான் அவளிடம் விசாரித்தபோது, அது எப்படியோ தன் வீட்டிலிருந்து எங்கேயோ ஓடிப் போய்விட்டிருந்ததாகவும் தன்னால் அதைக் கண்டுபிடிக்க முடியவில்லை என்றும் அவள் கூறினாள்.

எனவே, நான் அது குறித்து ஒரு துண்டு அறிக்கையைத் தயாரித்து, ஒரு ஜெராக்ஸ் கடைக்குச் சென்று அதை நூறு நகல்கள் எடுத்தேன். அந்த நாய் எந்த இடத்திலிருந்து காணாமல் போனதோ, அந்த இடத்தைச் சுற்றிப் பல இடங்களில் நான் அந்தத் துண்டு அறிக்கைகளை ஆங்காங்கே ஒட்டி வைத்தேன். பாப்பை காணாமல் போய் எத்தனை நாட்கள் ஆகியிருந்தன என்று நான் என் மகளிடம் கேட்டபோது, ஒரு மாதம் என்று அவள் கூறினாள். அவள் முன்னதாகவே எங்களிடம் அது பற்றிச் சொல்லத் தவறியிருந்தது குறித்து நான் அதிர்ச்சியுற்றேன். ஒரு செல்லப் பிராணி காணாமல் போன முதல் மூன்று வாரங்களுக்குள் அதைக் கண்டுபிடிக்காவிட்டால், பிறகு அதைக் கண்டுபிடிப்பதற்கான சாத்தியக்கூறு மிகமிகக் குறைவு என்று புள்ளிவிபரங்கள் கூறுகின்றன.

நான் அந்தத் துண்டு அறிக்கைகளை வெளியிட்டதிலிருந்து அப்பகுதியில் அது போன்ற ஒரு நாயைத் தாங்கள் கண்டதாக எனக்குப் பல தொலைபேசி அழைப்புகள் வந்தன. ஒவ்வொரு முறையும் நான் உடனடியாக அந்த இடத்திற்கு ஓடிச் சென்று பார்த்தேன். பிறகு ஒருநாள் அதே போன்ற ஓர் அழைப்பு எனக்கு வந்தது. அழைத்தவருடைய முகவரிக்கு நான் விரைந்தேன். ஆனால் அவர் கண்டுபிடித்திருந்த நாய் என்னுடையது அல்ல என்பதை நான் அறிந்தேன். நாட்கள் செல்லச் செல்ல, நான் அதிகமான அறிக்கைகளை ஒட்டி வைத்தேன். ஆனால் தொலைபேசி அழைப்புகள்

https://telegram.me/aedahamlibrary

குறைந்து கொண்டே போயின. நான் ஒரு செய்தித்தாளிலும் ஒரு விளம்பரம் கொடுத்துப் பார்த்தேன், அக்கம்பக்கத்தில் தேடினேன், எல்லோருடனும் பேசிப் பார்த்தேன், மேலும் அதிகமான துண்டு அறிக்கைகளை வெளியிட்டேன்.

அப்போதுவரை **இரகசியம்** பற்றி எனக்கு எதுவும் தெரியாது. என்னுடைய மகனைக் கல்லூரியில் சேர்ப்பதற்காக மிஸிஸிப்பி மாநிலப் பல்கலைக்கழகத்திற்கு நான் அவனை அழைத்துச் சென்றிருந்த நேரத்தில், அதன் வளாகத்தில் இருந்த ஒரு புத்தகக் கடைக்குச் சென்றபோதுதான் முதன்முதலாக இரகசியம் என் வாழ்விற்குள் நுழைந்தது. முதன்முறையாக நான் அந்தக் கடைக்குச் சென்றபோது, நான் பல்வேறு பொருட்களை வாங்கினேன், ஆனால் **இரகசியம்** புத்தகத்தை மட்டும் நான் வாங்கவில்லை. நான் அப்போது அப்புத்தகத்தைப் பார்க்கக்கூட இல்லை. ஆனால், அன்று மாலையில் என் மகனுக்கு வேறு ஏதோ வாங்க வேண்டியிருந்ததால் மீண்டும் நாங்கள் அந்தக் கடைக்குச் சென்று அவனுக்குரியவற்றை வாங்கிவிட்டுப் பணம் செலுத்துவதற்காக வரிசையில் நின்று கொண்டிருந்தபோதுதான் **இரகசியம்** புத்தகம் என் பார்வையில் பட்டது. அது எப்படிப்பட்டப் புத்தகம் என்று எந்த யோசனையும் எனக்கு இருக்கவில்லை, ஆனால் அதன் அட்டை என்னை வெகுவாகக் கவர்ந்தது. எனவே, நான் அப்புத்தகத்தை வாங்கினேன். நான் வீட்டிற்குத் திரும்பிய பிறகு அப்புத்தகத்தை எடுத்துப் படிக்கத் தொடங்கினேன். என் அன்புக்குரிய பாப்பை ஏன் இன்னும் வீடு திரும்பியிருக்கவில்லை என்பதை அப்போது நான் உணர்ந்து கொண்டேன். அது காணாமல் போவதற்கு முன்பாக அதன் படுக்கை என்னுடைய அலமாரியில் இருந்தது. ஆனால் அது காணாமல் போன பிறகு, அந்தப் படுக்கையைப் பார்த்த ஒவ்வொரு முறையும் என் மனம் வேதனையுற்றதால் நான் அதைத் தட்டுமுட்டுச் சாமான்களுக்கான அறையில் கொண்டு போட்டுவிட்டேன். இப்போது நான் அதை அங்கிருந்து

https://telegram.me/aedahamlibrary

எடுத்து வந்து, மீண்டும் என்னுடைய அலமாரியில் வைத்தேன். பிறகு நான் பாப்பையின் மருத்துவரிடம் சென்று, அதற்குரிய உணவை வாங்கி வந்தேன். நான் மீண்டும் துண்டு அறிக்கைகளை வெளியிடத் தொடங்கினேன். ஆனால் கூடவே, பாப்பை நல்லவிதமாக வீடு திரும்பியதற்காக நான் தினமும் நன்றி கூறத் தொடங்கினேன். அது உண்மையிலேயே வீடு திரும்பிவிட்டதாக நான் நம்பினேன். அந்த நன்றிப் பெருக்கில் என் கண்கள் குளமாயின.

ஓரிரு வாரங்கள் எனக்கு எந்தத் தொலைபேசி அழைப்பும் வரவில்லை. ஆனாலும் நான் நம்பிக்கை இழக்கவில்லை. பிறகு ஒருநாள், ஒரு குறிப்பிட்டப் பகுதியில் தான் ஒரு நாயைக் கண்டிருந்ததாக யாரோ ஒருவர் எனக்கு அழைப்பு விடுத்தார். தான் அந்த நாயைப் பார்த்தபோது அது காணாமல் போய் இரண்டு வாரங்கள்தான் ஆகியிருந்தன என்றும், ஆனாலும் நான் நம்பிக்கை இழக்க வேண்டாம் என்றும் அவர் என்னிடம் கூறினார். இது எனக்கு நம்பிக்கையூட்டியது. பிறகு ஒருசில மணிநேரத்தில் எனக்கு இன்னோர் அழைப்பு வந்தது. பாப்பை டெக்சாஸில் தன்னுடைய மருமகளின் வீட்டில் இருந்ததாக அவர் தெரிவித்தார். பாப்பை காணாமல் போயிருந்த நேரத்தில் அப்பெண் தன் மாமாவின் வீட்டிற்கு வந்திருந்தாள். பாப்பை ஒரு பள்ளிக்கூடத்தின் அருகே சுற்றித் திரிந்து கொண்டிருந்ததை அவள் தற்செயலாகப் பார்த்துவிட்டு அக்கம்பக்கத்தில் விசாரித்தபோது, யாருக்கும் அந்த நாயைப் பற்றிய விபரம் எதுவும் தெரிந்திருக்கவில்லை. எனவே, டெக்சாஸில் இருந்த தன்னுடைய வீட்டிற்கு அவள் அதை எடுத்துச் சென்றுவிட்டாள். பல மாதங்களாக வெளியூர் சென்றிருந்த அவளுடைய மாமா திரும்பி வந்தபோது, என்னுடைய துண்டு அறிக்கைகளைப் பார்த்துவிட்டுத் தன் மருமகளைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு, பாப்பையின் குடும்பத்தினர் அதை வலைவீசித் தேடிக் கொண்டிருந்ததாக அவளிடம் கூறினார். பிறகு அந்நபர் தன் மருமகளின் தொலைபேசி

https://telegram.me/aedahamlibrary

எண்ணை என்னிடம் கொடுத்தார். நான் அந்த எண்ணுக்கு அழைப்பு விடுத்து, பாப்பை செய்த ஒரு தனித்துவமான தந்திரத்தை அந்த நாய் செய்ததா என்று சோதிக்கும்படி அப்பெண்ணிடம் கேட்டுக் கொண்டேன். அது அத்தந்திரத்தைச் செய்ததாக அவள் தெரிவித்தாள்.

நான் மிஸிஸிப்பியில் இருந்தேன், ஆனால் பாப்பை டெக்சாஸில் இருந்தது. அதை நான் எப்படித் திரும்பப் பெற்றேன் என்று நீங்கள் வியக்கக்கூடும். அப்பெண்ணின் வீடு என் தந்தையின் வீட்டிலிருந்து பதினைந்து நிமிட தூரத்தில் இருந்தது. என் தந்தை அங்கு சென்று பாப்பையைப் பெற்றுக் கொண்டார். என் மகனின் பட்டமளிப்பு விழாவிற்காக அவர் வந்தபோது அதைத் தன்னோடு கொண்டுவந்து என்னிடம் சேர்த்தார்.

**- மார்த்தா, மிஸ்ஸிஸிப்பி, அமெரிக்கா**

பாப்பை தன் வீட்டிற்கு வந்துவிட்டது என்று நம்பும் மனநிலைக்குத் தான் வந்தாக வேண்டும் என்பதை மார்த்தா அறிந்திருந்தார். நேசத்திற்குரிய ஒரு செல்லப் பிராணி தொலைந்து போயிருக்கும்போது அது அவ்வளவு சுலபமான காரியமாக இருப்பதில்லை. ஆனால், அந்த நாயின் படுக்கையை மீண்டும் தன் அலமாரிக்குக் கொண்டுவந்தது, அதற்கான உணவை வாங்கி வந்தது போன்ற சக்திவாய்ந்த நடவடிக்கைகளை அவர் மேற்கொண்டார். பாப்பை வீடு திரும்பிவிட்டதை உணர்த்துகின்ற நடவடிக்கைகள் அவை. அது வீடு திரும்பிவிட்டது குறித்து ஆழ்ந்த நன்றியை உணர்ந்து மனம் நெகிழ்ந்து அழக்கூடிய அளவுக்கு அவருடைய நம்பிக்கை வலிமையடைந்தது. அந்த வகையான நம்பிக்கைதான் படைப்புச் செயல்முறையின் இரண்டாவது முக்கிய நடவடிக்கையாகும்.

https://telegram.me/aedahamlibrary

## இரண்டாவது நடவடிக்கை: நம்புங்கள்

**கேளுங்கள், நம்புங்கள், பெறுங்கள் - நீங்கள் விரும்புவதைப் பெறுவதற்கான மூன்று எளிய நடவடிக்கைகள் இவை. ஆனால், பல சமயங்களில், நம்புதல் என்ற இரண்டாவது நடவடிக்கைதான் மிகக் கடினமானதாக இருக்கிறது. ஆனால் நீங்கள் மேற்கொள்ள வேண்டிய மிகப் பெரிய நடவடிக்கை இதுதான். நம்புதல் என்றால் எந்த சந்தேகமும் இல்லாமல் இருத்தல் என்று பொருள். நம்புதல் என்றால் எந்தத் தடுமாற்றமும் இல்லாதிருத்தல் என்று பொருள். முழுமையான விசுவாசம் அது. புறவுலகில் என்ன நிகழ்ந்தாலும் தொடர்ந்து நம்புவதை உள்ளடக்கியது அது.**

**நம்புவதில் நீங்கள் கைதேர்ந்தவராகிவிட்டால், வாழ்க்கையில் நீங்கள் கைதேர்ந்தவராகிவிடுவீர்கள்.**

**- இரகசியம் தினசரி போதனைகள்**

### நான் நம்புகிறேன்!

சுமார் ஆறு மாதங்களுக்கு முன்பு, நானும் என் காதலரும் இன்னொரு நகரத்திற்கு இடம்பெயர்வதென்று திடீரென்று தீர்மானித்தோம். அவர் ஏற்கனவே முன்பு ஒருமுறை வாழ்ந்திருந்த ஊர் அது. எனவே, அவர் இப்போது முதலில் அங்கு சென்று, தன் நண்பர் ஒருவருடைய வீட்டில் தங்கியபடி தனக்கொரு வேலையைத் தேடத் தொடங்கினார். அவர் என்னோடு இல்லாதது எனக்குச் சிரமமாக இருந்தது. அவருடைய பிரிவு என்னை வாட்டியது. ஆனால், நான் என்னுடைய வேலையை ராஜினாமா செய்வதற்கு ஏற்கனவே எழுதிக் கொடுத்திருந்தேன். ஒரு மாதத்திற்குப் பிறகு நானும் அந்த ஊருக்கு இடம்பெயரத் திட்டமிட்டேன்.

ஆனால் நாட்கள் செல்லச் செல்ல, எதுவும் நாங்கள் நினைத்தபடி நடக்காமல் போனதுபோலத் தோன்றியது.

https://telegram.me/aedahamlibrary

தான் விரும்பிய வேலை என் காதலருக்குக் கிடைக்கவில்லை. எனவே, கிட்டத்தட்ட ஒரு மாதகாலமாக அவர் வேலையின்றி இருந்தார். எனக்கும் ஒரு புதிய வேலை கிடைக்கவில்லை. அது போதாதென்று, என்னுடைய தற்போதைய வாடகை வீட்டிற்கு ஒரு புதிய வாடகைதாரரை என்னால் கண்டுபிடிக்க முடியவில்லை. நான் அந்த வீட்டைவிட்டு வெளியேறும் நாளன்று அங்கு குடியேற யாரும் எனக்குக் கிடைக்காவிட்டால், கூடுதலாக மூன்று மாத வாடகையை நான் செலுத்த வேண்டியிருக்கும். என் காதலரிடமிருந்து நான் பல மைல்கள் தள்ளி இருந்தேன். தன்னந்தனியாக இருந்த நான், செய்வதறியாது திகைத்து நின்றேன். நேரமும் பணமும் கரைந்து கொண்டே போயின.

ஒரு வார இறுதியின்போது நான் என் காதலரை சந்திக்கச் சென்றேன். அப்போது நாங்கள் இருவரும் சேர்ந்து வாடகைக்கு ஒரு வீட்டைக் கண்டுபிடித்தோம். ஆனால் நாங்கள் எந்தத் தேதியில் அங்கு குடியேற ஏற்பாடு செய்திருந்தோமோ, அன்றிலிருந்து சில நாட்கள் கழித்துத்தான் அவ்வீட்டில் ஏற்கனவே வாடகைக்கு இருந்தவர்கள் அவ்வீட்டைக் காலி செய்வார்கள் என்பது பின்னர்தான் எங்களுக்குத் தெரிய வந்தது. நாங்கள் திட்டமிட்டிருந்த நாளன்று எங்களுடைய சாமான்களை அந்த வீட்டிற்கு இடமாற்றம் செய்வதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் நாங்கள் ஏற்கனவே ஒரு நிறுவனத்திடம் ஒப்படைத்திருந்தோம். நாங்கள் அவர்களுக்குக் கொடுத்திருந்த தேதியை எங்களால் மாற்ற முடியவில்லை. எல்லாம் ஒரே குழப்பமாக இருந்தது.

நாங்கள் அப்புதிய வாடகை வீட்டில் குடியேறுவதற்கு ஒரு வாரத்திற்கு முன்பு ஒருநாள் இரவில் நான் கவலையுடனும் கண்ணீருடனும் இருந்தபோது, **இரகசியம்** புத்தகத்தை நான் படித்தேன். இரண்டு கற்களை நான் என்னுடைய நன்றியுணர்வுக் கற்களாகத் தேர்ந்தெடுத்தேன். நான் அவற்றை ஒரு கையில்

https://telegram.me/aedahamlibrary

வைத்துக் கொண்டு, என் வாழ்வில் நான் எவற்றைப் பற்றியெல்லாம் நன்றியை உணர்ந்தேனோ அவற்றை ஒரு பட்டியலிட்டேன். குறிப்பாக, நான் என்னுடைய புதிய வாழ்க்கைக்குள் நுழையவிருந்தது குறித்து நான் மிகுந்த நன்றியுணர்வு கொண்டேன். மேலும், என் வாழ்வில் என்னவெல்லாம் இருக்க வேண்டும் என்று நான் விரும்பினேனோ, அவற்றுக்காகவும் நான் நன்றி கூறினேன். எனக்கு ஒரு நல்ல வேலையும் ஒரு மகிழ்ச்சியான உல்லாச விடுமுறையும் வேண்டும் என்று நான் விரும்பினேன். நான் உடனடியாக ஒரு வேலையைத் தேடிக் கொள்ள விரும்பினேன். அதே நேரத்தில், அப்புதிய நகரத்தைச் சுற்றிப் பார்க்கவும், நாங்கள் எங்களுடைய புதிய வீட்டில் குடியேறி அவ்வீடு எங்களுக்குப் பழக்கமாகத் தேவையான நேரத்தையும் நான் விரும்பினேன். என் காதலருக்கு ஒரு வேலை வேண்டும் என்றும் நான் அப்பட்டியலில் எழுதினேன். நாங்கள் முதலில் எந்தத் தேதியில் அப்புதிய வீட்டில் குடியேறத் திட்டமிட்டிருந்தோமோ, துல்லியமாக அந்த நாளன்று நாங்கள் அதில் குடியேற வேண்டும் என்று நான் விரும்பினேன். அவ்வீட்டின் இரண்டு புகைப்படங்களை அச்சிட்டு, அவ்வீட்டில் குடியேற நாங்கள் தேர்ந்தெடுத்திருந்த தேதியைச் செந்நிற மையால் பெரிதாக அப்புகைப்படங்கள்மீது நான் எழுதினேன். அவற்றில் ஒன்றை நான் என்னோடு எப்போதும் சுமந்து திரிந்தேன், இன்னொன்றை என்னுடைய படுக்கைக்கு அருகே வைத்தேன். நான் என்னுடைய தற்போதைய வாடகை வீட்டிலிருந்து வெளியேறும் நாளன்று ஒரு நல்ல பெண் அதில் குடியேற வேண்டும் என்று நான் விரும்பினேன்.

நான் என்னுடைய நன்றியுணர்வுக் கற்களை என்னுடைய ஜீன்ஸ் பாக்கெட்டில் சுமந்து திரியத் தொடங்கினேன். நான் அவற்றைத் தொட்ட ஒவ்வொரு முறையும், அந்தக் குறிப்பிட்ட இரவில் நான் பட்டியலிட்டிருந்த அனைத்து விஷயங்களைப் பற்றியும் நான் நினைத்துப் பார்த்தேன்.

https://telegram.me/aedahamlibrary

பிறகு என்ன நிகழ்ந்தது என்பதை உங்களால் ஊகிக்க முடிகிறதா? நான் என்னுடைய வீட்டிலிருந்து வெளியேற வேண்டியிருந்த நாளுக்கு ஐந்து நாட்களுக்கு முன்பு ஒரு பெண் என்னைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டாள். அவள் என்னுடைய துணி துவைக்கும் இயந்திரத்தையும் என்னிடமிருந்து வாங்கிக் கொண்டாள். அதை நான் என்னுடன் எடுத்துச் செல்ல முடியாததால் நான் அதை விற்கத் திட்டமிட்டிருந்தேன். நானும் என் காதலரும் முன்கூட்டியே குறித்திருந்த நாளன்று அப்புதிய வாடகை வீட்டில் குடியேறினோம். இரண்டு வாரங்கள் நாங்கள் அப்புதிய நகரைச் சுற்றிப் பார்த்தோம். அந்த இரண்டு வாரங்களில் எங்கள் புதிய வீடு எங்களுக்குப் பழகிப் போனது. நாங்கள் மிகவும் சௌகரியமாக உணர்ந்தோம். இரண்டு வாரங்களுக்குப் பிறகு ஒருநாள், எங்கள் இருவருக்கும் புதிய வேலைகள் கிடைத்தன, அதுவும் ஒரே நாளன்று!

**இரகசியம்** பற்றியும் என்னைப் பற்றியும் எனக்குத் தெரிய வந்தது குறித்து நான் மிகுந்த நன்றியை உணருகிறேன். இரகசியம் நிச்சயமாகப் பலனளிக்கிறது. நீங்கள் நம்பிக்கை கொள்ள வேண்டும், அவ்வளவுதான். குறிப்பாக, உங்கள்மீது உங்களுக்கு நம்பிக்கை இருக்க வேண்டும். இரகசியம் தினமும் எனக்கு உதவுகிறது. இரகசியத்தை எங்களோடு பகிர்ந்து கொண்டதற்கு ரோன்டா பைர்னுக்கு நான் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். **இரகசியத்தை** நான் தொடர்ந்து மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளப் போகிறேன்.

**- நியா, ஜெர்மனி**

நீங்கள் விரும்பிக் கேட்கும் ஒன்று, நீங்கள் கேட்கும் கணத்தில் உங்களுடையதாக ஆகிவிடுகிறது என்பதை நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும். தடுமாற்றமற்ற முழுமையான விசுவாசம் உங்களுக்கு இருக்க வேண்டும். நீங்கள் கேட்டுள்ளது ஏற்கனவே உங்களுக்குக்

https://telegram.me/aedahamlibrary

கிடைத்துவிட்டதுபோல நீங்கள் பேசவும் சிந்திக்கவும் செயல்படவும் வேண்டும். நம்புதல் என்பது இதுதான்.

நியா தன்னுடைய புதிய வீட்டில் குடியேறுவதற்குத் தான் தேர்ந்தெடுத்திருந்த தேதியை அவ்வீட்டின் புகைப்படங்கள்மீது எழுதியது தன்னுடைய அந்த விருப்பம் ஏற்கனவே நிறைவேறிவிட்டது என்ற நம்பிக்கைக்கு உரமூட்டுவதற்காகத்தான். உங்கள் நம்பிக்கை இந்த நிலையை எட்டும்போது, பிரபஞ்சம் உங்களுக்குச் சாதகமாக அனைத்துக் காய்களையும் நகர்த்தியாக வேண்டும்! அது எப்படி நிகழும், பிரபஞ்சம் எப்படி உங்கள் விருப்பத்தை நிறைவேற்றும் என்பது பற்றி நீங்கள் கவலைப்பட வேண்டியதில்லை. பிரபஞ்சம் உங்கள் சார்பில் வேலை செய்ய அதை அனுமதியுங்கள். உங்கள் விருப்பம் எப்படி நிறைவேறும் என்று கண்டுபிடிக்க நீங்கள் முயற்சிக்கும்போது, நம்பிக்கையின்மை என்ற ஓர் அதிர்வை நீங்கள் வெளிப்படுத்துகிறீர்கள். அதாவது, உங்கள் விருப்பம் ஏற்கனவே நிறைவேறிவிட்டது என்ற நம்பிக்கை உங்களுக்கு இல்லை. உங்கள் விருப்பத்தை **நீங்கள்தான்** நிறைவேற்றியாக வேண்டும் என்று நீங்கள் நினைக்கிறீர்கள். பிரபஞ்சம் உங்களுக்காக அதைச் செய்யும் என்ற நம்பிக்கை உங்களுக்கு இல்லை.

## ஒரு கிரீன் கார்டு அதிசயம்

2011ம் ஆண்டு ஜனவரியில், கேரளாவிலுள்ள என்னுடைய சொந்த ஊரிலிருந்து அமெரிக்கா திரும்புவதற்காக விமான நிலையத்தில் என்னுடைய விமானத்தில் ஏறுவதற்காக நான் காத்துக் கொண்டிருந்தபோது, அங்கிருந்த ஒரு சிறிய புத்தகக் கடையில் **இரகசியம்** புத்தகத்தை நான் வாங்கினேன்.

https://telegram.me/aedahamlibrary

விமானத்தில் லாஸ் ஏஞ்சலீஸ் நகருக்குத் திரும்பிச் செல்லும் வழியில் நான் அதைப் படித்தபோது, அது என் வாழ்க்கையை முற்றிலுமாக மாற்றியது. நான் என் வாழ்நாள் முழுவதும் என்னுடைய எதிர்மறை மனப்போக்கை விட்டொழிக்க முடியாமல் பெரிதும் போராடி வந்திருந்தேன். ஆனால், **இரகசியம்** புத்தகத்தில் இடம்பெற்றிருந்த போதனைகள் நான் என் கண்ணோட்டத்தை மாற்றிக் கொள்ளவும் என்னுடைய எதிர்காலத்தை என்னுடைய கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரவும் எனக்கு உதவின.

ஆனாலும் பல முறை நான் சறுக்கினேன். என்னுடைய புதிய வேலை, அழகான புதிய வீடு, அற்புதமான புதிய உறவு போன்ற ஆசீர்வாதங்களை நான் பார்க்கத் தவறினேன். மாறாக, என்னிடம் இல்லாதவற்றின்மீது நான் கவனம் செலுத்தினேன். குறிப்பாக, அமெரிக்காவில் நான் தொடர்ந்து வாழுவதற்கு அனுமதிக்கின்ற ஒரு நிரந்தரமான கிரீன் கார்டு எனக்கு இன்னும் கிடைக்காமல் இருந்தது குறித்து நான் கவலைப்பட்டேன்.

குறுகிய காலம் மட்டுமே நீடித்த என்னுடைய திருமணத்தின் அடிப்படையில் வழங்கப்பட்ட ஒரு தற்காலிகமான கிரீன் கார்டு என்னிடம் இருந்தது. ஆனால், ஒரு நிரந்தரமான கிரீன் கார்டைப் பெறுவதற்கு என்னுடைய திருமணம் உண்மையானதுதான் என்றும், அது இன்னும் செல்லுபடியாகும் என்றும் நான் நிரூபிக்க வேண்டியிருந்தது. என் திருமணம் உண்மையானதாகத்தான் இருந்திருந்தது - அதை நிரூபிப்பதற்கு உணர்ச்சி சார்ந்த வடுக்கள் என்னிடம் ஏராளமாக இருந்தன. ஆனால், திருமணமாகி ஓராண்டுக்கு உள்ளாகவே நானும் என் கணவரும் பிரிந்து, விவாகரத்திற்கு விண்ணப்பித்திருந்தோம்.

குடியுரிமை தொடர்பான வழக்குகளைக் கையாண்ட ஒரு வழக்கறிஞரை நான் நியமிக்க வேண்டியிருந்தது. ஆனால் அது மிகவும் செலவு வைப்பதாக இருந்தது. அச்செலவு குறித்தும், நான் அமெரிக்காவிலிருந்து விரைவில் வெளியேற்றப்பட்டுவிடுவேன் என்பது

https://telegram.me/aedahamlibrary

குறித்தும் நான் மிகவும் புலம்பினேன். அதன் விளைவாக, ஈர்ப்பு விதி என் பிரச்சனைகள் தொடருவதை உறுதி செய்தது.

என்னுடைய நிலைமை மேன்மேலும் மோசமாகிக் கொண்டே போனபோது, அதை மாற்றியமைக்கும் நோக்கத்துடன், இரகசியம் இணையத்தளத்திற்குச் சென்று அதில் இடம்பெற்றிருந்த உண்மைக் கதைகள் சிலவற்றை நான் படித்தேன். தங்களுடைய தனிப்பட்ட வாழ்வில் நிகழ்ந்திருந்த அதிசயங்களைப் பற்றிச் சிலர் எழுதியிருந்ததைப் படித்தது எனக்கு உத்வேகமூட்டியது. இதைத் தொடர்ந்து, நான் என் வாழ்க்கையை உடனடியாக மாற்றப் போவதாக நான் தீர்மானித்தேன். அதையடுத்து, நான் என்னுடைய தற்போதைய கிரீன் கார்டை இரண்டு நகல்கள் எடுத்தேன். அவற்றில் இடம்பெற்றிருந்த இறுதி நாளை 2011லிருந்து 2021க்கு நான் மாற்றினேன். ஒரு நகலை என் அலுவலகத்தில் என்னுடைய மேசையின் அருகே இருந்த பலகையில் நான் குத்தி வைத்தேன். இன்னொன்றை நான் என் பர்ஸில் சுமந்து திரிந்தேன்.

பிறகு, என் விருப்பம் வெற்றிகரமாக நிறைவேறுவதை உறுதி செய்த ஒரு முக்கியமான காரியத்தை நான் செய்தேன்: நான் இந்த ஒட்டுமொத்த விஷயத்தையும் பற்றி முற்றிலுமாக மறந்துவிட்டேன்! என்னுடைய வழக்கறிஞர்கள் என்ன செய்து கொண்டிருந்தனர், என்னுடைய கிரீன் கார்டு குறித்து அதிகாரிகள் என்ன செய்து கொண்டிருந்தனர், நான் போதுமான ஆவணங்களை அவர்களிடம் கொடுத்திருந்தேனோ போன்ற எதைப் பற்றியும் ஒரு நிமிடம்கூட நான் நினைத்துப் பார்க்கவில்லை. எந்தவோர் எதிர்மறை எண்ணமும் என் மனத்தில் தோன்றாதபடி நான் பார்த்துக் கொண்டேன். முன்பெல்லாம், என்னுடைய கிரீன் கார்டு எனக்கு விரைவாகக் கிடைக்க உதவக்கூடிய விஷயங்களாக நான் கருதியவற்றைச் செய்வதில் நான் முனைப்போடு செயல்பட்டேன். ஆனால் இப்போது அதை நான் கண்டுகொள்ளக்கூட இல்லை. குடியுரிமை

https://telegram.me/aedahamlibrary

அதிகாரியுடனான என்னுடைய சந்திப்பு மிகச் சிறப்பாக நடைபெற்றதாகவோ, என்னுடைய வழக்கறிஞர் எனக்குச் சாதகமாக அற்புதமாக வாதாடியதாகவோ நான் கற்பனை செய்யவில்லை. நான் வெறுமனே அவ்விஷயத்தை அதன் போக்கில் விட்டுவிட்டேன். என் கிரீன் கார்டு செயல்முறை எப்படிப் போய்க் கொண்டிருந்தது என்று யாரேனும் என்னிடம் கேட்டபோதெல்லாம், அது சட்டப்படிப் போய்க் கொண்டிருந்ததாக நான் கூறினேன். நான் என்னுடைய வழக்கறிஞரைத் தொடர்பு கொள்ளவுமில்லை, குடியுரிமை அதிகாரியுடனான சந்திப்பிற்கு எனக்கு இன்னும் நாள் ஒதுக்கப்பட்டிருக்காதது குறித்து நான் கவலைப்படவும் இல்லை.

விசா செயல்முறை எப்படி நடைபெறும் என்பது பற்றி எனக்குத் தெரிந்ததை வைத்துப் பார்க்கும்போது, குடியுரிமை அதிகாரியுடனான என்னுடைய சந்திப்பு வெற்றிகரமாக இருந்ததாகவும், அவருக்கு என்னைப் பிடித்திருந்தது என்றும் நான் கற்பனை செய்திருந்திருப்பேன். ஆனால், நான் கற்பனை செய்திருந்ததைவிட அதிகச் சிறப்பான விளைவுகளை ஈர்ப்பு விதி எனக்குப் பெற்றுக் கொடுத்தது. ஜூன் 1ம் நாளன்று, அதாவது, என்னுடைய தற்போதைய கார்டின் செல்லுபடித்தன்மை காலாவதியாவதற்கு இரண்டு மாதங்களுக்கு முன்பு, என்னுடைய புதிய கிரீன் கார்டு அஞ்சலில் என்னிடம் வந்து சேர்ந்தது. நேர்முகத் தேர்வு, குடியுரிமை அதிகாரி, நேரடியான சந்திப்பு போன்ற எதுவும் நிகழவில்லை. 2022ம் ஆண்டுவரை நான் அமெரிக்காவில் தங்குவதற்குரிய அனுமதி முத்திரையுடன் அந்த கிரீன் கார்டு என்னை வந்தடைந்திருந்தது. நான் எதிர்பார்த்ததைவிடக் **கூடுதலாக** ஓராண்டு காலம் எனக்கு வழங்கப்பட்டிருந்தது.

இந்த அனுபவத்திலிருந்து நான் ஒரு முக்கியமான விஷயத்தைக் கற்றுக் கொண்டேன்: நாம் விரும்பும் ஒன்றைப் பெறுவதற்கு அது குறித்து எப்போதும்

https://telegram.me/aedahamlibrary

நேர்மறையாகச் சிந்தித்துக் கொண்டே இருக்க நாம் தொடர்ந்து முயற்சி செய்ய வேண்டியதில்லை. மாறாக, நமக்கு விருப்பமானதைக் கேட்டுவிட்டு, அது கிடைக்கும் என்று உறுதியான நம்பிக்கை கொண்டு, பிறகு விஷயம் தன் போக்கில் போகட்டும் என்று விட்டுவிடுவதற்கான திறன்தான் நாம் விரும்பியதைப் பெறுவதற்கான வழி. பிரபஞ்சம் என்னுடைய விருப்பத்தை அறிந்து கொண்டுள்ளது என்று நம்புதல், நான் அவ்விருப்பத்தை அதனிடம் தெளிவாக எடுத்துரைத்துள்ளேன் என்பதில் உறுதியாக இருத்தல், என்னுடைய விருப்பம் நிறைவேறும் என்று ஆணித்தரமாக நம்புதல் ஆகிய மூன்று நடவடிக்கைகளிலும் நான் கைதேர்ந்தவளாக ஆகியுள்ளேன். என்னுடைய கோரிக்கைகளை மெருகேற்றுவதற்கும் அவற்றைப் பற்றி அளவுக்கதிகமாக நேர்மறையாகச் சிந்திப்பதற்கும் எனக்கு ஏற்படும் தூண்டுதல்களைக் கட்டுப்படுத்திக் கொள்ள நான் இன்னும் முயற்சித்துக் கொண்டுதான் இருக்கிறேன்.

**- அம்பிகா என்., லாஸ் ஏஞ்சலீஸ், கலிபோர்னியா, அமெரிக்கா**

அம்பிகா உணர்ந்து கொண்டதைப்போல, நீங்கள் ஒரு மகிழ்ச்சியான மனநிலையில் இருக்கும்போது, உங்கள் விருப்பம் நிறைவேறும் என்று நம்புவது நீங்கள் மோசமான மனநிலையில் இருக்கும்போது அப்படி நம்புவதைவிட அதிக சுலபமானது. ஏனெனில், நம்புதல் என்பது ஒரு நேர்மறையான உணர்ச்சி. நல்ல மனநிலையில் இருப்பதும் அதே போன்ற ஒரு நேர்மறையான உணர்ச்சியாகும். எனவே, நீங்கள் மனம் தளர்ந்து போயிருக்கும்போது ஒன்றின்மீது நம்பிக்கை கொள்ள முயற்சிக்காதீர்கள். முதலில் ஒரு மகிழ்ச்சியான மனநிலைக்கு வாருங்கள். பிறகு, உங்கள்

https://telegram.me/aedahamlibrary

நம்பிக்கைக்கு உரமூட்டக்கூடிய மனக்காட்சிப்படைப்பையும் பிறவற்றையும் செய்யுங்கள்.

**உங்கள் வாழ்வில் உள்ள விஷயங்கள் குறித்து நீங்கள் குறை கூறிக் கொண்டிருக்கிறீர்கள் என்றால், நீங்கள் குறை கூறும் அலைவரிசையில் இருக்கிறீர்கள் என்று பொருள். அச்சமயத்தில், நீங்கள் விரும்புவதைக் கவர்ந்திழுக்கக்கூடிய ஒரு நிலையில் நீங்கள் இருப்பதில்லை.**

**உங்களுடைய எண்ணங்களையும் வார்த்தைகளையும் கொண்டு உங்கள் மனநிலையை மேம்படுத்துங்கள். அதன் காரணமாக, முதலில் நீங்கள் நல்லவிதமாக உணருவீர்கள். இரண்டாவதாக, நல்ல விஷயங்களை அதிகமாகப் பெற்றுத் தரக்கூடிய ஓர் அலைவரிசையில் நீங்கள் இருப்பீர்கள்.**

**- இரகசியம் தினசரி போதனைகள்**

## ஒருமுறை கேளுங்கள், பிறகு கவலையை விட்டுத்தள்ளுங்கள்

ஒரு புதிய வீட்டை வாங்குவதென்று நானும் என் கணவரும் தீர்மானித்தோம். எங்களுடைய தற்போதைய வீடு விற்பனையாகும்வரை அதை அப்படியே காலியாகப் போட்டு வைக்க நாங்கள் முடிவு செய்தோம். எங்களுடையது ஒரு சாகசத் தீர்மானம் என்று கூறலாம். ஏனெனில், வீடுமனை வாங்கல்/விற்றல் சந்தை வீழ்ச்சியடைந்திருந்த நேரம் அது. ஆனாலும் நாங்கள் இருவரும் நன்னம்பிக்கையுடன் இருந்தோம். ஏழு மாதங்களில் ஏகப்பட்டப் பேர் எங்கள் வீட்டைப் பார்த்துவிட்டுச் சென்றனர். ஆனால் அது விலை போகவே இல்லை. இதனால் நான் மிகவும் ஊக்கமிழந்தேன். இரண்டு வீடுகளுக்கும் இப்போது

https://telegram.me/aedahamlibrary

நாங்கள் தவணைத் தொகை செலுத்த வேண்டியிருந்தது குறித்து நான் பெரும் மனச்சோர்வுக்கு ஆளானேன்.

ஒருநாள், நான் **ஓப்ரா வின்ஃபிரேயின் தொலைக்காட்சி நிகழ்ச்சியைப்** பார்த்துக் கொண்டிருந்தபோதுதான் **இரகசியம்** திரைப்படம் பற்றி எனக்கு முதன்முதலாகத் தெரிய வந்தது. சில நாட்களுக்குப் பிறகு, நானும் என் கணவரும் அத்திரைப்படத்தை எங்களுடைய கணினியில் பார்த்தோம். அன்று வெள்ளிக்கிழமை. ஞாயிற்றுக்கிழமையன்று நான் எங்களுடைய காலியான வீட்டிற்குச் சென்று, வாகனங்களை நிறுத்தி வைப்பதற்கான அறையைச் சுத்தப்படுத்த வேண்டியிருந்தது. **இரகசியம்** திரைப்படத்திலிருந்து நான் கற்றுக் கொண்டவற்றை அப்போது பயன்படுத்திப் பார்க்க நான் முடிவு செய்தேன். எங்கள் வீடு விற்பனையாக வேண்டும் என்று ஒரு முறை நான் கேட்டேன். பிறகு, எங்கள் வீடு விற்பனையாகிவிட்டதாக என் மனத்தில் காட்சிப்படுத்திவிட்டு, அது குறித்து நன்றியை உணர்ந்து, பிறகு அதை அதன் போக்கில் விட்டுவிட்டேன்.

நான் அந்த வாகன அறையின் கதவை மூடிக் கொண்டிருந்தபோது, எங்கள் வீட்டு முற்றத்தில் நட்டு வைக்கப்பட்டிருந்த ‘விற்பனைக்காக’ என்ற அறிவிப்புப் பலகைக்கு அருகேயிருந்து, அந்த விற்பனை தொடர்பான விபரங்களை உள்ளடக்கிய துண்டு அறிக்கைகளில் ஒன்றை ஒருவர் எடுத்துச் சென்றதை நான் பார்த்தேன். மறுநாள், எங்களுடைய வீடுமனை முகவர் எங்களை அழைத்து, மூன்று பேர் எங்கள் வீட்டை வாங்க விருப்பம் தெரிவித்திருந்ததாக எங்களிடம் கூறினார். நாற்பத்தைந்து நாட்களுக்குப் பிறகு அவர்களில் ஒருவருக்கு நாங்கள் அந்த வீட்டை விற்று முடித்தோம்.

**- டிரிசியா, பிரென்ட்வுட், கலிபோர்னியா, அமெரிக்கா**

https://telegram.me/aedahamlibrary

# கேளுங்கள், நம்புங்கள், அப்போது நீங்கள் பெறுவீர்கள்

## பயணம் குறித்த நீண்டகாலக் கனவுகள்

என் நினைவுக்கு எட்டியவரை, பயணம் செய்ய நான் எப்போதும் விரும்பி வந்துள்ளேன். என்னைப் பொருத்தவரை, உலகத்தைச் சுற்றிப் பார்ப்பதையும், பூமியில் எல்லாவற்றையும் அனுபவிப்பதையும்விட மிகப் பெரிய ஆசீர்வாதம் வேறு எதுவும் இல்லை. நான் உயர்நிலைப் பள்ளியில் படித்துக் கொண்டிருந்த காலத்தில், என் பயண விருப்பங்கள் குறித்து ஒரு நோட்டுப் புத்தகத்தில் நான் எழுதி வைத்தது எனக்கு நினைவிருக்கிறது. என்றேனும் ஒருநாள் நான் உலகம் நெடுகிலும் பயணம் செய்யவிருந்ததாக நான் அதில் எழுதினேன். உண்மையில் நான் இரகசியத்தைப் பயன்படுத்திக் கொண்டிருந்தேன் என்பதை அப்போது நான் உணரவில்லை, ஆனால் இப்போது அது எனக்குப் புரிகிறது. ஆனால், கல்லூரிப் படிப்பை முடிப்பதுதான் என்னுடைய முதல் இலக்காக இருந்தது.

அமெரிக்காவில் பணவீழ்ச்சிக் காலகட்டத்தில் வாழ்ந்தது முற்றிலும் நம்பிக்கை இழக்கச் செய்வதாக இருந்தது. சில சமயங்களில் அது விரக்தி ஏற்படுத்தியது. பெரும் பொருளாதார நெருக்கடி நிலவிய ஒரு காலகட்டத்தில் நான் கல்லூரியிலிருந்து பட்டம் பெறுவேன் என்று நான் ஒருபோதும் ஊகித்திருக்கவே இல்லை. என் கையில் **சல்லிக்காசுகூட** இருக்கவில்லை. படிப்பதற்காக நான் வாங்கிய கடன் மட்டும் இருந்தது. எனவே, படித்துக் கொண்டே வேலை செய்ய நான் முடிவு செய்தேன். ஆனால், அச்சிறிய ஊரில் எனக்கு எந்த வேலையும் கிடைக்கவில்லை. ஒன்று, யாரும் எனக்கு வேலை கொடுக்க முன்வரவில்லை. அல்லது, அப்படியே ஒரு வேலை கிடைத்தாலும், என்னுடைய கல்லூரி நேரத்திற்கு அது சரிப்பட்டு வரவில்லை. நான்

https://telegram.me/aedahamlibrary

உண்மையிலேயே மிகவும் ஊக்கமிழக்கத் தொடங்கினேன்.

நான் **இரகசியம்** புத்தகத்தை ஏற்கனவே படித்திருந்தேன். அதை நான் சில விஷயங்களில் செயல்படுத்தவும் செய்திருந்தேன். ஆனால், நான் அதை ஒருபோதும் **முழுமையாகவும் இதயபூர்வமாகவும்** நம்பவில்லை. எனவே, அப்புத்தகத்தை மீண்டும் படிப்பதென்று நான் தீர்மானித்தேன். இம்முறை, அதன் போதனைகள் உண்மையிலேயே என் இதயத்தைத் தொட்டன.

நான் பட்டம் பெறுவதற்கு இன்னும் மூன்றரை மாதங்கள் இருந்தன. உலகப் பயணம் மேற்கொள்ள வேண்டும் என்ற விருப்பம் என்னுள் கொழுந்துவிட்டு எரிந்தது. ஆனால் ஏனைய உலகம், “உன்னால் ஒருபோதும் பயணிக்க முடியாது!” என்று கத்தியது. எப்போதும் எனக்கு ஆதரவாக இருந்த என்னுடைய அற்புதமான பெற்றோர்கூட, “பயணம் பற்றிய அந்தக் கனவுகளை உன் மனத்திலிருந்து நீக்கிவிடு. நெடுங்காலத்திற்கு அது நிகழப் போவதில்லை. உன்னிடம் பணம் இல்லை. எங்களாலும் அதற்குப் பணம் கொடுக்க முடியாது!” என்று கூறிவிட்டனர். அவர்கள் கூறியது சரிதான் என்று ஒப்புக் கொள்ளப் பல சமயங்களில் நான் தூண்டப்பட்டேன். ஆனால், அவர்கள் மிகவும் எதிர்மறையாக யோசித்ததால், என்னுடைய கனவுகளைப் பற்றி இனி அவர்களிடம் பேசப் போவதில்லை என்று நான் தீர்மானித்தேன். இதற்கிடையே, “நான் பயணம் செய்யப் போகிறேன். அது எப்போது நிகழும் அல்லது எப்படி நிகழும் என்பதெல்லாம் எனக்குத் தெரியாது, ஆனால் அது **நிச்சயமாக** நிகழும்,” என்று தினமும் எனக்கு நானே கூறிக் கொண்டேன்.

நான் போக விரும்பிய இடங்களின் புகைப்படங்களைச் சேகரித்து மனக்காட்சிப் பலகை ஒன்றை நான் உருவாக்கினேன். வாழ்வில் நான் எவற்றைப் பற்றியெல்லாம் நன்றியுணர்வு கொண்டிருந்தேனோ, அவற்றை தினமும் இரவில் நான் என்னுடைய நோட்டுப் புத்தகத்தில் பட்டியலிட்டேன். மக்களிடம் நான்

https://telegram.me/aedahamlibrary

விரும்பிய அம்சங்கள், என்னிடம் நான் விரும்பிய அம்சங்கள் போன்றவற்றையும் நான் அதில் எழுதினேன். உலகைச் சுற்றிப் பார்ப்பதற்கு எனக்குக் கிடைத்திருந்த வாய்ப்புக்காக நான் நன்றி கூறினேன். அந்தப் பயண அனுபவம் என் ஆன்மாவுக்கு எவ்வளவு நன்மையைச் செய்யும் என்பதையும் நான் எழுதினேன். பல வாரங்களுக்குப் பிறகு, என் பயணக் கனவுகள் உண்மையிலேயே நிறைவேறியது போன்ற ஓர் உணர்வை நான் அனுபவிக்கத் தொடங்கினேன். அவை நிச்சயமாக நனவாகும் என்று நான் இதயபூர்வமாகவும் உண்மையாகவும் நம்பினேன்.

சுமார் ஒன்றரை மாதங்கள் நான் இப்பயிற்சியை மேற்கொண்டு வந்திருந்த நிலையில், என்னுடைய பழைய தோழி ஒருத்தியிடமிருந்து எனக்கு ஒரு மின்னஞ்சல் வந்தது. கலாச்சாரப் பரிமாற்றத் திட்டம் ஒன்றின்கீழ் இத்தாலியில் ஒரு குடும்பத்தினருடன் வசிப்பதற்கான ஒரு வாய்ப்பை அவள் எனக்கு வழங்கியிருந்தாள். பிறகு அக்குடும்பத்தினர் என்னைத் தொடர்பு கொண்டு, நான் அங்கு வாழுவதற்கான முழுச் செலவையும் தாங்கள் **ஏற்றுக் கொள்ளுவதாக** என்னிடம் கூறினர். அதை என்னால் நம்ப முடியவில்லை. இந்த வாய்ப்பு உண்மையிலேயே வானத்திலிருந்து வந்து **குதித்ததுபோல** இருந்தது. **நான் இத்தாலிக்குப் போனவுடன் என்னிடம் பணம் இருக்கும். ஆனால் அங்கே எப்படிப் போய்ச் சேருவது என்பதை மட்டும் இப்போது நான் கண்டுபிடித்தாக வேண்டும்** என்று நான் நினைத்துக் கொண்டேன். நான் **நிச்சயமாக** அங்கே போய்ச் சேர்ந்துவிடுவேன் என்றும், விமானப் பயணச்சீட்டுக்கான பணம் மட்டுமே எனக்குத் தேவை என்றும் நான் மீண்டும் மீண்டும் எனக்குள் கூறிக் கொண்டே இருந்தேன்.

ஒருசில வாரங்களுக்குப் பிறகு, நான் என் கல்லூரியிலிருந்து பட்டம் பெற்றேன். அதையடுத்து, என்னை வாழ்த்திப் பலரிடமிருந்து எனக்குப் பணப் பரிசு வரத் தொடங்கியது. எனக்குக் கிடைத்த மொத்தப் பணம்

https://telegram.me/aedahamlibrary

என்னுடைய பயணச்சீட்டுக்கான தொகைக்குத் துல்லியமாக ஈடாக இருந்தது.

அதன் பிறகு, இத்தாலி வரை சென்றுவிட்டு வெறுமனே இத்தாலியை **மட்டும்** சுற்றிப் பார்த்தால் போதாது என்று எனக்குத் தோன்றியது. நான் ஐரோப்பாவில் பல இடங்களைப் பார்க்க விரும்பினேன். எனவே, இத்தாலியில் என்னுடைய கடைசி மாதத்தை மற்ற இடங்களைச் சுற்றிப் பார்ப்பதில் செலவிடுவதென்று நான் தீர்மானித்தேன். ஆனால் என் நண்பர்களும் குடும்பத்தினரும் அது பற்றிக் கவலைப்பட்டனர். “உன்னால் எப்படி அவ்வளவு பணத்தைச் சேமிக்க முடியும்? நீ தனியாகவா போகப் போகிறாய்? யார் உன்னோடு வரப் போகிறார்கள்?” என்றெல்லாம் அவர்கள் கேட்டனர். ஆனால் நான் விடாப்பிடியாக, “நேரம் வரும்போது நான் அதைப் பார்த்துக் கொள்ளுவேன். எனக்குத் துணையாக என்னோடு பயணம் செய்ய யாரேனும் கிடைப்பார்கள். நான் போதுமான பணத்தைச் சேமிப்பேன். நிச்சயமாக இது நடக்கும்!” என்று கூறினேன்.

எனவே, அந்தக் கூடுதல் மாதத்தையும் கணக்கில் எடுத்துக் கொண்டு நான் அமெரிக்காவுக்குத் திரும்பி வருவதற்கான பயணச்சீட்டை வாங்கினேன். **மறுநாளே** , அமெரிக்காவில் இன்னொரு மாநிலத்தில் வாழ்ந்து கொண்டிருந்த என்னுடைய உயிர்த் தோழி என்னைத் தொலைபேசியில் அழைத்தாள். நானும் அவளும் பேசி நெடுநாட்கள் ஆகியிருந்ததால், பொதுவாக எங்களுடைய வாழ்க்கையைப் பற்றிப் பேசுவதற்காக அவள் அழைத்திருந்தாள். நான் ஐரோப்பாவுக்குச் செல்லத் திட்டமிட்டிருந்த விஷயத்தை நான் அவளிடம் கூறியபோது, அவள் உற்சாகமாக, “நானும் உன்னோடு வருகிறேன். நான் இப்போதே என்னுடைய பயணச்சீட்டைப் பதிவு செய்யப் போகிறேன் . . . நாம் ரோம் நகரில் சந்திக்கலாம்!” என்று கூறினாள்.

என்னுடைய **ஒட்டுமொத்தப் பயணமும்** இரகசியத்தினால்தான் நடந்தேறியது. நம்முடைய சொந்த எண்ணங்களை மாற்றுவதன் மூலம் அற்புதமான

https://telegram.me/aedahamlibrary

விஷயங்கள் நம் வாழ்வில் நிகழுவதைச் சாத்தியமாக்க முடியும் என்று தெரிந்திருப்பது எவ்வளவு மகிழ்ச்சிகரமான விஷயம்! என்னுடைய உல்லாசப் பயணம் என் வாழ்க்கையை மாற்றிய ஓர் அனுபவமாக அமைந்தது. அப்பயணத்திற்குத் தேவையான பணத்தைவிட அதிகப் பணம் என்னிடம் இருந்தது. கடைசியில் என்னிடம் சிறிதளவு பணம் மிச்சம்கூட இருந்தது!

'கேளுங்கள், நம்புங்கள், பெறுங்கள்' செயல்முறை உண்மையிலேயே மிகச் சிறப்பாகப் பலனளிக்கிறது.

நன்றி, நன்றி, நன்றி! கடவுள் எல்லோரையும் ஆசீர்வதிக்கட்டும்.

**- ஆஷ்லி எஸ்., சியாட்டில், வாஷிங்டன், அமெரிக்கா**

ஒரு முறை கேளுங்கள், நீங்கள் கேட்டதை நீங்கள் பெற்றுவிட்டதாக நம்புங்கள். அதைப் பெறுவதற்கு நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் ஒரு மகிழ்ச்சியான மனநிலையில் இருப்பது மட்டும்தான். நீங்கள் மகிழ்ச்சியாக இருக்கும்போது, பெறுவதற்கான அலைவரிசையில் நீங்கள் இருக்கிறீர்கள். நல்ல விஷயங்கள் உங்களை நோக்கி வந்து கொண்டிருக்கின்ற ஓர் அலைவரிசையில் நீங்கள் இருக்கும்போது, நீங்கள் கேட்டதை நீங்கள் பெறுவீர்கள்.

"நான் இப்போது பெற்றுக் கொண்டிருக்கிறேன். என் வாழ்வில் அனைத்து நல்ல விஷயங்களையும் நான் பெற்றுக் கொண்டிருக்கிறேன். இக்கணத்தில் [உங்கள் விருப்பத்தை நிரப்பிக் கொள்ளுங்கள்] நான் பெற்றுக் கொண்டிருக்கிறேன்," என்று உங்களுக்கு நீங்களே கூறிக் கொள்ளுவது நீங்கள் அந்த அலைவரிசையை வேகமாகச்

https://telegram.me/aedahamlibrary

சென்றடைவதற்கான ஒரு வழியாகும். அதை இதயபூர்வமாக **உணருங்கள்** . அவ்வாறு கூறிவிட்டு, நீங்கள் கேட்டதை நீங்கள் உண்மையிலேயே பெற்றுவிட்டதைப்போல **உணருங்கள்** .

ஆஷ்லி அதைத்தான் செய்தாள். தான் கேட்டது தனக்குக் **கிடைத்துவிட்டதுபோல** அவள் நடந்து கொண்டதன் மூலம் அவள் அந்தப் படைப்புச் செயல்முறையை நம்பத் தொடங்கினாள், தனக்கு விருப்பமானதைப் பெறவும் செய்தாள்.

## சிறியதாக எதையேனும் கேளுங்கள்

**பெரும்பாலான மக்களால் சிறிய விஷயங்களை விரைவாகக் கவர்ந்திழுத்துவிட முடியும். ஏனெனில், சிறிய விஷயங்களைப் பொருத்தவரை அவர்களிடம் எந்தத் தடையும் இருப்பதில்லை. ஏனெனில், அவற்றுக்கு முரணான எந்த எண்ணங்களையும் அவர்கள் சிந்திப்பதில்லை. ஆனால் பெரிய விஷயங்கள் என்று வரும்போது, சந்தேகம், கவலை போன்ற எண்ணங்கள் மக்களின் மனங்களில் முளைவிடுகின்றன. அந்த எண்ணங்கள் அப்பெரிய விஷயங்களோடு முரண்பட்டு நிற்கின்றன. ஒரு விஷயம் யதார்த்தத்தில் உருப்பெறுவதற்கு ஆகக்கூடிய நேரத்தைப் பொருத்தவரை இதுதான் ஒரே வேறுபாடு.**

**பிரபஞ்சத்தைப் பொருத்தவரை எந்தவொரு விஷயமும் பெரியதோ அல்லது சிறியதோ அல்ல.**

**- இரகசியம் தினசரி போதனைகள்**

## ஒரு ‘பென்னி’ நாணயத்தைக் கண்டுபிடித்தது எல்லாவற்றையும் மாற்றியது

https://telegram.me/aedahamlibrary

**இரகசியம்** புத்தகத்தைப் படித்தப் பிறகு, ஏதேனும் சிறிய விஷயம் ஒன்றிலிருந்து துவக்கலாம் என்று நான் முடிவு செய்தேன். நான் ஒரு 'பென்னி' நாணயத்தைக் கற்பனை செய்யத் தீர்மானித்தேன். என் மனத்தில் இருந்த அந்த நாணயம் தனிச்சிறப்புக் கொண்டதாக இருக்கும்படி நான் பார்த்துக் கொண்டேன். நான் அதைக் கண்டுபிடிக்கும்போது, அதன் தலைப்பகுதி மேலே இருக்கும் என்றும், அந்த நாணயம் பளபளப்பாகவும் புதிதாகவும் இருக்கும் என்றும், அது 1996ம் ஆண்டு வெளியிடப்பட்டதாக இருக்கும் என்றும் நான் கற்பனை செய்தேன்.

நான்கு நாட்களுக்கு முன்பு நான் அந்த நாணயத்தைக் கற்பனை செய்தேன். கடந்த நான்கு நாட்களாக நான் பல முறை அதைப் பற்றி நினைத்தேன். சில சமயங்களில், கார்களை நிறுத்தும் இடங்களிலும் நடைபாதைகளிலும் நான் அந்த நாணயத்தைத் தேடினேன். ஆனால், நான் அதைத் தேட வேண்டியதில்லை என்றும், அது தானாக என்னைக் கண்டுபிடித்து என்னிடம் வந்து சேரும் என்றும் எனக்கு நானே நினைவுபடுத்திக் கொள்ள வேண்டியிருந்தது.

ஆனால் இன்று அந்த நாணயத்தைப் பற்றி நான் நினைக்கவில்லை. நான் முதன்முதலாக அதைக் கற்பனை செய்த நாளிலிருந்து இன்றுவரை நான் எந்தப் பென்னி நாணயத்தையும் பார்க்கவில்லை. இன்றிரவு நான் ஒரு திரைப்படம் பார்ப்பதற்காக ஒரு திரையரங்கிற்குச் சென்றேன். படம் முடிந்து நான் வெளியே வந்து கொண்டிருந்தபோது, ஏதோ காரணத்திற்காக நான் கீழே பார்த்தபோது, ஒரு பளபளப்பான பென்னியை நான் கண்டேன். அது என்னுடையதுதான் என்று உடனடியாக எனக்குத் தோன்றியது. ஆனால், அதைத் தொடுவதற்கு முன்பாக, அதன் தலைப்பகுதி மேலே இருந்ததா என்று நான் பார்த்தேன். அது அப்படித்தான் இருந்தது. நான் அதை எடுத்துப் பார்த்தபோது, அதில் 1996 என்று

https://telegram.me/aedahamlibrary

அச்சிடப்பட்டிருந்ததைக் கண்டு நான் ஆனந்தக் கண்ணீர் வடித்தேன்!

ஒரு சிறிய விஷயத்திலிருந்து துவக்க நான் தீர்மானித்தது குறித்து நான் உண்மையிலேயே மகிழ்ச்சி கொள்ளுகிறேன். ஏனெனில், உண்மையான நம்பிக்கையை வளர்த்துக் கொள்ளுவதற்கு எனக்கு அது தேவைப்பட்டது. என்னால் எதையும் செய்ய முடியும், எதையும் பெற முடியும் என்பதை இப்போது நான் அறிவேன். எனக்குத் தெரிந்த எல்லோருக்கும் நான் இப்புத்தகத்தை வாங்கிக் கொடுக்க விரும்புகிறேன்! மிக்க நன்றி. நான் உண்மையிலேயே நன்றிக்கடன் பட்டுள்ளேன்!

**- அமேன்டா, கனெட்டிகட், அமெரிக்கா**

நீங்கள் விரும்புவதைக் கண நேரத்தில் பிரபஞ்சத்தால் மெய்யாக்கிக் கொடுக்க முடியும். உங்கள் விருப்பம் நிறைவேறுவதில் ஏதேனும் தாமதம் ஏற்பட்டால், அது ஏற்கனவே நிறைவேறிவிட்டதாக நம்பும் நிலையை நீங்கள் எட்டுவதில் ஏற்படுகின்ற தாமதம்தான் அதற்குக் காரணம். ஒரு டாலர் பணத்தை உங்களுக்குக் கொடுப்பதும் பத்து லட்சம் டாலர்கள் பணத்தை உங்களுக்குக் கொடுப்பதும் பிரபஞ்சத்திற்கு மிகச் சுலபமான வேலைதான். ஆனால், ஒன்று வேகமாக மெய்யாவதற்கும் இன்னொன்று மெய்யாவதற்கு நெடுநாட்கள் ஆவதற்கும் ஒரே காரணம், பத்து லட்சம் டாலர்கள் என்பது மிக அதிகமான பணம் என்றும், ஒரு டாலர் அவ்வளவு பெரிய தொகை அல்ல என்றும் நீங்கள் நினைப்பதுதான். ஒன்று உண்மையிலேயே மிகப் பெரியது என்று நீங்கள் நினைக்கும்போது, “இது மிகப் பெரிய விஷயம். இதை அடைவது கடினமானதாக இருக்கப் போகிறது. இது மெய்யாவதற்கு உண்மையிலேயே

https://telegram.me/aedahamlibrary

மிக நீண்டகாலம் ஆகக்கூடும்," என்று நீங்கள் ஈர்ப்பு விதியிடம் கூறுகிறீர்கள். உங்கள் எண்ணம் சரி என்று நிரூபணமாகும். ஏனெனில், நீங்கள் என்ன நினைக்கிறீர்களோ, எதை உணருகிறீர்களோ, துல்லியமாக அதைத்தான் நீங்கள் பெறுவீர்கள். எனவே, சிறியதாக ஏதோ ஒன்றுடன் துவக்குவது ஈர்ப்பு விதி உங்களுக்குச் சாதகமாக வேலை செய்து கொண்டிருப்பதை அனுபவபூர்வமாக உணருவதற்கான ஒரு சுலபமான வழியாகும். ஈர்ப்பு விதி இயங்கும் விதத்தை நீங்கள் அனுபவரீதியாக அறிந்து கொண்டவுடன், உங்கள் மனத்திலுள்ள சந்தேகங்கள் அனைத்தும் மாயமாய் மறைந்துவிடும்.

## ஒரு சிறிய விஷயம்

இரகசியத்தைப் பற்றி நான் முதன்முதலில் ஒரு தோழியின் மூலமாகக் கேள்விப்பட்டேன். என் வாழ்வில் நிகழ்ந்த எல்லாமே ஒரு இரகசியத்தினால்தான் நிகழ்ந்தது என்று அவள் எப்போதும் என்னிடம் சொல்லிக் கொண்டே இருந்தாள். "**அது என்ன பொல்லாத இரகசியம்?**" என்று நான் யோசித்தேன். ஆனால் அவள் அதை என்னிடம் கூற மறுத்துவிட்டாள். அவள் கூறியதெல்லாம், "நான் அதை உன்னிடம் சொல்லிவிட்டால், பிறகு அது ஒரு இரகசியமாக இருக்காது!" என்பது மட்டும்தான். எனவே, நான் அப்பேச்சை அத்துடன் விட்டுவிட்டு அதைப் பற்றி மறந்துவிட்டேன்.

ஒருசில மாதங்களுக்குப் பிறகு, கனடாவிலிருந்து என்னுடைய சகோதரர் எங்கள் வீட்டிற்கு வந்தார். நாங்கள் உரையாடிக் கொண்டிருந்தபோது, திடீரென்று இரகசியம் பற்றி அவர் குறிப்பிட்டார். அது தன்னுடைய வாழ்க்கையை மாற்றியிருந்த விதத்தையும், இரக்சியத்தின் தத்துவங்களைத் தான் பின்பற்றியதன்

https://telegram.me/aedahamlibrary

விளைவாகத் தன் வாழ்வில் நிகழ்ந்திருந்த அற்புதமான விஷயங்களைப் பற்றியும் அவர் என்னிடம் தொடர்ந்து சொல்லிக் கொண்டே போனார். அந்த இரகசியம் என்ன என்பதை அப்போது நான் புரிந்து கொண்டேன். **இரகசியம் திரைப்படத்தில் அப்படி என்னதான் சொல்லியிருக்கிறார்கள் என்று பார்த்துவிடலாம் என்று நினைத்து**, நான் அதன் டிவிடியை வாங்கி அதைப் பார்த்தேன். **இது சுவாரசியமாகத்தான் இருக்கிறது . . . ஆனால் இது பலனளிக்கிறதா என்று எப்படி நான் சோதிப்பது?** என்று நான் யோசித்தேன். ஏதேனும் ஓர் எளிய விஷயத்தை, ஆனால் நான் உண்மையிலேயே அடைய விரும்பிய ஒரு விஷயத்தை வைத்து அதைப் பரிசோதிக்கலாம் என்று நான் தீர்மானித்தேன். இரகசியம் வேலை செய்யாது என்று நிரூபிக்க நான் கையிலெடுத்திருந்த ஒரு வேடிக்கையான வழி அது.

நான் கூறுவது அபத்தமாக இருப்பதாக உங்களுக்குத் தோன்றக்கூடும். ஆனால், அச்சமயத்தில், **ஹார் கௌ** என்ற சீன உணவுப் பண்டத்தைச் சாப்பிட வேண்டும் என்ற ஒரு தீவிர ஆசை எனக்கு இருந்தது. நான் வாழ்ந்து கொண்டிருந்த பகுதியில் ஓர் உண்மையான சீன உணவகத்தைக் கண்டுபிடிப்பது கடினமாக இருந்தது. ஆனால் எனக்கு என்ன வேண்டுமோ அதை நான் என் மனத்தில் காட்சிப்படுத்த வேண்டும் என்று இரகசியம் கூறியது. எனவே, நான் அவ்வாறே செய்தேன். அதே சமயத்தில், நானாக அந்த **ஹார் கௌவைத்** தேடிக் கண்டுபிடிக்கக் கடுமையாக முயற்சித்தேன். சுமார் ஒரு வார காலம் நான் அதைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டே இருந்தேன், ஆனால் அது எனக்குக் கைகூடவில்லை.

பிறகு, ஒருநாள் இரவில் நான் தூங்குவதற்கு முன்பாக, **ஏதோ ஒரு விதத்தில் அந்த உணவுப் பண்டத்தை நான் சாப்பிடத்தான் போகிறேன், அது எப்படி என்பது மட்டும் எனக்குத் தெரியாது, ஆனால் நான் நிச்சயமாக அதைச் சாப்பிடுவேன்** என்று எனக்கு நானே கூறிக் கொண்டேன். பிறகு நான் மறுநாள் காலையில் எழுந்து வழக்கம்போல வேலைக்குப் போய்விட்டேன். முந்தைய இரவில் எனக்கு

https://telegram.me/aedahamlibrary

நானே கூறிக் கொண்ட விஷயத்தை நான் முற்றிலுமாக மறந்து போயிருந்தேன். பிறகு என்னுடைய அலுவலகத்தில் நான் வழக்கமாகச் செய்த வேலைகளைச் செய்யத் தொடங்கினேன். அப்போது என்னுடன் வேலை செய்த என் தோழி ஒருத்தி என்னிடம் வந்து, “வா, நாம் சாப்பிடப் போகலாம். இன்னொரு துறையைச் சேர்ந்தவர்கள் இன்று நம் எல்லோருக்கும் காலை உணவுக்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள்,” என்று கூறினாள். நான் அவளைப் பின்தொடர்ந்தேன். அங்கு நான் எதைக் கண்டேன் என்று உங்களால் ஊகிக்க முடிகிறதா? என்னுடைய **ஹார் கெள.** எனக்கு ஆச்சரியம் தாங்கவில்லை. அந்தப் பண்டத்தை யாரும் காலை உணவாகச் சாப்பிடுவதில்லை என்றாலும், அன்று அது அங்கு பரிமாறப்பட்டிருந்தது!

நான் அதைச் சாப்பிடுவேன் என்று உண்மையிலேயே நம்பியவுடன் அது நிகழ்ந்தது! அதை வாங்கி வந்த பெண்ணிடம் அவள் ஏன் காலை உணவுக்கு அதை வாங்கி வந்திருந்தாள் என்று நான் கேட்டபோது, “காலை ஆறு மணிக்கு என் வீட்டின் அருகே அந்தக் கடை ஒன்றுதான் திறந்திருந்தது!” என்று அவள் கூறினாள்.

அக்கணத்திற்குப் பிறகு, இரகசியத்தின்மீது நான் ஆழமான நம்பிக்கை கொள்ளத் தொடங்கிவிட்டேன்!

**- லார்னி ஆர்., கலிபோர்னியா, அமெரிக்கா**

“இரகசியம் உண்மையிலேயே பலனளிக்கிறதா?” என்று பார்ப்பதற்காக ஏதேனும் சிறிய விஷயம் ஒன்றைக் கேட்டு இரகசியத்தின் சக்தியை “சோதிப்பது” மக்களின் வழக்கமாக இருக்கிறது. அடுத்தக் கதையில், ஜேசனும் ஒரு சிறிய விஷயத்தைக் கொண்டு இரகசியத்தை சோதிக்கத் தீர்மானித்தார். அவர் ஓர் அரிய விஷயத்தைத் தேர்ந்தெடுத்தார். அது மெய்யாகும்போது சந்தேகமின்றி அதைத் தன்னால் துல்லியமாகக்

https://telegram.me/aedahamlibrary

காண முடிய வேண்டும் என்பதற்காக அவர் அத்தகைய ஒன்றைத் தேர்ந்தெடுத்தார்.

## நம்புவதை நான் நிறுத்தியிருந்தேன். பின்னர் ஒருநாள் . . .

**இரகசியம்** திரைப்படம் வெளியாவதற்கு முன்பு ஓராண்டு காலமாக ஈர்ப்பு விதியை நான் கற்று வந்திருந்தேன். என் விஷயத்தில் உண்மையில் எதுவும் பலனளித்திருக்கவில்லை என்றாலும், இரகசியம் திரைப்படம் குறித்து நான் உற்சாகமடைந்தேன்.

அதன் டிவிடி என் கைக்கு வந்தபோது, அது உண்மையிலேயே உத்வேகமூட்டுவதாக இருந்தது. ஒரு வாரத்தில் பல முறை நான் அதைப் பார்த்தேன். அதை நான் உண்மையிலேயே மிகவும் ரசித்தேன்!

அதில் ஒரு பகுதியில், துவக்கத்தில் 'ஒரு கோப்பைக் காபியைக் கவர்ந்திழுக்கும்படி' அவர்கள் பரிந்துரைக்கின்றனர். இரகசியம் திரைப்படத்தின் ஆடியோ பதிப்பில், ஈர்ப்பு விதி உண்மையானது என்பதை நிரூபிப்பதற்காக ஓர் இறகைத் தன்னிடம் கவர்ந்திழுத்த ஒரு மனிதனின் கதையை அவர்கள் கூறுகின்றனர்.

ஈர்ப்பு விதி உண்மையானது என்பதை எனக்கு நானே 'நிரூபிப்பதென்று' நான் தீர்மானித்தேன். இதைச் செய்வதற்கு, முற்றிலும் வித்தியாசமான ஒன்றை நான் கவர்ந்திழுக்க விரும்பினேன். எனவே, தையல் ஊசி நம்முடைய கையைப் பதம் பார்க்காமல் இருப்பதற்காக நாம் பயன்படுத்துகின்ற விரல் சிமிழைக் கொண்டு நான் என் சோதனையைத் துவக்கினேன். அச்சிமிழ் செந்நிறத்தில் இருக்க வேண்டும் என்று நான் விரும்பினேன். நான் என்னுடைய இலக்குகளை எழுதி வைத்திருந்த புத்தகத்தில் தினமும் நான் அதை எழுதினேன். பிறகு, என் கண்களை மூடிக் கொண்டு, அந்தச் செந்நிறச் சிமிழ் என் விரலில் பொருத்தப்பட்டிருந்ததாக நான் கற்பனை செய்தேன். இது பற்றி எனக்கு நானே ஒரு மின்னஞ்சல்கூட எழுதி

https://telegram.me/aedahamlibrary

அனுப்பினேன். அந்தச் செந்நிறச் சிமிழை நான் கவர்ந்திழுத்தவுடன் இரகசியம் குழுவிற்கு என்னுடைய அந்த அனுபவத்தை நான் எழுதி அனுப்பி வைப்பதுபோல நான் அந்த மின்னஞ்சலில் எழுதியிருந்தேன்.

இரண்டு வாரங்கள் உருண்டோடிய பின்னும் எதுவும் நிகழவில்லை. ஒரு கோப்பைக் காபியை ஒரே நாளில் கவர்ந்திழுத்துவிடலாம் என்று இரகசியம் திரைப்படத்தில் கூறியிருந்தனர். அந்த இறகைத் தன்னிடம் கவர்ந்திழுத்தவர் இரண்டு நாட்களில் அதைச் சாதித்திருந்தார். ஆனால் இரண்டு வாரங்கள் ஆகியும் என் விருப்பம் நிறைவேறியிருக்கவில்லை!

பிறகு ஒருநாள், நான் கலந்து கொண்டிருந்த ஒரு பயிற்சி வகுப்பில், ஒரு சிறு நாடகம் போடும்படி எங்களிடம் கேட்டுக் கொள்ளப்பட்டது. ஒரு குறிப்பிட்ட வார்த்தை கூறப்படும்போது நாங்கள் உள்ளே நுழைய வேண்டும், அதே வார்த்தைக்கு நாங்கள் வெளியேறிவிட வேண்டும். எனக்குக் கொடுக்கப்பட்ட வார்த்தை ‘**விரல் சிமிழ்**’.

என் உடல் புல்லரித்தது. “தொடர்ந்து செயல்படு, உன் விருப்பம் நிறைவேறவிருக்கிறது!” என்று பிரபஞ்சம் எனக்கு அனுப்பிய ஒரு செய்தியாக நான் அதைப் பார்த்தேன்.

நான் தொடர்ந்து மனக்காட்சிப்படைப்பில் ஈடுபட்டேன். மேலும் ஒரு மாதம் கழித்தும் எதுவும் நிகழவில்லை.

நான் மிகவும் ஊக்கமிழந்தேன், விரக்தியடைந்தேன், பிறகு அவ்விஷயத்தை முற்றிலுமாக மறந்துவிட்டேன். ஈர்ப்பு விதி வேலை செய்யவில்லை. ஆனால் நான் அப்படி நம்பவில்லையே? ஈர்ப்பு விதி வேலை செய்தது என்றுதான் நான் நம்பினேன். அதை எப்படிப் பயன்படுத்த வேண்டும் என்பதுதான் எனக்குத் தெரியவில்லை என்று நான் நினைத்தேன். இரண்டரை மாதங்களுக்குப் பிறகும் ஒரு சாதாரண விரற்சிமிழைக்கூட என்னால் கவர்ந்திழுக்க முடியவில்லை. நான் ஏதோ தவறு செய்து கொண்டிருந்ததாக எனக்குத் தோன்றியது.

https://telegram.me/aedahamlibrary

பிறகு, லாஸ் வேகஸ் நகரில் மாயவித்தைக்காரர்களுக்கான ஒரு பயிற்சிக் கருத்தரங்கிற்கு நான் சென்றேன். அக்கருத்தரங்கின் முடிவில், எங்கள் ஆசிரியர் ஒரு விநோதமான விஷயத்தைச் செய்யும்படி எங்களிடம் கூறினார். நாங்கள் அவருடைய விருந்தினர் பதிவேட்டில் கையெழுத்திட்டுவிட்டு, அவருடைய "புதையல் பெட்டிக்குள்" கையைவிட்டு, தான் பயன்படுத்தியிருந்த ஒரு சிறிய பொருளை நாங்கள் அதிலிருந்து வெளியே எடுக்க வேண்டும் என்று அவர் எங்களைக் கேட்டுக் கொண்டார்.

என்னோடு அக்கருத்தரங்கில் கலந்து கொண்டிருந்த இன்னொரு மாயவித்தைக்காரர் அந்தப் பதிவேட்டில் கையெழுத்திட்டுவிட்டு வந்தார். "இந்தக் கல்லைப் பாருங்கள்! இதை என்னுடைய நன்றியுணர்வுக் கல்லாக நான் பயன்படுத்தப் போகிறேன்!" என்று அவர் என்னிடம் கூறினார்.

"ஓ, நீங்கள் **இரகசியம்** திரைப்படத்தைப் பார்த்திருக்கிறீர்களா?" என்று நான் கேட்டேன். அதற்கு அவர் ஆமாம் என்று பதிலளித்தார். அப்போதுதான் எனக்கு அது விளங்கியது. என்னுடைய செந்நிற விரற்சிமிழ் அந்தப் புதையல் பெட்டிக்குள் இருந்தது. இது இன்னோர் அறிகுறி. நான் அந்தப் பதிவேட்டில் கையெழுத்திட்டுவிட்டு, அந்தப் பெட்டியைத் திறந்தேன். உள்ளே ஒரு செந்நிற விரற்சிமிழ் இருந்தது. என்னால் அதை நம்ப முடியவில்லை! நான் அந்த முழுப் பெட்டியையும் தேடிப் பார்த்தேன். அந்தச் சிமிழைத் தவிர வேறொரு சிமிழ் அதில் இருக்கவில்லை. அந்த ஒன்று மட்டும்தான் அதில் இருந்தது. அதுவும் நான் தேர்ந்தெடுத்திருந்த செந்நிறத்தில்!

நான் அச்சிமிழைக் கவர்ந்திழுக்க முதன்முதலில் விரும்பியபோது நான் என்னிடம் கூறிக் கொண்டதைப்போல, அதை நான் எல்லா இடங்களுக்கும் என்னுடன் எடுத்துச் செல்லுகிறேன். இப்போதுகூட அது என் பாக்கெட்டுக்குள் இருக்கிறது. நான் அதைத் தொட்டுப்

https://telegram.me/aedahamlibrary

பார்க்கும்போதெல்லாம், ஈர்ப்பு விதியின்மீது நான் கொண்டுள்ள நம்பிக்கை அந்தச் செந்நிற விரற்சிமிழில் இருப்பதாக எனக்கு நானே நினைவூட்டிக் கொள்ளுகிறேன். இது நிச்சயமாக வெறும் அதிர்ஷ்டமோ அல்லது ஒரு தற்செயலான நிகழ்வோ அல்ல. நான்தான் அதை உருவாக்கியிருந்தேன்.

ஒரு சிறிய விரற்சிமிழ் என்னை வந்தடைவதற்கு ஏன் இவ்வளவு காலம் ஆனது என்று எனக்குத் தெரியாது. ஈர்ப்பு விதியை எப்படிப் பயன்படுத்த வேண்டும் என்று நான் முழுமையாகப் புரிந்து கொண்டிருக்கிறேனோ என்பதும் எனக்குத் தெரியாது. ஆனால், அந்தச் செந்நிற விரற்சிமிழை நான் தொட்டுப் பார்க்கின்ற ஒவ்வொரு முறையும், நான் ஈர்ப்பு விதியை நம்புகிறேன். முன்பு எனக்கு அதன்மீது முழு நம்பிக்கை இருக்கவில்லை, ஆனால் இப்போது அதை நான் முற்றிலுமாக நம்புகிறேன். ஈர்ப்பு விதி உண்மையானது!

**- ஜேசன், மிச்சிகன், அமெரிக்கா**

இரகசியத்தின் சக்தியைத் தனிப்பட்ட முறையில் நீங்கள் அனுபவித்து, ஈர்ப்பு விதியின்மீது உண்மையிலேயே உங்களுக்கு நம்பிக்கை ஏற்பட்டவுடன், அதை நீங்கள் உங்கள் வாழ்வில் செயல்படுத்தும்போது எல்லாம் சிறப்புறுவதை நீங்கள் காணுவீர்கள்.

## அது உண்மையிலேயே உங்கள் வாழ்க்கையை மாற்றும்

### இரகசியம் என் குடும்பத்தின் வாழ்க்கையை மாற்றியது

சுமார் ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்பு, நான் என்னுடைய மகள்களுடன் (மூத்தவளுக்கு ஐந்து வயது, இளையவளுக்கு ஐந்து மாதம்) ஒருசில மாதங்கள் லாஸ்

https://telegram.me/aedahamlibrary

ஏஞ்சலீஸ் நகரில் வாழ்ந்து கொண்டிருந்தேன். என் கணவர் தென்னாப்பிரிக்காவில் வாழ்ந்து கொண்டிருந்தார். நாங்கள் எல்லோரும் சேர்ந்து தென்னாப்பிரிக்காவில் வாழுவதற்கு எங்களுடைய பொருளாதார நிலைமை இடம் கொடுக்கவில்லை என்பதால் நான் என்னுடைய பெற்றோர் வாழ்ந்த ஊரான லாஸ் ஏஞ்சலீஸ் நகருக்கு எங்களுடைய மக்களை அழைத்துச் சென்று அங்கு சிறிது காலம் என்னுடைய குடும்பத்தினரின் உதவியுடன் வாழுவதன்று நானும் என் கணவரும் தீர்மானித்தோம். நான் என் கணவரிடமிருந்தும் என் குழந்தைகள் தங்களுடைய தந்தையிடமிருந்தும் பிரிந்து வாழ்ந்து கொண்டிருந்தது மிகவும் வேதனையூட்டுவதாக இருந்தது, ஆனால் நாங்கள் அதைச் சமாளித்துவிடுவோம் என்பதை நான் அறிந்திருந்தேன்.

**இரகசியம்** திரைப்படத்தைப் பற்றியும் அது தங்கள் வாழ்க்கையை மாற்றிய விதத்தைப் பற்றியும் மூன்று வெவ்வேறு நபர்கள் என்னிடம் கூறினர். நான் இணையத்தளத்தில் பணம் செலுத்தி நேரடியாக அதில் அத்திரைப்படத்தைப் பார்த்தேன். அதைப் பார்த்தப் பிறகு, நான் உண்மையிலேயே இரகசியத்தின் போதனைகளின்படி வாழ்ந்து கொண்டிருந்ததை நான் உணர்ந்தேன். நான் என் வாழ்வில் எவற்றைக் குறித்து நன்றியுணர்வு கொண்டிருந்தேனோ அவற்றை நான் என்னுடைய தினசரிக் குறிப்பேட்டில் தினமும் எழுதி வந்திருந்தேன். எங்களுடைய பொருளாதார நிலைமை சீரடையும் என்று நான் உண்மையிலேயே நம்பினேன். நானும் என் குழந்தைகளும் என்னுடைய கணவரை மீண்டும் பார்ப்போம் என்பதை நான் அறிந்திருந்தேன்.

நானும் என் கணவரும் ஒரே இடத்தில் இருந்தபோது, எங்களுக்கிடையே ஏதோ சரியாக இல்லை என்பதையும் நான் உணர்ந்தேன். ஏனெனில், நான் இரகசியத்தின்படி வாழ்ந்து கொண்டிருந்தேன், ஆனால் அவர் அப்படி வாழவில்லை. இரகசியம் திரைப்படத்தை எப்படியாவது

https://telegram.me/aedahamlibrary

என் கணவரிடம் கொண்டு சேர்த்தாக வேண்டும் என்பதை நான் உணர்ந்தேன்.

ஒரு குறிப்பிட்ட விதத்தில் எனக்கு ஒரு பெரிய தொகை கிடைத்தது. எனவே, நான் மீண்டும் தென்னாப்பிரிக்காவுக்குச் சென்றேன். இரகசியம் திரைப்படத்தை நான் என் கணவரிடம் கொடுத்து, அது அவருடைய வாழ்க்கையை மாற்றும் என்று நான் அவரிடம் கூறினேன். அச்சமயத்தில் அவர் தன் குழந்தைகள் இல்லாமல் தனியாக வாழ்ந்து கொண்டிருந்தார். வெறும் ரொட்டியையும் தண்ணீரையும் மட்டுமே அவர் தினமும் உட்கொண்டார். எங்களுடைய நாய்கள் பசியால் வாடிக் கொண்டிருந்தன. தன்னுடைய செலவுகளைச் சமாளிப்பதற்கு அவருக்கு எந்த வேலையும் கிடைக்கவில்லை. நான் தென்னாப்பிரிக்காவுக்குத் திரும்பி வந்தபோது, அவருடைய கட்டண பாக்கிகளைச் செலுத்துவதற்கும் நல்ல சாப்பாடு வாங்குவதற்கும் போதுமான பணம் என்னிடம் இருந்தது. மேலும், எங்களுடைய ஒட்டுமொத்தக் குடும்பத்தின் வாழ்க்கையையும் மாற்றக்கூடிய திறவுகோல் என்னிடம் இருந்தது.

என் கணவர் வாரக்கணக்கில் தினமும் இரவில் **இரகசியம்** திரைப்படத்தைப் பார்த்துவிட்டு அப்படியே தூங்கிப் போனார். தன்னிடம் இல்லாதவற்றின்மீது கவனம் செலுத்துவதற்கு பதிலாக, வாழ்விலிருந்து தான் பெற விரும்பியவற்றின்மீது அவர் இப்போது கவனம் செலுத்தினார்.

நாங்கள் எந்த மாதிரியான வீட்டில் வாழ விரும்பினோம் என்பது உட்பட, நாங்கள் விரும்பிய வாழ்க்கையை ஒரு தாளில் நாங்கள் எழுதினோம். பின்னாளில் நாங்கள் தென்னாப்பிரிக்காவைவிட்டு வெளியேறி, லாஸ் ஏஞ்சலீஸ் நகரில் நாங்கள் ஆசைப்பட்ட வாழ்க்கைக்குத் திரும்பினோம். நாங்கள் எங்கள் மனத்தில் எந்த வகையான வீட்டைக் கற்பனை செய்திருந்தோமோ, துல்லியமாக அதே வீட்டில் நாங்கள் இப்போது வாழ்ந்து கொண்டிருக்கிறோம். எங்களுடைய மூத்த மகள் லாஸ்

https://telegram.me/aedahamlibrary

ஏஞ்சலீஸ் நகரில் மிகச் சிறந்த தனியார் பள்ளி ஒன்றில் படித்துக் கொண்டிருக்கிறாள். என் கணவர் தொடர்ந்து வேலையில் இருக்கிறார். எனவே, நாங்கள் பொருளாதாரரீதியாகப் பாதுகாப்பாக இருக்கிறோம். தினமும் எங்கள் வாழ்வில் அதிசயங்கள் நிகழ்ந்து கொண்டிருப்பதை நாங்கள் பார்க்கிறோம். அந்த அதிசயங்கள் நாங்கள் கற்பனை செய்ததைவிட மிகப் பெரிதாக இருக்கின்றன. ஆனால் ஓர் ஒளிமயமான எதிர்காலத்தை இப்போது எங்களால் பார்க்க முடிகிறது. இவையெல்லாம் என் கணவர் அந்தத் திரைப்படத்தைப் பார்த்த ஓராண்டுக்குள் நிகழ்ந்தன!

**இரகசியம்** எங்கள் குடும்பத்தில் உள்ள ஒவ்வொருவருடைய வாழ்க்கையையும் மாற்றியுள்ளது. அது இனியும் என்றென்றைக்கும் அவ்வாறே தொடரும்! **நாங்கள் கேட்க வேண்டும், பிறகு நம்ப வேண்டும், அப்போது நாங்கள் விரும்புவது எங்களுக்குக் கிடைக்கும்** என்பதை இப்போது நாங்கள் எல்லோரும் அறிந்துள்ளோம். நீங்கள் இச்செயல்முறையை எவ்வளவு அதிகமாகப் பயன்படுத்துகிறீர்களோ, அவ்வளவு வேகமாக உங்கள் விருப்பங்கள் நிறைவேறும். **இது அற்புதமானது**! நாங்கள் எங்கள் கதையை இப்போது மற்றவர்களுடன் பகிர்ந்து கொண்டதன் மூலம், எங்களைச் சுற்றிப் பலருடைய வாழ்க்கையில் மாற்றங்கள் ஏற்பட நாங்கள் உதவியுள்ளோம். நன்றி.

**- அலெக்ஸ், லாஸ் ஏஞ்சலீஸ், கலிபோர்னியா, அமெரிக்கா**

**நீங்கள் எங்கே இருந்தாலும் சரி, விஷயங்கள் எவ்வளவுதான் கடினமாக இருப்பதுபோலத் தோன்றினாலும் சரி, நீங்கள் எப்போதும் மேன்மையை நோக்கி வழிநடத்தப்பட்டுக் கொண்டிருக்கிறீர்கள். எப்போதும்.**

**- இரகசியம் தினசரி போதனைகள்**

https://telegram.me/aedahamlibrary

## படைப்புச் செயல்முறைக்கான திறவுகோல்கள்

- ஈர்ப்பு விதியைப் பொருத்தவரை, அதனால் செய்ய முடியாதது எதுவுமில்லை. அதற்கு எல்லாமே சாத்தியம்தான்.
- நீங்கள் எதைப் பற்றித் தொடர்ந்து சிந்திக்கிறீர்களோ, அதை நீங்கள் உங்கள் வாழ்விற்குள் கவர்ந்திழுப்பீர்கள்.
- கேட்டல், நம்புதல், பெறுதல் - நீங்கள் விரும்பும் எதுவொன்றையும் உருவாக்குவதற்கான மூன்று எளிய நடவடிக்கைகள் இவை.
- கேட்டல்தான் படைப்புச் செயல்முறையின் முதலாவது அம்சம். கேட்பதற்கு, உங்களுக்கு உண்மையிலேயே என்ன வேண்டும் என்பது பற்றிய தெளிவை நீங்கள் உங்கள் மனத்தில் உருவாக்கிக் கொள்ள வேண்டும், அவ்வளவுதான்.
- உங்களுக்கு விருப்பமானதை உங்களால் முடிந்த அளவுக்குத் திட்டவட்டமாக வரையறுத்துக் கொள்ளுங்கள்.
- நீங்கள் கேட்டப் பிறகு, அது ஏற்கனவே உங்கள் வசமாகிவிட்டது என்பதை அறிந்திடுங்கள்.
- நம்புதல் படைப்புச் செயல்முறையின் இரண்டாவது அம்சம். நீங்கள் விரும்புவதை நீங்கள் ஏற்கனவே பெற்றுவிட்டதுபோல நடந்து கொள்ளவும் பேசவும் சிந்திக்கவும் முயற்சி செய்யுங்கள்.
- நம்புவதற்கு, நீங்கள் விரும்புவது இக்கணத்தில் உங்களிடம் இருப்பதுபோலச் சிந்திக்கவும்

https://telegram.me/aedahamlibrary

பேசவும் நடந்து கொள்ளவும் செய்யுங்கள்.

- உங்கள் விருப்பத்தைப் பிரபஞ்சம் எவ்வாறு நிறைவேற்றும் என்பது பற்றி நீங்கள் கவலைப்பட வேண்டியதில்லை, அது உங்கள் வேலையும் அல்ல.
- நீங்கள் நம்பும்போது, நீங்கள் விரும்புவது உங்களுக்குக் கிடைக்கும்படி செய்வதற்குப் பிரபஞ்சம் எல்லாக் காய்களையும் உங்களுக்குச் சாதகமாக நகர்த்தியாக வேண்டும்.
- சிறியதாக எதையேனும் கேட்பதன் மூலம் இரகசியத்தின் சக்தியை சோதித்துப் பாருங்கள்.
- பெறுதல் படைப்புச் செயல்முறையின் மூன்றாவது அம்சம். நீங்கள் மகிழ்ச்சியான மனநிலையில் இருக்கும்போது, பெறுவதற்கான அலைவரிசையில் நீங்கள் இருக்கிறீர்கள். நீங்கள் விரும்பும் அனைத்தும் அப்போது உங்களை வந்தடையும்.
- ஒரு முறை கேளுங்கள்; நீங்கள் கேட்டதை நீங்கள் ஏற்கனவே பெற்றுவிட்டதாக நம்புங்கள்; அதை உண்மையிலேயே பெறுவதற்கு நீங்கள் மகிழ்ச்சியான மனநிலையில் இருக்க வேண்டும், அவ்வளவுதான்.
- உங்கள் எண்ணங்களை இப்போதே மாற்றுங்கள், அப்போது நீங்கள் உங்கள் வாழ்க்கையை மாற்றுவீர்கள்.

https://telegram.me/aedahamlibrary



https://telegram.me/aedahamlibrary

நம்முடைய வாழ்க்கையை மாற்றுவதற்கு, ஏதோ ஒரு கட்டத்தில், நாம் இனியும் துன்பப்படுவதை விடுத்து மகிழ்ச்சியாக வாழப் போவதாக நாம் தீர்மானித்தாக வேண்டும். என்ன ஆனாலும் சரி, நம் வாழ்வில் மெச்சத்தக்க விஷயங்களை நாம் தேடிப் பார்க்க வேண்டும் என்ற ஒரு தீர்மானத்தை மேற்கொள்ளுவது அதைச் சாதிப்பதற்கான ஒரு வழி.

**- இரகசியம் தினசரி போதனைகள்**

https://telegram.me/aedahamlibrary

## மகிழ்ச்சியைக் கைவசப்படுத்துவதற்கு இரகசியத்தை நான் எவ்வாறு பயன்படுத்தினேன்

உங்களை மகிழ்ச்சியாக உணரச் செய்கின்ற எண்ணங்கள்மீது உங்கள் முழு கவனத்தையும் குவிப்பதிலிருந்தும், உங்களுக்கு மகிழ்ச்சியுணர்வைக் கொடுக்காத எண்ணங்களைக் கண்டுகொள்ளாமல் இருப்பதிலிருந்தும்தான் மகிழ்ச்சி வருகிறது.

உங்கள் வாழ்க்கை உங்கள் கைகளில்தான் இருக்கிறது. உங்கள் வாழ்க்கைக் கட்டத்தில் இப்போது நீங்கள் எங்கு இருந்தாலும் சரி, உங்கள் வாழ்வில் என்ன நிகழ்ந்திருந்தாலும் சரி, உங்கள் எண்ணங்களைப் பிரக்ஞையோடு உங்களால் தேர்ந்தெடுக்க முடியும், உங்கள் வாழ்க்கையை மகிழ்ச்சி நிரம்பிய ஒன்றாக உங்களால் மாற்ற முடியும். மேம்படுவதற்கான எந்தச் சாத்தியமும் இல்லாத ஒரு சூழ்நிலை என்று எதுவும் இல்லை. உங்களுக்கு மகிழ்ச்சியைக் கொண்டுவரக்கூடிய எண்ணங்கள்மீது நீங்கள் கவனம் செலுத்தும்போது, நீங்கள் மகிழ்ச்சியடைவீர்கள் என்பதோடு கூடவே, உங்கள் வாழ்வில் உள்ள ஒவ்வொரு சூழலும் சிறப்பானதாக மாறும்!

சுருக்கமாகக் கூறினால், இதுவரை நீங்கள் சிந்தித்து வந்துள்ள எண்ணங்களின் விளைவுதான் உங்களுடைய தற்போதைய வாழ்க்கை. எனவே, அதே அடிப்படையில், நீங்கள் உங்கள் எண்ணங்களையும் உணர்வுகளையும் மாற்றத் தொடங்கும்போது உங்களுடைய ஒட்டுமொத்த வாழ்க்கையும் மாறும். இந்த உண்மையை நன்றாக

https://telegram.me/aedahamlibrary

அறிந்திருப்பவர்களில் ஒருவர் அடுத்தக் கதைக்குச் சொந்தக்காரரான டிரேசி.

## இரகசியம் என் உயிரைக் காப்பாற்றியது!

என்னுடைய குழந்தைப்பருவத்தில் நான் பல்வேறு சித்தரவதைகளுக்கு ஆளானேன். என் பெற்றோர் என்னை வெறுத்தனர். தற்கொலை முயற்சிகளில் ஈடுபடுவது, என்னை நானே பட்டினி போட்டுக் கொள்ளுவது, எனக்கு நானே தீங்கு விளைவித்துக் கொள்ளுவது போன்றவற்றில் நான் புகலிடம் தேடினேன். நான் மதிப்பற்றவள் என்ற உணர்வு என்னுள் ஆழமாக வேரூன்றி, நான் வளர்ந்து பெரியவளான பிறகும் என்னை வாட்டியது. என்னிடம் எள்ளளவுகூட சுயமதிப்பு இருக்கவில்லை.

நான் ஒரு செவிலியாக ஆனேன். எனக்கென்று யாரும் இல்லாததால், நான் எப்போதும் மற்றவர்களை கவனித்துக் கொள்ளுவதில் ஈடுபட்டேன். எனக்கு அற்புதமான தோழியர் வாய்த்திருந்தனர், ஆனால் ஆண்களுடனான என்னுடைய உறவு மிக மோசமானதாக இருந்தது. என்னுடைய முன்னாள் கணவர் பல பெண்களுடன் தொடர்பு வைத்திருந்தார். என்னுடைய காதலரும் எனக்கு நம்பிக்கைத் துரோகம் இழைத்தார். நான் என் மகன்மீது மிகுந்த அன்பு கொண்டுள்ளேன், ஆனால் நான் ஒரு நல்ல தாய் அல்ல என்ற எண்ணம் என்னுள் மேலோங்கி இருந்தது. என் மகனின் வாழ்க்கை இதைவிட அதிகச் சிறப்பானதாக இருந்திருக்க வேண்டும் என்று நான் நினைத்தேன்.

ஒரு சமயம், என்னால் தொடர்ந்து வாழ முடியாத ஒரு நிலையை நான் எட்டினேன். தற்கொலை செய்து கொள்ளுவதைப் பற்றி அப்போது நான் தீவிரமாக யோசித்துக் கொண்டிருந்தேன். அச்சமயத்தில்தான் என்னுடைய அன்பார்ந்த தோழி ஒருத்தி **இரகசியம்** புத்தகத்தை எனக்குப் பரிந்துரைத்தாள். அந்தப் பரிந்துரைதான் உண்மையில் என் உயிரைக்

https://telegram.me/aedahamlibrary

காப்பாற்றியது. நான் அப்புத்தகத்தை மீண்டும் மீண்டும் படித்தேன். என்னுடைய புதிய வாழ்க்கைமுறையின் ஒரு பகுதியாக, இந்நாள்வரை தினமும் அப்புத்தகத்தில் ஓர் அத்தியாயத்தையாவது நான் படிக்கிறேன். இரகசியத்தைப் புரிந்து கொள்ளவும், அதைப் பயன்படுத்தி எப்படி வாழுவது என்பதைக் கற்றுக் கொள்ளவும் எனக்குச் சிறிது காலம் பிடித்தது. நான் சிந்தித்த விதத்தை மாற்றுவதற்கு முதலில் நான் மிகக் கடினமாக முயற்சி செய்ய வேண்டியிருந்தது. ஆனால், என்னுடைய பழைய வாழ்க்கைக்கும் என்னுடைய இன்றைய வாழ்க்கைக்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை. நான் ஒவ்வொரு நாளையும் ஒரு புன்னகையுடனும் ஒரு நன்றிப் பிரார்த்தனையுடனும் துவக்குகிறேன். நான் **மிகவும்** மகிழ்ச்சியாக இருக்கிறேன். அந்த மகிழ்ச்சியை யாராலும் என்னிடமிருந்து பறிக்க முடியாது என்ற அறிதல் எனக்கு ஆனந்தத்தைக் கொடுக்கிறது. ஏனெனில், நான் எவ்வளவு அதிக மகிழ்ச்சியாக இருக்கிறேனோ, நான் அவ்வளவு அதிக மகிழ்ச்சியைப் பெறுகிறேன். தினமும் நான் ஒரு தினசரிக் குறிப்பேட்டில் எழுதுகிறேன். ஒரு மனக்காட்சிப் பலகையையும் நான் உருவாக்கியுள்ளேன். என் வாழ்வில் உள்ள அற்புதமான மனிதர்கள் குறித்து நான் பெரும் நன்றியை உணருகிறேன். என்னை மிகவும் நேசிக்கின்ற ஓர் ஆண்மகனும் இதில் அடக்கம். மிக முக்கியமாக, பதிலுக்கு என்னாலும் அவரை நேசிக்க முடிகிறது. என்னை நானே நேசிக்கவும் நான் கற்றுக் கொண்டுள்ளேன். துவக்கத்தில் எனக்குக் கடினமாக இருந்த ஒரு காரியம் அது. என்னுடைய தொழில்வாழ்க்கையும் என்னுடைய குடும்ப வாழ்க்கையும் இப்போது முழுமையடைந்துள்ளன. என்னுடைய ஒட்டுமொத்த வாழ்க்கையும் மிகுந்த மனநிறைவு அளிப்பதாக இருக்கிறது. என் வாழ்வில் எல்லாத் தளங்களிலும் அபரிமிதமான அன்பால் நான் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறேன்.

**இரகசியம்** புத்தகத்தை என்னுடைய பல நண்பர்களுக்கும் நான் வாங்கிக் கொடுத்துள்ளேன்.

https://telegram.me/aedahamlibrary

வாழ்க்கை எவ்வளவு அழகானதாக இருக்க முடியும் என்பதை அவர்கள் அறிய வேண்டும் என்பதுதான் என் விருப்பம்.

**- டிரேசி, கனேரி தீவுகள்**

நீங்கள் உங்களைக் குறித்து மோசமாக உணரும்போது, பிரபஞ்சம் உங்களுக்குக் வழங்கத் தயாராக வைத்திருக்கின்ற அத்தனை அன்பையும் மகிழ்ச்சியையும் நீங்கள் தடுத்துக் கொண்டிருக்கிறீர்கள். டிரேசி தன்னைப் பற்றியும் தன்னுடைய கடந்தகாலத்தைப் பற்றியும் கொண்டிருந்த அவலமான எண்ணங்களை எண்ணுவதை நிறுத்தினார். மாறாக, நேர்மறையான மற்றும் மகிழ்ச்சியான எண்ணங்களை அவர் தேர்ந்தெடுக்கத் தொடங்கினார். தான் எவ்வளவு அதிக மகிழ்ச்சியாக இருந்தோமோ, அவ்வளவு அதிக மகிழ்ச்சி தன்னுடைய வாழ்விற்குள் நுழைந்ததை அவர் உணர்ந்து கொண்டார். அவருக்கு ஒரு கச்சிதமான துணைவரும் கிடைத்தார். இப்படித்தான் நீங்கள் உங்கள் வாழ்க்கையை மகிழ்ச்சி நிரம்பிய ஒன்றாக மாற்ற வேண்டும்.

அடுத்தக் கதையில் வருகின்ற ஹேனாவும் **இரகசியம்** புத்தகத்தைப் படித்தப் பிறகு தன்னுடைய சிந்தனைமுறையை மாற்றினார். அதன் விளைவாக, அவர் தன்னுடைய வாழ்க்கையை மாற்றினார், புதிதாக மகிழ்ச்சியைக் கண்டுகொண்டார்.

## என் வாழ்வின் மிகச் சிறந்த ஆண்டு

நான் என் வாழ்வில் மிக மோசமான ஒரு நிலையில் இருந்தபோது **இரகசியம்** புத்தகத்தைப் படித்தேன்.

https://telegram.me/aedahamlibrary

வாழ்வில் நான் எதை நோக்கிப் போய்க் கொண்டிருந்தேன் என்பதையோ, நான் என்ன செய்ய விரும்பினேன் என்பதையோ நான் அறிந்திருக்கவில்லை. கோடைக்காலத்தில், மிகவும் சலிப்பூட்டிய ஒரு வேலையில் நான் இருந்தபோதுதான் நான் **இரகசியம்** புத்தகத்தைப் படித்தேன். அதன் பிறகு விஷயங்கள் வேகவேகமாக மாறத் தொடங்கின. இரகசியத்தை நான் என் வாழ்வில் உடனடியாகச் செயல்படுத்தினேன். அந்தக் காலகட்டத்தில் நான் பணக் கஷ்டத்தில் இருந்தேன். ஆனால், **இரகசியம்** புத்தகத்தைப் படித்த மறுநாள் நான் என் வங்கிக் கணக்கைப் பார்த்தபோது, நான் நினைத்திருந்ததைவிட அதிகப் பணம் அதில் இருந்ததைக் கண்டு நான் திகைத்தேன். ஓர் அழகான வெள்ளி லிப்ஸ்டிக் உறை வேண்டும் என்று நான் ஆசைப்பட்டேன். ஒருசில நாட்களுக்குப் பிறகு அதுவும் எனக்குக் கிடைத்தது.

நான் **இரகசியம்** புத்தகத்தைப் படித்த ஒருசில வாரங்களுக்குப் பிறகு, நல்ல சம்பளத்துடன்கூடிய புதிய வேலை ஒன்று எனக்குக் கிடைத்தது. வேலை நேரமும் எனக்கு ஏதுவாக இருந்தது. மன்ஹாட்டன் பகுதியில் மக்கள் தொடர்பு நிறுவனம் ஒன்றில் ஒரு குறிப்பிட்டக் காலம் பயிற்சி பெறுவதற்கான ஓர் அற்புதமான வாய்ப்பும் எனக்குக் கிடைத்தது.

கல்லூரியில் என்னுடைய இளநிலைக் கல்வியாண்டு தொடங்கியபோது, நான் மிகவும் உற்சாகமாக இருந்தேன். முன்பு நான் குறிப்பிட்ட நிறுவனத்தில் நான் பயிற்சி பெற்றது பல முக்கியமான நிகழ்வுகளில் கலந்து கொள்ளவும் செல்வாக்குமிக்கப் பிரபலமான மனிதர்களை சந்திக்கவும் எனக்கு வாய்ப்பளித்தது. நான் பார்த்துக் கொண்டிருந்த பகுதிநேர வேலை என்னுடைய செலவுகளைச் சமாளிக்கப் போதுமான பணத்தை ஈட்டிக் கொடுத்தது. அந்த மக்கள் தொடர்பு நிறுவனத்தில் நான் பெற்றப் பயிற்சி, இன்னொரு மிகப் பெரிய ஃபேஷன் பத்திரிகையில் இன்னொரு பயிற்சிக்கான வாய்ப்பை எனக்குப் பெற்றுக் கொடுத்தது. அங்கு அழகான நவீன

https://telegram.me/aedahamlibrary

ஆடைகள் இலவசமாக எனக்குக் கிடைத்தன. ஃபேஷன் நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு அவற்றைக் கண்டுகளிக்க எனக்கு அழைப்பிதழ்கள் வழங்கப்பட்டன.

அந்த ஆண்டு முழுவதும் அடுத்தடுத்துப் பல மாபெரும் விஷயங்கள் நிகழ்ந்தன. நான் **இரகசியம்** புத்தகத்தைப் படித்ததுதான் எல்லாவற்றையும் தூண்டியது என்று நான் உறுதியாக நம்புகிறேன். அற்புதமான மற்றும் அன்பான மக்கள், உற்சாகமூட்டிய வாய்ப்புகள், தாராளமான பரிசுகள், ஆடம்பரமான கேளிக்கை விருந்துகள் ஆகியவற்றால் என்னுடைய அந்த ஆண்டு முழுவதும் நிரம்பி வழிந்தது. மிக முக்கியமாக, நான் நேர்மறை மனப்போக்கை சுவீகரித்தேன்! என் சிந்தனையை ஒத்தச் சிந்தனையைக் கொண்ட மக்களை நான் என்னிடம் கவர்ந்திழுத்தேன்.

கோடைக்காலத்தில் நியூ யார்க் நகரிலேயே தங்க வேண்டும் என்பதில் நான் உறுதியாக இருந்தேன். வீட்டு வாடகையையும் நானே கொடுக்கத் திட்டமிட்டேன். முன்பு நான் எந்த மக்கள் தொடர்பு நிறுவனத்தில் பயிற்சி பெற்றேனோ, அதே நிறுவனம் என்னை வேலைக்கு எடுத்துக் கொண்டது. எனக்கென்று நான் எவற்றையெல்லாம் கற்பனை செய்திருந்தேனோ, துல்லியமாக அவற்றையெல்லாம் இப்போது நான் செய்து கொண்டிருக்கிறேன்! இந்த ஆண்டில் பல அழகான, அதிர்ஷ்டகரமான, உத்வேகமூட்டும் விஷயங்கள் எனக்கு நிகழ்ந்தன. அவை அனைத்தையும் நான் எழுதி வைத்திருக்கிறேன். நான் பட்டியலிட்டுள்ள விஷயங்களின் எண்ணிக்கை நூறை நெருங்கிக் கொண்டிருக்கிறது. நல்ல விஷயங்கள் தொடர்ந்து நிகழ்ந்து கொண்டிருக்கின்றன!

**- ஹேனா, நியூ யார்க், நியூ யார்க், அமெரிக்கா**

## கடந்தகாலத்தை விட்டுத்தள்ளுங்கள்

நீங்கள் எப்போதும் உங்கள் வாழ்க்கையைப் பின்னோக்கிப் பார்த்து, கடந்தகாலத்தில் நீங்கள்

https://telegram.me/aedahamlibrary

அனுபவித்தக் கஷ்டங்கள்மீது உங்கள் கவனத்தைக் குவித்து வந்தால், அதிகக் கடினமான சூழல்களை இப்போது நீங்கள் உங்கள் வாழ்க்கைக்குள் இழுத்து வருகிறீர்கள் என்று அர்த்தம். நீங்கள் உங்கள் வாழ்க்கையைத் திரும்பிப் பார்க்கும்போது, உங்களுடைய குழந்தைப்பருவத்தில் நிகழ்ந்த, உங்களுக்குப் பிடிக்காத விஷயங்கள் அனைத்தையும் விட்டுத் தள்ளுங்கள். நீங்கள் விரும்புகின்றவற்றை மட்டும் உங்கள் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். உங்களுடைய வாலிபப் பருவத்திலும் பின்னர் முதிர்பருவத்திலும் நிகழ்ந்த, உங்களுக்குப் பிடிக்காத விஷயங்களை ஒதுக்கித் தள்ளிவிட்டு, நல்ல விஷயங்களை மட்டும் நினைவில் வைத்திடுங்கள். நீங்கள் இவ்வாறு செய்யும்போது, நீங்கள் மேன்மேலும் அதிகமாக மகிழ்ச்சியடையத் தொடங்குவதை நீங்கள் காணுவீர்கள். நீங்கள் உங்களுக்குள் நேர்மறையான எண்ணங்களை எவ்வளவு அதிகமாக ஊக்குவிக்கிறீர்களோ, நீங்கள் விரும்புகின்ற விஷயங்களும் உங்களுக்கு மகிழ்ச்சியூட்டுகின்ற விஷயங்களும் அதிக அளவில் உங்கள் வாழ்வில் தோன்றுவதை நீங்கள் அவ்வளவு அதிகமாகக் காணுவீர்கள், நீங்கள் அவ்வளவு அதிக மகிழ்ச்சியானவராக ஆவீர்கள்.

ஒத்தவை ஒத்தவற்றை ஈர்க்கும். நீங்கள் மகிழ்ச்சியாக இருக்கும்போது, மகிழ்ச்சியான மக்களையும் சூழல்களையும் நிகழ்வுகளையும் நீங்கள் உங்கள் வாழ்விற்குள் கவர்ந்திழுப்பீர்கள். ஒரு நேரத்தில் ஒரு மகிழ்ச்சியான எண்ணம் என்ற அடிப்படையில்தான் உங்கள் வாழ்க்கை மாறுகிறது!

https://telegram.me/aedahamlibrary

**உங்கள் மனத்திற்குள் நீங்கள் எதை நிலைப்படுத்தியிருக்கிறீர்களோ, அதன் பிரதிபலிப்புதான் உங்கள் வாழ்க்கை. நீங்கள் உங்களுக்குள் எதை நிலைப்படுத்துகிறீர்கள் என்பது எப்போதும் உங்கள் கட்டுப்பாட்டில்தான் இருக்கிறது.**

**- இரகசியம் தினசரி போதனைகள்**

## ஒரு புதிய துவக்கம்!

நான் **இரகசியம்** புத்தகத்தைக் கண்டுபிடித்தபோதுதான் என் வாழ்க்கை உண்மையிலேயே தொடங்கியது.

**இரகசியம்** புத்தகத்தை நான் பார்ப்பதற்கு முன்பு, நான் **எல்லா** நேரமும் மகிழ்ச்சியற்றும் மனம் தளர்ந்தும் இருந்தேன். ஒருசில முறை நான் தற்கொலை செய்து கொள்ளவும் முயற்சித்தேன். நான் எப்போதும் கோபமாக இருந்தேன். என்னால் சிரிக்கக்கூட முடியவில்லை. என்னையும் என்னைச் சுற்றி இருந்த எல்லோரையும் நான் வெறுத்தேன். நான் எப்போதும் மனச்சோர்வுக்கு ஆளாக்கும் இசையைக் கேட்டுவிட்டு அழுதேன், சோகமான திரைப்படங்களைப் பார்த்துவிட்டு அழுதேன். என்னுடைய பிரச்சனைகளைப் பற்றி மீண்டும் மீண்டும் பேசிவிட்டு அழுதேன். நான் அளவுக்கதிகமாகக் குடித்துவிட்டு, என் தோழிகளிடம் மிக மோசமாக நடந்து கொண்டேன். என் வாழ்வில் நான் ஒரு படுகுழியில் விழுந்து கிடந்தேன்.

துரதிர்ஷ்டவசமாக, என்னுடைய கடந்தகாலத்தில் நிகழ்ந்த அந்த விஷயங்கள் இப்போதும் என் வாழ்வில் இருக்கின்றன. கடந்தகாலத்தை என்னால் மாற்ற முடியாது என்பது எனக்குப் புரிகிறது. எனவே, அதை அப்படியே விட்டுவிட்டு, முன்னோக்கி நடைபோடுவதற்கும் வாழத் தொடங்குவதற்குமான நேரம் வந்துவிட்டது என்பதை நான் உணருகிறேன். இதற்கு இரகசியத்திற்குத்தான் நான் நன்றி கூறியாக வேண்டும்.

https://telegram.me/aedahamlibrary

நான் இரகசியத்தைப் பயன்படுத்தத் தொடங்கியதிலிருந்து, எல்லா நேரத்திலும் அன்பு என்னைச் சூழ்ந்திருப்பதை நான் கவனித்துள்ளேன். முன்பு நான் அதை எப்படி கவனிக்கத் தவறியிருந்தேன் என்பதை என்னால் நம்ப முடியவில்லை. உண்மையில் நான் அதிர்ச்சியடைந்துள்ளேன். அதே சமயம், நான் மிகவும் மகிழ்ச்சி கொள்ளுகிறேன். இப்போது நான் ஒரு வித்தியாசமான நபராக இருப்பதாக எல்லோரும் கூறுகின்றனர். நான் பிரகாசிப்பதாக அவர்கள் கூறுகின்றனர்!

உண்மையிலேயே அன்பான தோழிகள் சிலரையும் நான் கண்டுகொண்டுள்ளேன். நான் அவர்கள்மீது அன்பு செலுத்துவதைப்போல அவர்களும் என்மீது அன்பு செலுத்துகின்றனர். அந்த அன்பு மேன்மேலும் அதிகமாக எனக்குக் கிடைத்துக் கொண்டே இருக்கிறது. நான் எப்போதும் அதைத்தான் விரும்பி வந்திருந்தேன்!

எனக்கொரு வாழ்க்கைத்துணைவரைத் தேடிக் கொள்ளுவதுதான் என்னுடைய அடுத்த இலக்காக இருந்தது. அடுத்து அதுவும் நிகழ்ந்தது. எனக்கு வரக்கூடிய துணைவரிடம் என்னென்ன பண்புநலன்கள் இருக்க வேண்டும் என்று நான் பட்டியலிட்டிருந்தேனோ, அவை அனைத்தும் அவரிடம் உள்ளன.

எனக்கு வாய்ப்புக் கிடைக்கும்போதெல்லாம், **இரகசியம்** புத்தகத்தின் கொள்கைகளை நான் மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளுகிறேன். எனக்கு அவர்களைத் தெரியாவிட்டாலும்கூட, நான் அனுபவிக்கின்ற உணர்வுகளை அவர்களும் அனுபவிக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். **இரகசியம்** மட்டும் எனக்குத் தெரிய வந்திருக்காவிட்டால், வாழ்வில் நான் எங்கே கிடந்திருப்பேன் என்று யாருக்குத் தெரியும்?

நன்றி. கடவுளே உனக்கு நன்றி.

**- மிக்கி, சுவீடன்**

https://telegram.me/aedahamlibrary

படைப்பு என்றால் **புதிதாக** ஒன்று உருவாக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது என்று பொருள். **அது** தானாகப் பழையதை அகற்றிவிடுகிறது. நீங்கள் மாற்ற விரும்புகின்ற விஷயத்தைப் பற்றி நீங்கள் சிந்திக்க வேண்டியதில்லை. மாறாக, நீங்கள் எதை உருவாக்க விரும்புகிறீர்களோ, அதைப் பற்றிச் சிந்தியுங்கள். நீங்கள் உங்கள் வாழ்க்கையை நேர்மறையான எண்ணங்களாலும் உணர்வுகளாலும் நிரப்பும்போது, குற்றவுணர்வு, கோபம், மற்றும் பிற எதிர்மறை உணர்வுகள் உங்களைவிட்டு நீங்குவதை நீங்கள் காணுவீர்கள். பிறகு, உங்களுடைய மகிழ்ச்சியான, அற்புதமான, **உண்மையான வாழ்க்கைக் கதையை** நீங்கள் கூறத் தொடங்குவீர்கள்.

உங்களுக்கு வருத்தத்தைக் கொண்டுவருகின்ற விஷயங்களைச் செய்வதை நிறுத்துவதுதான் மகிழ்ச்சிக்கான விடை! நீங்கள் உங்கள் கவனம் முழுவதையும் எதிர்மறையான எண்ணங்கள்மீது குவிப்பதுதான் உங்களுடைய சொந்த மகிழ்ச்சியின்மைக்கும் இந்த ஒட்டுமொத்த மனிதகுலத்தின் மகிழ்ச்சியின்மைக்குமான மிகப் பெரிய பங்களிப்புக் காரணியாக இருக்கிறது. இதிலிருந்து விடுபடுவதற்கான ஒரே வழி, நேர்மறையான மற்றும் மகிழ்ச்சியான எண்ணங்களை எண்ணுவதுதான்.

## என் தோழியிடமிருந்து ஒரு சிறு உதவி

**இரகசியம்** புத்தகத்தை 2008ம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் என் உயிர்த் தோழி எனக்கு அறிமுகப்படுத்தினாள். அவளுடைய சகோதரர் இரகசியத்தின்

https://telegram.me/aedahamlibrary

போதனைகளின்படி வாழுகிறார். அவளும் அவ்வாறு வாழ முயற்சி செய்கிறாள். எனக்கு உதவி தேவைப்பட்டதை அவள் கண்டாள். எனக்கு அப்போது இருபத்தொன்பது வயது. மனச்சோர்வை நீக்குவதற்கான மாத்திரைகளை எக்கச்சக்கமாக நான் எடுத்துக் கொண்டிருந்தேன். சுமார் நான்கு ஆண்டுகளாக நான் அந்த மாத்திரைகளை உட்கொண்டு வந்திருந்தேன். அரசாங்க சமூகநல அமைப்பு என்னுடைய குழந்தைகளைக் கண்காணித்துக் கொண்டிருந்தது. நான் முற்றிலும் நம்பிக்கையிழந்து தனிமையுணர்வால் தத்தளித்துக் கொண்டிருந்தேன்.

நான் **இரகசியம்** புத்தகத்தை வாங்கிப் படித்தேன். அது என்னை உடனடியாகக் கவர்ந்தது. அதில் இடம்பெற்றிருந்த ஒவ்வொரு வார்த்தையும் அர்த்தம் வாய்ந்ததாக இருந்தது. அவ்வார்த்தைகள் என்னுடைய இதயத்தின்மீது எழுதப்பட்டிருந்தது போன்ற ஓர் உணர்வை நான் அனுபவித்தேன். நான் தினமும் இரவில் அப்புத்தகத்தில் ஒருசில பக்கங்களைப் படித்து, அக்கருத்துக்களை ஆழமாக உள்வாங்கிக் கொண்டு, அதன் தத்துவங்களின்படி வாழத் தொடங்கினேன். எனக்கு உடனடி விளைவுகள் கிடைத்தன. நான் அதிக வலிமையானவளாக உணர்ந்தேன். என் வாழ்வில் அக்கணம்வரை நான் உணர்ந்திராத ஒரு நம்பிக்கை என்னுள் துளிர்த்தது. நான் என்னுடைய மாத்திரைகளை உட்கொள்ளுவதை நிறுத்தினேன். நான் அதிக வலிமையானவளாக வளரத் தொடங்கினேன். ஏதேனும் நெருக்கடி ஏற்பட்டால் தேவை என்பதற்காக என்னுடைய மாத்திரைகளை நான் அருகிலேயே வைத்திருந்தேன், ஆனால் நான் அவற்றை உட்கொள்ள வேண்டிய அவசியம் எழவே இல்லை! நான் இப்போது முன்பைவிட மேம்பட்ட ஒருத்தியாகவும் அதிக உண்மையுள்ளவளாகவும் இருக்கிறேன். நான் என்னுடைய நன்றியுணர்வையும் வலிமையையும் நம்பிக்கையையும் மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ளுகிறேன்.

https://telegram.me/aedahamlibrary

கடந்த வாரம் அரசாங்க சமூகநல அமைப்பு என்னுடைய விவகாரத்திற்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்தது. “மெலிசா, உங்களிடத்தில் ஏற்பட்டுள்ள மாற்றத்தைக் கண்டு நாங்கள் வியந்து நிற்கிறோம். நீங்கள் ஒரு வித்தியாசமான நபராகத் தெரிகிறீர்கள்,” என்று அவர்கள் கூறினர். நான் வெறுமனே புன்னகைத்துவிட்டு, “ஆமாம், இறுதியில் நான் நானாக ஆகியிருக்கிறேன்!” என்று கூறினேன்.

எனக்கு இப்போது 35 வயது. நான் தனியொருத்தியாக என்னுடைய மகன்களை வளர்த்து வருகிறேன். என் வாழ்க்கையை நான் பெரிதும் ரசிக்கிறேன். இப்போது நான் வலிமையானவளாக உணருகிறேன். நான் நன்றியுணர்வுடன் இருக்கிறேன். என்னுடைய நன்றிக் குறிப்பேட்டை நான் என் படுக்கைக்கு அருகிலேயே வைத்திருக்கிறேன். அதை நான் அடிக்கடிப் பயன்படுத்துகிறேன். நான் என்னுடைய **இரகசியம்** புத்தகத்தின் பிரதியைப் பலருடன் பகிர்ந்து கொண்டுள்ளேன். வாழ்வில் போராடிக் கொண்டிருக்கின்ற என்னுடைய தோழிகளை நான் பார்க்கும்போது, வாழ்வில் நன்றியுணர்வு கொள்ளத்தக்கச் சிறிய விஷயங்களைப் பார்க்கும்படியும், அந்த உணர்வின்மீது கவனம் செலுத்தும்படியும் நான் அவர்களிடம் கூறுகிறேன்.

சில சமயங்களில், நான் சரியான பாதையிலிருந்து லேசாக விலகியிருப்பதையும், மீண்டும் அந்தச் சரியான பாதைக்குத் திரும்ப வேண்டியிருப்பதையும் நான் காணுகிறேன். ஆனால், அது பற்றிய பிரக்ஞை எனக்கு இருப்பதால், மீண்டும் மகிழ்ச்சியை நோக்கி விரைவாக நான் திரும்பி வந்துவிடுகிறேன். மகிழ்ச்சியான உணர்வைக் கொடுக்கக்கூடிய விஷயங்கள்மீது கவனம் செலுத்துவது நிச்சயமாகப் பலனளிக்கிறது. என்னுள் ஊற்றெடுக்கின்ற நன்றியுணர்வு அற்புதமானதாக இருக்கிறது. நான் சிறிய விஷயங்கள் குறித்துக்கூட நன்றியுணர்வு கொண்டு ஆனந்தக் கண்ணீர் வடிக்கிறேன்.

இரகசியம் பலனளிக்கிறது! அது அற்புதமானது!

https://telegram.me/aedahamlibrary

- **மெலிசா பி., எஸ்ஸெக்ஸ், இங்கிலாந்து**

மகிழ்ச்சியான உணர்வைக் கொடுக்கக்கூடிய விஷயங்கள் என்று மெலிசா குறிப்பிடுவது, நீங்கள் கோபத்தையோ, விரக்தியையோ, அல்லது வேறு எந்தவோர் எதிர்மறை உணர்வையோ அனுபவிக்கும்போது அந்த எதிர்மறை உணர்வுகளைக் கணநேரத்தில் மாற்றுவதற்கு நீங்கள் கவனம் செலுத்த வேண்டிய விஷயங்களைத்தான். அவை அழகான நினைவுகளாகவோ, எதிர்கால நிகழ்வுகளாகவோ, அல்லது ஏதேனும் வேடிக்கையான கணங்களாகவோ இருக்கலாம். அல்லது, இயற்கை, உங்கள் அன்புக்குரிய ஒருவர், உங்களுக்குப் பிடித்தமான இசை என்று எதுவாக வேண்டுமானாலும் இருக்கலாம். உங்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கக்கூடிய விஷயங்கள் உங்களுக்குத் தனித்துவமானவையாக இருக்கும். நீங்கள் அவற்றை ஒரு பட்டியலிட்டுக் கொள்ள வேண்டியது அவசியம். ஏனெனில், வெவ்வேறு நேரங்களில் வெவ்வேறு விஷயங்கள் உங்கள் மனநிலையை மேம்படுத்த உதவும். ஒரு விஷயம் வேலை செய்யாவிட்டால் இன்னொன்று உதவும்.

மெலிசாவைப்போல, சரியான பாதைக்குத் திரும்பி வருவதற்கான தேவை உங்களுக்கு எழும்போது நீங்களும் அவ்விஷயங்களைப் பயன்படுத்தலாம். நீங்கள் மகிழ்ச்சியாக உணரத் தொடங்குவீர்கள். அப்படிப்பட்ட ஒரு மனநிலையில் நீங்கள் இருக்கும்போது, **நல்ல** விஷயங்களை நீங்கள் உங்களை நோக்கிக் கவர்ந்திழுத்துக் கொண்டிருப்பீர்கள்.

https://telegram.me/aedahamlibrary

## பாருங்கள், உணருங்கள், பெறுங்கள்

உங்களுக்கு என்ன வேண்டுமோ அதைக் கற்பனை செய்யுங்கள். அதை நீங்கள் பெற்றிருப்பதுபோல உண்மையிலேயே உங்கள் மனத்தில் காட்சிப்படுத்துங்கள். உங்களுக்குள் மகிழ்ச்சியை உணருங்கள். அப்போது, அதை நீங்கள் பெறுவதற்கான கச்சிதமான வழியை ஈர்ப்பு விதி கண்டுபிடிக்கும்.

## புதிய வீடு, புதிய குழந்தை

இரகசியத்தின் போதனைகளை நான் கடைபிடிக்கத் தொடங்கியதிலிருந்து நான் என் வாழ்க்கைக்குள் பல விஷயங்களைக் கவர்ந்திழுத்துள்ளேன். என் கணவர், என்னுடைய பொருளாதாரப் பாதுகாப்பு, என் ஆரோக்கியம், ஒரு புதிய கார் ஆகியவை அவற்றில் ஒருசில மட்டுமே.

என் கணவரும் நானும் எங்களுடைய ஆறு வயது மகளுடன் அவருடைய சொந்த ஊருக்கு இடம்பெயர்ந்தோம். அவர் வேலைக்குச் சென்று பணம் ஈட்டினார், நான் என் படிப்பைத் தொடர்ந்தேன்.

எங்களுடைய திருமணத்தின் அடுத்தக் கட்டமாக, முதன்முதலாக ஒரு வீடு வாங்குவதென்றும், ஓர் இரண்டாவது குழந்தைக்கு முயற்சிப்பதென்றும் சமீபத்தில் நானும் அவரும் தீர்மானித்தோம். அதற்காக நாங்கள் எங்கள் மனத்தில் ஒரு காலக்கெடுவை நிர்ணயித்திருந்தோம். ஆனால் அந்தக் காலக்கெடு நெருங்க நெருங்க, நாங்கள் இன்னும் எந்த வீட்டையும் வாங்கியிருக்கவுமில்லை, நான் குழந்தை உண்டாகியிருக்கவும் இல்லை.

என் கணவரும் ஈர்ப்பு விதியின்மீது ஆழமான நம்பிக்கை கொண்டவர். கேட்டல், நம்புதல், பெறுதல் செயல்முறையை நாங்கள் ஒழுங்காகச்

https://telegram.me/aedahamlibrary

செயல்படுத்தியிருக்கவில்லை என்பதை நாங்கள் உணர்ந்தோம்!

நாங்கள் எந்த மாதிரியான இடத்தில் வாழ விரும்பினோம், எந்தப் பாணியிலான வீட்டை வாங்க விரும்பினோம், அதற்கு நாங்கள் எவ்வளவு விலை கொடுப்போம் ஆகிய எல்லாவற்றையும் நாங்கள் தொடர்ந்து எங்கள் மனத்தில் கற்பனை செய்யத் தொடங்கினோம். நான் குழந்தை உண்டாகியிருந்ததுபோலவும், எங்களுக்குப் புதிதாகக் குழந்தை பிறந்திருந்ததுபோலவும்கூட நாங்கள் எங்கள் மனத்தில் காட்சிப்படுத்தத் தொடங்கினோம். எங்களுக்குக் குழந்தை பிறந்தவுடன் நாங்கள் என்னவெல்லாம் வாங்க வேண்டும் என்ற ஒரு பட்டியலையும் நாங்கள் தயார் செய்தோம்!

நாங்கள் வீடு வாங்க விரும்பிய பகுதியில் நாங்கள் தினமும் சிறிது நேரம் சுற்றித் திரிந்தோம். அப்பகுதியில் நாங்கள் குடியேறியே ஆக வேண்டும் என்ற பரிதவிப்பில் இருந்த நாங்கள், இரண்டு வீடுகளைத் தேர்ந்தெடுத்தோம். ஆனால் எங்களைவிட அதிக விலை கொடுத்து அவற்றை வேறு நபர்கள் வாங்கிவிட்டனர்.

பிறகு ஒருநாள் இரவில் நாங்கள் வழக்கம்போல அப்பகுதியைச் சுற்றி வந்தபோது, எங்களுடைய வீட்டை நாங்கள் கண்டுபிடித்தோம். அது ஒரு கச்சிதமான இடத்தில் அமைந்திருந்தது. எங்கள் வீடு எந்தப் பாணியில் அமைந்திருக்க வேண்டும் என்று நாங்கள் கற்பனை செய்திருந்தோமோ, அது அதே பாணியில் அமைந்திருந்தது. ஆனால் விலை மிகவும் அதிகமாக இருந்தது. ஆனால் இதுதான் எங்கள் வீடாக அமையவிருந்தது என்பதை நாங்கள் அறிந்தோம். எனவே, நாங்கள் அந்த வீட்டை வாங்க விரும்பியதாக எங்கள் முகவரிடம் தெரிவித்தோம். ஆனால் நாங்கள் கொடுக்க விரும்பிய விலை மற்றவர்கள் கொடுக்கத் தயாராக இருந்ததைவிட மிகக் குறைவாக இருந்தது. அது எங்களுக்குப் பெரும் அவமானமாக இருந்தது.

https://telegram.me/aedahamlibrary

மறுநாளே எங்கள் முகவரிடமிருந்து எங்களுக்கு ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது. நாங்கள் கொடுக்க விரும்பிய விலைக்கு எங்களுக்கு அந்த வீட்டை விற்க அதன் உரிமையாளர் ஒப்புக் கொண்டிருந்தார்! இச்செய்தி எங்களை மகிழ்ச்சியில் திக்குமுக்காடச் செய்தது. அதே நாள் காலையில், நான் கருவுற்றிருந்ததாகப் பரிசோதனை முடிவுகள் தெரிவித்திருந்தன.

எங்கள் குழந்தைக்கு நாங்கள் வாங்க விரும்பியவற்றை நாங்கள் பட்டியலிட்டபோது, ஓர் ஆண்குழந்தையை மனத்தில் வைத்து அதைச் செய்திருந்தோம். அவனுடைய பெயரையும் பாலினத்தையும் அவனுடைய கண்ணின் நிறத்தையும்கூட ஒரு தாளில் எழுதி அதை என் தலையணைக்கு அடியில் வைத்து நான் தூங்கினேன். என்ன நடந்திருக்கும் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்? நான் ஏற்கனவே அறிந்திருந்ததைப்போல, பச்சை நிறக் கண்களைக் கொண்ட ஓர் ஆண்குழந்தையை நான் பெற்றெடுத்தேன்.

எண்ணங்கள் இவ்வளவு சக்தி வாய்ந்தவையாக இருக்கும் என்பதை நினைக்கும்போது வியப்பாக இருக்கிறது.

**- ஹெதர் எம்., பஃபலோ, நியூ யார்க், அமெரிக்கா**

உங்களுக்கு வருத்தம் ஏற்படுத்திய ஏதோ ஒன்றைப் பற்றி நீங்கள் சிந்திக்கத் தொடங்கி, அதைப் பற்றி மேன்மேலும் சிந்தித்துக் கொண்டே போனபோது, அது மேன்மேலும் மோசமடைந்ததுபோலத் தோன்றிய அனுபவம் உங்களுக்கு வாய்த்திருக்கிறதா? அதற்குக் காரணம் என்னவென்றால், ஒரு குறிப்பிட்ட எண்ணத்தை நீங்கள் தொடர்ந்து சிந்திக்கும்போது, அந்த எண்ணத்தை ஒத்த அதிகமான எண்ணங்களை ஈர்ப்பு விதி உடனடியாக உங்களிடம் கொண்டுவந்து

https://telegram.me/aedahamlibrary

சேர்க்கும். ஆனால், இதற்கு நேரெதிரானதும் உண்மை என்பது நல்ல செய்தி.

உங்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கக்கூடிய எண்ணங்கள்மீது நீங்கள் உங்கள் கவனத்தைக் குவிக்கும்போது, அதிக மகிழ்ச்சியூட்டும் எண்ணங்களை நீங்கள் கவர்ந்திழுப்பீர்கள். உண்மையில், மகிழ்ச்சிதான் வாழ்வில் நீங்கள் விரும்பும் எதுவொன்றையும் அடைவதற்கான சுருக்குவழி. இக்கணத்தில் மகிழ்ச்சியை உணருங்கள்! மகிழ்ச்சி, ஆனந்தம் ஆகிய உணர்வுகளைப் பிரபஞ்சத்தை நோக்கி வெளிப்படுத்துவதன்மீது கவனத்தைக் குவியுங்கள். நீங்கள் அவ்வாறு செய்யும்போது, உங்களுக்கு மகிழ்ச்சியையும் ஆனந்தத்தையும் கொண்டுவரக்கூடிய அனைத்து விஷயங்களையும் நீங்கள் உங்களிடம் கவர்ந்திழுப்பீர்கள். மகிழ்ச்சியான உணர்வுகளை நீங்கள் வெளிப்படுத்தும்போது, அவை உங்கள் வாழ்வில் மகிழ்ச்சியான சூழல்களாக உருப்பெற்று உங்களிடம் திரும்பி வருகின்றன.

பின்வரும் கதையின் நாயகியான டயானா, தான் உண்மையிலேயே விரும்பிய ஒன்றை மனக்காட்சிப்படுத்தினார். இறுதியில், தான் கற்பனை செய்திருந்ததைவிட அதிக மகிழ்ச்சியை அவர் கைவசப்படுத்தினார்.

## உடனடிக் கர்மவினைப் பயன்

**இரகசியம்** திரைப்படத்தை நான் முதன்முதலில் பார்த்தபோது, இரகசியம் முற்றிலும் உண்மை என்ற உணர்வு என்னுள் எழுந்தது. அதை நான் ஏற்கனவே அறிந்திருந்தேன் என்ற உணர்வையும் நான்

https://telegram.me/aedahamlibrary

அனுபவித்தேன். எல்லாவற்றுக்கும் நன்றியுடன் இருப்பதன் மூலமும், எனக்கு விருப்பமானவற்றை மனக்காட்சிப்படுத்துவதன் மூலமும், எல்லாவற்றையும் உன்னிப்பாக கவனிக்கின்ற ஒருத்தியாக இருப்பதன் மூலமும் நான் தொடர்ந்து மாபெரும் விஷயங்களை அனுபவித்து வந்துள்ளேன்.

மிகச் சமீபத்தில், ஒருநாள் இரவில், பாஸ்டன் நகரிலிருந்து ஃபீனிக்ஸ் நகருக்கு விமானத்தில் நான் பயணித்துக் கொண்டிருந்தபோது, கூடுதல் பணம் கொடுத்து அதிக வசதியான ஓர் இருக்கையை நான் எனக்காகப் பதிவு செய்திருந்ததால், முதலில் விமானத்திற்குள் நுழைவதற்கு நான் அனுமதிக்கப்பட்டேன். ஓராண்டுக்கு முன்பு அதே விமானத்தில், அதிர்ஷ்டவசமாக, என்னுடைய வரிசையில் எனக்குப் பக்கத்தில் இருந்த இருக்கைகள் காலியாக இருந்தன. எனவே, கால்களை நன்றாக நீட்டிப் படுத்தபடி அன்றிரவு நான் வசதியாகப் பயணம் செய்தேன். அதேபோல, இன்றும் எனக்கு அடுத்து இருந்த இருக்கைகள் காலியாக இருக்கும் என்றும், நான் அதே வசதியை அனுபவிப்பேன் என்றும் அன்று முழுவதும் நான் கற்பனை செய்திருந்தேன். விமானத்தினுள் மேலே சாமான்கள் வைப்பதற்கான இடத்தில் நான் என்னுடைய பையை வைத்துக் கொண்டிருந்தபோது, எனக்குப் பின்னால் ஒரு வயதான பெண்மணி, முன்பகுதியில் இருந்த இருக்கைகளில் ஏதேனும் ஒன்றில் தான் அமர்ந்து கொள்ளலாமா என்று எங்கள் விமானப் பணிப்பெண் ஒருவரிடம் கேட்டார். அந்த இருக்கைகளுக்குக் கூடுதல் கட்டணம் செலுத்த வேண்டும் என்று அப்பணிப்பெண் அவரிடம் கூறினார். ஆனால், குறுகலான இடத்தில் தன்னால் உட்கார முடியாது என்றும், தான் முன்பகுதியில் உட்கார்ந்தாக வேண்டும் என்றும் அந்தப் பயணி பிடிவாதமாகக் கூறினார். அவர் அங்கு உட்காரலாம், ஆனால் அதற்கான கூடுதல் தொகையை அவர் கொடுத்தாக வேண்டும் என்று அவரிடம் அப்பணிப்பெண் அன்பாகக் கூறினார். ஆனால் அது

https://telegram.me/aedahamlibrary

தனக்குக் கட்டுப்படியாகாது என்று அப்பயணி கடுகடுப்பாக பதிலளித்தார்.

அதற்குள் எல்லாப் பயணியரும் விமானத்தில் ஏறியிருந்தனர். பலர் என்னைக் கடந்து சென்றனர், ஆனால் என்னுடைய இருக்கை இருந்த வரிசையில் யாரும் அமரவில்லை. மனக்காட்சிப்படைப்பு எவ்வளவு அற்புதமாக வேலை செய்தது என்று எனக்கு நானே கூறிக் கொண்டேன். இறுதியில், விமானம் புறப்படவிருந்ததாக அறிவிக்கப்பட்டது. மின்னணுக் கருவிகள் அனைத்தையும் நாங்கள் அணைத்துவிட வேண்டும் என்று கூறப்பட்டது. என்னுடைய விருப்பம் நிறைவேற்றப்பட்டிருந்தது குறித்து நான் மிகவும் மகிழ்ந்தேன். ஆனால், என் மனத்தில் அந்த வயதான பெண்மணியைப் பற்றிய நினைப்பு மீண்டும் மீண்டும் வந்தது. அவர் சிரமப்பட்டுக் கொண்டிருந்தபோது நான் வசதியாகப் பயணம் செய்து கொண்டிருந்ததை என்னால் முழுமையாக ரசித்து அனுபவிக்க முடியவில்லை. எனவே, நான் என் இருக்கையைவிட்டு எழுந்து, முன்பு அப்பெண்ணிடம் பேசியிருந்த விமானப் பணிப்பெண்ணிடம் சென்று, “அந்த வயதான பெண்மணிக்கு என்னுடைய இருக்கைக்குப் பக்கத்து இருக்கையை நீங்கள் கொடுக்கலாம். அதற்கான கட்டணத்தை நான் கொடுத்துவிடுகிறேன். ஆனால், நான்தான் அவருக்காகப் பணம் கொடுத்தேன் என்று நீங்கள் அவரிடம் கூறக்கூடாது,” என்று கூறினேன். அவர் என்னைப் பார்த்துப் புன்னகைத்துவிட்டு, “அதை நான் பார்த்துக் கொள்ளுகிறேன்,” என்று கூறினார்.

பல நிமிடங்களுக்குப் பிறகு, அந்த முதிய பெண்மணியை அவர் என்னுடைய வரிசைக்குக் கூட்டி வந்து அமரச் செய்தார். நானும் அப்பயணியும் ஒருசில வார்த்தைகள் பேசிக் கொண்டோம், அவ்வளவுதான். ஆனால் அவர் மிகவும் மகிழ்ச்சியாக இருந்ததுபோலத் தோன்றினார். வசதியான தூக்கம் கொடுக்கக்கூடிய ஆனந்தத்தைவிட அதிக ஆனந்தத்தால் என் இதயம் நிரம்பி வழிந்தது. இரவுப் பொழுது நன்றாகக் கழிந்தது.

https://telegram.me/aedahamlibrary

எங்கள் பயணம் முடிவடையவிருந்த நேரத்தில், பயணியருக்கு வழங்கப்பட்ட உணவு மற்றும் பானங்களுக்கான பணத்தை விமானக் குழுவினர் ஒவ்வொரு பயணியிடமிருந்தும் கடனட்டை மூலம் பெற்றுக் கொண்டிருந்தனர். யாரேனும் என்னுடைய இருக்கைக்கு வருவார்கள் என்று நான் காத்திருந்தேன், ஆனால் எல்லோரும் என்னைக் கடந்து சென்றனரே அன்றி, யாரும் என்னிடம் வரவில்லை. கடைசியில், நான் முன்பு பேசியிருந்த விமானப் பணிப்பெண் என்னருகில் வந்து, என்னை நோக்கி லேசாகக் குனிந்தார். நான் என்னுடைய கடனட்டையை அவரிடம் நீட்டினேன். ஆனால் அவர் அதை எடுத்துக் கொள்ளவில்லை. அவர் மிக மெல்லியதொரு குரலில், "எங்கள் ஒட்டுமொத்தக் குழுவின் சார்பில் நாங்கள் உங்களுக்கு நன்றி கூற விரும்புகிறோம். எங்களுடைய விமானப் பணியில், நீங்கள் செய்துள்ளது போன்ற மிக அருமையானதொரு விஷயத்தை நாங்கள் இதுவரை ஒருபோதும் பார்த்ததில்லை. உங்கள் நடத்தையால் நாங்கள் உத்வேகம் பெற்றுள்ளோம். அந்த வயதான பெண்மணியின் இருக்கைக்குரிய கூடுதல் கட்டணத்தை நாங்கள் உங்களிடமிருந்து வசூலிக்கப் போவதில்லை. உங்களுடைய உணவுக்கும் நாங்களே பணம் செலுத்த விரும்புகிறோம்," என்று கூறினார்.

இதை எனக்குக் கிடைத்திருந்த ஒரு மிகப் பெரிய கௌரவமாக நான் கருதினேன். என் மனம் அன்பால் நிரம்பியது. என்னால் பேச முடியவில்லை. "நன்றி!" என்று மட்டுமே என்னால் கூற முடிந்தது.

அது ஓர் அற்புதமான, அன்பான அனுபவம். அன்பான ஒரு காரியத்தைச் செய்ய நான் முன்வந்ததால் விளைந்த அபரிமிதமான ஆனந்தத்தைக் கண்டு நான் வியந்தேன்!

**- டயானா ஆர்., ஃபீனிக்ஸ், அரிசோனா, அமெரிக்கா**

https://telegram.me/aedahamlibrary

## மகிழ்ச்சியான எண்ணங்களை எண்ணுங்கள், இக்கணத்தில் மகிழ்ச்சியாக இருங்கள்!

நம்மில் பெரும்பாலானோர் மகிழ்ச்சியைப் பற்றிய தவறான யோசனையைக் கொண்டுள்ளோம். நாம் விரும்புகின்ற எல்லாவற்றையும் நாம் பெற்றால், வாழ்க்கை தொடர்ந்து நம்முடைய விருப்பப்படி அமைந்தால் நாம் மகிழ்ச்சியாக இருப்போம் என்று நாம் நம்புகிறோம். அந்த நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டு, இக்கணத்தில் நம்மால் ஏன் மகிழ்ச்சியாக இருக்க முடியாது என்பதற்கு உலகிலுள்ள எல்லாச் சாக்குப்போக்குகளையும் நாம் உருவாக்குகிறோம். “குறிப்பிட்ட அந்த வேலை கிடைத்தால், அந்தப் பதவி உயர்வு எனக்குக் கிடைத்தால், இந்த வேலையை நான் விட்டுவிட்டால், நான் அந்தத் தேர்வில் தேர்ச்சி பெற்றால், கல்லூரியில் எனக்கு இடம் கிடைத்தால், நான் கல்லூரியைவிட்டு விலகினால், என் எடை குறைந்தால், என் எடை சற்று ஏறினால், சொந்தமாக ஒரு வீட்டை வாங்கினால், என் வீடு விற்பனையானால், நான் கடனின்றி இருந்தால், நான் மன அழுத்தமின்றி இருந்தால், இந்த உறவிலிருந்து எனக்கு விடுதலை கிடைத்தால், எனக்கென்று ஒரு குடும்பம் அமைந்தால், என் ஆரோக்கியம் மேம்பட்டால் நான் மகிழ்ச்சியாக இருப்பேன்,” என்று பல்வேறு வகையான சாக்குப்போக்குகளை நாம் கூறுகிறோம்.

ஆனால், உங்கள் வாழ்வில் என்ன நிகழ்ந்து கொண்டிருந்தாலும் சரி, தினமும் நீங்கள் அனுபவிப்பதற்காக உங்களுக்குள் உறைந்திருக்கின்ற உள்ளார்ந்த மகிழ்ச்சியைத்

https://telegram.me/aedahamlibrary

திரை போட்டு மறைத்துக் கொண்டிருப்பது உங்களுடைய அந்தச் சாக்குப்போக்குகள்தாம் என்பது மகிழ்ச்சியைப் பற்றிய ஒரு மாபெரும் கண்டுபிடிப்பாகும். அதே சாக்குப்போக்குகள்தாம் **இக்கணத்தில்** நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பதிலிருந்து உங்களைத் தடுத்துக் கொண்டிருக்கின்றன. உங்கள் மகிழ்ச்சிக்குத் தடையாக இருப்பது உங்கள் வாழ்வின் சூழல்கள் அல்ல, மாறாக, மகிழ்ச்சியற்று இருப்பதற்கு நீங்கள் கூறிக் கொண்டிருக்கின்ற சாக்குப்போக்குகளே அதற்குக் காரணம்! ஒத்தவை ஒத்தவற்றை ஈர்க்கின்றன, மகிழ்ச்சி மேன்மேலும் மகிழ்ச்சியைக் கவர்ந்திழுக்கிறது. எனவே, எல்லாச் சாக்குப்போக்குகளையும் விட்டொழித்து, இக்கணத்தில் மகிழ்ச்சியாக இருங்கள்!

## மகிழ்ச்சியின் சக்தி

எப்போதும் அவலமான நிலையிலேயே இருந்தவர்களில் நானும் ஒருத்தி. துயரம் என்னுடைய வாழ்க்கைமுறையாக ஆகியிருந்தது. ஆனால் அச்சமயத்தில் நான் அதை உணரவில்லை. சுமார் நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக மிக அவலமான நிலையிலேயே வாழ்ந்த பிறகு, திடீரென்று எல்லாமே மாறியது. இதில் சிறப்பு என்னவென்றால், அது மிக எளிமையானதாக இருந்தது. தீவிர மனச்சோர்வுக்கு ஆளாகியும், வேலையின்றியும், வாழ்க்கைத்துணைவர் இன்றித் தனியாக என் குழந்தையை வளர்த்துக் கொண்டும், மதுவுக்கு அடிமையாகியும் இருந்த நான், என் வாழ்வில் ஒரே ஒரு விஷயத்தை மாற்றியதன் மூலம் சொந்தமாக ஒரு பதிப்பகத்தைத் துவக்கினேன்.

முதன்முறையாக நான் தற்கொலை செய்து கொள்ள முயற்சித்தது எனக்கு நினைவிருக்கிறது. மனம் முழுக்க வேதனையுடன் அழுது கொண்டே நான் என்னுடைய

https://telegram.me/aedahamlibrary

குளியலறைக்கு ஓடினேன். அங்கிருந்த அலமாரியில் என் பார்வையில் பட்ட அத்தனை மாத்திரைகளையும் எடுத்து நான் விழுங்கினேன். நான் இறந்து போக விரும்பினேன். தற்கொலை என்ற வார்த்தைக்கு என்ன அர்த்தம் என்பதுகூட அப்போது எனக்குத் தெரியாது என்று நான் நினைக்கிறேன். ஏனெனில், அப்போது எனக்கு வெறும் ஒன்பது வயதுதான். ஆனால் அந்த மாத்திரைகளால் எனக்கு மரணம் விளைவிக்க முடியும் என்பதை நான் அறிந்திருந்தேன். நான் தொடர்ந்து வாழ விரும்பவில்லை.

காலப்போக்கில் நான் பல முறை தற்கொலைக்கு முயற்சித்தேன். அளவுக்கதிகமான மாத்திரைகளை உட்கொள்ளுவது, மணிக்கட்டை அறுத்துக் கொள்ளுவது, எனக்கு நானே மூச்சுத் திணறலை உண்டாக்கிக் கொள்ளுவது போன்ற பல்வேறு வழிகளில் என்னை நானே கொல்ல முயற்சித்தேன். ஒரு முறை, என்னுடைய பதின்பருவத்தில், நான் என் பெற்றோரின் துப்பாக்கியை எடுத்து என் நெற்றியின்மீது வைத்தேன். ஆனால் அன்று அவர்கள் வெகு முன்னதாகவே வீட்டிற்கு வந்துவிட்டதால், நான் வேகவேகமாக அந்தத் துப்பாக்கியை அவர்களுடைய அலமாரியில் வைத்துவிட்டு என் அறைக்கு ஓடிவிட்டேன். நான் இருபது வயதைக் கடந்தபோது மதுவின் பக்கம் திரும்பினேன். நான் ஏகப்பட்ட வேலைகளுக்குத் தாவினேன். எந்த வேலையிலும் நான் நிரந்தரமாக இருக்கவில்லை. நான் யாருடனும் நிலையான உறவும் வைத்திருக்கவில்லை. ஒரு சமயத்தில் பொருளாதாரரீதியாக நல்ல நிலைமையில் இருந்த நான் வேலையின்றி இருக்கும் நிலைக்குத் தாழ்ந்தேன். என் வீட்டிற்கான தவணைத் தொகையைச் செலுத்த முடியாததால் என் வீட்டையும் நான் இழந்தேன். தீவிர முதுகுவலியால் அவதிப்பட்டுக் கொண்டிருந்த நான், அடிக்கடி நோய்வாய்ப்பட்டு, இறுதியில் மார்பகப் புற்றுநோயால் பாதிக்கப்பட்டேன். இவையெல்லாம் நான்

https://telegram.me/aedahamlibrary

நன்றாக இருந்த காலகட்டம் என்றால் பார்த்துக் கொள்ளுங்கள்.

பிறகு, இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு, நான் என்னுடைய கனவைப் பின்தொடருவதென்று தீர்மானித்தேன். உளவியலை மையமாகக் கொண்ட கதைகளை எழுதும் ஒரு நூலாசிரியராக நான் ஆக விரும்பினேன். நான் சில நூல்களை எழுதினேன். அவை ஓரளவுக்கு நன்றாகவே விற்பனையாயின. பிறகு ஒருநாள் நான் என் கணினியின் முன்னால் அமர்ந்து என்னுடைய ஆறாவது புத்தகத்தை எழுதத் தயாரானபோது, திடீரென்று, நான் அதை எழுத விரும்பவில்லை.

நான் ஒரேயடியாகக் களைத்துப் போயிருந்தேன். வாழ்வில் மிகத் துயரமான நிலையில் நான் இருந்தேன். ஒரு நூலாசிரியராக ஆக வேண்டும் என்ற என்னுடைய கனவை நிறைவேற்றுவதற்கு நான் மிகக் கடினமாக உழைத்திருந்தேன். ஆனால் இப்போது, மீண்டும் பழையபடி உணர்ச்சிரீதியாக மிக மோசமான நிலைமைக்கு நான் சறுக்கினேன். என்னால் அதை நம்ப முடியவில்லை. இனி என் வாழ்வில் **எந்த நிம்மதியும் இருக்காது** என்று நினைத்த நான், மீள முடியாத அளவுக்கு மனம் தளர்ந்தேன், பெரிதும் சோர்வுற்றேன். நான் அதிக நேரம் தூங்கினேன், அளவுக்கதிகமாகக் குடித்தேன், முற்றிலும் உணர்ச்சியற்று இருந்தேன். என்னால் இயன்ற அளவுக்கு உலகத்துடன் நான் உறவாடினேன், ஆனால் அதே சமயத்தில், என்னால் அவர்களோடு ஒட்டி உறவாட முடியவில்லை. எனக்கு இரண்டு பெண்குழந்தைகள் இருந்தனர். நான் தன்னந்தனியாக அவர்களை வளர்த்து வந்தேன். தற்கொலைகூடச் செய்து கொள்ள முடியாத ஒரு நிலை அது. எனவே, நான் ஒரு போராட்டமான வாழ்க்கையை வாழலானேன். என் அன்புக்குரியவர்களிடம் நான் என்னுடைய உண்மை நிலவரத்தைக் கூறவில்லை. ஏனெனில், உண்மை நிலவரம் என்ன என்பதை என்னாலேயே புரிந்து கொள்ள முடியவில்லை. எனவே,

https://telegram.me/aedahamlibrary

அவர்கள் என்னிடமிருந்து எதைக் கேட்க விரும்பினார்களோ, அதை நான் அவர்களிடம் கூறினேன்.

ஈர்ப்பு விதியைப் பற்றிப் பல ஆண்டுகளாக நான் படித்து வந்திருந்தேன், ஆனால் அதில் ஏதோ ஒரு குறை இருந்ததாக எனக்குத் தோன்றியது. அதை என்னால் கண்டுபிடிக்க முடியவில்லை. ஒருசில வாரங்களுக்குப் பிறகு, வாழ்வில் மகிழ்ச்சியைக் கைவசப்படுத்துவதற்கு நான் ஒரு நூலாசிரியராக இருக்கக்கூடாது போலும் என்று நான் சிந்திக்கத் தொடங்கினேன். இறுதியில், "எனக்கு மகிழ்ச்சியைக் கொடு, எனக்கு மகிழ்ச்சியைக் கொடு," என்று நான் மீண்டும் மீண்டும் கூறத் தொடங்கினேன். **இரகசியம்** திரைப்படத்தை நான் பல முறை பார்த்திருந்தேன், அப்புத்தகத்தைப் பல முறை படித்திருந்தேன். ஆடியோ வடிவிலும் அதை நான் கேட்டிருந்தேன். "நீங்கள் ஒரு நல்ல மனநிலையில் இருக்க வேண்டும்," என்று ரோன்டா பைர்ன் அதில் கூறியதை நான் நினைவுபடுத்திப் பார்த்தேன்.

அப்போதுதான் அது எனக்கு உறைத்தது. இந்நாள்வரை நான் அடைய முயற்சித்து வந்திருந்த அனைத்திலிருந்தும் நான் மகிழ்ச்சியைத்தான் பெற விரும்பினேனே தவிர, அவ்விஷயங்களைச் சாதிப்பது உண்மையிலேயே என்னுடைய விருப்பமாக ஒருபோதும் இருந்ததில்லையோ? இக்கேள்விக்கு என்ன அர்த்தம்?

மகிழ்ச்சியாக இருப்பது எப்படி என்பதை நான் ஒருபோதும் தெரிந்து கொண்டதில்லை என்பதை நான் உணர்ந்தேன். சில கணங்கள் மகிழ்ச்சியளிப்பவையாக இருந்திருந்தன என்பது உண்மைதான், ஆனால் நான் உண்மையிலேயே மகிழ்ச்சியாக இருந்ததில்லை. நான் அதைக் கைவசப்படுத்துவதற்காக அதைத் துரத்திச் சென்று கொண்டிருந்தேன். அதையும் இப்போதுதான் நான் உணருகிறேன். எனவே, மகிழ்ச்சியாக இருப்பது எப்படி என்பதை நான் கற்றுக் கொண்டாக வேண்டும் என்று அக்கணத்தில் நான் தீர்மானித்தேன். அதை

https://telegram.me/aedahamlibrary

எனக்குக் கற்றுக் கொடுக்கக்கூடிய ஒரே நபர் நான்தான் என்பதையும் நான் உணர்ந்தேன்.

எனக்கு உண்மையிலேயே மகிழ்ச்சியளித்தப் பத்து விஷயங்களை நான் ஒரு பட்டியலிட்டேன். பிறகு, இவற்றை தினமும் என் வாழ்வில் செயல்படுத்தத் தொடங்க வேண்டும் என்று நான் தீர்மானித்தேன். ஆனால் வாழ்க்கை அதற்குத் தடையாக வந்தது. எனவே, நான் அவற்றைச் செய்யவில்லை. ஆனால் நான் தினமும் காலையில் அந்தப் பட்டியலைப் பார்த்துவிட்டு, அவற்றை எப்படியாவது செய்தாக வேண்டும் என்று என் மனத்திற்குள் நினைத்துக் கொண்டேன்.

பிறகு என்ன நிகழ்ந்தது என்று உங்களால் ஊகிக்க முடிகிறதா? நான் மகிழ்ச்சியை உணரத் தொடங்கினேன். ஒவ்வொரு காலைப்பொழுதையும் நான் என் மனதார வரவேற்றதும், தனிப்பட்ட முறையில் எனக்கு மகிழ்ச்சியளித்த விஷயங்களைப் பற்றி தினமும் சிந்தித்ததும்தான் இறுதியில் என் சொந்த மகிழ்ச்சியை எனக்குக் கற்றுக் கொடுத்தன. எப்படி மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்பதை நான் என் மனத்திற்கும் உடலுக்கும் கற்றுக் கொடுத்தப் பிறகு, மகிழ்ச்சியான விஷயங்களை அதிக அளவில் நான் என் வாழ்வில் கவர்ந்திழுக்கத் தொடங்கினேன். என் மனம் மகிழ்ச்சியாக இருந்ததால், மகிழ்ச்சியான விஷயங்கள் அபரிமிதமாக என் வாழ்வில் உருப்பெறத் தொடங்கின.

நான் ஒன்பது வயதுச் சிறுமியாக இருந்த காலகட்டத்திற்குச் சென்று அச்சிறுமியிடம், “உன்னுடைய மனவேதனையைப் போக்குவதற்கு நீ அந்த மாத்திரைகளை உட்கொள்ள வேண்டியதில்லை. அந்த மோசமான உணர்வுகளை உன்னால் விரட்டியடிக்க முடியும். உனக்கு மகிழ்ச்சியளிக்கக்கூடிய விஷயங்களை நீ ஒரு பட்டியலிட்டால் போதும், எல்லாம் சரியாகிவிடும். அதைவிட மேலாக, உன் வாழ்க்கை உண்மையிலேயே சிறப்புறும்,” என்று என்னால் கூற முடிந்தால் நன்றாக இருக்கும். ஆனால் என்னால் திரும்பிச் செல்ல முடியாது. எனவே, இப்போது என்னால்

https://telegram.me/aedahamlibrary

செய்ய முடிந்ததெல்லாம், என்னுடைய கதையை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளுவதும், நாற்பது ஆண்டுகளாகத் துயரத்தில் உழன்ற பிறகு என்னுடைய சொந்த முயற்சியால் என் வாழ்வில் மகிழ்ச்சியை நானே உருவாக்கிக் கொண்டது எல்லாவற்றையும் மாற்றியது என்றும், மற்றவற்றை ஈர்ப்பு விதி பார்த்துக் கொண்டது என்றும் அவர்களிடம் எடுத்துக்கூறுவதும் மட்டும்தான். இச்செய்தியை உலகிற்குத் தெரியப்படுத்துவதற்காகத்தான் நான் அவ்வளவு காலமும் துயரத்தை அனுபவிக்க வேண்டியிருந்தது என்றால், அது உண்மையிலேயே மதிப்பானதுதான்.

**- ஹைடி டி., சீக்கோ, கலிபோர்னியா, அமெரிக்கா**

**இக்கணத்தில்** மகிழ்ச்சியாக இருங்கள். இக்கணத்தில் நல்விதமாக உணருங்கள். நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் அது ஒன்றுதான். இப்புத்தகத்தைப் படிப்பதிலிருந்து அந்த ஒரே ஒரு விஷயத்தைத்தான் நீங்கள் புரிந்து கொண்டுள்ளீர்கள் என்றால், இரகசியத்தின் மாபெரும் உண்மையை நீங்கள் தெரிந்து கொண்டுவிட்டீர்கள் என்று அர்த்தம்.

**நமக்கு விருப்பமானதைத் தேர்ந்தெடுப்பதற்கான சுதந்திரம் நம் எல்லோருக்கும் இருக்கிறது. அதற்கான சக்தி இக்கணத்தில் உங்கள் கைகளில் இருக்கிறது. அந்த சக்தியை உங்கள் சொந்த வாழ்வில் எப்படிப் பயன்படுத்துவது என்பதைத் தேர்ந்தெடுக்கின்றவர் நீங்கள்தான். பின்வருவனவற்றில் ஏதேனும் ஒன்றைத் தேர்ந்தெடுங்கள்:**

**இன்று ஒரு மகிழ்ச்சியான வாழ்க்கையைப் பெற்றிருத்தல். அல்லது நாளைவரை அதைத் தள்ளிப்போடுதல்.**

https://telegram.me/aedahamlibrary

**எது உங்களுக்கு ஒரு நல்லவிதமான உணர்வைக் கொடுக்கும்? நீங்களே தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள்.**

**- இரகசியம் தினசரி போதனைகள்**

https://telegram.me/aedahamlibrary

## மகிழ்ச்சிக்கான திறவுகோல்கள்

- ஒரு நேரத்தில் ஒரு மகிழ்ச்சியான எண்ணத்தைச் சிந்திப்பதன் மூலம் நீங்கள் உங்கள் வாழ்க்கையை மாற்றுகிறீர்கள்.
- உங்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கின்ற எண்ணங்கள்மீது உங்களுடைய முழு கவனத்தையும் குவியுங்கள். உங்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுக்காத எண்ணங்களைக் கண்டுகொள்ளாமல் விட்டுவிடுங்கள்.
- நேர்மறை எண்ணங்களை நீங்கள் எவ்வளவு அதிகமாக ஊக்குவிக்கிறீர்களோ, அவ்வளவு அதிக மகிழ்ச்சியானவராக நீங்கள் ஆவீர்கள்.
- நீங்கள் மகிழ்ச்சியாக இருக்கும்போது, மகிழ்ச்சியான மக்களையும் மகிழ்ச்சியான சூழல்கள் மற்றும் நிகழ்வுகளையும் நீங்கள் உங்கள் வாழ்விற்குள் கவர்ந்திழுக்கிறீர்கள்.
- நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பதிலிருந்து உங்களைத் தடுப்பது உங்கள் வாழ்வின் சூழல்கள் அல்ல; மகிழ்ச்சியாக இல்லாமல் இருப்பதற்கு நீங்கள் கூறிக் கொண்டிருக்கின்ற சாக்குப்போக்குகள்தாம் அதற்குக் காரணம்.
- கடந்தகால நிகழ்வுகள் குறித்தத் துயர நினைவுகளை நினைத்துப் பார்ப்பதை நிறுத்துங்கள். கடந்தகாலக் கஷ்டங்கள்மீது நீங்கள் உங்கள் கவனத்தைக் குவித்தால், இப்போது கடினமான சூழல்களை அதிக அளவில் நீங்கள் கவர்ந்திழுப்பீர்கள்.
- எதிர்மறையான எண்ணங்களை நம்புவதுதான் மனிதகுலத்தின் மகிழ்ச்சியின்மைக்குப்

https://telegram.me/aedahamlibrary

பங்களிக்கின்ற மிகப் பெரிய காரணியாகும்.

- நேர்மறை எண்ணங்களாலும் உணர்வுகளாலும் உங்களை நிரப்புங்கள். ஏனெனில், நேர்மறைத்தன்மை இருக்கின்ற இடத்தில் எதிர்மறைத்தன்மையால் இருக்க முடியாது. ஒரே நேரத்தில் அவை இரண்டும் நிலை கொண்டிருப்பது சாத்தியமில்லை.
- எதிர்மறை எண்ணங்களை மாற்றுவதற்கு, உங்களுக்கு மகிழ்ச்சியளிக்கக்கூடிய விஷயங்கள்மீது உங்கள் கவனத்தைத் திருப்புங்கள்.
- நீங்கள் மகிழ்ச்சியாக இருக்க விரும்பினால், உங்களைச் சுற்றி என்ன நிகழ்ந்து கொண்டிருந்தாலும் சரி, மெச்சத்தக்க விஷயங்களைத் தேடுங்கள்.
- நம்பிக்கையற்றச் சூழ்நிலை என்று எதுவும் கிடையாது.
- இன்று மகிழ்ச்சியாக இருக்க முயற்சி செய்யுங்கள். உங்கள் எதிர்கால வாழ்க்கை அதைச் சார்ந்துள்ளது.
- இக்கணத்தில் மகிழ்ச்சியை உணருவதும் மகிழ்ச்சியாக இருப்பதும்தான் ஒரு மாபெரும் வாழ்க்கைக்கான குறுக்குவழியாகும்.

https://telegram.me/aedahamlibrary



https://telegram.me/aedahamlibrary

பணம் மகிழ்ச்சியைக் கொண்டுவருவதில்லை - ஆனால் மகிழ்ச்சி நிச்சயமாகப் பணத்தைக் கொண்டுவருகிறது.

**- இரகசியம் தினசரி போதனைகள்**

https://telegram.me/aedahamlibrary

# செல்வத்தைக் குவிப்பதற்கு இரகசியத்தை நான் எவ்வாறு பயன்படுத்தினேன்

## பணத்தைக் கவர்ந்திழுப்பதற்கு, அபரிமிதத்தின்மீது கவனம் செலுத்துங்கள்

பணத்தின் தேவை குறித்த உணர்வு மிகவும் சக்திவாய்ந்த ஒன்று. எனவே, ஈர்ப்பு விதியின் மூலமாக, உங்களுக்கு மேன்மேலும் பணம் **தேவைப்பட்டுக் கொண்டே** இருக்கும்படியான நிலையை நீங்கள் தொடர்ந்து கவர்ந்திழுப்பீர்கள். நீங்கள் உங்களை நோக்கிக் கவர்ந்திழுத்துக் கொண்டிருப்பவற்றை மாற்றுவதற்கு, பணப் பற்றாக்குறை மனப்போக்கைக் கைவிட்டுவிட்டு, தேவைக்கு அதிகமாகவே பணம் இருக்கிறது என்பதுபோல நீங்கள் சிந்திக்கத் தொடங்க வேண்டும். பற்றாக்குறை பற்றிய எண்ணங்களைவிட அபரிமிதம் பற்றிய எண்ணங்களை அதிகமாக எண்ணுங்கள். அப்போது நீங்கள் உங்களுக்குச் சாதகமான ஒரு மனப்போக்கை உருவாக்கியிருப்பீர்கள்.

### பணம் சுலபமாகக் கிடைத்துக் கொண்டே இருக்கிறது!

நான் ஒரு தனியார் பல்கலைக்கழகத்தில் படித்துக் கொண்டிருக்கிறேன். அங்கு படிப்புச் செலவு மிகவும் அதிகம். கல்விக் கட்டணம் மட்டுமே சுமார் 40,000 டாலர்கள். அது போக, உணவுக்கும் பிறவற்றுக்கும் தனியாகச் செலவாகும். நான் ஒரு நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்தவள். என் பெற்றோரிடமிருந்து எனக்கு எந்த உதவியும் கிடைப்பதில்லை. எனவே,

https://telegram.me/aedahamlibrary

எல்லாச் செலவுகளையும் நான்தான் சமாளித்தாக வேண்டும். மறு ஆண்டுக்கான கல்வி உதவித் தொகை பற்றிய விபரங்களை எங்கள் பல்கலைக்கழகம் வெளியிட்ட நாளன்று, "இன்று ஓர் அற்புதமான நாளாக இருக்கப் போகிறது. பணம் அடிக்கடியும் சுலபமாகவும் வருகிறது," என்று கூறியபடியே நான் என் படுக்கையைவிட்டு எழுந்தேன். ஆனால் யாருக்கு எவ்வளவு உதவித் தொகை வழங்கப்பட்டிருந்தது என்ற அறிவிப்பு வெளியானபோது, என் பெயருக்கு எதிரே வெறும் 5,000 டாலர்கள் மட்டுமே குறிப்பிடப்பட்டிருந்ததை நான் கண்டேன். குறைந்தபட்ச ஊதியத்தில் நான் ஒரு பகுதிநேர வேலையைச் செய்து வருகிறேன். படிப்புச் செலவுக்குத் தேவையான கூடுதல் 35,000 டாலர்களை எந்த விதத்திலும் என்னால் சம்பாதிக்க முடியாது.

ஆனால், நான் **இரகசியம்** புத்தகத்தைப் படித்திருந்ததால், என்னுடைய கல்விக் கட்டணத்தை எனக்காகச் செலுத்துவதற்காகக் கடவுளுக்கும் பிரபஞ்சத்திற்கும் நான் நன்றி கூறத் தொடங்கினேன், என்னுள் நன்றியுணர்வை வளர்த்துக் கொண்டேன். நான் என்னுடைய முகநூல் பக்கத்தைப் பார்த்தபோது, தங்களுக்கு வழங்கப்பட்டிருந்த கல்வி உதவித் தொகை குறித்து ஏமாற்றமடைந்திருந்த பலர் அதைப் பற்றி எதிர்மறையான விமர்சனங்களை எழுதியிருந்ததை நான் பார்த்தேன். "என் படிப்பு அவ்வளவுதான்," "இது கேலிக்கூத்தானது," "கல்லூரிக்கு ஒரு முழுக்குப் போட வேண்டியதுதான்," போன்ற வாசகங்களை அவர்கள் வெளியிட்டிருந்தனர். நான் வெறுமனே புன்னகைத்துவிட்டு, **என் செலவு முழுவதையும் கடவுள் பார்த்துக் கொள்ளுகிறார்!** என்று எனக்குள் கூறிக் கொண்டேன்.

அன்று மதியம், கல்வி உதவித் தொகை அலுவலகத்திற்கு நான் சென்றேன். எனக்கு வழங்கப்பட்டிருந்த தொகையை மறுபரிசீலனை செய்வதற்கு நான் தங்களுக்கு ஒரு மின்னஞ்சல்

https://telegram.me/aedahamlibrary

அனுப்பலாம் என்றும், ஆனால் ஒரு வாரம் கழித்துத்தான் தங்களால் எனக்கு பதிலளிக்க முடியும் என்றும் அவர்கள் என்னிடம் கூறினர்.

நான் இளங்கலைப் பட்டப்படிப்புப் படித்துக் கொண்டிருக்கிறேன். எனவே, கலை தொடர்பான கல்வி ஊக்கத் தொகைகள் ஏதேனும் வழங்கப்பட்டதா என்று கேட்டறிவதில் அன்று மதியம் முழுவதையும் நான் செலவிட்டேன். ஆனால் என்னுடைய பல்கலைக்கழகத்தைப் பற்றியோ அல்லது எனக்கு வழங்கப்பட்டிருந்த உதவித் தொகையைப் பற்றியோ எதிர்மறையாக எதையும் நான் கூறவில்லை. நான் வெறுமனே பொருளாதார அறிவுரையை நாடினேன், அவ்வளவுதான். என்னுடைய படிப்புச் செலவை கவனித்துக் கொள்ளுவதற்காக நான் கடவுளுக்கு நன்றி கூறினேன். என் முகத்தில் ஒரு புன்னகையோடு, “பணம் சுலபமாகக் கிடைத்துக் கொண்டே இருக்கிறது,” என்று நன்றியுடனும் அன்புடனும் நான் மீண்டும் மீண்டும் கூறினேன்.

நான் வீடு திரும்பிய பிறகு, கல்வி உதவித் தொகை அலுவலகத்திற்கு நான் ஒரு மின்னஞ்சல் எழுதத் தொடங்கினேன். ஆனால், எனக்கு வழங்கப்பட்டிருந்த தொகை துல்லியமாக 5,000 டாலர்கள்தானா என்று நான் மீண்டும் ஒருமுறை சரிபார்க்க விரும்பினேன். ஏனெனில், அது ஒருவேளை சற்றுக் கூடுதலாக 5,150 டாலர்களோ அல்லது 5,200 டாலர்களோ இருக்கக்கூடும் என்று நான் நினைத்தேன். என் கணினியில் என் உதவித் தொகை விபரத்தைத் உள்ளடக்கிய வலைப்பக்கத்தை நான் திறந்தபோது என்ன நிகழ்ந்தது என்பதை நீங்கள் **ஒருபோதும்** நம்ப மாட்டீர்கள். எனக்கு வழங்கப்பட்டிருந்த தொகை மாறியிருந்தது. ‘இறுதிப் பட்டியல்’ என்று அன்று காலையில் அவர்கள் அறிவித்திருந்தும்கூட, எப்படியோ அது மாறியிருந்தது. மறு ஆண்டுக்கான என்னுடைய கல்விச் செலவு முழுவதையும் என் பல்கலைக்கழகமே ஏற்றுக் கொண்டிருந்தது. நான் எதற்கும் செலவு செய்ய

https://telegram.me/aedahamlibrary

வேண்டியிருக்கவில்லை. கூடுதலாகச் சிறிது பணம் எனக்கு வழங்கப்படவிருந்ததாக அந்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்டிருந்தது. அதை என்னுடைய வீட்டு வாடகையைச் சமாளிக்க நான் வைத்துக் கொள்ளலாம்.

இரகசியத்தை இதற்கு முன்பு நான் பயன்படுத்தியிருக்கிறேன். ஆனால், முன்பெல்லாம், நான் இவ்வளவு கடுமையாக உழைத்தும் நல்ல மதிப்பெண்களைப் பெற்றும்கூட நான் எப்போதும் பொருளாதாரரீதியாக மோசமான நிலையிலேயே இருப்பது குறித்து நான் எதிர்மறையாகச் சிந்தித்திருந்தேன். ஆனால் இப்போது, என்னால் எதையும் செய்ய முடியும் என்றும், நான் விரும்பும் எதையும் பெறத் தகுதியான ஒரு நல்ல பெண் நான் என்றும் நான் நினைக்கிறேன். என்னுடைய அனுபவம் எவரொருவருக்கும் இரகசியத்தின்மீது நம்பிக்கையை உண்டாக்கும் என்று நான் நம்புகிறேன்.

**- செல்ஸீ, சான் பிரான்சிஸ்கோ, கலிபோர்னியா, அமெரிக்கா**

## அபரிமிதத்தின்மீது உங்களுக்கு நம்பிக்கை ஏற்பட உங்களுக்கு உதவுவதற்கு சில பொருத்தமான பொருட்களைப் பயன்படுத்துங்கள்

நீங்கள் கேட்டதை நீங்கள் பெற்றுக் கொண்டிருக்கிறீர்கள் என்று நீங்கள் நம்புவதற்கு, சில பொருட்களைப் பயன்படுத்துவது உங்களுக்கு உதவும். முதல் அத்தியாயத்தில் இடம்பெற்றிருந்த என்னியின் கதையில், பிரபஞ்ச வங்கியினுடைய காசோலை ஒன்றைத் தான் பயன்படுத்தியதைப் பற்றி அவர் பேசியது உங்களுக்கு நினைவிருக்கக்கூடும். உங்களுக்கு நம்பிக்கை ஏற்பட உங்களுக்கு உதவுவதற்காக எங்களுடைய

https://telegram.me/aedahamlibrary

இரகசியம் குழுவினர் உருவாக்கியுள்ள பல பொருட்களில் ஒன்றுதான் பிரபஞ்ச வங்கியிடமிருந்து வருகின்ற இந்தக் காசோலை. www.thesecret.tv/check என்ற இணையத்தளத்திலிருந்து அந்தக் காசோலையை நீங்கள் இலவசமாகத் தரவிறக்கம் செய்து கொள்ளலாம். பிரபஞ்ச வங்கியில் இருக்கும் பணத்திற்கு அளவே இல்லை. நீங்கள் அதிலிருந்து எவ்வளவு பணம் வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளலாம். அதற்கான காசோலையில் நீங்கள் உங்கள் பெயரை எழுதி, நீங்கள் பெற விரும்புகின்ற தொகையை அதில் குறிப்பிட வேண்டும், அவ்வளவுதான். பிறகு அந்தக் காசோலையை உங்கள் பார்வையில் எளிதாகப் படும்படியான ஓர் இடத்தில் ஒட்டி வையுங்கள். நீங்கள் விரும்பும் பணம் **இக்கணத்தில்** உங்களிடம் இருப்பதாக நீங்கள் உண்மையிலேயே நம்புவதற்கு ஏதுவாக அந்தக் காசோலையை தினமும் பாருங்கள். நீங்கள் விரும்பும் எதுவொன்றின்மீதும் அந்தப் பணத்தை நீங்கள் செலவு செய்வதாகக் கற்பனை செய்யுங்கள். அந்த அற்புதமான உணர்வை அனுபவியுங்கள்! அந்தப் பணம் உங்களுடையது என்பதை அறிந்திடுங்கள். ஏனெனில், நீங்கள் அதைக் கேட்டு, அது உங்களுக்குக் கிடைக்கும் என்று நீங்கள் நம்பும்போது, அது உங்களுடையதாக ஆகிவிடுகிறது.

**நீங்கள் பாசாங்கு செய்கிறீர்களா அல்லது ஒன்று உண்மையிலேயே நிஜமானதா என்பது ஈர்ப்பு விதிக்குத் தெரியாது. எனவே, நீங்கள் விரும்புவது ஏற்கனவே உங்களிடம் இருப்பதுபோல நீங்கள் பாசாங்கு செய்யும்போது, அது உண்மை என்பதுபோல நீங்கள் உணர வேண்டும்.**

https://telegram.me/aedahamlibrary

**உங்களுடைய பாசாங்கு நிஜம் என்பது போன்ற உணர்வு உங்களுக்குள் எழத் தொடங்கும்போது, நீங்கள் விரும்புவதை நீங்கள் உங்களுடைய யதார்த்தத்திற்குள் கொண்டுவருவதில் வெற்றி பெற்றுக் கொண்டிருக்கிறீர்கள் என்பதை நீங்கள் அறிவீர்கள்.**

**- இரகசியம் தினசரி போதனைகள்**

# உங்களுடைய சொந்தக் காசோலையை எழுதுங்கள்

இரகசியம் திரைப்படத்தை முதன்முறையாக நான் பார்த்ததிலிருந்தே நான் அதன் தத்துவங்கள்மீது ஆழமான நம்பிக்கை கொள்ளத் தொடங்கிவிட்டேன். இரகசியத்தை என்னால் இயன்ற அளவு நான் பலருடன் பகிர்ந்து வந்துள்ளேன். அது உண்மையிலேயே என் வாழ்க்கையைப் பரிபூரணமாக மாற்றியது. எனக்கு நிச்சயிக்கப்பட்டிருந்த நபருடனான என்னுடைய உறவு முறிந்ததைத் தொடர்ந்து, பொருளாதாரரீதியாக நான் கிட்டத்தட்ட திவாலாகியிருந்தபோது, வேறு வழியின்றி நான் என் பெற்றோரின் வீட்டிற்குத் திரும்பிப் போக வேண்டியதாயிற்று. என் வாழ்க்கை முடிந்துவிட்டதாக நான் நினைத்தேன். ஆனால் **இரகசியம்** எல்லாவற்றையும் மாற்றியது. குறிப்பாக, இரகசியம் இணையத்தளத்திலிருந்து தரவிறக்கம் செய்யப்படக்கூடிய பிரபஞ்சக் காசோலை என் வாழ்க்கையை அடியோடு மாற்றியது.

**இரகசியம்** திரைப்படத்தைப் பார்த்துவிட்டு, பிரபஞ்ச வங்கியிடமிருந்து வெற்றுக் காசோலையைக் கண்டுபிடித்தப் பிறகு, அதை அச்சிட்டுப் பயன்படுத்துவதென்று நான் தீர்மானித்தேன். என்னால் கற்பனை செய்ய முடியாத ஒரு தொகையை நான் அதில் நிரப்பினேன். 55,000 டாலர்கள்! நான் ஏன் அந்தத் தொகையைத் தேர்ந்தெடுத்தேன் என்று இன்றுவரை எனக்குத் தெரியாது. நான் அந்தக் காசோலையை என்

https://telegram.me/aedahamlibrary

படுக்கையறைச் சுவர்மீது மாட்டப்பட்டிருந்த பலகையில் குத்தி வைத்தேன். தினமும் இரவில் படுக்கப் போவதற்கு முன்பாகவும் காலையில் எழுந்தவுடன் முதல் வேலையாகவும் அந்தக் காசோலையை நான் பார்த்தேன்.

சில நாட்கள், அந்தப் பணம் என் வாழ்விற்குள் வருவதுபோல உணருவதற்கு நான் மும்முரமாக முயற்சி செய்தேன். மற்ற நாட்கள், அந்தப் பணம் எனக்குக் கிடைக்குமா என்று நான் சந்தேகித்தேன் (அதனால்தான் அது என்னிடம் வந்து சேருவதற்கு நீண்ட நாட்கள் ஆனதாக நான் நினைக்கிறேன்).

அச்சமயத்தில் நான் என் வேலையை இழந்திருந்தேன். என் தாயார் மிகவும் நோய்வாய்ப்பட்டார். என்னுடைய முன்னாள் காதலருடனான என்னுடைய உறவு சீர்கெட்டிருந்தது. என் வாழ்க்கை இதற்கு மேல் மோசமடைய வாய்ப்பில்லை என்று நான் நினைத்த நேரத்தில், என்னுடைய உறவினர் ஒருவரிடமிருந்து எனக்கு ஒரு கடிதம் வந்தது. 50,000 டாலர்கள் எனக்கு சுவீகாரமாகக் கிடைக்கவிருந்ததாக அவர் அதில் குறிப்பிட்டிருந்தார்.

நான் எவ்வளவு கடுமையாக முயற்சி செய்திருந்தாலும் இதை என்னால் சாதித்திருக்க முடியாது. எனக்குப் பணம் கிடைக்கவிருந்த செய்தி என்னை வந்தடைந்தபோது என் ஒட்டுமொத்த இதயமும் வெடித்துவிடும்போல இருந்தது. அந்தப் பணம் நான் என் கடன்களை அடைக்கவும், சிறிதளவு முதலீடு செய்யவும், மீண்டும் கல்லூரிக்குச் சென்று படிக்கவும் எனக்கு உதவியது. அடுத்ததாக, எனக்கு வாடகைப் பணம் ஈட்டித் தருகின்ற கட்டடங்களை வாங்க நான் திட்டமிட்டுள்ளேன்.

**- திருமதி. அபரிமிதம், ஒட்டாவா, ஒன்டாரியோ, கனடா**

## செல்வத்திற்கான ஒரு மனக்காட்சிப் பலகையை உருவாக்குங்கள்

https://telegram.me/aedahamlibrary

**ஒரு மனக்காட்சிப் பலகை என்பது நீங்கள் விரும்புகின்ற ஒன்றைப் பற்றிய காட்சியை உங்கள் மனத்தில் உருவாக்குவதற்கு உங்களுக்கு உதவக்கூடிய ஒரு பொருளாகும். நீங்கள் அப்பலகையைப் பார்க்கும்போது, நீங்கள் எதை விரும்புகிறீர்களோ அதைப் பற்றிய ஒரு காட்சியை அல்லது படத்தை நீங்கள் உங்கள் மனத்தில் பதிய வைக்கிறீர்கள். நீங்கள் உங்கள் மனக்காட்சிப் பலகையின்மீது உங்கள் கவனத்தைக் குவிக்கும்போது, அது உங்களுடைய புலன்களைத் தூண்டி, உங்களுக்குள் ஒரு நேர்மறையான உணர்வை உருவாக்குகிறது. அப்போது, படைப்பின் இரண்டு அம்சங்களான உங்கள் மனமும் உங்கள் உணர்வுகளும் முழு வீச்சில் இயங்கத் தொடங்குகின்றன.**

**- இரகசியம் தினசரி போதனைகள்**

அடுத்தக் கதையில், நேட்டலி தன் வாழ்க்கைக்குள் கொண்டுவர விரும்பிய ஒன்றின்மீது தன் கவனத்தைக் குவிப்பதற்கு மனக்காட்சிப் பலகை ஒன்றைப் பயன்படுத்தினார். அவருடைய பலகையில் இடம்பெற்றிருந்த பொருட்களில் ஒன்று பிரபஞ்ச வங்கியிடமிருந்து பெறப்பட்ட ஒரு காசோலை. அவர் கேட்டதை அந்த வங்கி அவருக்குக் கொடுத்தது என்பதை நீங்கள் காணுவீர்கள்.

## தேதியைச் சரிபார்த்துக் கொள்ளுங்கள்

2009ம் ஆண்டில்தான் **இரகசியம்** புத்தகத்தைப் பற்றி நான் முதன்முதலாகக் கேள்விப்பட்டேன். அப்போது நான் ஈராக்கில் ராணுவப் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்தேன். மின் புத்தகங்களைப் படிப்பதற்காக ஒரு ‘கின்டில்’ கருவியை நான் அப்போதுதான் ஆர்டர் செய்திருந்தேன். இரகசியம் புத்தகத்தை இணையத்தளத்திலிருந்து

https://telegram.me/aedahamlibrary

தரவிறக்கம் செய்து இரண்டு நாட்களில் நான் அதைப் படித்து முடித்தேன். உடனடியாக என் மனத்தில் ஒரு தெளிவு பிறந்தது. எனக்குச் சில விடைகளை அனுப்பி வைக்கும்படி கடவுளிடம் நான் பிரார்த்தனை செய்து வந்திருந்தேன். ஏனெனில், கடவுள் அன்பானவர் என்றும், நான் ஓர் அபரிமிதமான வாழ்க்கையை வாழ வேண்டும் என்று அவர் விரும்பினார் என்றும் நான் நம்பி வந்திருந்தேன். ஆனால் எதுவும் என் விருப்பப்படி நடக்கவில்லை. நான் எங்கேயோ தவறு செய்து கொண்டிருந்ததாக எனக்குத் தோன்றியது. அது என்ன என்பதைக் கடவுள் எனக்கு வெளிப்படுத்துவார் என்று நான் பிரார்த்தித்தேன்.

முதலில் நான் சிறிய விஷயங்களைக் கவர்ந்திழுத்தேன். காலப்போக்கில், உயர்ந்த சம்பளத்துடன்கூடிய ஒரு வேலை, மூன்று பெரிய ஊதிய உயர்வுகள், என் அன்புக்குரிய வாழ்க்கைத்துணைவர் போன்ற பெரிய விஷயங்களை நான் கவர்ந்திழுத்தேன். நான் விரும்பியவற்றைக் கவர்ந்திழுப்பதில் நான் ஓரளவுக்குத் தேறியவுடன், என்னால் கற்பனை செய்ய முடியாத அளவுக்கு ஒரு பெரிய தொகையைப் பிரபஞ்சத்திடம் கேட்கலாம் என்று நான் தீர்மானித்தேன். நான் ஓரிடத்தில் அமர்ந்து கொண்டு, “நான் உண்மையிலேயே எவ்வளவு பணத்தைப் பெற விரும்புகிறேன்?” என்று உரத்தக் குரலில் என்னை நானே கேட்டுக் கொண்டேன். பிறகு நான் சிறிது நேரம் அமைதியாக இருந்தேன். அப்போது திடீரென்று ஒரு தொகை என் மனத்தில் தோன்றியது. நான் அந்தத் தொகையைத்தான் கேட்க வேண்டும் என்பதை நான் அறிந்தேன். 2010ம் ஆண்டு ஜனவரி 1ம் நாளன்று, அந்த ஆண்டு நான் கவர்ந்திழுக்க விரும்பிய எல்லாவற்றையும் ஒரு பட்டியலிட்டு, அதன் அடிப்படையில் ஒரு மனக்காட்சிப் பலகையை உருவாக்கினேன். வலைத்தளத்திலிருந்து இரகசியம் காசோலையை நான் தரவிறக்கம் செய்து அதை நிரப்பினேன். அதே ஆண்டு டிசம்பர் 31ம் நாளன்று, அந்தப் பலகையில் இடம்பெற்றிருந்த அனைத்தையும் நான்

https://telegram.me/aedahamlibrary

கைவசப்படுத்தியிருந்தேன் - அந்தப் பெரிய தொகையைத் தவிர!

நான் அந்தக் காசோலையை அடுத்த ஆண்டுக்கான பலகையில் குத்தி வைத்துவிட்டு, அந்தப் பணம் என் கைக்கு வந்தவுடன் அதைக் கொண்டு நான் என்னவெல்லாம் வாங்குவேன் என்றும், அதை நான் எந்த வழிகளிலெல்லாம் செலவு செய்வேன் என்றும், என்னைச் சுற்றி இருந்தவர்களுக்கு நான் எப்படியெல்லாம் உதவுவேன் என்றும் நான் கற்பனை செய்தேன். இச்சுழற்சி ஓரிரு ஆண்டுகள் தொடர்ந்தது. ஒவ்வோர் ஆண்டும், அந்தப் பணத்தைத் தவிர மற்ற எல்லாவற்றையும் நான் கவர்ந்திழுத்தேன்.

2012ம் ஆண்டு முடிவடையவிருந்த நேரம் அது. விரைவில் இன்னோர் ஆண்டு பிறக்கவிருந்தது. நான் என்னுடைய மனக்காட்சிப் பலகையைப் பார்த்தேன். அந்த ஆண்டும் அந்தப் பெரிய தொகையைத் தவிர மற்ற எல்லாவற்றையும் நான் பெற்றிருந்தேன். “நான் அந்தத் தொகையைப் பெறத் தயாரானவுடன் பிரபஞ்சம் அதை எனக்கு வழங்கும் என்பதை நான் அறிவேன்,” என்று எனக்கு நானே கூறிக் கொண்டு, தொடர்ந்து என்னுடைய சுயபிரகடனங்களைக் கூறினேன், தியானம் செய்தேன், இரகசியம் இணையத்தளத்தில் இடம்பெற்றிருந்த கதைகளைப் படித்தேன்.

இந்த ஆண்டு டிசம்பர் 31ம் நாளன்று என்னுடைய மனக்காட்சிப் பலகையில் உள்ள **எல்லாம்** நனவாகியிருக்கும் என்று என்னால் இப்போது உறுதியாகக் கூற முடியும். ஏனெனில், முதன்முறையாக, அந்தப் பெரிய தொகை உட்பட, என்னுடைய பலகையில் இடம்பெற்றிருந்த **எல்லாவற்றையும்** நான் கவர்ந்திழுத்திருந்தேன். இதை நான் சிறிதும் எதிர்பார்க்கவில்லை. பிறகு, 2013ம் ஆண்டுக்கான மனக்காட்சிப் பலகையை உருவாக்கத் தொடங்கலாம் என்று நான் தீர்மானித்தேன். என்னுடைய பழைய காசோலையை நான் எடுத்துப் பார்த்தபோது, அதில் தேதிக்கான இடத்தில் டிசம்பர் 31, 2012 என்று நான்

https://telegram.me/aedahamlibrary

எழுதியிருந்ததை அப்போதுதான் முதன்முறையாக நான் கவனித்தேன்!

அது ஏதோ எழுத்துப் பிழையாக இருந்திருக்க வேண்டும், ஆனால் என் தவறில்கூட, பிரபஞ்சம் கீழ்ப்படிதலுடன் நடந்து கொண்டது. என்னுடைய 'தவறு' தெய்விகமான முறையில் அரங்கேற்றப்பட்டிருந்தது என்பதை நான் அறிவேன். ஏனெனில், நான் முதன்முதலில் அந்தப் பணத்தைப் பெற விரும்பிய நேரத்தில் அது எனக்குக் கிடைத்திருந்தால், பண விஷயத்தில் நான் அவ்வளவு பொறுப்பானவளாக இல்லாத ஒரு காலகட்டம் அது என்பதால், நான் அத்தனைப் பணத்தையும் வேகமாகச் செலவு செய்திருந்திருப்பேன். இப்போது நான் என்னுடைய பண விவகாரங்களை என்னுடைய கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்துள்ளதால், அப்பணத்தைப் பெறுவதற்கான ஒரு நல்ல நிலையை எட்டியுள்ளேன்.

**கேளுங்கள். நம்புங்கள். பெறுங்கள்.** நீங்கள் கூறுவதை இப்பிரபஞ்சம் எப்போதும் காதுகொடுத்துக் கேட்டுக் கொண்டே இருக்கிறது. கடவுள் உங்களை ஆசீர்வதிக்கட்டும். நான் ஆசீர்வதிக்கப்பட்டுள்ளேன் என்பதை நான் அறிவேன்.

**- நேட்டலி எஃப்., சவானா, ஜார்ஜியா, அமெரிக்கா**

## நீங்கள் கேட்டதைப் பெறுவதற்கு நன்றியுணர்வு கொள்ளுங்கள்

பிரபஞ்சத்திடம் நீங்கள் எதையேனும் கேட்கும்போது, அது பணமாக இருந்தாலும் சரி அல்லது வேறு எதுவாக இருந்தாலும் சரி, அதை நீங்கள் ஏற்கனவே பெற்றுவிட்டதுபோல நீங்கள் நம்ப வேண்டும். அதாவது, அப்பொருள் இக்கணத்தில் உங்களிடம் இருப்பது குறித்து நீங்கள் நன்றியுணர்வு கொள்ள வேண்டும். வேறு வார்த்தைகளில் கூறினால், நீங்கள் பெற விரும்பும்

https://telegram.me/aedahamlibrary

ஒரு பொருளைப் பெறுவதற்கு **முன்பே** அதற்காக நன்றி கூறுங்கள்.

நன்றியுணர்வின் சக்தியை எந்தவோர் எதிர்மறையான சூழ்நிலையையும் நோக்கி நீங்கள் திசை திருப்பும்போது, ஒரு **புதிய** சூழ்நிலை உருவாக்கப்படுகிறது. அது உங்களுடைய பழைய, எதிர்மறையான சூழ்நிலையைக் களைந்துவிடுகிறது. உங்களிடம் போதிய பணம் இல்லாதபோதுகூடப் பணம் குறித்து நீங்கள் நன்றியுணர்வு கொள்ளும் நிலையை நீங்கள் அடையும்போது, ஒரு புதிய சூழ்நிலை உருவாக்கப்படுகிறது. அதன் விளைவாக, பணப் பற்றாக்குறைச் சூழல் அகற்றப்பட்டு, அதிகப் பணம் இருக்கின்ற ஒரு சூழல் உருவாக்கப்படுகிறது.

## நம்புதற்கரிய ஓர் ஆச்சரியம்

2007ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில், ஓர் அறக்கட்டளையின் முதன்மை நிர்வாகியாக இருந்த நான், லாப நோக்கற்ற எங்கள் அமைப்பிற்கு ஒரு கட்டடம் வாங்க வேண்டும் என்று எங்கள் இயக்குநர் குழுமத்தின் உறுப்பினர்களிடம் வலியுறுத்தினேன். நான் பார்த்து வைத்திருந்த கட்டடத்தில் ஏகப்பட்டச் சீரமைப்புப் பணிகள் செய்யப்பட வேண்டியிருந்தன. அதற்காக நாங்கள் புதிதாகக் கடன் வாங்க வேண்டியிருக்கும். இது எங்கள் எல்லோரையும் மிகவும் பதற்றம் கொள்ளச் செய்தது. ஆனாலும், நம்பிக்கையோடு நாங்கள் அந்த வேலையில் இறங்கினோம்.

நானும் என் மனைவியும் கிறிஸ்துமஸ் விடுமுறையின்போது பயணம் செய்து கொண்டிருந்த நேரத்தில், எங்கள் கார் விபத்துக்குள்ளானது. இதில் எங்கள் கார் சேதமடைந்தது. அதற்குப் பல மாதங்களுக்கு முன்பிலிருந்து, **இரகசியம்** புத்தகத்தைப் படிக்கும்படி எங்கள் நண்பர்கள் பலர் எங்களிடம் வலியுறுத்தி

https://telegram.me/aedahamlibrary

வந்திருந்தனர். அந்த விபத்திற்குப் பிறகு, மாற்றப்பட வேண்டிய ஏதோ ஒரு மோசமான விஷயத்தை நாங்கள் கவர்ந்திழுத்துக் கொண்டிருந்தோம் என்பதை நாங்கள் அறிந்தோம். எனவே, இரகசியத்தின் ஆடியோ பதிப்பை நாங்கள் வாங்கினோம். வீட்டிற்குத் திரும்பிச் செல்லும் வழியில் நாங்கள் அதைக் கேட்டுக் கொண்டே பயணித்தோம். நன்றிக் குறிப்பேடு என்ற கோட்பாடு எனக்கு உற்சாகமளித்தது. நான் எனக்கும் என் மனைவிக்கும் ஒரு குறிப்பேட்டை வாங்கினேன். 2008ம் ஆண்டு ஜனவரி 1ம் நாளன்று, அந்தக் குறிப்பேட்டின் முதல் பக்கத்தில், என்னிடம் ஏற்கனவே இருந்த எந்தப் பொருட்கள் குறித்து நான் நன்றியுடன் இருந்தேனோ அவை அனைத்தையும் நான் பட்டியலிட்டேன். எதிர்ப்பக்கத்தில், "2008ம் ஆண்டு மார்ச் 31ம் நாளன்று எங்களுடைய அறக்கட்டளையின் புதிய கட்டடத்திற்காக 75,000 டாலர்கள் பணம் எங்கள் அறக்கட்டளைக்குக் கிடைத்தது குறித்து நான் நன்றியுணர்வு கொள்ளுகிறேன்," என்று நான் எழுதினேன். நான் ஜனவரி 1ம் தேதி இதை எழுதினேன் என்பதை நீங்கள் கவனிக்க வேண்டும். இன்னும் எங்கள் வசமாகியிருக்காத பணப் பரிசு ஒன்றுக்காக நான் நிகழ்காலத்தில் நன்றியை வெளிப்படுத்திக் கொண்டிருந்தேன்.

2008ம் ஆண்டு மார்ச் 15ம் நாளன்று, புதிய கட்டடத்திற்கான எங்களுடைய திட்டங்களைப் பற்றிக் கேள்விப்பட்டிருந்த உள்ளூர் அமைப்பு ஒன்று என்னைத் தொடர்பு கொண்டது. அவர்கள் எங்களுக்கு உதவ விரும்பினர். இந்த விஷயம் பற்றி மேலும் கலந்து பேசுவதற்காக மார்ச் 25ம் நாளன்று எங்கள் இயக்குநர் குழுமத்தினருடன் ஒரு சந்திப்புக்கூட்டத்திற்கு ஏற்பாடு செய்யும்படி அவர்கள் என்னிடம் கூறினர். நாங்கள் அந்நிறுவனத்திடம் எந்த உதவியும் கேட்டுச் செல்லவில்லை. மாறாக, தாங்களாகவே அவர்கள் எங்களுக்கு உதவ விரும்பினர். இதை மனத்தில் வைத்து, மார்ச் 25ம் நாளன்று நாங்கள் அவர்களை சந்தித்தோம். எங்களுடைய அமைப்பிற்குப் பணம் திரட்டுவதற்கான

https://telegram.me/aedahamlibrary

முயற்சிகள்மீது நாங்கள் எங்கள் கவனத்தைக் குவிக்க உதவும் பொருட்டு, எங்களுடைய புதிய கட்டடத்திற்கான தவணை பாக்கி முழுவதையும் தாங்கள் செலுத்த விரும்பியதாகக் குறிப்பிட்டு அவர்கள் எங்களிடம் ஒரு கடிதத்தைக் கொடுத்தனர். இதில் ஆச்சரியமான விஷயம் என்னவென்றால், அவர்கள் அத்தொகையை இரண்டு தவணைகளாகக் கொடுக்க விரும்பினர். மார்ச் 31ம் நாளன்று 75,000 டாலர்கள் தர அவர்கள் ஒப்புக் கொண்டனர். நிதியாண்டின் கடைசி நாள் அது. அதேபோல, மறு நிதியாண்டின் முதல் நாளான ஏப்ரல் 1ம் நாளன்று மீதிப் பணத்தைத் தர அவர்கள் ஒப்புக் கொண்டனர்!

**- ஜேன் ஜி., புவெப்லோ, கொலொராடோ, அமெரிக்கா**

**நம்மிடம் இருப்பவை குறித்து நாம் நன்றியுடன் இல்லாதபோது, நம்மால் எதையும் நம் வாழ்விற்குள் ஒருபோதும் இழுத்து வர முடியாது. உண்மையில், யாரேனும் எல்லாவற்றைக் குறித்தும் முற்றிலும் நன்றியுடன் இருந்தால், அவர்கள் எதையும் ஒருபோதும் கேட்க வேண்டியதே இல்லை. ஏனெனில், அவர்கள் கேட்பதற்கு முன்பாகவே அது அவர்களுக்குக் கொடுக்கப்பட்டுவிடும்.**

**- இரகசியம் தினசரி போதனைகள்**

பணம் மரத்தில் காய்ப்பதில்லை என்று கூறப்படுகிறது. ஆனால் நீங்கள் நன்றியுடன் இருக்கும்போது, அது திடீரென்று உங்களிடம் வந்து சேரும். பிரபஞ்சம் உங்களுக்கு அனுப்பி வைக்கின்ற ஒரு பரிசு அது.

## சொர்க்கத்திலிருந்து வந்த பணம்

என் காதலரும் நானும் நகரின் மையப் பகுதியில் ஓர் அடுக்குமாடிக் குடியிருப்பில் ஒரு வீட்டில் வாழ்ந்து

https://telegram.me/aedahamlibrary

வருகிறோம். இரகசியம் புத்தகத்தைப் படித்ததன் விளைவாக, நான் தினமும் காலையில் எழுந்து எங்கள் வீட்டு மாடிமுற்றத்தில் நின்றபடி, எங்கள் வாழ்வில் நாங்கள் பெற்றிருந்த எல்லாவற்றைக் குறித்தும் நன்றியை வெளிப்படுத்தத் தொடங்கினேன்.

ஒருநாள் காலையில் நான் கண்விழித்தபோது, எங்கள் மாடிமுற்றத்தில் ‘பென்னி’ நாணயம் ஒன்று கீழே கிடந்ததை நான் கண்டேன். ஆனால் அது அங்கேயே கிடக்கட்டும் என்று நான் விட்டுவிட்டேன். பல மாதங்களுக்குப் பிறகு ஒருநாள் காலையில், சில டாலர் நோட்டுக்கள் எங்கள் மாடிமுற்றம் முழுவதும் சிதறிக் கிடந்ததை நான் கண்டேன். மொத்தம் ஏழு நோட்டுக்கள் இருந்தன. நான் சுற்றுமுற்றும் பார்த்தபோது, இன்னும் பலருடைய மாடிமுற்றங்களிலும் டாலர் நோட்டுக்கள் கிடந்ததை நான் கண்டேன்.

ஒரு மாதத்திற்குப் பிறகு ஒருநாள் நான் அதிகாலையிலேயே எழுந்துவிட்டேன். வெளியே இன்னும் இருட்டாக இருந்தது. ஆனாலும், எங்கள் மாடிமுற்றத்தின் தரைமீது இரண்டு நோட்டுக்கள் கிடந்ததுபோல எனக்குத் தோன்றியது. அவை எத்தனை டாலர்கள் மதிப்புக் கொண்டவை என்பதை என்னால் உறுதியாகச் சொல்ல முடியவில்லை. எனவே, அவற்றை எடுத்து என் வீட்டிற்குள் கொண்டுவந்தேன். அவை இரண்டும் 20 டாலர் நோட்டுக்கள். என்னுடைய உற்சாகத்தைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியாத நான், வேறு யாருடைய மாடிமுற்றத்திலாவது ஏதேனும் டாலர் நோட்டுக்கள் இருந்தனவா என்று பார்ப்பதற்காக வெளியே வந்தேன். யாருடைய வீட்டிலும் அவற்றை என்னால் காண முடியவில்லை. ஆனால் நான் என்னைச் சுற்றிலும் பார்த்தபோது, கூடுதலாக மூன்று 20 டாலர் நோட்டுக்களை நான் கண்டேன். மொத்தம் 100 டாலர்கள் எனக்குக் கிடைத்திருந்தன. நான் ஆச்சரியத்தில் வாயடைத்து நின்றேன்! வேறு யாருக்கும் பணம் எதுவும் கிடைக்கவில்லை, அவர்கள் யாரும் தங்களுடைய

https://telegram.me/aedahamlibrary

பணத்தைத் தொலைத்ததுபோலவும் தெரியவில்லை. எப்பேற்பட்ட ஆசீர்வாதம் அது!

ஒரு வாரத்திற்குப் பிறகு, குறிப்பிட்ட மூன்று இலக்க எண் ஒன்று என் கனவில் தோன்றிக் கொண்டே இருந்தது. நான் சூதாடுவதோ அல்லது லாட்டரிச் சீட்டுக்களை வாங்குவதோ இல்லை என்றாலும், என் கனவில் தோன்றியிருந்த எண்ணை வைத்து 'தினசரிச் சீட்டுக் குலுக்கல்' விளையாட்டில் நாங்கள் பங்கு கொண்டே ஆக வேண்டும் என்று நான் என் காதலரிடம் குறிப்பிட்டேன். என்னிடமிருந்து வந்த ஒரு விநோதமான கோரிக்கை அது! என்னுடைய எண்கள் அன்றைய குலுக்கலில் தேர்ந்தெடுக்கப்படவில்லை. ஆனால், ஒருசில நாட்கள் அவர் தொடர்ந்து விளையாடினார். பின்னர் ஒருநாள், நான் என் மனத்தில் காட்சிப்படுத்தியிருந்ததைப்போலவே, குறிப்பிட்ட அந்த மூன்று இலக்க எண் தேர்ந்தெடுக்கப்பட்டது, 290 டாலர்கள் பரிசுத் தொகையை நான் வென்றேன்.

அதன் பிறகு, மின்னஞ்சல் மூலம் எனக்கு ஓர் அறிவிப்பு வந்தது. பொதுமக்கள் பலர் இணைந்து போட்ட, ஆனால் எனக்குத் தெரியாத ஒரு வழக்கின் முடிவில் வழங்கப்பட்டத் தீர்ப்பின் அடிப்படையில் எனக்குப் பணம் கிடைக்கவிருந்ததாக அதில் குறிப்பிடப்பட்டிருந்தது. நான் வேறு எதுவும் செய்ய வேண்டாம் என்றும், நான் அதைப் பெற வெறுமனே காத்திருக்க வேண்டும் என்றும் அதில் கூறப்பட்டிருந்தது.

சந்தேகமின்றி இரகசியம் பலனளிக்கிறது. நன்றியுணர்வு என்பது ஒரு மையப் பகுதியாகும். இன்னும் அதிகப் பணம் தினமும் எனக்கு வரப் போவதாக நான் எதிர்பார்க்கிறேன்.

கடவுள் அனைவரையும் ஆசீர்வதிக்கட்டும்!

**- பேட், ஜார்ஜியா, அமெரிக்கா**

## நீங்கள் விரும்புகின்ற எல்லாம் உங்களிடம் இருப்பதுபோலக் கற்பனை செய்யுங்கள்

https://telegram.me/aedahamlibrary

**நீங்கள் அதிகப் பணத்தைக் கவர்ந்திழுக்க விரும்பினால், அந்தப் பணத்தைக் கொண்டு நீங்கள் வாங்கவிருக்கின்ற பொருட்கள் அனைத்தையும் ஒரு பட்டியலிடுங்கள். நீங்கள் கைவசப்படுத்த விரும்புகின்றவற்றின் புகைப்படங்கள் உங்களைச் சூழ்ந்திருக்கும்படி பார்த்துக் கொள்ளுங்கள். அப்பொருட்கள் இக்கணத்தில் உங்களிடம் இருந்தால் நீங்கள் எத்தகைய உணர்வுகளை அனுபவிப்பீர்களோ, அந்த உணர்வுகளை எப்போதும் உணருங்கள். நீங்கள் நேசிக்கின்ற மக்களோடு நீங்கள் அப்பொருட்களைப் பகிர்ந்து கொள்ளுவதுபோலக் கற்பனை செய்யுங்கள், அவர்கள் அடையும் மகிழ்ச்சியைக் கற்பனை செய்யுங்கள்.**

**- இரகசியம் தினசரி போதனைகள்**

நீங்கள் விரும்புகின்ற ஒன்றைப் பெறுவதற்குப் பணம்தான் ஒரே வழி என்று சிந்திப்பதன் மூலம் உங்கள் வாழ்க்கையை மட்டுப்படுத்தாதீர்கள். பணம் ஒன்றின்மீது மட்டுமே எப்போதும் குறியாக இருக்காதீர்கள். மாறாக, நீங்கள் எப்படிப்பட்டவராக ஆக விரும்புகிறீர்களோ அதையும், நீங்கள் செய்ய விரும்புகின்றவற்றையும், நீங்கள் பெற விரும்புகின்றவற்றையும் உங்கள் இலக்குகளாகத் தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள். நீங்கள் ஒரு புதிய வீட்டை வாங்க விரும்பினால், அதில் நீங்கள் வாழ்ந்து கொண்டிருப்பதுபோலக் கற்பனை செய்யுங்கள், அதில் வாழுவதன் மூலம் கிடைக்கும் ஆனந்தத்தை இப்போதே உணருங்கள். அழகான ஆடைகள், வீட்டுப் பயன்பாட்டுக் கருவிகள், கார் போன்றவற்றை நீங்கள் விரும்பினாலோ, அல்லது நீங்கள் கல்லூரிக்குச் சென்று படிக்க விரும்பினாலோ, அல்லது வேறொரு நாட்டிற்கு

https://telegram.me/aedahamlibrary

இடம்பெயர விரும்பினாலோ, அதைக் கற்பனை செய்யுங்கள்! இவை அனைத்தும் எண்ணற்ற வழிகளில் உங்களை வந்தடையும்.

## இரகசியம் எவ்வாறு எங்களை இடம்பெயர்த்தது

நானும் என் குடும்பத்தினரும் பதினான்கு ஆண்டுகளாக எங்களுடைய முந்தைய வீட்டில் வாழ்ந்து வந்திருந்தோம். ஆனால் அங்கு நாங்கள் ஒருபோதும் மகிழ்ச்சியாக இருந்ததே இல்லை. அவ்வீட்டில் ஏகப்பட்ட விஷயங்கள் பழுது பார்க்கப்பட வேண்டியிருந்தன. அதற்குச் செலவு செய்யப் போதுமான பணம் எங்களிடம் இல்லை. ஆனால் முக்கியமாக, எங்களுடைய வாழ்க்கையை நரகமாக்கிக் கொண்டிருந்த அண்டைவீட்டுக்காரர் ஒருவரிடமிருந்து நாங்கள் வெகுதூரம் விலகிச் சென்றுவிட விரும்பினோம். அது ஒரு மோசமான சூழ்நிலையாகவும், முற்றிலும் எதிர்மறையான ஒரு சூழலாகவும் இருந்தது. நான் என் வீட்டில் இருப்பதைவிட என்னுடைய அலுவலகத்தில் இருப்பதை அதிகமாக விரும்பினேன். நாங்கள் அனைவரும் பெரும் மனச்சோர்வுக்கு ஆளாகியிருந்தோம். கிட்டத்தட்டப் பதினான்கு ஆண்டுகளாக, “நம்மால் ஒருபோதும் வேறு இடத்திற்குக் குடிபெயர முடியாது,” “யாரும் நம்முடைய இந்த வீட்டை வாங்க விரும்ப மாட்டார்கள்,” “வேறு வீட்டிற்குக் குடிபோவது நமக்குக் கட்டுப்படியாகாது,” என்றுதான் நாங்கள் எப்போதும் எங்களுக்கிடையே கூறி வந்திருந்தோம். இந்த வகையான எதிர்மறைச் சிந்தனையின் மூலம் எங்களை நாங்களே இழுத்துப் பிடித்துக் கொண்டிருந்தோம் என்பதை நாங்கள் அறியவில்லை. “தங்கள் கட்டளை என் பாக்கியம்” என்ற பிரபஞ்ச வாசகத்தை நாங்கள் ஒருபோதும் கேள்விப்பட்டதில்லை.

https://telegram.me/aedahamlibrary

நாங்கள் ஒரு குறிப்பிட்ட வீட்டை வாங்க விரும்பினோம். அது முதன்முதலாக விற்பனைச் சந்தைக்கு வந்தபோது, எங்களுக்குக் கட்டுப்படியாகாத அளவுக்கு அதன் விலை மிக அதிகமாக இருந்தது. ஆனாலும் நாங்கள் அந்த வீட்டை வாங்க ஆசைப்பட்டோம். எங்கள் அனைவரிலும் என் கணவர்தான் அதில் மிகவும் உறுதியாக இருந்தார். “அதுதான் நம்முடைய வீடு. அதை நாம் வாங்கத்தான் போகிறோம்,” என்று அவர் எங்களிடம் கூறினார்.

நாங்கள் எல்லோரும் சேர்ந்து இரகசியம் திரைப்படத்தைப் பார்த்தோம். அதன் பிறகு எங்கள் வாழ்க்கை வெகுவாக மாறியது. இரகசியத்தின் சக்தியை நாங்கள் நால்வரும் சேர்ந்து பயன்படுத்தினோம். நாங்கள் அந்த அழகான வீட்டில் வாழ்ந்து கொண்டிருந்ததுபோல முறையாக மனக்காட்சிப்படுத்துவதற்குத் தேவையான கருவிகள் இப்போது எங்களிடம் இருந்தன. நாங்கள் எங்களுடைய புதிய அறைகலன்களை அவ்வீட்டில் எந்தெந்த இடத்தில் வைப்போம் என்றும், நாங்கள் அந்த வீட்டிற்குள் இருந்து கொண்டு சன்னல் வழியாக வெளியே பார்த்துக் கொண்டிருந்ததுபோலவும், அவ்வீட்டை நாங்கள் அலங்கரித்த விதம் குறித்தும், சமையலறையில் நாங்கள் சமைத்துக் கொண்டிருந்ததுபோலவும், அந்த உணவின் வாசனையை நாங்கள் ரசித்து முகர்ந்ததுபோலவும், வெளியே தாழ்வாரத்தில் அமைதியாக உட்கார்ந்து கொண்டு அவ்வழியே சென்ற அக்கம்பக்கத்தாரை நோக்கித் தோழமையாகக் கையசைத்ததுபோலவும் நாங்கள் கற்பனை செய்தோம். அந்த உணர்வுகளை நாங்கள் உண்மையிலேயே உணர்ந்தோம். நாங்கள் ஏற்கனவே அந்த வீட்டில் வாழ்ந்து கொண்டிருந்ததாக நாங்கள் நம்பினோம்.

ஐந்து வாரங்களில் நாங்கள் அந்த வீட்டில் உண்மையிலேயே வாழ்ந்து கொண்டிருந்தோம். நாங்கள் எங்களுடைய பழைய வீட்டைப் பழுது பார்க்காமல் ‘அப்படியே’ விற்கத் தீர்மானித்தோம். இரண்டு நாட்களில், நாங்கள் கேட்ட விலைக்கு ஒருவர் அதை வாங்கத்

https://telegram.me/aedahamlibrary

தயாராக இருந்ததாக எங்களுக்குத் தகவல் வந்தது. நாங்கள் வாங்க விரும்பியிருந்த புதிய வீடு சுமார் பதினெட்டு மாதங்களாக விற்பனைச் சந்தையில் இருந்து வந்திருந்தது. இப்போது அதன் விலையும் கணிசமாகக் குறைந்திருந்தது. அவ்வீட்டை வாங்குவதற்கு எங்களுக்கு உடனடியாகவும் எந்தப் பிரச்சனையும் இன்றியும் கடன் கிடைத்தது. புதிய அறைகலன்களை வாங்குவதற்குத் தேவையான பணமும் எக்கச்சக்கமாக எங்களிடம் மிஞ்சியிருந்தது. இப்போது நான் என் வேலை முடிந்து ஆவலாக வீட்டை நோக்கி ஓடி வருகிறேன். மதிய உணவிற்குக்கூட நான் வீட்டிற்கு வந்துவிடுகிறேன். நான் தினமும் கடவுளுக்கு நன்றி கூறுகிறேன். ஒவ்வொரு நொடியையும் நான் மகிழ்ச்சியாக அனுபவிக்கிறேன். நாங்கள் எல்லோரும் மிகுந்த மகிழ்ச்சியோடு இருக்கிறோம்!

**- ஜீனா, பிளைமவுத், பென்சில்வேனியா, அமெரிக்கா**

ஜீனாவும் அவருடைய குடும்பத்தினரும் தங்களுடைய மனக்காட்சிப்படைப்பில் மிகவும் சக்திவாய்ந்த ஒரு காரியத்தைச் செய்தனர். அவர்கள் தங்களுடைய **அனைத்துப்** புலன்களையும் பயன்படுத்தினர். அவர்கள் தாங்கள் விரும்பிய வீட்டை வெறுமனே பார்த்ததோடு நின்றுவிடாமல், அதை உணர்ந்தனர், அதை முகர்ந்தும் பார்த்தனர்! நீங்கள் உங்களுடைய மனக்காட்சிப்படைப்பில் எவ்வளவு அதிகப் புலன்களைப் பயன்படுத்துகிறீர்களோ, நீங்கள் கற்பனை செய்து கொண்டிருக்கின்ற விஷயத்தை நீங்கள் அவ்வளவு அதிகமாக நம்புகிறீர்கள், உங்கள் விருப்பம் அவ்வளவு அதிக வேகமாக நிறைவேறும்.

## எதிர்மறை மனப்போக்கு மறைந்தது

https://telegram.me/aedahamlibrary

நான் எப்போதும் ஓர் எதிர்மறையான மனப்போக்குடனேயே இருந்து வந்துள்ளேன். நான் யதார்த்தமாக இருக்கிறேன் என்பதுபோல நான் நினைத்துக் கொள்ள விரும்புகிறேன். எந்தவொரு விஷயத்திலும் அதன் இரண்டு பக்கங்களையும் நான் பார்த்தேன், ஆனால் எதிர்மறையான பக்கத்தை நோக்கியே நான் ஈர்க்கப்பட்டேன். எல்லாம் நல்லபடியாக அமையும் என்பது ஒரு பொய் என்று நான் நினைத்தேன்.

என்னுடைய சிறுவயதிலிருந்தே, நான் பல நாடுகளுக்குப் பயணம் செய்து ஒரு சாகசமான வாழ்க்கையை வாழுவது பற்றிக் கனவு கண்டு வந்திருந்தேன். என்னுடைய பாடப்புத்தகங்களில் இடம்பெற்றிருந்த பண்டைய நினைவுச்சின்னங்கள், கோவில்கள், முக்கியமான இடங்கள் ஆகியவற்றின் படங்களை நான் பார்த்துவிட்டு, அங்கெல்லாம் நேரில் சென்று அவற்றை என் கண்குளிரக் கண்டால் எவ்வளவு அற்புதமாக இருக்கும் என்று நான் நினைத்துக் கொள்ளுவேன்.

பின்னாளில், கல்லூரிப் படிப்பை முடித்துவிட்டு, ஏகப்பட்ட வேலைகளைச் செய்து நான் மிகவும் அலுத்தும் களைத்தும் போனேன். **இதுதான் வாழ்க்கையா? அலுவலகத்தில் ஒரு குறுகலான இடத்தில் உட்கார்ந்து நாள் முழுவதும் தொலைபேசியுடனும் கணினியுடனும் மல்லுக்கு நிற்பதுதான் வாழ்க்கையா?** என்று நான் நினைத்தேன். வேலை நேரத்தில் கிடைத்தச் சிறிய இடைவேளைகளை நான் ரசித்து அனுபவித்தேன். அச்சமயங்களில் நான் வெளியே சென்று ஒரு திண்ணையில் அமர்ந்து கொண்டு, உலகம் நெடுகிலும் பயணம் செய்வது குறித்து நான் கனவு கண்டுகொண்டிருப்பேன். அது நிச்சயமாக எப்படியாவது நிகழத்தான் போகிறது என்பதை நான் இதயபூர்வமாக அறிந்திருந்தேன். நான் எப்போதும் உலகம் முழுவதையும் சுற்றி வந்ததைப்போலவும், வசீகரமான இடங்களில் வேலை செய்ததுபோலவும் என் மனத்தில் காட்சிப்படுத்தினேன். பின்னர் நான் **இரகசியம்** புத்தகத்தைப் படிக்கத் தொடங்கினேன். நான் அதிலிருந்து

https://telegram.me/aedahamlibrary

கற்றுக் கொண்டவற்றைச் சிறிது சிறிதாக என் வாழ்வில் கடைபிடிக்கத் தொடங்கினேன்.

சில நாட்களில் நான் என் வேலையைவிட்டு நின்றுவிட்டேன். ஆனால், ஒருசில மாதங்களுக்குப் பிறகு, உலகம் நெடுகிலும் பயணிப்பதற்கு யாரும் யாரையும் வேலைக்கு எடுக்கவில்லை என்பதால் நான் மிகவும் ஊக்கமிழந்தேன். பிறகு ஒருநாள், வேலையின்றி இருந்த என்னுடைய தோழி ஒருத்தி, முன்பு தன்னுடன் வேலை செய்த ஒருவர் தனக்கு வழங்கியிருந்த ஒரு வாய்ப்பைப் பற்றி என்னிடம் கூறினாள். உல்லாசக் கப்பல்களில் பயணம் செய்து, பயணியரிடம் நேரடியாகப் பொருட்களை விற்பனை செய்வதை உள்ளடக்கிய ஒரு வேலை அது. விலையுயர்ந்த நகைகளையும் அப்பயணியரிடம் விற்பனை செய்தாக வேண்டும். அவள் அதைக் கூறி முடித்தவுடன், "அந்த வேலையைத்தான் இத்தனை நாட்களாக நான் கனவு கண்டு வந்திருந்தேன்," என்று நான் கூறினேன்.

ஒரு மாதத்திற்குப் பிறகு, உல்லாசக் கப்பல்களில் உலகை நான் வலம் வந்து கொண்டிருந்தேன். மக்கள் பணம் கொடுத்துப் பெற்ற விஷயங்கள் எனக்கு இலவசமாகக் கிடைத்தன. கப்பல்களில் பயணியருக்கான அறைகளில் நான் தங்கினேன், விருந்தினர்களோடு கலந்து பழகினேன், விலையுயர்ந்த ஆபரணங்களை அணிந்தேன். இவையெல்லாம் என் வேலையின் ஒரு பகுதி. துறைமுகங்களில் எனக்கு எப்போதும் போதுமான ஓய்வு நேரம் கிடைத்தது. தென்னமெரிக்கா, மத்திய அமெரிக்கா, கரீபியத் தீவுகள், மத்தியத் தரைக்கடல் பகுதிகள் ஆகிய இடங்கள் நெடுகிலும் நான் பயணம் செய்தேன். பல ஆண்டுகளுக்கு முன்பு என்னுடைய பாடப்புத்தகங்களில் நான் கண்ட இடங்களை இப்போது என்னால் நேரில் பார்க்க முடிந்தது. நான் எகிப்திற்குச் சென்று பிரமிடுகளைக்கூடப் பார்த்தேன்!

நான் எகிப்திற்குப் பயணித்த உல்லாசக் கப்பலில், விற்பனைக் கமிஷன்களில் ஒரு குறிப்பிட்டத் தொகையை நான் சம்பாதிக்க எனக்கு உதவும்படி

https://telegram.me/aedahamlibrary

பிரபஞ்சத்திடம் நான் கேட்டுக் கொண்டேன். என்னால் நினைவில் வைத்துக் கொள்ள முடிந்த ஒரு விநோதமான எண்ணாக அது இருக்க வேண்டும் என்று நான் விரும்பினேன். எனவே, 5,432 டாலர்களை நான் சம்பதிக்க வேண்டும் என்று நான் வேண்டிக் கொண்டேன். தினமும் இரவிலும் பகலிலும் நான் அந்த எண்ணை நினைத்துப் பார்த்தேன். அந்தத் தொகைக்குரிய காசோலை ஒன்று எனக்கு வழங்கப்பட்டதைப்போல நான் என் மனத்தில் காட்சிப்படுத்தினேன். குறிப்பிட்ட அந்தக் கப்பலுக்கான என்னுடைய கமிஷனாக 5,400 டாலர்கள் பணம் எனக்குக் கிடைத்தது. அன்றிலிருந்து நான் இரகசியத்தை 100 சதவீதம் நம்பி வந்துள்ளேன்.

**- ஏஞ்சி, ஃபோர்ட் லாடர்டேல், ஃபுளோரிடா, அமெரிக்கா**

## உங்களுடைய செயல்நடவடிக்கைகள் உங்கள் விருப்பங்களுடன் இசைவாக இருப்பதை உறுதி செய்து கொள்ளுங்கள்

நீங்கள் ஏதோ ஒன்றை உங்கள் வாழ்விற்குள் கவர்ந்திழுக்க விரும்பும்போது, உங்களுடைய செயல்நடவடிக்கைகள் உங்கள் விருப்பங்களுடன் முரண்பட்டு நிற்காமல் இருக்கும்படி பார்த்துக் கொள்ளுங்கள். நீங்கள் எதைக் கேட்டிருக்கிறீர்கள் என்பதை நினைத்துப் பாருங்கள். பிறகு, நீங்கள் எதைப் பெறப் போவதாக நீங்கள் எதிர்பார்க்கிறீர்களோ, உங்களுடைய நடவடிக்கைகள் அதைப் பிரதிபலிக்கும்படி இருப்பதை உறுதி செய்து கொள்ளுங்கள். உங்களுடைய விருப்பங்களைப் பெற்றுக் கொள்ளுவதற்கு நீங்கள் தயாராக இருப்பது எதிர்பார்ப்பு எனும் சக்திவாய்ந்த சமிக்கையைப் பிரபஞ்சத்திற்கு அனுப்புவதற்கான ஒரு வழியாகும்.

https://telegram.me/aedahamlibrary

# ஒரு வீட்டை எவ்வாறு விற்பது

நான் என் காதலருடன் சேர்ந்து வாழத் தொடங்கியபோது என்னுடைய சொந்த வீட்டை வாடகைக்கு விட்டேன். சிறிது காலத்திற்குப் பிறகு அந்த வாடகைதாரர் காலி செய்தபோது, அந்த வீட்டை விற்றுவிடுவதற்கான நேரம் வந்துவிட்டிருந்ததாக நான் முடிவு செய்தேன். நான் அந்த வீட்டை வாங்கிய காலத்தில் இருந்ததைவிட இப்போது அதன் விலை சற்று அதிகரித்திருந்தது. அதை விற்பனைச் சந்தையில் அறிவித்துவிட்டு, என் காதலருடைய வீட்டை எங்கள் இருவருடைய பெயரிலும் மாற்றிக் கொள்ளுவதென்று நாங்கள் இருவரும் ஒப்புக் கொண்டோம்.

துவக்கத்தில், என் வீடு வேகமாக விற்பனையாகிவிடும் என்று நான் உறுதியாக நம்பினேன். அந்த ஆண்டு தொடங்கியதிலிருந்து இரகசியத்தை நான் கடைபிடித்து வாழ்ந்து வந்திருந்தேன். நான் தீவிரமாக விரும்பினால் என் வீடு நிச்சயமாக விற்பனையாகும் என்று நான் நினைத்தேன். ஆனால் வாரங்கள் உருண்டோடியும் அது விற்பனையாகவில்லை. நான் உத்வேகம் வேண்டி இரகசியத்தின் இணையத்தளத்திற்குச் சென்றேன். அப்போதுதான் என்னுள் ஞானோதயம் பிறந்தது. என்னுடைய நடவடிக்கைகள் என்னுடைய விருப்பங்களைப் பிரதிபலித்துக் கொண்டிருக்கவில்லை என்பதை நான் உணர்ந்தேன். நான் என் வீட்டை விற்க விரும்பினேன், ஆனால் அதைச் சாதிப்பதற்கு உண்மையில் நான் எதையும் செய்து கொண்டிருக்கவில்லை. என்னுடைய வாடகைதாரர் அந்த வீட்டைக் காலி செய்ததிலிருந்து நான் அதை எட்டிப் பார்த்திருக்கக்கூட இல்லை. ஏனெனில், அதை நான் ஒரு சுமையாக நினைக்கத் தொடங்கியிருந்தேன். அதன் மூலம், அது தொடர்ந்து ஒரு சுமையாக இருப்பதை நான் உறுதி செய்திருந்தேன்.

இந்த ஞானோதயத்திற்குப் பிறகு, நான் என் வீட்டிற்குச் சென்று, அதை வாங்குபவர்களுக்கு அது வசீகரமானதாக

https://telegram.me/aedahamlibrary

இருப்பதை உறுதி செய்யத் தேவையான அனைத்தையும் செய்தேன். என் வீட்டிற்குச் சரியான விலை நிர்ணயிக்கப்பட்டிருந்ததைச் சரிபார்த்துக் கொள்ளுவதற்காகப் பிற வீடுமனை முகவர்களை நான் சந்தித்தேன்.

இரகசியம் இணையத்தளத்தில் கொடுக்கப்பட்டிருந்த ஒரு விஷயம் என்னை மிகவும் கவர்ந்தது. என் வீட்டின் எந்தெந்த அம்சங்களையெல்லாம் நான் மிகவும் விரும்பினேனோ அவற்றைப் பற்றிச் சிந்தித்து, என்னுடைய வீட்டிற்கு நன்றி கூறி, பிறகு அதை என்னிடமிருந்து வாங்குபவர் அங்கு மகிழ்ச்சியாக வாழுவதுபோல நான் கற்பனை செய்ய வேண்டும் என்று அந்த இணையத்தளத்தில் கூறப்பட்டிருந்தது. அதைப் படித்தப் பிறகு, நான் என்னுடைய வீட்டில் உட்கார்ந்து கொண்டு, எனக்கு இனிமையான நினைவுகளைக் கொடுத்ததற்காக ஒவ்வோர் அறைக்கும் நான் நன்றி கூறினேன். நான் ஏன் அந்த வீட்டை விற்கவிருந்தேன் என்பதை அவற்றிடம் நான் விளக்கினேன். என்னிடமிருந்து என் வீட்டை வாங்குபவர் தான் அங்கு வாழப் போவது குறித்து உற்சாகமாக இருப்பதைப் பற்றிய ஒரு தெளிவான காட்சியை நான் என் மனத்தில் உருவாக்கினேன்.

இன்னோர் உத்தியும் எனக்கு உதவியது. நான் என் வீட்டுச் சாவியை என் கையில் எடுத்து, என் வீட்டை வாங்குபவரிடம் அதைக் கொடுத்துவிட்டு, “இந்த வீடு விற்பனையானதற்கு நன்றி!” என்று என் மனத்திற்குள் கூறுவதுபோல நான் கற்பனை செய்தேன். என் வீடு ஏற்கனவே விற்பனையாகிவிட்டதுபோல நான் உணர்ந்தேன்.

நான் இவ்வாறு நடந்து கொள்ளத் தொடங்கிய ஒருசில வாரங்களில், வீடுமனை விற்பனைச் சந்தை சற்று மந்தமாகப் போய்க் கொண்டிருந்தபோதிலும், என் வீட்டை வாங்குவதற்கு ஆட்கள் தயாராக இருந்ததாக என் முகவர் கூறினார். நான் எதிர்பார்த்தத் தொகையைவிட அதிக விலைக்கு என் வீடு விலை போயிற்று. மறுகணம்,

https://telegram.me/aedahamlibrary

**இவ்வீட்டிலுள்ள அறைகலன்களையும் அவர் வாங்கிக் கொண்டால், இவற்றை இங்கிருந்து எடுத்துச் செல்லுவதற்கான செலவு மிச்சமாகும்** என்று நான் நினைத்தேன். நான் நினைத்ததுபோலவே, அவர் அவற்றை வாங்கிக் கொண்டார்.

என் காதலர் இப்போது என் கணவராக ஆகிவிட்டார். நாங்கள் இருவரும் எங்களுடைய தற்போதைய வீட்டை விற்றுவிட்டு வேறொரு புதிய வீட்டிற்கு இடம்பெயரத் தீர்மானித்துள்ளோம். ஏனெனில், எங்களுக்கு ஒரு குழந்தை பிறக்கப் போகிறது. இரகசியத்தின் கொள்கைகளைப் பயன்படுத்தித்தான் இத்தனையையும் நான் கவர்ந்திழுத்தேன்!

**- ரெபெக்கா, லண்டன், இங்கிலாந்து**

அடுத்தக் கதையில், ஓர் இசைக்குழுவின் உறுப்பினர்கள் தங்கள் நடவடிக்கைகள் தங்கள் விருப்பங்களோடு இசைவாக இருக்கும்படி பார்த்துக் கொண்டனர்.

## காலி நாற்காலிகள்

நான் ஒரு 'செல்டிக்' இசைக் குழுவில் இருக்கிறேன். நாங்கள் அதிகப் பிரபலமாகி வருகிறோம், ஆனால் நான் இப்போது விளக்கவிருக்கின்ற சம்பவம் நிகழ்ந்த நேரத்தில் நாங்கள் பிரபலமாக இல்லை. மிகச் சிறிய ஒரு நகரத்தில் ஒரு பொதுநலக் காரியத்திற்காக நாங்கள் இன்னோர் இசைக் குழுவுடன் சேர்ந்து ஒரு கச்சேரியை நடத்தத் திட்டமிட்டிருந்தோம். எதிர்காலத்தில் நாங்கள் அவர்களோடு இணைந்து கச்சேரிகள் நடத்தவும் திட்டமிட்டிருந்தோம். ஆனால் இந்தக் குறிப்பிட்டக் கச்சேரிக்கு ரசிகர்கள் யாரும் வர மாட்டார்கள் என்று நாங்கள் மிகவும் பயந்தோம். அந்த ஊரில் முன்பொரு முறை நாங்கள் ஒரு கச்சேரி நடத்த முயற்சித்திருந்தபோது நான்கு பேர் மட்டுமே வந்தனர். மேலும், இப்போது நாங்கள் கச்சேரி நடத்தவிருந்த அதே

https://telegram.me/aedahamlibrary

இரவில் இன்னும் பல பெரிய நிகழ்ச்சிகள் நடக்கவிருந்தன. நாங்கள் இந்தக் கச்சேரிக்காக எக்கச்சக்கமாகச் செலவு செய்திருந்தோம். தீயணைப்புத் துறைக்கு நன்கொடை கொடுப்பதற்காக நாங்கள் இதை நடத்தவிருந்ததாக நாங்கள் விளம்பரப்படுத்தியிருந்தோம். எனவே, இந்தக் கச்சேரி எப்படியும் வெற்றிகரமாக நடந்தேறியாக வேண்டும் என்ற கட்டாயத்திற்கு நாங்கள் ஆளாகியிருந்தோம்.

அந்த நிகழ்ச்சி நடக்கவிருந்த நாளுக்கு ஒரு வாரத்திற்கு முன்பு நாங்கள் ஆறு நுழைவுச்சீட்டுகளை மட்டுமே விற்றிருந்தோம். வெகுசில பார்வையாளர்கள் மட்டுமே வருவார்கள் என்று நான் என் மனத்தில் காட்சிப்படுத்திக் கொண்டே இருந்தேன். நான் உடனடியாக என்னுடைய எண்ணங்களை மாற்றியாக வேண்டும் என்பதை நான் அறிந்தேன். மக்கள் பெருந்திரளாக எங்கள் கச்சேரிக்கு வருவார்கள் என்று நம்புவதற்கான திறனை எனக்குக் கொடுக்கும்படி நான் பிரார்த்தனை செய்தேன். உடனடியாக, அந்த ஊரில் மேலும் அதிகமான அறிவிப்பு விளம்பரங்களை ஒட்ட வேண்டும் என்று எனக்குத் தோன்றியது. என்னுடைய குழுவில் இருந்தவர்கள் ஏற்கனவே அதிகமான விளம்பர அறிவிப்புகளை ஒட்டியிருந்தனர். எனவே, மழை பெய்து கொண்டிருந்த ஒரு காலைவேளையில் நான் அங்கே என் காரில் சென்று, அதிகமான விளம்பரங்களை ஒட்டினேன். மிக முக்கியமாக, மக்கள் அதிக எண்ணிக்கையில் வருவார்கள் என்று நான் நேர்மறையாகச் சிந்தித்தேன்.

கச்சேரியன்று காலையில், அந்த ஆறு நுழைவுச்சீட்டுகளுக்கு அதிகமாக ஒருசீட்டுக்கூட விற்பனையாகியிருக்கவில்லை. ஆனால் நாங்கள் தொண்ணூற்று ஆறு நாற்காலிகளைப் போட்டு வைத்திருந்தோம். காலி நாற்காலிகளுக்கு நாங்கள் கச்சேரி நடத்தவிருந்ததாகக் கூறி என்னுடைய குழுவினர் அனைவரும் சிரித்தனர். நான் மட்டும் ஒரு புன்னகையோடு, “நமக்கு இன்னும் அதிகமான

https://telegram.me/aedahamlibrary

நாற்காலிகள் தேவைப்படப் போகின்றன," என்று கூறினேன். அதை நான் உண்மையிலேயே நம்பினேன். பிறகு, கச்சேரிக்கு ஒரு மணிநேரத்திற்கு முன்பு, மக்கள் பெருந்திரளாக அங்கு வரத் தொடங்கினர். தொண்ணூற்று ஆறு நாற்காலிகளும் ஆக்கிரமிக்கப்பட்டன. பலர் நின்று கொண்டிருந்தனர். அன்று எங்களுடைய கச்சேரி அபாரமாக அமைந்தது. தீயணைப்புத் துறைக்கு நாங்கள் ஒரு பெரிய தொகையைத் திரட்டினோம். அது உண்மையிலேயே ஒரு மாயாஜாலமான அனுபவம்தான்!

**- கேத்தி, சான் பிரான்சிஸ்கோ, கலிபோர்னியா, அமெரிக்கா**

பிரபஞ்சத்திடமிருந்து பெறுவதற்கு ஏற்ற விதத்தில் உங்கள் நடவடிக்கைகள் அமைந்திருக்கும்போது, பிரபஞ்சத்தின் போக்குடன் உங்கள் போக்கு இசைவாக இருப்பதாக நீங்கள் உணருவீர்கள். அதிக முயற்சியின்றி விஷயங்கள் நடந்தேறுவதுபோல உங்களுக்குத் தோன்றும். உத்வேகத்தால் எடுக்கப்படும் நடவடிக்கைகள் கொடுக்கின்ற உணர்வு அது. பிரபஞ்சம் மற்றும் வாழ்க்கையின் போக்கிற்கு இசைவாக நடந்து கொள்ளுவது அது.

**நல்ல எண்ணங்களை எண்ணுங்கள்.**
**நல்ல வார்த்தைகளைப் பேசுங்கள்.**
**நல்ல நடவடிக்கைகளை மேற்கொள்ளுங்கள்.**
**இம்மூன்றும் உங்களால் கற்பனை செய்ய முடிவதைவிட அதிகமானவற்றை உங்களிடம் கொண்டுவந்து சேர்க்கும்.**

**- இரகசியம் தினசரி போதனைகள்**

https://telegram.me/aedahamlibrary

## செல்வத்திற்கான திறவுகோல்கள்

- ஒன்றைப் பற்றிய பற்றாக்குறையின்மீது உங்கள் கவனத்தைக் குவித்துவிட்டு, அதை அதிக அளவில் உங்கள் வாழ்விற்குள் உங்களால் கொண்டுவர முடியாது. அதிகப் பணத்தைக் கவர்ந்திழுப்பதற்கு நீங்கள் அபரிமிதத்தின்மீது கவனம் செலுத்த வேண்டும்.
- பணப் பற்றாக்குறை என்ற மனநிலையைக் கைவிட்டுவிட்டு, தேவைக்கு அதிகமாகவே பணம் இருக்கிறது என்ற மனப்போக்கிற்கு மாறுங்கள்.
- நீங்கள் பெற விரும்பும் பணத்தைக் கொண்டு நீங்கள் வாங்கவிருக்கின்ற பொருட்களைப் பட்டியலிடுங்கள்.
- நீங்கள் விரும்புகின்ற பொருட்களை வாங்குவதன்மீது நீங்கள் உங்கள் பணத்தைச் செலவிட்டுக் கொண்டிருப்பதுபோலக் கற்பனை செய்யுங்கள். “எனக்கு அது கட்டுப்படியாகும்,” என்று கூறுங்கள்.
- பணத்தை மட்டுமே உங்களுடைய ஒரே குறியாக வைக்காதீர்கள். நீங்கள் எப்படிப்பட்டவராக ஆக விரும்புகிறீர்களோ, எவற்றைச் செய்ய விரும்புகிறீர்களோ, எவற்றைப் பெற்றிருக்க விரும்புகிறீர்களோ, அவற்றை உங்கள் இலக்குகளாக நிர்ணயித்துக் கொள்ளுங்கள்.
- மனக்காட்சிப் பலகை ஒன்றை உருவாக்கி, வாழ்வில் நீங்கள் கைவசப்படுத்த

https://telegram.me/aedahamlibrary

விரும்புகின்ற விஷயங்களின் படங்களால் அதை நிரப்புங்கள்.

- அபரிமிதத்தில் உங்களுக்கு நம்பிக்கை ஏற்பட உங்களுக்கு உதவுவதற்கு, பிரபஞ்ச வங்கியிடமிருந்து (ஷ்ஷ்ஷ்.tலீமீsமீநீகூஷீமீt.tஸ்/ நீலீமீநீளீ) ஒரு காசோலையைத் தரவிறக்கம் செய்து கொள்ளுங்கள்.
- நீங்கள் எதைப் பெறப் போவதாக எதிர்பார்க்கிறீர்களோ, உங்களுடைய நடவடிக்கைகள் அதைப் பிரதிபலிக்கும்படி இருப்பதை உறுதி செய்து கொள்ளுங்கள்.
- நம்மிடம் ஏற்கனவே இருக்கின்றவற்றைக் குறித்து நன்றியுணர்வு கொள்ளாமல் வேறு எதுவொன்றையும் நம்மால் நம் வாழ்விற்குள் கவர்ந்திழுக்க முடியாது.
- நன்றியுணர்வுதான் செல்வம். உங்கள் விருப்பம் நிறைவேறுவதற்கு முன்பாகவே அது குறித்து நன்றியை உணருங்கள்.
- மகிழ்ச்சிதான் பணத்தைக் கொண்டுவருகிறது.

https://telegram.me/aedahamlibrary



https://telegram.me/aedahamlibrary

உங்கள் வாழ்வில் யாரோ ஒருவருடனான உறவில் ஓர் எதிர்மறைச் சூழ்நிலையில் நீங்கள் சிக்கியிருப்பதை நீங்கள் கண்டால், அந்நபருக்காக உங்கள் இதயத்தில் அன்பை உணருவதற்கு தினமும் ஒருசில நிமிடங்களைச் செலவிடுங்கள். பிறகு, அதைப் பிரபஞ்சத்திடம் அனுப்பிவிடுங்கள். இந்த ஒரே ஒரு விஷயத்தைச் செய்வது அந்நபர் குறித்து நீங்கள் கொண்டுள்ள வெறுப்பையும் கோபத்தையும் எதிர்மறை மனப்போக்கையும் களைய உதவும்.

வெறுப்பு, கோபம், அல்லது பிற எதிர்மறை உணர்ச்சிகளை உணருவது அவற்றை மீண்டும் உங்களை நோக்கிக் கவர்ந்திழுக்கும் என்பதை நினைவில் வைத்திடுங்கள். அன்பை உணருவது அன்பை உங்களிடம் கவர்ந்திழுக்கும். ஒருவரைக் குறித்து நீங்கள் எந்த உணர்வைக் கொண்டிருக்கிறீர்களோ, அதை நீங்கள் உங்களிடம் கொண்டுவருகிறீர்கள்.

**- இரகசியம் தினசரி போதனைகள்**

https://telegram.me/aedahamlibrary

## உறவுகளில் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு இரகசியத்தை நான் எவ்வாறு பயன்படுத்தினேன்

அன்புதான் நீங்கள் உணரக்கூடிய மிக உயர்ந்த, மிகவும் சக்திவாய்ந்த உணர்ச்சியாகும். அன்பை உணருவது உங்கள் வாழ்வில் உள்ள உறவுகளை முற்றிலுமாக மாற்றிவிடும். அன்புணர்வை உருவாக்கிக் கொள்ளுவதற்கான உங்கள் திறனுக்கு எல்லையே இல்லை. நீங்கள் அன்பு செலுத்தும்போது

பிரபஞ்சத்துடன் முற்றிலும் இசைவாக இருக்கிறீர்கள். எவற்றையெல்லாம் உங்களால் நேசிக்க முடியுமோ, அவற்றையெல்லாம் நேசியுங்கள். யார்மீதெல்லாம் உங்களால் அன்பு செலுத்த முடியுமோ, அவர்கள்மீது அன்பு செலுத்துங்கள். நீங்கள் உண்மையிலேயே எவற்றை நேசிக்கிறீர்களோ, எவற்றைக் குறித்து உங்களுக்குள் அன்பு ஊற்றெடுக்கிறதோ, அவற்றின்மீது மட்டுமே கவனம் செலுத்துங்கள். அப்போது அன்பும் ஆனந்தமும் பன்மடங்காக உங்களிடம் திரும்பி வருவதை நீங்கள் அனுபவபூர்வமாக உணருவீர்கள்.

## கச்சிதமான வாழ்க்கைத்துணைவரைக் கவர்ந்திழுத்தல்

நீங்கள் உங்களுடைய கச்சிதமான வாழ்க்கைத்துணைவரை சந்திக்க விரும்பினால், உங்களுடைய செயல்நடவடிக்கைகள் உங்களுடைய எதிர்பார்ப்பைப் பிரதிபலிப்பதை உறுதி செய்து கொள்ளுங்கள். இதற்கு என்ன

https://telegram.me/aedahamlibrary

அர்த்தம்? அந்த உறவு இப்போது உங்களுக்கு வாய்த்திருந்தால் நீங்கள் என்ன செய்வீர்களோ அதைச் செய்வது என்று அர்த்தம்.

## ஒரு வாழ்க்கைத்துணைவருக்காகக் காத்திருக்கும் பெண்களுக்கு!

எனக்கு இருபத்தேழு வயதாக இருந்தபோது, மூன்று ஆண்டுகளுக்கும் மேலாக நான் தனியொருத்தியாக என் குழந்தையை வளர்த்து வந்திருந்தேன். தனிமை என்னை மிகவும் வாட்டியது. என்னை நேசிக்கக்கூடிய ஒரு நல்ல துணைவர் எனக்கு வாய்க்க வேண்டும் என்று நான் உண்மையிலேயே விரும்பினேன். ஒருசில மோசமான நபர்களைக் கவர்ந்திழுத்தப் பிறகு, நான் என் முயற்சியைக் கைவிட்டுவிட்டு, தொடர்ந்து தனிமையைப் பொறுத்துக் கொண்டேன்.

பிறகு ஒருநாள், மத்திய லண்டன் பகுதியில் ஒரு குறிப்பிட்டத் தெருவை நான் தேடிக் கொண்டிருந்தபோது, மணப்பெண்களுக்கான ஆடைகளை விற்ற ஒரு கடையை நான் தற்செயலாகப் பார்த்தேன். அங்கே சன்னலில் ஒரு பொம்மைக்கு அணிவிக்கப்பட்டிருந்த ஓர் ஆடை என்னை வெகுவாகக் கவர்ந்தது. அதை அருகே சென்று பார்ப்பதற்காக நான் அந்தக் கடைக்குள் நுழைந்தேன். அந்த ஆடையை அணிந்து பார்க்கும்படி அங்கிருந்த ஒரு விற்பனைப் பெண் என்னை வற்புறுத்தினாள். அது எனக்கு அழகாகப் பொருந்தியதால் அதை நான் வாங்கிவிட்டேன். நான் அக்கடையிலிருந்து வெளியேறி ஒருசில அடிகள் நடந்து சென்றிருந்தபோதுதான், காரணமே இன்றி நான் ஒரு திருமண ஆடையை வாங்கியிருந்ததை நான் உணர்ந்தேன். தன்னைத் திருமணம் செய்து கொள்ளும்படி என்னிடம் யாரேனும் கேட்பர் என்று எதிர்பார்ப்பதற்கு எனக்கு எந்தக் காரணமும் இருக்கவில்லை. அப்போது எனக்குக் காதலர் எவரும் இருக்கவில்லை. அப்படி ஒருவர் எனக்கு வாய்த்துப் பல

https://telegram.me/aedahamlibrary

ஆண்டுகள் ஆகியிருந்தன. எனவே, மணப்பெண்ணுக்கான ஆடையை நான் வாங்கியிருந்தது எனக்கே அபத்தமாகத் தோன்றியது.

நான் போக வேண்டியிருந்த தெருவை நான் மீண்டும் தேடத் தொடங்கினேன். அப்போது, அதே தெருவைத் தேடிக் கொண்டிருந்த ஒருவர் என்னைத் தடுத்து என்னிடம் வழி கேட்டார். அவருக்கும் கிட்டத்தட்ட என்னுடைய வயதுதான் இருக்கும். அவர் ஹாலிவுட் நடிகரான மைக்கேல் ஈலையைப்போல இருந்தார். மைக்கேல் ஈலையின் புகைப்படத்தை என்னுடைய கணினியில் 'ஸ்கிரீன் சேவராக' நான் போட்டு வைத்திருந்தேன். நானும் அந்த அந்நியரும் சேர்ந்து அந்தத் தெருவைத் தேடத் தொடங்கினோம். பின்னர் நடந்ததை உங்களால் ஊகிக்க முடியும் என்று நான் நினைக்கிறேன்.

நான்கு மாதங்களுக்குப் பிறகு, நானும் அவரும் ஒரே வீட்டில் சேர்ந்து வாழத் தொடங்கினோம். இப்போது எங்களுக்குத் திருமணமாகிவிட்டது. இந்த ஒட்டுமொத்த சம்பவமும் எனக்கு ஒரு கனவுபோலத் தோன்றுகிறது. நாங்கள் தினமும் சேர்ந்து சிரிக்கிறோம், அவர் என்னை நேசிக்கிறார், நான் அவரை நேசிக்கிறேன். நான் விரும்பிய அத்தனை அம்சங்களும் அவரிடம் இருக்கின்றன. நான் எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கிறேன் என்பதை விவரிக்க என்னிடம் வார்த்தைகள் இல்லை.

திருமணம் செய்து கொள்ள விரும்புகின்ற ஒவ்வொரு பெண்ணும் ஒரு திருமண ஆடையை வாங்க வேண்டும் என்று நான் கூறவில்லை. ஆனால், நான் உங்களைக் கேட்டுக் கொள்ளுவதெல்லாம் 'நம்புங்கள்!' என்பதை மட்டும்தான்.

**- ஜீ, லண்டன், இங்கிலாந்து**

ஜீ அந்த ஆடையை வாங்கியதன் மூலம் தனக்குத் திருமணமாகவிருந்ததுபோல **நடந்து**

https://telegram.me/aedahamlibrary

**கொண்டிருந்தார்.** ஆனால் அச்சமயத்தில் அது **எப்படி** நடக்கும் என்பது பற்றிய எள்ளளவு யோசனைகூட அவருக்கு இருக்கவில்லை. அவர் நடந்து கொண்ட விதம், அவருக்குத் திருமணம் **ஆகவிருந்ததை** அறிவிக்கும்படியாக இருந்தது. அதன் விளைவாக, அவர் கேட்டதைப் பிரபஞ்சம் அவருக்கு வழங்கியது. அவர் தனக்கோர் அன்பான வாழ்க்கைத்துணைவரைக் கேட்டிருந்தார். நீங்கள் உங்களுடைய கச்சிதமான வாழ்க்கைத்துணைவரை ஏற்கனவே பெற்றுவிட்டீர்கள் என்பதைத் தெரிவிக்கக்கூடிய எந்த நடவடிக்கைகளை உங்களால் எடுக்க முடியும்?

உங்களுடைய அலமாரியில் உங்கள் வாழ்க்கைத்துணைவருடைய ஆடைகளை வைப்பதற்குச் சிறிது இடத்தை ஒதுக்கினால் என்ன? சாப்பிட உட்காரும்போது ஒருவருக்கு மட்டும் பரிமாறுவதற்கு பதிலாக இரண்டு பேருக்குப் பரிமாறினால் என்ன? அல்லது, நீங்கள் உங்கள் படுக்கையில் நடுவில் படுப்பதற்கு பதிலாக ஒரு பக்கத்தில் படுத்துக் கொண்டு, இன்னொரு பக்கத்தை உங்கள் வாழ்க்கைத்துணைவருக்காக விட்டுவைத்தால் என்ன? குளியலறையில் இரண்டு பல்துலக்கிகளை வைத்தால் என்ன? உங்களுடைய வாழ்க்கைத்துணைவரைப் பெறுவதற்கு நீங்கள் தயாராகிவிட்டீர்கள் என்பதைப் பிரபஞ்சத்திடம் கூறுகின்ற வகையான நடவடிக்கைகளை எடுப்பதற்கான படைப்பாற்றல்மிக்க வழிகளுக்கு எல்லையே இல்லை.

**உங்கள் வாழ்க்கையை மாற்றுவதற்கு உங்கள் சிந்தனையை மாற்றுங்கள்**

https://telegram.me/aedahamlibrary

**உங்கள் வாழ்வின் ஒவ்வொரு சூழலிலும் ஒவ்வொரு கணத்திலும், நீங்கள் தேர்ந்தெடுப்பதற்கு இரண்டு பாதைகள் இருக்கின்றன. ஒன்று நேர்மறையானது, மற்றொன்று எதிர்மறையானது. எந்தப் பாதையில் நீங்கள் பயணிப்பீர்கள் என்பதை நீங்கள்தான் தேர்ந்தெடுக்கிறீர்கள்.**

**- இரகசியம் தினசரி போதனைகள்**

உங்கள் வாழ்வில் உள்ள எந்தவோர் எதிர்மறையான சூழ்நிலையையும் உங்களால் மாற்ற முடியும். அதைச் செய்வதற்கான வழி, அது குறித்து நீங்கள் சிந்திக்கின்ற விதத்தை மாற்றுவதுதான். அடுத்தக் கதையில் வரும் டேமி, இந்தக் காலகட்டத்தில் உண்மையான காதல் என்ற ஒன்று இருக்கிறது என்று நம்புவதை நிறுத்திவிட்டார். ஆனால் அவர் **இரகசியம்** புத்தகத்தைப் படித்துவிட்டு, இரகசியம் திரைப்படத்தையும் பார்த்தப் பிறகு, தான் சிந்தித்த விதத்தை மாற்றிக் கொள்ளுவதிலும் எல்லாவற்றிலும் நேர்மறையான விஷயங்களைத் தேடுவதிலும் அவர் உறுதியாக இருந்தார்.

## காதலின்மீது ஒருபோதும் நம்பிக்கை இழக்காதீர்கள்

2006ம் ஆண்டில் **இரகசியம்** எனக்கு அறிமுகப்படுத்தப்பட்ட நேரத்தில், என் திருமண உறவு மிகவும் சீர்கெட்டிருந்தது. உண்மையான அன்பு என்ற யோசனையின்மீது நான் முற்றிலுமாக நம்பிக்கை இழந்திருந்தேன். தாங்கள் காதல் வயப்பட்டிருந்ததாகக் கூறிய அனைவரும் வெளியே அப்படிப் பாசாங்கு செய்தனர் என்றும், அவர்களுடைய உண்மையான வாழ்க்கை கிட்டத்தட்ட என்னுடைய வாழ்க்கையை ஒத்திருந்தது என்றும் நான் உறுதியாக நம்பினேன்.

https://telegram.me/aedahamlibrary

நான் எப்போதும் அப்படி இருந்ததில்லை. நான் ஓர் அன்பான வீட்டில் வளர்ந்தேன். திருமணமாகி நாற்பத்தோரு ஆண்டுகளுக்குப் பிறகும்கூட, யார் பார்க்கிறார்கள் என்பதைப் பொருட்படுத்தாமல், என்னுடைய பெற்றோர் இன்னும் ஒருவரையொருவர் கட்டிப் பிடித்துக் கொஞ்சிக் கொண்டும் முத்தமிட்டுக் கொண்டும் இருக்கின்றனர். என் தாய்வழித் தாத்தா-பாட்டியும் என் தந்தைவழித் தாத்தா-பாட்டியும் தலைசிறந்த தம்பதியராக இருந்திருந்தனர். ஆனால் அவர்களுடைய உறவுகளைப் போன்ற உறவுகள் இப்போது எங்கும் கிடையாது என்று எனக்கு நானே சமாதானம் கூறிக் கொண்டேன். அதை நம்புவது என்னுடைய சொந்தத் திருமண வாழ்க்கையைப் பற்றிய உண்மையை ஒப்புக் கொள்ளுவதைவிட அதிக சுலபமானதாக இருந்தது.

நான் **இரகசியம்** திரைப்படத்தைப் பார்த்தப் பிறகு, உடனடியாக இரகசியம் புத்தகத்தை வாங்கினேன். நான் சிந்தித்த விதத்தை மாற்றுவதற்கு என்னால் இயன்ற எல்லாவற்றையும் செய்வதென்று நான் உறுதி பூண்டேன். நான் சிறு விஷயங்களிலிருந்து துவக்கினேன். எல்லாவற்றிலும் நேர்மறையான பக்கத்தைப் பார்ப்பதற்கு தினமும் எனக்கு நானே நினைவூட்டிக் கொண்டேன். நான் மீண்டும் எழுதத் தொடங்கினேன். என் திருமண வாழ்க்கை சீர்கெடத் தொடங்கியபோது நான் எழுதுவதை நிறுத்தியிருந்தேன். முதலில் எனக்காக ஒரு காதல் கதையை எழுதினேன். நான் உண்மையிலேயே விரும்பிய ஒன்றை - உண்மையான காதலை - மையமாக வைத்து என்னால் எழுத முடியுமா என்று நான் பார்க்க விரும்பினேன். அதன் மூலமாக, உண்மையான காதல் இன்றும் இருக்கிறது என்று நான் நம்ப விரும்பினேன்.

நான் என்னுடைய கணவரிடமிருந்து பிரிந்தேன். ஓர் ஆசிரியராக ஆவதற்கான பட்டப்படிப்பைப் படிக்க வேண்டும் என்ற என்னுடைய வாழ்நாள் கனவை நிறைவேற்றுவதற்காக நான் மீண்டும் கல்லூரிக்குச் சென்றேன். மிக ஆனந்தமான ஒரு வழியில் என்

https://telegram.me/aedahamlibrary

வாழ்க்கை மும்முரமடைந்தது. இதற்கிடையில், நான் எழுத விரும்பிய புத்தகத்தைப் பற்றி நான் முற்றிலுமாக மறந்துவிட்டேன்.

ஓராண்டுக்குப் பிறகு, நான் ஓர் அற்புதமான மனிதரை சந்தித்தேன். நான் அவர்மீது காதல் கொள்ளத் தொடங்கியிருந்ததை நான் உணர்ந்தேன். அவர் அமெரிக்காவில் வாழ்ந்து கொண்டிருந்தார், நான் கனடாவில் வாழ்ந்து கொண்டிருந்தேன். ஆனால் காலம் செல்லச் செல்ல, நாங்கள் இருவரும் சேர்ந்து இருப்பதென்று தீர்மானித்தோம்.

நாங்கள் ஒருசில மாதங்கள் சேர்ந்து இருந்திருந்த பிறகு, நான் எழுதத் தொடங்கியிருந்த புத்தகத்தைப் பற்றி நான் அவரிடம் கூறினேன். நான் அப்புத்தகத்தைப் பார்த்துச் சிறிது காலம் ஆகியிருந்ததால், அக்கதையின் முக்கிய அம்சங்கள் எனக்கு மறந்து போயிருந்தன. அதில் இடம்பெற்றிருந்த கதாபாத்திரங்களின் பெயர்கள்கூட எனக்கு நினைவிருக்கவில்லை. ஆனால் என் காதலர் கொடுத்த ஊக்குவிப்பின் தூண்டுதலால், நான் அப்புத்தகத்தை எடுத்து மீண்டும் படிக்கத் தொடங்கினேன். என் கதாநாயகியின் (அவள் என்னுடைய இன்னொரு வடிவம்) காதலனாக நான் சித்தரித்திருந்த நபர் என்னுடைய புதிய காதலர்தான் என்பதை நான் உணர்ந்தபோது என் இதயம் அப்படியே நின்றுவிட்டது. நான் என் காதலரை என் கதையின் வாயிலாக என் வாழ்க்கைக்குள் கவர்ந்திழுத்து வந்திருந்ததை நான் உணர்ந்தபோது என் கண்களில் நீர் பெருகியது.

ஆனால் அக்கதை அத்துடன் முடியவில்லை. நான் என் முதல் கணவரிடமிருந்து பிரிவதற்கு முன்பாக, நான் என் வாழ்க்கைக்குள் கொண்டுவர விரும்பிய இடங்களையும் அனுபவங்களையும் பற்றி ஒரு மனக்காட்சிப் பலகையை நான் உருவாக்கியிருந்தேன். அதில் இடம்பெற்றிருந்த பல விஷயங்களில், பௌதிகப் பொருள் என்று பார்த்தால், நீலக்கல் மற்றும் வைரம் பதிக்கப்பட்ட ஒரு மோதிரம்தான். அதை நான் ஒரு பத்திரிகையில்

https://telegram.me/aedahamlibrary

பார்த்திருந்தேன். தன்னைத் திருமணம் செய்து கொள்ள எனக்குச் சம்மதமா என்று என் காதலர் என்னிடம் கேட்ட இடம், அறுபத்தாறு ஆண்டுகளுக்கு முன்பு என்னுடைய தாத்தாவும் பாட்டியும் திருமணம் செய்து கொண்ட அதே இடம்தான். என் காதலர் என் விரலில் மாட்டிய நிச்சயதார்த்த மோதிரம், என்னுடைய மனக்காட்சிப் பலகையில் இடம்பெற்றிருந்த அதே மோதிரம்தான்.

நான் இப்போது கலிபோர்னியாவில் வாழ்ந்து கொண்டிருக்கிறேன். விரைவில் எங்களுடைய திருமணம் நடைபெறவிருக்கிறது. இரகசியம் தொடர்ந்து எனக்கு ஒரு வழிகாட்டி ஆற்றலாக இருந்து வருகிறது. என் வாழ்வில் நான் விரும்பும் எல்லாம் என் கைக்கெட்டும் தூரத்தில்தான் இருக்கிறது என்பதையும், ஆனால் அதை நான் நம்ப வேண்டும் என்பதையும் நான் உணருகிறேன்.

**- டேமி எச்., ஃபுல்லர்டன், கலிபோர்னியா, அமெரிக்கா**

டேமி எழுதிய காதல் கதைதான் அவருடைய விஷயத்தில் முக்கியமான அம்சமாக இருந்தது. ஏனெனில், அவர் அதை எழுதியதன் வாயிலாக, படைப்புச் செயல்முறையின் முதல் இரண்டு நடவடிக்கைகளை அவர் நிறைவேற்றினார். கேட்டல், நம்புதல் ஆகியவைதான் அவை. அவர் எந்த உண்மையான காதலைப் பற்றித் தன்னுடைய புத்தகத்தில் எழுதியிருந்தாரோ அந்தக் காதலைப் பெறுவதற்கான பொருத்தமான நேரத்திற்காக அவர் காத்திருக்க வேண்டியதுதான் மிச்சமிருந்தது.

ஒரு குறிப்பேட்டில் எழுதிக் கொள்ளுவது நீங்கள் விரும்பும் எதுவொன்றையும் பெறுவதற்குப் படைப்புச் செயல்முறையைப் பயன்படுத்துவதற்கான ஒரு சிறந்த வழி. ஒரு கச்சிதமான வாழ்க்கைத்துணைவரை நீங்கள்

https://telegram.me/aedahamlibrary

உங்கள் வாழ்விற்குள் கவர்ந்திழுக்க விரும்பினால், அவர் எப்படிப்பட்டவராக இருப்பார், உங்கள் இருவருக்கும் இடையேயான உறவு எப்படி இருக்கும் என்று நீங்கள் எழுத்துபூர்வமாக விவரிக்கலாம். அவருடைய விருப்பங்கள், அவருக்குப் பிடிக்காத விஷயங்கள், அவருடைய ரசனைகள், பொழுதுபோக்குகள், குடும்பப் பின்புலம் ஆகியவற்றைப் பற்றியும், உங்களுக்கு முக்கியமானவையாக இருக்கின்ற விஷயங்களைப் பற்றியும் நீங்கள் எழுதலாம். உங்களுடைய கச்சிதமான துணைவரை விவரிக்கின்ற நூறு விஷயங்களையாவது நீங்கள் பட்டியலிட வேண்டும். பிறகு, நீங்கள் ஆசுவாசமாக இருங்கள். பிரபஞ்சம் எப்படி உங்கள் விருப்பத்தை நிறைவேற்றுகிறது என்பதைப் பொறுத்திருந்து பாருங்கள்.

## எங்கிருந்தோ வந்து குதித்தக் காதல்!

**இரகசியம்** திரைப்படத்தை இரண்டு முறை பார்த்துவிட்டு, இரகசியம் புத்தகத்தையும் படித்தப் பிறகு, அதன் கொள்கைகளை நான் என்னுடைய அன்றாட வாழ்வில் செயல்படுத்தத் தொடங்கினேன். எனக்கு என்னவெல்லாம் வேண்டும் என்பதை நான் எழுதிக் கொண்டேன். அதேபோல, நான் எவற்றையெல்லாம் குறித்து நன்றியை உணர்ந்தேனோ அவற்றைப் பட்டியலிட்டேன். நான் அனைத்துச் சரியான விஷயங்களையும் செய்து கொண்டிருந்தேன். ஆனால் ஒரே ஒரு விஷயத்தை நான் சரியாகச் செய்யவில்லை. அது என்ன என்பதைப் பிரபஞ்சம் எனக்கு வெளிப்படுத்தியது.

நான் அப்போது ஏதென்ஸ் நகரில் வாழ்ந்து கொண்டிருந்தேன். எனக்கு மிகப் பொருத்தமான ஓர் ஆண்மகனை அங்கு நான் சந்தித்தேன். அவர்தான்

https://telegram.me/aedahamlibrary

எனக்குரியவர் என்று நான் நினைத்தேன். நாங்கள் நான்கு மாதங்களாகச் சேர்ந்து வாழ்ந்து வந்திருந்த நிலையில், மெல்ல மெல்ல அவர் என்னிடமிருந்து விலகிப் போகத் தொடங்கினார். நான் அதைப் பற்றி அவரிடம் கேட்க விரும்பவில்லை. ஏனெனில், நான் அவருக்கு அழுத்தம் கொடுக்க விரும்பவில்லை. பின்னர், ஒரு வாரம்வரை அவரிடமிருந்து எனக்கு எந்தத் தகவலும் வராவிட்டால், அப்போது நான் அவரிடம் அதற்கான காரணத்தைக் கேட்பேன். அதற்கு அவர், "நீ கவலைப்படாதே. ஒரு பிரச்சனையும் இல்லை," என்று பதிலளிப்பார். என் மனத்தில் மோசமான எண்ணங்கள் ஆயிரக்கணக்கில் ஓடிக் கொண்டிருக்கும், ஆனால் அவரிடமிருந்து எனக்கு எந்த பதிலும் கிடைக்கவில்லை. பிறகு ஒருநாள் அவர் ஒரேயடியாக என் வாழ்விலிருந்து மறைந்துவிட்டார். என்னுடைய தொலைபேசி அழைப்புகளுக்கும் குறுஞ்செய்திகளுக்கும் அவர் பதிலளிக்கவில்லை. அவருடைய காரை அவ்வப்போது நான் பார்ப்பேன். எனவே, அவர் நலமாக இருந்தார் என்பதை நான் அறிந்தேன். மற்றவர்கள் அவரை அங்குமிங்கும் பார்த்திருந்தனர் (மூன்றாம் நபர் யாரும் இதில் ஈடுபட்டிருக்கவில்லை). நான் அவர்மீது கடுங்கோபம் கொண்டேன். நான் மீண்டும் அமெரிக்காவுக்குத் திரும்பிச் சென்றுவிடத் தயாராக இருந்தேன்.

என்னுடைய பிரச்சனை என்ன என்பதைப் புரிந்து கொள்ளும் நோக்கத்துடன் **இரகசியம்** புத்தகத்தை நான் தொடர்ந்து படித்தேன். இறுதியில் அதை நான் புரிந்து கொண்டேன். அப்புத்தகத்தில் கூறப்பட்டிருந்த எல்லாவற்றையும் நான் **செய்து கொண்டிருந்தேன்** . அதுதான் என்னுடைய **தவறு** . நான் **செய்து** கொண்டிருந்தேனே தவிர, அவற்றை நான் **உணர்வுபூர்வமாக** உணரவில்லை. நான் எல்லாவற்றையும் ஒரு பட்டியலிட்டு அவை ஒவ்வொன்றையும் கச்சிதமாகச் செய்து கொண்டிருந்தேன். அங்குதான் தவறு நிகழ்ந்திருந்தது. ஒன்றை உணர்வுபூர்வமாக **உணர** வேண்டும் என்று

https://telegram.me/aedahamlibrary

இரகசியம் கூறுகிறது. அந்த உண்மை எனக்குப் புலப்பட்டபோது, நான் என் தரத்தை உயர்த்தினேன். எந்தவோர் ஆண்மகனும் என் வாழ்வில் இடம்பெற விரும்பினால், நான் வகுத்திருந்த தரத்தை அவர் **மிஞ்ச** வேண்டும் என்று நான் தீர்மானித்தேன். அந்தத் தரத்திற்குக் குறைவாக இருந்த எவரையும் நான் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை என்று நான் திட்டவட்டமாக முடிவு செய்தேன்.

உள்ளூர் நடனப் பள்ளி ஒன்றில் இளைஞர்கள் மற்றும் யுவதிகளுக்கு நான் நடனம் கற்றுக் கொடுத்துக் கொண்டிருந்தேன். இடைவேளைகளின்போது நானும் என்னுடைய சக ஆசிரியர்களும் படிக்கட்டுகளில் உட்கார்ந்து அரட்டையடிப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தோம். சில சமயங்களில் எங்கள் மாணவர்களும் எங்களோடு சேர்ந்து கொண்டனர். அது எனக்கு எரிச்சலூட்டியது. ஏனெனில், அவர்கள் எங்களுடைய உரையாடல்களில் குறுக்கிட்டுக் கொண்டிருந்தனர். எனவே, ஓர் இளைஞர் எங்களிடம் வந்து, “நான் பழச்சாறு பருகப் போகிறேன். உங்களில் யாருக்காவது பழச்சாறு வேண்டுமா?” என்று கேட்டார். “வேண்டாம், நீங்கள் இங்கிருந்து போனால் போதும்,” என்று அவரிடம் கூற வேண்டும்போல எனக்குத் தோன்றியது, ஆனால் நான் எதுவும் கூறவில்லை.

அவர் திரும்பி வந்தபோது, எனக்குப் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டு, தான் மேற்கொண்டிருந்த பல்வேறு பயணங்களைப் பற்றிப் பேசத் தொடங்கினார். நான் அந்த உரையாடலில் என் வாயைத் திறக்கவில்லை, ஆனால் அவர் கூறிக் கொண்டிருந்தது சுவாரசியமாக இருந்தது.

இரண்டு நாட்களுக்குப் பிறகு வெள்ளிக்கிழமையன்று, ஏதென்ஸ் நகரின் மறுபக்கத்தில் இருந்த ஒரு டிஸ்கோ நடன விடுதிக்கு நான் சென்றேன். தற்செயலாக அவரும் அங்கு வந்தார் (கடவுள் அதைத் திட்டமிட்டிருந்தார்). நாங்கள் இருவரும் சேர்ந்து நடனமாடினோம், எக்கச்சக்கமாகப் பேசினோம். அவர் என்னை வெளியே அழைத்துச் செல்ல விரும்பினார். நான் அதற்கு

https://telegram.me/aedahamlibrary

சம்மதித்தேன். சனிக்கிழமையன்று நாங்கள் முதன்முதலாகக் காதலர்களாக வெளியே உணவருந்தச் சென்றோம். ஞாயிற்றுக்கிழமையன்று நாங்கள் ஒரு மூன்று-நாள் பயணம் மேற்கொண்டோம். கடந்த ஆறு ஆண்டுகளாக நாங்கள் இருவரும் சேர்ந்து வாழ்ந்து வந்திருக்கிறோம். எங்களுக்குத் திருமணமாகி மூன்று ஆண்டுகள் ஆகின்றன. எங்களுக்கு ஓர் இரண்டு வயது மகள் இருக்கிறாள். அதுதான் இரகசியம்.

**- எவாஞ்சலியா கே., ஏதென்ஸ், கிரீஸ்**

எவாஞ்சலியா கண்டறிந்ததைப்போல, நீங்கள் எதை விரும்புகிறீர்களோ அதற்கான படைப்புச் செயல்முறையை நீங்கள் வெற்றிகரமாக நிறைவு செய்திருக்கும்போது, நீங்கள் கேட்டுள்ளதைப் பிரபஞ்சம் உங்களுக்கு வழங்குவதற்கான வழியில் நீங்கள் குறுக்கே நிற்கக்கூடாது.

**உங்கள் வாழ்க்கையை ஒரு சொர்க்கமாக உங்களால் மாற்ற முடியும். ஆனால், உங்கள் அகத்தை ஒரு சொர்க்கமாக மாற்றுவது மட்டும்தான் அதற்கான ஒரே வழி. இதற்கு வேறு எந்த வழியும் இல்லை. நீங்கள்தான் காரணம், உங்கள் வாழ்க்கைதான் அதன் விளைவு.**

**- இரகசியம் தினசரி போதனைகள்**

எதிர்மறையான உறவு ஒன்று எவ்வளவு காலம் நீடித்திருந்தாலும், அந்த உறவு நேர்மறையானதாக மாறும் என்று உங்களால் கற்பனை செய்ய முடியாவிட்டாலும், அந்த உறவு நேர்மறையான ஒன்றாக மாறுவது சாத்தியம்தான்! உங்கள் வாழ்வில் உள்ள எந்தவோர் எதிர்மறை உறவையும் உங்களால் மாற்ற முடியும். குறிப்பிட்ட அந்த நபரை நீங்கள் பார்க்கும் விதத்தை மாற்றுவதுதான் அதற்கான வழி. அவரிடம் உள்ள நேர்மறையான

https://telegram.me/aedahamlibrary

விஷயங்களைப் பாருங்கள், அவற்றை மெச்சுங்கள். அப்போது அந்த உறவு மாறும். உங்கள் ஒருவரால் மட்டுமே அதைச் சாதிக்க முடியும்.

## என் தந்தையுடனான சமரசம்

என் பெற்றோர் விவாகரத்து செய்து கொண்டபோது, என் தந்தையுடனான என்னுடைய உறவு பெருமளவில் மாறியது. முன்பு நான் அவருடன் இருந்தபோது நெருக்கமாகவும் பாதுகாப்பாகவும் உணர்ந்தேன். ஆனால் இப்போது எனக்கு அவர்மீது கோபமும் வெறுப்பும் மட்டுமே இருந்தன. என் தந்தையுடன் சமரசம் செய்து கொள்ளுவதற்கான சாத்தியமே இல்லை என்று இருபத்தைந்து ஆண்டுகளாக நான் நம்பி வந்திருந்தேன். ஒருநாள், **இரகசியம்** திரைப்படத்தின் டிவிடியை என் தாயார் என்னிடம் கொடுத்தார். அதைப் பார்த்தப் பிறகு என் வாழ்க்கை முற்றிலுமாக மாறியது.

முதல் மூன்று முறை நான் அந்தப் படத்தைப் பார்த்தபோது நான் அழுதேன். என் வாழ்வின் அனைத்துப் பகுதிகளும் மேம்பட வாய்ப்பு இருந்தது என்ற நம்பிக்கையை முதன்முறையாக நான் உணர்ந்தேன். நான் என் தந்தையுடன் ஒரு நேர்மறையான உறவைக் கொண்டிருந்ததுபோல என் மனத்தில் காட்சிப்படுத்தத் தொடங்கினேன். பிறகு, திடீரென்று ஒருநாள், தன் வீட்டிற்கு வரும்படி என் தந்தை எனக்கு அழைப்பு விடுத்தார். எங்களுக்கு இடையே இருந்த தந்தை-மகள் உறவை நாங்கள் மீண்டும் கண்டுபிடித்தோம். நாங்கள் இருவரும் சேர்ந்து செலவிட்ட நேரம் மிக அற்புதமானதாக இருந்தது. இப்போது நானும் என் தந்தையும் மீண்டும் நெருக்கமடைந்துள்ளோம். நாங்கள் மகிழ்ச்சியாக இருக்கிறோம்.

இரகசியம் எவ்வளவு அற்புதமானது என்பதை விவரிக்க என்னிடம் வார்த்தைகள் இல்லை. மேம்பட வாய்ப்பே இல்லை என்பதுபோலத் தோன்றிய ஒரு சூழ்நிலையை அது ஓர் அளப்பரிய ஆசீர்வாதமாக மாற்றியது. இரகசியம்

https://telegram.me/aedahamlibrary

நமக்குக் கொடுக்கின்ற நம்பிக்கையை இவ்வுலகம் நெடுகிலும் இருக்கின்ற அனைவரும் கண்டறிவார்கள் என்று நான் நம்புகிறேன்.

**- ஏமி, மேக்னோலியா, ஆர்கென்சா, அமெரிக்கா**

அடுத்தக் கதையில், தன் தாயைவிட்டுப் பிரிந்து வாழ்ந்து வந்திருந்த கிளென்டா, தங்கள் இருவருக்கும் இடையே முளைத்திருந்த வேறுபாடுகள்மீது கவனம் செலுத்துவதை விட்டுவிட்டு, தன் தாயிடம் தான் விரும்பிய மற்றும் மெச்சிய விஷயங்கள்மீது தன் கவனத்தைக் குவிக்கத் தொடங்கியபோது, அவர்களுக்கு இடையேயான உறவு சீர்பட்டது. அந்த உறவு மீண்டும் தழைத்தது குறித்த ஆனந்தத்தை கிளென்டா அனுபவித்தார்.

## என் அருமைத் தாயாருக்கு

என் வாழ்நாள் நெடுகிலும், அதாவது, சுமார் நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக, என் தாயாருக்கும் எனக்கும் இடையே எந்த நெருக்கமும் இருக்கவில்லை. என்னுடைய பதின்பருவத்தின்போது, எங்கள் இருவருக்கும் இடையே தீவிர வாக்குவாதங்கள் நிகழ்ந்தன. பிறகு, நான் வளர வளர, அவருக்கும் எனக்கும் இடையே எந்தப் பிணைப்பும் இல்லை என்ற உணர்வு எனக்கு ஏற்பட்டது. என் வாழ்வில் பல்வேறு தருணங்களில், அவரோடு பேசுவதைக்கூட நான் நிறுத்திவிட்டேன்.

என் தாயாருக்கு வயதானபோது, அவர் தன்னுடைய கண்பார்வையை இழக்கத் தொடங்கினார். எனவே, சீர்கெட்டிருந்த எங்களுடைய உறவை நான் சரி செய்தாக வேண்டும் என்ற உணர்வு என்னுள் தீவிரமடைந்தது.

**இரகசியம்** புத்தகத்தைப் படித்தப் பிறகு, நான் என் வாழ்வில் எந்த விஷயங்கள் குறித்து நன்றியை

https://telegram.me/aedahamlibrary

உணர்ந்தேனோ, அவற்றை நான் பட்டியலிடத் தொடங்கினேன். நான் ஒரு சிறுமியாக இருந்தபோது என் தாயார் எனக்குத் தைத்துக் கொடுத்த அழகான ஆடைகள், எங்களுக்காக அவரே வளர்த்த அற்புதமான காய்கறிகள், எங்களுடைய பெரிய தோட்டத்தை எப்போதும் அவர் பராமரித்துப் பாதுகாத்த விதம் போன்றவற்றை நான் எழுதினேன். இன்னும் ஏராளமான விஷயங்களையும் நான் எழுதிக் கொண்டேன். இவ்விஷயங்களை நான் உணர்ந்து கொண்டபோது, இத்தனை ஆண்டுகாலமாக அவர் கடினமாக உழைத்து வந்திருந்தது குறித்தும், எங்கள் அனைவரையும் அக்கறையோடு பார்த்து வந்திருந்தது குறித்தும் அளப்பரிய நன்றியுணர்வு என்னுள் பெருக்கெடுத்தது.

அதன் பிறகு, நான் என்னுடைய நோட்டுப் புத்தகத்தில், "என் தாயாருடன் ஒரு மகிழ்ச்சியான, அமைதியான, பரஸ்பர நம்பிக்கையுடன்கூடிய உறவு எனக்கு வேண்டும்," என்று எழுதினேன். நான் அதை எழுதி முடித்தபோது, என் மனத்தில் என் தாயார் குறித்து ஓர் ஆழ்ந்த அமைதி உருவானது. சுமார் ஓராண்டு காலமாக நான் அவரிடம் பேசியிருக்கவில்லை. எனவே, அவரை நேரில் சந்திக்க வேண்டும் என்று நான் தீர்மானித்தேன்.

நான் அவரைப் பார்த்தபோது, எங்களுக்கிடையே எல்லாம் மாறியிருந்தது. அங்கு எந்த இறுக்கமோ அல்லது தயக்கமோ இருக்கவில்லை. என் வாழ்வில் நான் அனுபவித்திருந்த கஷ்டங்கள் சிலவற்றைப் பற்றி நான் அவரிடம் கூறினேன். என்னை ஒருபோதும் கட்டியணைத்திராத அவர், இப்போது என்னைக் கட்டிப் பிடித்துக் கொண்டு அன்பையும் ஆதரவையும் என்மீது பொழிந்தார். இந்த மாதிரியான தாயன்பை நான் என் வாழ்வில் ஒருபோதும் அனுபவித்ததில்லை. அது என் வாழ்வில் உண்மையிலேயே ஒரு தனிச்சிறப்புக் கொண்ட கணமாக அமைந்தது!

இப்போது நான் ஒவ்வொரு வாரமும் என் தாயாரைத் தொலைபேசியில் அழைத்து அவரோடு பேசுகிறேன். எங்கள் இருவருக்கும் இடையே இப்போது அன்பு

https://telegram.me/aedahamlibrary

மட்டுமே இருக்கிறது. அந்த அன்பை வார்த்தைகளால் விவரிக்க முடியாது.

**- கிளென்டா, நியூ சிலாந்து**

எதிர்மறை விஷயங்களைவிட நீங்கள் நேசிக்கின்ற மற்றும் மெச்சுகின்ற விஷயங்களைப் பார்ப்பதற்கு நீங்கள் வலிய முயற்சிக்கும்போது, ஓர் அதிசயம் நிகழும். அந்த நேர்மறையான அன்பான மனநிலையிலிருந்து பார்க்கும்போது, இந்த ஒட்டுமொத்தப் பிரபஞ்சமும் உங்களுக்கு எல்லா நன்மைகளையும் செய்வதுபோலவும், மகிழ்ச்சியளிக்கும் அனைத்தையும் உங்களை நோக்கி அனுப்புவதைப்போலவும், நல்ல மனிதர்களை உங்களிடம் கொண்டு சேர்ப்பதுபோலவும் தோன்றும். அதுதான் உண்மையும்கூட.

## எதிர்மறை நம்பிக்கைகளை விட்டொழித்துவிட்டு வாழுங்கள்

சில சமயங்களில் எதிர்மறை நம்பிக்கைகளை விட்டொழிப்பது கடினமான காரியமாக இருக்கிறது. குறிப்பாக, அது உங்கள் வாழ்வில் உள்ள ஓர் உறவைப் பற்றியதாக இருந்தால் அது மிகவும் கடினமான காரியம்தான். சப்ரீனாவின் விஷயத்தில் அதுதான் நடந்திருந்தது.

### மன்னித்தலின் மூலம் குணமாதல்

நான் சிறு வயது முதலாகவே துன்புறுத்தல்களுக்கு ஆளாகி வந்திருந்தேன். என் தாயார்தான் என்னையும் என்னுடைய தம்பியையும் தங்கையையும் துன்புறுத்தினார். நான் மூத்தவள் என்பதால், யார் என்ன தவறு செய்தாலும் அவர் என்னைத்தான் தண்டித்தார்.

https://telegram.me/aedahamlibrary

என்னுடைய வாழ்வில் முதல் பதினைந்து ஆண்டுகளுக்கு உடல்ரீதியான துன்பங்களையும் மனரீதியான துன்பங்களையும் நான் அனுபவித்தேன்.

எனக்குப் பதின்மூன்று வயதாக இருந்தபோது, ஒரு முறை என் தாயார் என்னைக் கீழே தள்ளி என் முதுகின்மீது தன் கால்மூட்டை வைத்து என்னை அழுத்திப் பிடித்தபடி என்னை அடித்து நொறுக்கினார். அதன் விளைவாக, பல ஆண்டுகளாக நான் முதுகுவலியால் அவதிப்பட்டு வந்துள்ளேன்.

அந்த சம்பவம் நடந்து இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு, நான் என் தந்தையுடனும் அவருடைய புதிய காதலியுடனும் சேர்ந்து வாழத் தொடங்கினேன். ஒருநாள், என் தங்கையும் நானும் வெளியே குதிரைகளோடு விளையாடிக் கொண்டிருந்தோம். திடீரென்று ஒரு குதிரை என்னையும் என் தங்கையையும் தன் காலால் எட்டி உதைத்ததில் நாங்கள் அந்தரத்தில் தூக்கி வீசப்பட்டோம். ஒரு வாரத்திற்குப் பிறகு, நான் உட்கார்ந்திருந்த நாற்காலியை என் தம்பி பின்னால் இழுத்ததில் நான் மீண்டும் கீழே விழுந்தேன். இப்போதும் என் முதுகுதான் பலமாக அடி வாங்கியது. இதனால் என்னுடைய குத எலும்பு தன் இடத்தைவிட்டு ஒன்றரை சென்டிமீட்டர் நகர்ந்துவிட்டது.

சில ஆண்டுகளாக நான் தொடர்ந்து ஒரு மருத்துவரிடம் போய்வந்து கொண்டிருந்தேன். ஏனெனில், என் முதுகு இன்னும் ஏன் வலித்தது என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. இறுதியில், கடந்தகாலப் பிரச்சனைகள் ஏதேனும் அதற்குக் காரணமாக இருக்கலாம் என்று கூறிய அவர், என்னுடைய பெரிய மார்பகங்களின் எடையும் என் வலி அதிகரித்திருந்ததற்குக் காரணமாக இருக்கக்கூடும் என்று தெரிவித்தார். ஆனால் மார்பகங்களின் அளவைக் குறைப்பதற்கான அறுவைச் சிகிச்சைக்கு உட்பட நான் மறுத்துவிட்டதால், தொடர்ந்து முதுகுவலியுடன் வாழுவது என் தலைவிதிபோலும் என்று நினைத்து அதை நான் ஏற்றுக் கொண்டேன்.

https://telegram.me/aedahamlibrary

**இரகசியம்** புத்தகத்தைப் படித்தப் பிறகு, என்னுடைய தாயாரை மன்னித்துவிட்டு என் வாழ்க்கையின்மீது கவனம் செலுத்துவதென்று நான் தீர்மானித்தேன்.

ஒருநாள் நான் என் சோபாவில் உட்கார்ந்து தியானம் செய்து கொண்டிருந்தபோது, என் தாயார் என் முன்னால் நின்று கொண்டிருந்ததுபோல நான் என் மனக்கண்ணில் பார்த்தேன். நான் அவரிடம் சென்று அவரைக் கட்டியணைத்தேன். அவரை என் கைகளால் தாங்கியபடி நின்ற நான், "அம்மா, நான் உங்களை நேசிக்கிறேன். நான் உங்களை மன்னிக்க விரும்புகிறேன். கடந்தகாலம் கடந்தகாலமாகவே இருந்துவிட்டுப் போகட்டும். அப்போது உங்களுக்கு இருந்த அறிவையும் அனுபவத்தையும் கொண்டு உங்களால் இயன்ற அளவுக்குச் சிறப்பாக நீங்கள் எங்களை வளர்த்தீர்கள் என்பது இப்போது எனக்குப் புரிகிறது. நான் உங்களை நேசிக்கிறேன். நான் உங்களை மன்னித்துவிட்டேன்," என்று கூறினேன். பிறகு நான் அழத் தொடங்கினேன். என் கண்ணீர் என் கன்னங்கள்மீது வழிந்தோடின. நான் நீண்டநேரம் தியானத்தில் இருந்தேன், என் தாயாரை மனபூர்வமான மன்னித்தேன். அது மிகவும் அச்சுறுத்தும் ஒரு கணமாகவும், அதே சமயத்தில், எனக்கு நிகழ்ந்திருந்த மிக அழகான விஷயங்களில் ஒன்றாகவும் இருந்தது.

அந்த அனுபவத்திற்குப் பிறகு, நான் என்னுடைய தாயாரை மன்னித்துவிட்டதாகவும், கடந்தகாலம் கடந்தகாலமாகவே இருந்துவிட்டுப் போகட்டும் என்றும் என் தந்தையிடமும் என் சிற்றன்னையிடமும் நான் கூறினேன். அன்றிரவு என் முதுகுவலி மறைந்துவிட்டது. அதன் பிறகு அது மீண்டும் ஒருபோதும் வரவே இல்லை.

**- சப்ரீனா, டென்மார்க்**

சப்ரீனா மனக்காட்சிப்படைப்பையும் தியானத்தையும் பயன்படுத்தியது அவர் தன்னுடைய தாயாரைப் பற்றி நேர்மறையாகச்

https://telegram.me/aedahamlibrary

சிந்திக்கத் தொடங்குவதை அவருக்குச் சாத்தியமாக்கியது. அது அவருடைய கடந்தகால உறவிலிருந்து முளைத்திருந்த உணர்ச்சிரீதியான வலியைப் போக்கியதோடு, அவருடைய உடலில் இருந்த வலியையும் முற்றிலுமாக குணப்படுத்தியது. ஒரு சூழ்நிலையைப் பற்றி நீங்கள் சிந்திக்கும் விதத்தை நீங்கள் மாற்றும்போது, அச்சூழ்நிலையுடன் தொடர்பு கொண்ட எல்லாமே மாறிவிடும்.

## நீங்கள் எவ்வளவு அதிகமாகக் கொடுக்கிறீர்களோ, அவ்வளவு அதிகமாகப் பெறுகிறீர்கள்

**கொடுத்தல் பெறுதலுக்கான கதவைத் திறக்கிறது.**

**அன்பான வார்த்தைகளைக் கொடுங்கள். ஒரு புன்னகையைக் கொடுங்கள். பாராட்டுக்களையும் அன்பையும் கொடுங்கள்.**

**கொடுப்பதற்கும், பெறுவதற்கான கதவை அதன் மூலம் திறப்பதற்கும் உங்களுக்கு ஏராளமான வாய்ப்புகள் உள்ளன.**

**- இரகசியம் தினசரி போதனைகள்**

### பரிசு

வியாபாரம் தொடர்பாக வெளியூர்ப் பயணம் ஒன்றை மேற்கொண்டுவிட்டு இரவில் வீடு திரும்பிக் கொண்டிருந்த நான், விமான நிலையத்தில் வைத்து **இரகசியம்** புத்தகத்தைப் படிக்கத் தொடங்கினேன். நான் விமானத்தில் பயணித்துக் கொண்டிருந்தபோது, தங்களுக்குப் பிடித்தமான காரை ஓட்டிச் செல்லுவதைப்போலக் கற்பனை செய்யும்படி வாசகர்களிடம் வலியுறுத்துகின்ற பகுதியை நான் எட்டியிருந்தேன். ஜாகுவார் காருடைய சின்னம்

https://telegram.me/aedahamlibrary

பொறிக்கப்பட்ட ஸ்டியரிங் வீலைப் பிடித்து நான் காரோட்டிக் கொண்டிருந்ததுபோலக் கற்பனை செய்ய நான் முயற்சித்தேன், ஆனால் ஒரு போர்ஷ் காரின் சின்னம் என் மனத்தில் மீண்டும் மீண்டும் தோன்றிக் கொண்டே இருந்தது. இறுதியாக, அது என் கணவருக்குப் பிடித்தமான கார் என்பதும், அதை வாங்க வேண்டும் என்று நீண்ட நாட்களாக அவர் கனவு கண்டு வந்திருந்ததும் என் நினைவுக்கு வந்தது. அந்தக் காரைத்தான் நான் தொடர்ந்து மனக்காட்சிப்படுத்திக் கொண்டிருந்தேன்.

நான் அதை என் மனத்தில் தெளிவாக உருவாக்கினேன். அதன் வெளிப்புற மற்றும் உட்புற நிறங்கள், கச்சிதமான உட்புற அலங்காரம் மற்றும் புறத்தோற்றம், அதன் கச்சிதமான இயக்கம் ஆகியவற்றை நான் கற்பனை செய்தேன். 1997ம் ஆண்டு வெளிவந்த மாடல்தான் எங்களுக்குக் கட்டுப்படியாகும் என்பதை நான் அறிந்திருந்தேன். நாங்கள் அதை வாங்கவிருந்த சமயத்தில் அது பத்து வருடம் பழையதாக இருந்திருக்கும். பெரும்பாலான கார்கள், பல வருடங்களுக்குப் பிறகு தம்முடைய வயதை வெளிக்காட்டிவிடும் என்பதையும் நான் அறிந்திருந்தேன். ஆனாலும், இந்தப் பத்தாண்டுகாலப் பழைய காரை ஒரு புதிய மாடல் காராகக் கருதி நான் தொடர்ந்து கற்பனை செய்தேன். அது எவ்வளவு மைல்கள் ஓடியிருக்கும் என்றுகூட நான் கற்பனை செய்தேன்.

நான் இவற்றையெல்லாம் மனக்காட்சிப்படுத்திக் கொண்டிருந்தபோது, நான் அந்தக் காரைவிட அதிகமாக விரும்பிய இன்னொரு விஷயம் என் நினைவுக்கு வந்தது. என் மருமகன் பிரான்டனுடனான என்னுடைய உறவை நான் புதுப்பித்துக் கொள்ள விரும்பினேன். என் மகள் மிகவும் விருப்பப்பட்டு செய்து கொண்ட திருமணம் அவளுக்கு மோசமானதாக மாறியதால் எனக்கும் என் மருமகனுக்கும் இடையே ஓர் இறுக்கம் உருவாகியிருந்தது, நாங்கள் இருவரும் சந்தித்துக்

https://telegram.me/aedahamlibrary

கொள்ளவே இல்லை. அதன் விளைவாக, நானும் அவரும் பேசி ஐந்து மாதங்களுக்கு மேல் ஆகியிருந்தன.

நான் அவரைத் தனியாக சந்திப்பதற்கான ஒரு வாய்ப்பு வேண்டும் என்று எனக்கு நானே கூறிக் கொண்டேன். அவருடைய திருமண வாழ்க்கையைப் பற்றிப் பேசுவதற்கு பதிலாக அவர் கூறுவதைக் காதுகொடுத்துக் கேட்க நான் விரும்பினேன். நான் அவர்மீது மிகுந்த அக்கறை கொண்டிருந்தேன் என்றும், வெற்றி பெறுவதற்கான திறன் அவருக்கு இருந்ததாக நான் நம்பினேன் என்றும் நான் அவரிடம் தெரிவிக்க விரும்பினேன்.

என் விமானம் தரையிறங்கியபோது, **இரகசியம்** புத்தகத்தில் நான் படித்திருந்தவற்றை என் கணவரிடம் பகிர்ந்து கொள்ள நான் உற்சாகமாக இருந்தேன்.

மறுநாள் காலையில், நான் என் மகளையும் என் உறவினர் ஒருவரையும் அழைத்துக் கொண்டு வெளியே உணவருந்தச் சென்றேன். உணவகத்தில் வைத்து என் மகளின் அலைபேசி ஒலித்தது. அதை எடுத்துச் சிறிது நேரம் பேசிய அவள், பின்னர் தன்னுடைய அலைபேசியை என்னிடம் கொடுத்துவிட்டு, “அம்மா, பிரான்டன் உங்களுடன் பேச விரும்புகிறார்,” என்று ஆச்சரியத்துடன் கூறினாள்.

ஒரு மாதத்திற்கு முன்புதான், உள்ளூரில் இருந்த, பழைய கார்களை விற்பனை செய்த விற்பனை நிலையம் ஒன்றில் அவர் ஒரு விற்பனையாளராக வேலைக்குச் சேர்ந்திருந்தார். தான் ஒரு ‘போர்ஷ் பாக்ஸ்டர்’ காரை வாங்க விரும்பியதாக என் கணவர் தன்னிடம் ஒரு முறை குறிப்பிட்டிருந்ததாகக் கூறிய பிரான்டன், அந்த விநோதமான கார் அன்று காலையில்தான் வந்திருந்ததாகக் கூறி, அந்தக் காரை விவரிக்கத் தொடங்கினார். “அந்தக் கார் இதற்கு முன்பு ஒரே ஒருவரிடம் மட்டுமே இருந்திருந்தது. அவர் அதை நன்றாகப் பராமரித்திருந்தார். கடந்த பத்து ஆண்டுகளாக அவர் அதை தினமும் சில நூறு அடிகள் மட்டுமே ஓட்டியிருந்தார்,” என்று பிரான்டன் கூறினார். முந்தைய

https://telegram.me/aedahamlibrary

இரவின்போது நான் அதை எப்படி என் மனத்தில் உருவாக்கியிருந்தேனோ, அதைப்போலவே பிரான்டன் அந்தக் காரை விவரித்தார். நான் வரும்வரை யாரும் அந்தக் காருக்கு அருகேகூடப் போகாமல் பார்த்துக் கொள்ளும்படி நான் அவரிடம் கூறினேன்.

நான் அந்தக் கடைக்குச் சென்றபோது, நான் அந்தக் காரை என் மனத்தில் எப்படிக் கற்பனை செய்திருந்தேனோ, அது துல்லியமாக அதைப்போலவே இருந்தது. அது 5,000 மைல்களுக்கும் குறைவாக ஓடியிருந்தது. அதை நான் என் கணவரிடம் காட்ட வேண்டும் என்றும், அது அவருக்கு நிச்சயமாக மகிழ்ச்சியளிக்கும் என்றும் நான் பிரான்டனிடம் கூறினேன். அது ஒரு பிரச்சனையல்ல என்று கூறிய பிரான்டன், என்னுடைய ஓட்டுனர் உரிமத்தைக் கேட்டு வாங்கிக் கொண்டு, காரின் சாவியை எடுத்துவரச் சென்றார்.

அவர் திரும்பி வந்தபோது, தன்னுடைய மேலாளர் ஒரே ஒரு நிபந்தனை விதித்திருந்ததாகக் கூறினார். ஒன்றேகால் மணிநேரப் பயண தூரத்தில் இருந்த என்னுடைய கணவரின் உணவகத்திற்கு நான் அந்தக் காரை ஓட்டிச் சென்று அவரிடம் காட்டிவிட்டு மீண்டும் அதைக் கடைக்கு ஓட்டி வரும்போது பிரான்டனும் என்னுடன் பயணிக்க வேண்டும் என்பது அந்த மேலதிகாரியின் நிபந்தனையாக இருந்தது.

இதைக் கேட்டு நான் உண்மையிலேயே வியந்து போனேன். என்னுடைய இரண்டு கோரிக்கைகளும் இருபத்து நான்கு மணிநேரத்திற்கு உள்ளாகவே நிறைவேற்றப்பட்டிருந்தன. முதலாவதாக, என் கணவர் தன் மனத்திற்குப் பிடித்தமான காரைப் பெற்றுக் கொண்டிருந்தார். இரண்டாவதாக, அவருடைய உணவகத்திற்கு நானும் பிரான்டனும் சேர்ந்து பயணம் செய்தபோது, நாங்கள் இருவரும் எங்களுடைய உறவைச் சீர்படுத்திக் கொண்டிருந்தோம். அது எங்களுக்கு மிகவும் முக்கியம் என்பதை நாங்கள் இருவருமே உணர்ந்தோம்.

https://telegram.me/aedahamlibrary

விமானத்தில் நான் இரகசியத்தைப் படித்ததிலிருந்து, எங்களுடைய நெருங்கிய நண்பர்கள் பலருக்கு நான் அப்புத்தகத்தை வாங்கிக் கொடுத்துள்ளேன். நாங்கள் தினமும் எங்களுடைய நன்றிக் குறிப்பேட்டில் எழுதுகிறோம். பிரான்டனின் காரில் இரகசியத்தின் ஆடியோ வடிவம் ஓடிக் கொண்டிருக்கிறது.

**- டுரெல் பி., டல்லாஸ், டெக்சாஸ், அமெரிக்கா**

**ஆனந்தம் அதிக ஆனந்தத்தைக் கவர்ந்திழுக்கிறது. மகிழ்ச்சி அதிக மகிழ்ச்சியைக் கவர்ந்திழுக்கிறது. அமைதி அதிக அமைதியைக் கவர்ந்திழுக்கிறது. நன்றியுணர்வு அதிக நன்றியுணர்வைக் கவர்ந்திழுக்கிறது. பரிவு அதிகப் பரிவைக் கவர்ந்திழுக்கிறது. அன்பு அதிக அன்பைக் கவர்ந்திழுக்கிறது.**

**- இரகசியம் தினசரி போதனைகள்**

https://telegram.me/aedahamlibrary

## உறவுகளுக்கான திறவுகோல்கள்

- ஒரு நபரை நீங்கள் பார்க்கும் விதத்தை மாற்றுவதன் மூலம் அவருடனான எதிர்மறையான உறவை உங்களால் மாற்றிவிட முடியும்.
- அடுத்தவரிடம் நீங்கள் நேசிக்கக்கூடிய மற்றும் மெச்சக்கூடிய அம்சங்களைப் பாருங்கள். அப்போது அவருடனான உங்கள் உறவு மாறும்.
- வாழ்வில் பிற எல்லாவற்றின் விஷயத்திலும் நிகழுவதைப்போலவே, உறவுகள் என்று வரும்போது, நீங்கள் விரும்பும் வகையான உறவு ஏற்கனவே உங்கள் வசமாகிவிட்டதாக நீங்கள் நம்ப வேண்டும். அப்போது அது மெய்ப்படும்.
- ஓர் உறவை உருவாக்கவோ அல்லது சீர்படுத்தவோ நீங்கள் முயற்சித்துக் கொண்டிருக்கும்போது, உங்களுடைய நடவடிக்கைகள் உங்களுடைய எதிர்பார்ப்பைப் பிரதிபலிக்கும்படி இருப்பதை உறுதி செய்து கொள்ளுங்கள்.
- உங்களுக்குக் கச்சிதமான ஒரு வாழ்க்கைத்துணைவரை நீங்கள் உங்கள் வாழ்விற்குள் கவர்ந்திழுக்க விரும்பினால், அவரிடம் என்னவெல்லாம் இருக்க வேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்களோ, அவற்றை உங்கள் மனத்தில் காட்சிப்படுத்தி, பிறகு அவற்றை எழுதிக் கொள்ளுங்கள்.
- ஒருவர் குறித்து நீங்கள் எத்தகைய உணர்வை உணருகிறீர்களோ, அதை நீங்கள் உங்களிடம்

https://telegram.me/aedahamlibrary

கவர்ந்திழுக்கிறீர்கள்.

- அன்பை உணருவது தனியொரு காரணியாக இருந்து உங்கள் வாழ்வில் உள்ள உறவுகளைப் பரிபூரணமாக மாற்றிவிடும்.
- உங்களால் நேசிக்க முடிந்த எல்லாவற்றையும் நேசியுங்கள். உங்களால் நேசிக்க முடிகின்ற எல்லோரையும் நேசியுங்கள். நீங்கள் நேசிக்கின்ற விஷயங்கள்மீது மட்டுமே கவனம் செலுத்துங்கள்.
- உங்கள் உறவுகளிலும் உங்கள் வாழ்க்கையிலும் நீங்கள் எவ்வளவு அதிகமாகக் கொடுக்கிறீர்களோ, அவ்வளவு அதிகமாக நீங்கள் பெறுவீர்கள்.

https://telegram.me/aedahamlibrary



https://telegram.me/aedahamlibrary

ஈர்ப்பு விதியானது நமக்குள் இருக்கின்ற குணமாக்கும் சக்தியைக் கட்டவிழ்த்துவிடுவதற்கான சக்திவாய்ந்த ஒரு கருவியாகும். இன்று நமக்கு வாய்த்திருக்கின்ற அற்புதமான மருத்துவச் சிகிச்சைகளோடு முற்றிலும் இணக்கமாக இருக்கும்படியும் நமக்கு உதவும் விதத்திலும் அந்த சக்தியை நம்மால் பயன்படுத்திக் கொள்ள முடியும்.

**- இரகசியம் தினசரி போதனைகள்**

https://telegram.me/aedahamlibrary

## ஆரோக்கியத்தைப் பேணுவதற்கு இரகசியத்தை நான் எவ்வாறு பயன்படுத்தினேன்

குணப்படுத்தப்பட முடியாதது என்று எதுவுமில்லை என்பதை நான் அறிவேன். ஒவ்வொரு குறிப்பிட்டக் காலகட்டத்திலும், குணப்படுத்தப்பட முடியாதது என்று கருதப்பட்ட ஒவ்வொரு நோயும் குணப்படுத்தப்பட்டிருக்கிறது. என்னுடைய மனத்திலும் நான் உருவாக்குகின்ற உலகத்திலும் "குணப்படுத்தப்பட முடியாதது" என்று எதுவும் கிடையாது. **இரகசியம்** திரைப்படம் வெளியானதிலிருந்து, இரகசியத்தின் கொள்கைகளைத் தங்கள் வாழ்வில் கடைபிடித்துப் பல்வேறு வகையான நோய்களிலிருந்து தாங்கள் குணமடைந்தது பற்றி மக்கள் எங்களுடன் பகிர்ந்து கொண்டுள்ள அதிசயகரமான கதைகள் எங்களிடம் ஏராளமாக வந்து குவிந்துள்ளன. நீங்கள் நம்பும்போது அனைத்து விஷயங்களும் சாத்தியமாகின்றன.

## உங்கள் சிந்தனையை மாற்றுங்கள், உங்கள் உடல்நலனை மாற்றுங்கள்

### அது ஓர் அதிசயம் என்று மருத்துவர்கள் கூறுகின்றனர்

எனக்கு இருபத்து நான்கு வயதாக இருந்தபோது, என் இதயத்தில் ஒரு தீவிரக் கோளாறு இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. உயிருக்கு உலை வைக்கக்கூடியதாக இருந்த அந்த மர்மமான நோய் பத்து லட்சம் பேரில் ஒருவருக்கு மட்டுமே ஏற்பட்டதாகக் கூறப்பட்டது. எனக்குச் சில மருந்துகள்

https://telegram.me/aedahamlibrary

கொடுக்கப்பட்டன. என் மார்பில் ‘டீஃபைப்ரிலேட்டர்’ கருவி ஒன்று பொருத்தப்பட்டது. தினமும் மரணத்தைப் பற்றியே நான் நினைத்தேன்.

அடுத்த ஐந்து ஆண்டுகளில், எனக்கு விவாகரத்து ஆனது. எனக்குச் செய்யப்பட்ட இதய அறுவைச் சிகிச்சைகள் இரண்டும் தோல்வியில் முடிந்தன. அப்போது நான் விடைகளைத் தேடத் தொடங்கினேன். **இரகசியம்** திரைப்படத்தைப் பார்த்துவிட்டு, அது பரிந்துரைத்தக் கொள்கைகளை வாழ்வில் கடைபிடித்தப் பிறகு, என் இதயத்தில் ஏன் இப்படிப்பட்ட ஒரு கோளாறு ஏற்பட்டிருந்தது என்பதைக் கண்டுபிடிப்பதற்கான ஓர் ஆன்மிகப் பயணத்தை நான் துவக்கினேன். ஆனால் இறுதியில், வாழ்க்கையை நான் மெச்சத் தொடங்கினேன். நான் என்னுடைய நோய் குறித்து இனியும் கவலைப்பட வேண்டியதில்லை என்று தீர்மானித்து, அந்த நோய் பற்றி நினைப்பதை முற்றிலுமாகக் கைவிட்டேன்.

**என்றேனும் ஒருநாள் காலையில் நீ விழித்தெழுந்து, இனி நீ உன்னுடைய மருந்துகளை உட்கொள்ள வேண்டிய தேவை இல்லை என்பதை நீ கண்டறிவாய்** என்று எனக்கு நானே கூறிக் கொண்டேன். சுமார் ஆறு மாதங்களுக்குப் பிறகு, ஒருநாள் காலையில் நான் என்னுடைய டென்னிஸ் ஷூக்களை அணிந்து கொண்டு உழவர் சந்தைக்குச் சென்றேன். நான் அச்சந்தையை நெருங்கியிருந்த நேரத்தில்தான், என் இதயத்திற்கான மருந்துகளை அன்று காலையில் நான் உட்கொண்டிருக்கவில்லை என்பது என் நினைவுக்கு வந்தது. அப்போது என் தலையில் ஒரு குரல், “இன்றுதான் அந்த நாள்! இனி நீ அந்த மருந்துகளை உட்கொள்ளத் தேவையில்லை,” என்று தெளிவாகக் கூறியது.

அன்றிலிருந்து நான் அந்த மருந்துகளை உட்கொள்ளவே இல்லை. ஆறு மாதங்களுக்கு முன்பு, என் மார்பில் பொருத்தப்பட்டிருந்த கருவியும் அகற்றப்பட்டுவிட்டது.

https://telegram.me/aedahamlibrary

துவக்கத்தில், அக்கருவியை அகற்றுவதற்கு மருத்துவர்கள் தயங்கினர். ஏனெனில், என்னுடைய கோளாறு எப்படிச் சரியானது என்பதற்கு மருத்துவரீதியான ஆதாரம் எதுவும் இருக்கவில்லை. அதே நேரத்தில், எனக்கு அந்தக் கோளாறு இன்னும் இருந்ததற்கான எந்த ஆதாரத்தையும் அவர்களால் கண்டுபிடிக்க முடியவில்லை. என் விஷயத்தில் நடந்திருந்தது ஓர் அதிசயம் என்றும், இது போன்ற குணமாதல்கள் நிகழ்ந்திருந்ததற்கான எழுத்துபூர்வமான ஆதாரங்கள் **எதுவுமில்லை** என்றும் அவர்கள் கூறினர்.

**- நைட் ஏ., கொலொராடோ ஸ்பிரிங்ஸ், கொலொராடோ, அமெரிக்கா**

பரிந்துரைக்கப்பட்ட மருந்துகளை உட்கொள்ளுவதை நிறுத்துவது அல்லது பரிந்துரைக்கப்பட்டச் சிகிச்சையைத் தொடருவதை நிறுத்துவது பற்றிய எந்தவொரு தீர்மானமும், ஒரு தொழில்முறை மருத்துவருடன் கலந்து ஆலோசிக்கப்பட்டப் பிறகே மேற்கொள்ளப்பட வேண்டும். ஆனால், நைட்டும் அவருடைய மருத்துவர்களும் சேர்ந்து சாதித்திருந்த விஷயம், ஈர்ப்பு விதி பாரம்பரிய மருத்துவத்துடன் சேர்ந்து பயன்படுத்தப்படும்போது எவ்வளவு சக்திவாய்ந்ததாக இருக்கிறது என்பதை எடுத்துக்காட்டுகிறது.

நம்பிக்கைகள் என்பவை மீண்டும் மீண்டும் எண்ணப்படுகின்ற எண்ணங்கள்தாம். வலிமையான உணர்வுகள் அந்த எண்ணங்களோடு பிணைந்துள்ளன. நீங்கள் மன உறுதியுடன் ஒரு முடிவை மேற்கொண்டு, அதன் இறுதி விளைவு இப்படித்தான் இருக்கும் என்ற தீர்ப்பையும் எழுதி,

https://telegram.me/aedahamlibrary

எந்தவிதமான சஞ்சலமும் இன்றி இருப்பதற்குப் பெயர்தான் நம்பிக்கை.

உங்கள் உடல்நலனைப் பற்றி எதிர்மறை நம்பிக்கைகளை நீங்கள் வளர்த்திருந்தால், அதைப் பற்றி மீண்டும் அலசத் தயாராகுங்கள். உங்கள் சிந்தனையை மாற்றிக் கொள்ளுவதற்கு ஒருபோதும் காலம் கடந்துவிடுவதில்லை. நீங்கள் உங்கள் உடல்நலனை மாற்ற விரும்பினால், உங்கள் சிந்தனையை மாற்றிக் கொள்ளுவது இன்றியமையாதது.

## என்னுடைய அதிசய இதயம்

எனக்குச் சிறிதளவு சொத்து விட்டுச்செல்லப்பட்டிருந்ததாக யாரோ ஓர் அந்நியரிடமிருந்து எனக்கு ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது. என் தந்தையின் திடீர் மரணத்தைப் பற்றி அப்படித்தான் நான் கண்டுபிடித்தேன். அவருக்கு ஐம்பத்து மூன்று வயது. மார்ஃபேன் நோய்க்குறி என்ற ஓர் அரிய மரபணு நோயால் ஏற்பட்ட ஒரு சிக்கலினால் அவர் இறந்திருந்தார். அது மரபணுரீதியானது என்பதால் எனக்கும் அது வரக்கூடுமா என்பதைத் தெரிந்து கொள்ளுவதற்காக பெவர்லி ஹில்ஸ் பகுதியில் உள்ள செடார்ஸ்-சினாய் மருத்துவமனையில் இதயவியல் துறையின் தலைவரை நான் பார்க்கச் சென்றேன். எனக்கும் அந்த நோய் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

மார்ஃபேன் நோய்க்குறி என்ற நிலை குணப்படுத்தப்பட முடியாத ஒன்று. அது பல சமயங்களில் மரணத்தில்தான் முடியும். வாழ்வில் வெகு முன்னதாகவே இந்நோய் தாக்கக்கூடும். வழக்கமாக, இருபதுகளில் அது தாக்கத் தொடங்குகிறது. எனக்கு அப்போது இருபத்தெட்டு வயது.

நான் முற்றிலும் நிலைகுலைந்து போனேன். என் இதயத்தில் ஒரு மிகப் பெரிய அடைப்பு இருந்தது. என் இதயத்தில் தொடர்ந்து ஒரு முணுமுணுப்பு இருந்தது.

https://telegram.me/aedahamlibrary

அது மேலும் தீவிரமடைந்ததால், 'இதய முடுக்கி' கருவி ஒன்று எனக்குத் தேவைப்பட்டது. மேலும், என்னால் குழந்தை பெற்றுக் கொள்ள முடியாது. நான் எப்போதும் விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டேன். கைப்பந்து, நீச்சல், டென்னிஸ் என்று எல்லாவற்றிலும் நான் பங்கு கொண்டு விளையாடினேன். நான் முறையான உணவு உட்கொண்டேன், என் உடலைக் கட்டுக்கோப்பாக வைத்திருந்தேன். என் இதயத்தில் கோளாறு இருந்ததாக என்னிடம் கூறப்பட்டபோது நான் உண்மையிலேயே பயந்தேன். என்னை நான் எப்போதும் ஒரு வலிமையான, நேர்மறையான பெண்ணாகவே பார்த்து வந்திருந்தேன். ஆனால், எந்நேரத்திலும் வெடிக்கக்கூடிய நிலையில் என் இதயத்தில் ஒரு வெடிகுண்டு இருந்தது என்று என்னிடம் கூறப்பட்டபோது, ஒரு பலவீனமான, தொட்டால் ஒடிந்துவிடக்கூடிய ஒருத்தியாக என்னை நான் பார்த்தேன். நான் வழக்கம்போல நேர்மறையாக இருக்க முயற்சித்தாலும், எனக்கு ஏற்பட்டிருந்த ஆபத்தையும் தவிர்க்கப்பட முடியாத என்னுடைய மரணத்தையும் பற்றிய சிந்தனை எப்போதும் என் மனத்தில் இருந்து வந்தது.

நான் இந்த பயத்துடனேயே வாழ்ந்தேன். ஆண்டுக்கு இரண்டு முறை நான் என்னுடைய மருத்துவரிடம் சென்று என்னைப் பரிசோதித்துக் கொண்டேன். இது பல ஆண்டுகள் தொடர்ந்தது. பிறகு ஒருநாள், நான் இரகசியம் திரைப்படத்தைப் பார்த்தேன். அச்சமயத்தில் நான் மீண்டும் என்னுடைய மருத்துவப் பரிசோதனைக்குப் போக வேண்டியிருந்தது. இரகசியம் திரைப்படத்தில், விமான விபத்தில் சிக்கிய ஒருவர் தன்னைத் தானே குணப்படுத்திக் கொண்டதைக் கண்டு நான் மிகவும் வியந்தேன். பிறகு, என் இதயத்தை நானே குணப்படுத்தப் போவதாக அக்கணமே நான் தீர்மானித்தேன். நான் அதை ஆழமாக நம்பினேன். அது சாத்தியம் என்பதை நான் அறிந்திருந்தேன்.

https://telegram.me/aedahamlibrary

என்னுடைய இதயத்தைப் பற்றிய எதிர்மறை எண்ணங்களை நான் ஒதுக்கித் தள்ளினேன். அத்தகைய எண்ணங்கள் என் மனத்திற்குள் நுழைய நான் அனுமதிக்கவில்லை. ஒவ்வோர் இரவும் நான் தூங்கச் சென்றபோது, என் வலது கையை என் இதயத்தின்மீது வைத்து, என் இதயம் வலிமையானதாக இருந்ததாக நான் கற்பனை செய்தேன். என் இதயம் வலிமையாகத் துடித்துக் கொண்டிருந்ததுபோல நான் என் மனத்தில் ஒத்திகை பார்த்தேன். ஒரு வலிமையான, ஆரோக்கியமான இதயம் எப்படித் தோன்றுமோ, அதன் துடிப்பு எப்படி இருக்குமோ, என் இதயமும் அப்படி இருந்ததாக நான் கற்பனை செய்தேன். தினமும் காலையில் நான் துயிலெழுந்தபோது, “என்னுடைய வலிமையான, ஆரோக்கியமான இதயத்திற்காக நன்றி!” என்று நான் கூறினேன். நான் குணமடைந்துவிட்டதாக என் மருத்துவர் கூறியதுபோல நான் என் மனத்தில் காட்சிப்படுத்தினேன். நான் இப்படிச் செய்து கொண்டிருந்ததை நான் யாரிடமும் கூறவில்லை. அவர்கள் என்னை எடைபோட்டுப் பார்ப்பார்களோ, என்னை நம்ப மறுப்பார்களோ என்ற பயத்தில் நான் மௌனமாக இருந்துவிட்டேன். நான் என்னுடைய மருத்துவரைப் பார்க்கப் போவதை நான்கு மாதங்களுக்குத் தள்ளிப்போட்டேன். ஏனெனில், இரகசியத்தை முயற்சித்துப் பார்க்கத் தேவையான நேரத்தை எனக்கு நான் கொடுத்துக் கொள்ள விரும்பினேன்.

நான்கு மாதங்களுக்குப் பிறகு, என்னுடைய முந்தைய பரிசோதனை முடிவுகள் உள்ளிட்ட அனைத்து விபரங்களும் அடங்கிய என்னுடைய மருத்துவக் கோப்பை எடுத்துக் கொண்டு என்னுடைய மருத்துவரிடம் சென்றேன். நான் பதற்றமாக இருந்தேன் என்பது உண்மைதான், ஆனால் அதே நேரத்தில் நான் உற்சாகமாகவும் உணர்ந்தேன். எப்படியோ என்னை நானே அமைதிப்படுத்திக் கொண்டு, **ஈசிஜி**

https://telegram.me/aedahamlibrary

பரிசோதனைக்கும் சோனோகிராம் பரிசோதனைக்கும் நான் உட்பட்டேன்.

பரிசோதனை முடிவுகளுடன் என்னிடம் வந்த என்னுடைய மருத்துவர், முற்றிலும் வாயடைத்துப் போயிருந்தார். என் இதயத்தில் ஒரு பெரிய அடைப்பு இருந்ததற்கான எந்த அறிகுறியும் அங்கு **இருக்கவில்லை** . என் இதயத்தில் எந்த முணுமுணுப்பும் **இருக்கவில்லை** . மொத்தத்தில் என் இதயத்தில் எந்தக் கோளாறும் **இருக்கவில்லை** . என்னுடைய மருத்துவர் என்னுடைய பழைய பரிசோதனை முடிவுகளையும் புதிய முடிவுகளையும் மீண்டும் மீண்டும் ஒப்பிட்டுப் பார்த்தார். ஆனால் என் இதயத்தில் எந்தப் பிரச்சனையும் இல்லை என்று புதிய முடிவுகள் தெரிவித்தன. அதற்கு அவரால் எந்த விளக்கமும் கொடுக்க முடியவில்லை. நான் மகிழ்ச்சி வெள்ளத்தில் நீந்தினேன், ஆனால் உண்மையில் எனக்கு இதில் எந்த ஆச்சரியமும் இருக்கவில்லை. நான் என் மனத்தில் எப்படிக் கற்பனை செய்திருந்தேனோ, என் இதயம் துல்லியமாக அதேபோல ஆரோக்கியமாக இருந்தது. நான் அந்த மருத்துவமனையைவிட்டு உற்சாகத்தோடு வெளியே வந்து என் காரை நோக்கி ஓடினேன். நான் என் வாழ்வில் அதுபோல அதிக வலிமையாகவும் அதிக உயிர்த்துடிப்போடும் ஒருபோதும் இருந்ததில்லை.

நான் என் தாயாரைத் தொலைபேசியில் அழைத்து, இரகசியம் புத்தகத்தின் கொள்கைகளைப் பயன்படுத்தி நான் என் இதயத்தை குணப்படுத்திக் கொண்ட விதத்தைப் பற்றி அவரிடம் கூறினேன். இரகசியம் புத்தகத்தை நான் ஏற்கனவே அவருக்கு வாங்கிக் கொடுத்திருந்தேன். நான் கூறிய மகிழ்ச்சியான செய்தியைக் கேட்டு என் தாயார் அழுதார். அவர் அப்படி அழுது நான் ஒருபோதும் கேட்டதில்லை!

**- லாரென் டி., லகூனா கடற்கரை, கலிபோர்னியா, அமெரிக்கா**

https://telegram.me/aedahamlibrary

**நீங்கள் தேர்ந்தெடுத்துள்ள மருத்துவர்கள் தங்கள் வேலையைச் செய்ய அனுமதியுங்கள். ஆனால் உங்கள் மனத்தை உங்களுடைய நலனின்மீது குவியுங்கள்.**

**ஆரோக்கியம் பற்றிய எண்ணங்களை எண்ணுங்கள். ஆரோக்கியம் தொடர்பான வார்த்தைகளைப் பேசுங்கள். நீங்கள் பரிபூரணமாக ஆரோக்கியமாக இருப்பதுபோலக் கற்பனை செய்யுங்கள்.**

**- இரகசியம் தினசரி போதனைகள்**

## ஒரு நேரத்தில் ஒரு சிறிய நேர்மறை எண்ணம்

மன அழுத்தம் ஒரே ஓர் எதிர்மறையான எண்ணத்திலிருந்துதான் தொடங்குகிறது. அந்த ஓர் எண்ணத்தை நீங்கள் கண்டுகொள்ளாமல் விட்டுவிட்டால், அதேபோன்ற அதிக எண்ணங்கள் வரத் தொடங்கும். இறுதியில் அது மன அழுத்தத்தில் போய் முடியும். மன அழுத்தம் ஒரு விளைவு, ஆனால் எதிர்மறைச் சிந்தனைதான் அதற்கான காரணம். ஒரே ஒரு சிறிய எதிர்மறை எண்ணத்திலிருந்துதான் அது தொடங்குகிறது. நீங்கள் இதுவரை எதை விளைவித்திருந்தாலும் சரி, அதை உங்களால் மாற்ற முடியும். நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம், முதலில் ஒரு சிறிய நேர்மறை எண்ணத்தை எண்ண வேண்டும், பிறகு இன்னொரு நேர்மறை எண்ணத்தை எண்ண வேண்டும், இப்படியே தொடர்ந்து நேர்மறையாகச் சிந்திக்க வேண்டும், அவ்வளவுதான்.

### அற்புதமாக குணமடைந்தேன்

https://telegram.me/aedahamlibrary

**இரகசியம்** ஆடியோ பதிப்பை நான் கேட்டதிலிருந்து, என் வாழ்வில் பல அற்புதமான விஷயங்கள் நிகழ்ந்துள்ளன. குறிப்பாக, பல ஆண்டுகளாக எனக்குத் தொல்லை கொடுத்து வந்திருந்த குடற்புண்கள் குணமடைந்ததை நான் ஓர் அதிசயம் என்றே கூறுவேன்.

கிறித்தவ சமயத்தின் ஒரு பிரிவான பெந்தகோஸ்துப் பிரிவைப் பின்பற்றிய ஒரு வீட்டில் நான் பிறந்து வளர்ந்தேன். நான் சிறுமியாக இருந்த காலத்திலிருந்தே மிகுந்த கவலையுடன் வளர்ந்தேன். நரகத்தைப் பற்றியும் கிறிஸ்து திரும்பி வருவதைப் பற்றியும் நான் மிகவும் பயந்தேன். என் இதயத்தில் தேவாலயம் குறித்து நான் கேள்வி எழுப்பினேன். பைபிள் போதிப்பதைப்போல அன்பே கடவுள் என்றால், நான் ஏன் இவ்வளவு பயத்தை அனுபவிக்கிறேன்? நான் எல்லாவற்றைக் குறித்தும் பயந்தேன்.

என் தந்தை குடற்புண்களால் துன்புற்றார். தேவையற்ற விஷயங்களைப் பற்றி நான் தொடர்ந்து கவலைப்பட்டுக் கொண்டே இருந்தால் எனக்கும் குடற்புண்கள் வந்துவிடும் என்று என் தாயார் என்னிடம் கூறினார். இருபத்து மூன்றாவது வயதில் எனக்குக் குடற்புண்கள் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

கனவு காணுவதையும் பாடுவதையும் நான் நிறுத்தினேன். நான் முப்பதை நெருங்கிக் கொண்டிருந்த நேரத்தில் அளவுக்கதிகமாகக் குடிக்கத் தொடங்கினேன். ‘ஓரளவுக்கு சுமாரான’ ஒருவருடன் நான் சேர்ந்து வாழத் தொடங்கினேன். அந்தக் காலகட்டத்தில்தான் என்னுடைய குடற்புண்கள் உண்மையிலேயே தீவிரமடையத் தொடங்கின.

நான் சேர்ந்து வாழ்ந்த நபரைவிட்டு நான் பிரிந்தேன். பிறகு, ‘எனக்காகவே படைக்கப்பட்டிருந்ததாக’ நான் கருதிய ஒருவரை நான் சந்தித்தேன். என் குடல் மட்டும் தொடர்ந்து வலித்துக் கொண்டிருந்தது, தினமும் அதிலிருந்து ரத்தம் வடிந்தது. நான் முழுநேர வேலை பார்த்துக் கொண்டிருந்தேன். என்னுடைய இளவயது மகளையும் பிரச்சனைகரமான என்னுடைய பருவ வயது

https://telegram.me/aedahamlibrary

மகனையும் தனியொருத்தியாக நான் வளர்த்துக் கொண்டிருந்தேன். இந்த வேதனைகளையெல்லாம் நான் தாங்கிக் கொள்ள என்னுடைய காதல் எனக்கு உதவியபோதிலும், என் உடல் தொடர்ந்து களைப்புற்றுக் கொண்டிருந்தது.

நான் என் காதலரைத் திருமணம் செய்து கொண்ட சில நாட்களில் எனக்கு வேலை போயிற்று. என்னுடைய புதிய கணவருடைய அன்பு மற்றும் ஆதரவினால் என்னுடைய கடந்தகாலத்தின் வேதனைகளையும் என்னுடைய உடலையும் குணப்படுத்துவதன்மீது என்னால் ஒருமித்த கவனம் செலுத்த முடிந்தது. தினமும் ஏற்பட்ட ரத்தப் போக்கினால் எனக்கு ரத்த சோகை ஏற்பட்டது. நான் மிகவும் களைத்துப் போனேன். மனரீதியாகவும் நான் மிகவும் தளர்ந்து போயிருந்தேன். நான் ஒரு சிறப்பு மருத்துவரைச் சென்று பார்த்தேன். அழற்சி எதிர்ப்பு மருந்துகளை நான் அதிக அளவில் உட்கொள்ள வேண்டியிருக்கும் என்றும், என் எஞ்சிய வாழ்நாள் முழுவதும் குறிப்பிட்டக் கால இடைவேளைகளில் எனக்கு எனிமா சிகிச்சை தேவைப்படும் என்றும் அந்த மருத்துவர் கூறினார். இதைக் கேட்டு மனமுடைந்து போன நான், தொடர்ந்து மருந்து மாத்திரைகளால் என் உடலை நிரப்பினேன், நிலைமையை என்னால் முடிந்த அளவுக்குச் சமாளித்தேன்.

ஓராண்டுக்குப் பிறகும் தினமும் எனக்கு ரத்தப் போக்கு ஏற்பட்டது. மற்றபடி எனக்கு ஓர் அற்புதமான மற்றும் கச்சிதமான வாழ்க்கை அமைந்திருந்தது. ஆனால், உடல்ரீதியாகவும் உணர்ச்சிரீதியாகவும் நான் சீர்குலைந்து போயிருந்தேன். என் மனத்தில் என்னோடு நான் நிகழ்த்திய ஒரு கடுமையான வாக்குவாதத்திற்குப் பிறகு **இரகசியம்** புத்தகத்தை நான் வாங்கினேன். நான் அதைப் படிக்கத் தொடங்கிய ஐந்து நிமிடங்களுக்குள் என் கண்களிலிருந்து ஆனந்தக் கண்ணீர் வழிந்தது. நான் அதுவரை வெளியே சொல்லியிராத என்னுடைய

https://telegram.me/aedahamlibrary

நம்பிக்கைகள் இப்போது உறுதிப்படுத்தப்பட்டுக் கொண்டிருந்ததை என்னால் நம்ப முடியவில்லை.

அன்றைய தினம் என் வாழ்க்கை மாறியது. என்னுடைய குடற்புண்களின் அறிகுறிகள் உடனடியாகக் குறையத் தொடங்கின. ஆரோக்கியமான ஒரு குடலின் புகைப்படத்தை கூகுளில் நான் தேடிக் கண்டுபிடித்து, அத்தகைய ஒரு குடல் எனக்குள் இருந்ததாக நான் என் மனத்தில் காட்சிப்படுத்தினேன். என்னுடைய குடற்புண்கள் குணமாகியதற்காக நான் நன்றி கூறினேன், என் உடலை தினமும் ஆசீர்வதித்தேன். தண்ணீர் என்னுடைய உடலை குணப்படுத்திக் கொண்டிருந்ததாக நான் கற்பனை செய்தேன். நம்முடைய உடலில் பெருமளவு இருப்பது தண்ணீர்தான் என்பதையும், கூடுதல் தண்ணீர் பருகுவது உடலுக்கு உதவிகரமாக இருக்கும் என்பதையும், ஆரோக்கியமற்ற நுண்ணுயிரிகளை அது நம் உடலைவிட்டு வெளியேற்றிவிடும் என்பதையும் நான் கண்டறிந்தேன். எனவே, நான் தண்ணீர் அருந்திவிட்டு நன்றி கூறினேன். (**சக்தி** புத்தகத்தின் ஆடியோ பதிப்பைக் கேட்டப் பிறகுதான், ஒரு நேர்மறையான சூழலுக்குத் தண்ணீர் எப்படி எதிர்வினையாற்றுகிறது என்பதை நான் தெரிந்து கொண்டேன்.)

**இரகசியம்** ஆடியோ பதிப்பை தினமும் கேட்பதை நான் தொடர்ந்தேன். என் உடல் குணமடைந்து கொண்டிருந்தது. நான் மிகவும் ஆரோக்கியமாக இருந்ததுபோல நான் உணர்ந்தேன். என் வாழ்வில் அதுபோல ஒருபோதும் நான் உணர்ந்ததில்லை. ஆனாலும், என் உடல்நலன் நான் விரும்பிய அளவுக்கு மேம்பட்டிருக்கவில்லை.

என்னுடைய கடந்தகாலத்தை விட்டுத்தள்ளவும், என் அன்புக்குரியவர்களுடனான வாக்குவாதங்களைக் கையாளவும் மனரீதியாக நான் மிகவும் போராடினேன். நான் அடிக்கடிக் கவலையும் விரக்தியும் கொண்டேன். என்னால் அமைதியாகவும் ஆசுவாசமாகவும் இருக்க முடியவில்லை. என்னிடம் நான் கடுமையாக நடந்து

https://telegram.me/aedahamlibrary

கொண்டேன். எனக்குத் தேவையான எல்லாம் என்னிடம் இருந்தன, நான் விரும்பிய எல்லாவற்றையும் நான் பெற்றுக் கொண்டிருந்தேன். ஆனால் என் ஆரோக்கியம் மட்டும் ஏன் கச்சிதமானதாக இருக்கவில்லை? நான் முழு ஆரோக்கியத்தை அடையும் நிலைக்கு மிக அருகில் வந்திருந்தேன் என்பதை நான் அறிந்திருந்தபோதிலும், ஏதோ ஒரு குறை இருந்ததாக எனக்குத் தோன்றியது.

ஆறு மாதங்களாக நான் தவறாமல் தினமும் **இரகசியம்** ஆடியோவைப் போட்டுக் கேட்டேன்; ஆன்மிக வளர்ச்சி, குணமாதல், நன்றியுணர்வு போன்றவற்றைப் பற்றிய புத்தகங்களைப் படித்தேன். **சக்தி** புத்தகத்தை நான் வாங்கிப் படித்தபோதுதான், நான் செய்யத் தவறியிருந்த விஷயம் என்னவென்பது எனக்குத் தெரிய வந்தது. எல்லாவற்றையும்விட மிக முக்கியமானது அன்பு. நான் அதற்கு முக்கியத்துவம் கொடுக்க மறந்திருந்தேன். நான் உடனடியாக, சிறு விஷயங்களில் தொடங்கிப் பெரிய விஷயங்கள்வரை எல்லாவற்றையும் நேசிக்கத் தொடங்கினேன். இரண்டு நாட்களுக்குப் பிறகு, என்னுடைய குடற்புண்களுக்கான அறிகுறிகள் மாயமாய் மறைந்து போயின.

இப்போது நான் ஒவ்வொரு நாளையும் அன்பை உணருவதிலிருந்து துவக்குகிறேன். நான் என் குடும்பத்தினரையும் நண்பர்களையும் என் மனத்தில் காட்சிப்படுத்தி, அவர்கள்மீது அன்பைப் பொழிகிறேன். அவர்கள் மகிழ்ச்சியாகவும் வெற்றிகரமாகவும் இருப்பதுபோல் நான் கற்பனை செய்கிறேன். பிரபஞ்சம் எதிர்வினையாற்றியுள்ள விதத்தைக் கண்டு நான் ஆச்சரியத்தில் வாயடைத்து நிற்கிறேன். வாக்குவாதங்கள் ஒரு தெளிவுக்கு வழி வகுத்துள்ளன. என்னைச் சுற்றிலும் இருக்கின்றவர்கள் அதிக மகிழ்ச்சியானவர்களாக ஆகியுள்ளனர். நான் தொடர்ந்து அன்பைக் கற்பனை செய்கிறேன், அதை உணருகிறேன், அவ்வளவுதான். செய்வதற்கு அவை சுலபமான காரியங்களாகும். இப்போது நான் எல்லாவற்றையும்

https://telegram.me/aedahamlibrary

நேசிக்கிறேன். எதுவொன்றுக்கும் எவரொருவருக்கும் நான் அன்பைக் கொடுக்கிறேன்.

என்னுடைய கடந்தகாலத்தில் அன்பைக் கண்டுகொள்ளுவதுதான் எனக்கு மிகப் பெரிய சவாலாக இருந்தது. எனக்குத் துயரத்தை ஏற்படுத்தக்கூடிய ஒரு நினைவு என் மனத்தில் தோன்றினால், குறிப்பிட்ட அந்தக் காலகட்டத்தில் நான் நேசித்த ஒன்றைக் கண்டுபிடித்து, அது குறித்து அன்பை உணர நான் முயற்சிக்கிறேன். பிறகு அந்தக் குறிப்பிட்டக் கணம் மீண்டும் என்னைத் தொந்தரவு செய்வதில்லை.

என் வாழ்வின் ஒவ்வொரு பகுதியும் முன்பு இருந்ததைவிட அதிகச் சிறப்பாக இருக்கிறது. நான் முற்றிலும் புதிய விதத்தில் சிந்திப்பதற்கும் ஒரு புதிய வாழ்க்கைக்கும் இரகசியம்தான் வழி வகுத்தது. **இரகசியம்** ஆடியோ பதிப்பை நான் முதன்முதலாகக் கேட்டு இரண்டரை ஆண்டுகளுக்குப் பிறகு என்னுடைய பிறந்தநாளன்று, ஆண்டுக்கு இருமுறை நான் உட்பட்டப் பரிசோதனையின் முடிவுகள், இத்தனை ஆண்டுகளாக என்னை வருத்தி வந்திருந்த குடற்புண்கள் முற்றிலும் குணமாகியிருந்ததைத் தெரிவித்தன. வடுக்கள் மட்டுமே இப்போது இருக்கின்றன. நான் மிக ஆரோக்கியமாகவும் மிக மகிழ்ச்சியாகவும் இருக்கிறேன்.

**- ஜெஸிக்கா டி., வான்கூவர், பிரிட்டிஷ் கொலம்பியா, கனடா**

**நீங்கள் மன அழுத்தத்தை அனுபவித்துக் கொண்டிருந்தால், நீங்கள் விரும்புவதை உங்களால் கவர்ந்திழுக்க முடியாது. மன அழுத்தத்தையும் மன இறுக்கத்தையும் நீங்கள் உங்களிடமிருந்து முற்றிலுமாக வெளியேற்றியாக வேண்டும்.**

**மன அழுத்தம் என்ற உணர்ச்சி, நீங்கள் விரும்புவது உங்களிடம் இல்லை என்று வலிமையாகக் கூறுகிறது. மன அழுத்தம் அல்லது இறுக்கம் என்பது விசுவாசமின்மையாகும். எனவே, அவற்றைக்**

https://telegram.me/aedahamlibrary

**களைவதற்கு நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் உங்கள் விசுவாசத்தை அதிகரித்துக் கொள்ளுவது மட்டும்தான்.**

**- இரகசியம் தினசரி போதனைகள்**

## இரகசியம் எவ்வாறு என் வாழ்க்கையை விரிவுபடுத்தியது

திறந்த வெளி குறித்த பயம், அதீதப் பரிதவிப்பு உணர்வு, அதீதப் பதற்றம் போன்றவற்றால் நான் என் வாழ்வில் பெரிதும் துன்புற்று வந்துள்ளேன். நான் என்னுடைய சௌகரிய வட்டத்தைவிட்டு வெளியே வரும்படியான எதுவொன்றையும் செய்வதை நான் முற்றிலுமாகத் தவிர்த்து வந்திருந்தேன். அப்போதுதான், ஒருநாள் இரகசியம் புத்தகத்தை நான் படித்தேன். அதைத் தொடர்ந்து, எல்லாவற்றைக் குறித்தும் நான் நேர்மறையாகச் சிந்திக்கவும் நடந்து கொள்ளவும் தொடங்கினேன்.

நான் தினமும் நேர்மறையான சுயபிரகடனங்களைக் கூறத் தொடங்கினேன். பிறகு, என்னால் செய்ய முடியாதவற்றைப் பற்றிப் பேசுவதை நிறுத்திவிட்டு, என்னால் செய்ய முடிந்தவற்றைப் பற்றி மட்டும் நான் பேசினேன்.

முப்பத்து மூன்று ஆண்டுகளில் ஒருமுறைகூட நான் விமானத்தில் அடியெடுத்து வைத்ததில்லை, வெளிநாட்டுப் பயணம் எதையும் மேற்கொண்டதில்லை. ஆனால் இப்போது, என்னுடைய ஒன்பது வயது மகனையும் பன்னிரண்டு வயது மகளையும் அழைத்துக் கொண்டு முதன்முறையாக பாலி தீவுக்கு ஓர் இரண்டு-வார விடுமுறையில் சென்றேன்.

உள்ளூர் வணிக வளாகத்திற்குக்கூடச் செல்ல முடியாமல் இருந்த நான், உலகம் முழுவதையும் சுற்றி வரும் ஒரு பயணியாக மாறியுள்ளேன். இதற்கெல்லாம் இரகசியத்திற்குத்தான் நான் நன்றி கூறியாக வேண்டும்!

https://telegram.me/aedahamlibrary

**- கேரன் சி., சிட்னி, ஆஸ்திரேலியா**

கேரனின் கதை நமக்கு விளக்கிக் காட்டுவதைப்போல, பயம், கவலை, அதீதப் பதற்றம் போன்றவற்றிலிருந்து விடுபடுவதற்கு சுயபிரகடனங்களால் உதவ முடியும்.

> **நீங்கள் சுயபிரகடனங்களைக் கூறும்போது அவற்றை நீங்கள் எந்த அளவுக்கு நம்புகிறீர்கள் என்பதுதான் அந்த சுயபிரகடனங்கள் எவ்வளவு தூரம் பலனளிக்கின்றன என்பதைத் தீர்மானிக்கிறது. உங்களுக்கு நம்பிக்கை இல்லாவிட்டால், பிறகு சுயபிரகடனம் என்பது சக்தி எதுவும் இல்லாத வெறும் வார்த்தைகள் மட்டுமே. நம்பிக்கைதான் உங்கள் வார்த்தைகளுக்கு சக்தியைக் கொடுக்கிறது.**

**- இரகசியம் தினசரி போதனைகள்**

## மகிழ்ச்சியான மனநிலையில் இருப்பதைவிட அதிக முக்கியமானது வேறு எதுவுமில்லை

ஆரோக்கியமாக இருப்பது என்றால் ஆரோக்கியமான ஓர் உடலையும் ஆரோக்கியமான ஒரு மனத்தையும் ஒருசேரப் பெற்றிருப்பது என்று பொருள். உங்கள் மனம் முழுக்க எதிர்மறை எண்ணங்களும் எதிர்மறை நம்பிக்கைகளும் நிரம்பியிருந்தால் உங்களால் மகிழ்ச்சியாகவோ அல்லது ஆரோக்கியமாகவோ இருக்க முடியாது. உங்கள் மனத்தை ஆரோக்கியமாக வைத்துக் கொள்ளுவதன் மூலம், உங்கள் உடல் ஆரோக்கியமாக இருக்க உங்களால் உதவ முடியும்.

எதிர்மறை எண்ணங்களை நம்பாமல் இருப்பது உங்கள் மனத்தை ஆரோக்கியமாக வைத்துக்

https://telegram.me/aedahamlibrary

கொள்ளுவதற்கான ஒரு வழியாகும். உங்கள் வாழ்வில் இப்போது என்ன நிகழ்ந்து கொண்டிருந்தாலும் சரி, அழகு, அன்பு, நன்றியுணர்வு, ஆனந்தம் போன்றவற்றைப் பற்றிய நேர்மறையான எண்ணங்கள்மீது உங்கள் கவனத்தைக் குவியுங்கள். அது உங்கள் உடலுக்கு ஒரு சர்வரோக நிவாரணியாக அமையும்.

## அதிர்ச்சி வைத்தியம்

என் வாழ்க்கை எப்போதும் ஆரோக்கியத்தைப் பற்றியதாகவே இருந்து வந்துள்ளது. சுமார் நாற்பது ஆண்டுகளாக நான் ஆழமாக தியானம் செய்து வந்துள்ளேன், முறையான உடற்பயிற்சியில் ஈடுபட்டு வந்துள்ளேன், 'சரியான' உணவை உட்கொண்டு வந்துள்ளேன், தினமும் எட்டு மணிநேரம் தூங்கி வந்துள்ளேன். எனவே, என்னுடைய அறுபதாவது பிறந்தநாளுக்கு ஒரு வாரத்திற்கு முன்பு, எனக்கு மார்பகப் புற்றுநோய் இருந்ததாக என் மருத்துவர் கூறியபோது அது எனக்கு ஒரு பேரதிர்ச்சியாக இருந்தது.

பொதுவாக அப்படிப்பட்ட ஒரு நோய் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டவுடன், அதைத் தொடர்ந்து ஏற்படுகின்ற, நம்மை முற்றிலுமாக முடக்கிப் போட்டுவிடக்கூடிய பயம் என்னைத் தொற்றிக் கொண்டது. அடுத்தப் பல நாட்கள் நான் அந்த பயத்துடனேயே வாழ்ந்தேன். தற்செயலாக ஒருநாள், **இரகசியம்** பற்றிய ஒரு கட்டுரையை ஒரு செய்தித்தாளில் நான் படித்தேன். பிறகு நான் அதன் ஆடியோ பதிப்பை வாங்கி அதைக் கேட்டேன். நான் என் காரில் பயணித்தபோதும், தூங்கச் சென்றபோதும், என் நாயை வெளியே நடத்திக் கூட்டிச் சென்றபோதும் நான் அந்த ஆடியோவைக் கேட்டேன். என் கணவர் செய்து கொண்டிருந்ததைப்போல எப்போதும் வேலை பார்த்துக் கொண்டு, ஆனால் வாழ்க்கையை **அனுபவிக்காமல்** இருப்பது பெருமிதம் கொள்ளத்தக்க ஒரு விஷயமல்ல

https://telegram.me/aedahamlibrary

என்பதை நான் உணர்ந்தேன். எனவே, நானும் என் கணவரும் சிறிது நேரம் எடுத்துக் கொண்டு, எங்கள் வாழ்வில் அதிகச் சமநிலையை உருவாக்க நாங்கள் செய்ய வேண்டியவற்றை நாங்கள் திட்டமிட்டோம். அதன் முக்கியப் பகுதியாக, விஷயங்களை நாங்கள் மீண்டும் அவற்றின் முன்னுரிமைப்படி ஒரு பட்டியலிட்டோம்.

அடுத்து, என்னுடைய நலன்மீது அக்கறை கொண்டிருந்த என்னுடைய தோழியர் எனக்குக் கொடுத்திருந்த, புற்றுநோய் தொடர்பான புத்தகங்கள் அனைத்தையும் நான் அவர்களிடம் திருப்பிக் கொடுத்தேன். புற்றுநோய் பற்றி இணையத்தளத்தில் ஆராய்வதை நான் நிறுத்தினேன். மார்பகப் புற்றுநோய் இருந்தவர்களுடன் என்னை அடையாளப்படுத்திப் பார்ப்பதையும் நான் நிறுத்தினேன். என்னுடைய தினசரி நடைகளின்போது, “நான் முற்றிலும் ஆரோக்கியமாக இருக்கிறேன்! நன்றி, நன்றி, நன்றி!” என்று நான் சத்தமாகக் கூறத் தொடங்கினேன். குளியலின்போது, என்னுடைய உயிரணுக்கள் அனைத்தும் கச்சிதமான இணக்கத்தோடு இருந்ததாகவும், அனைத்து மண்டலங்களும் ஒருங்கிணைந்து செயல்பட்டுக் கொண்டிருந்ததாகவும், அனைத்துத் திசுக்களும் ஆரோக்கியமாக இருந்ததாகவும் நான் கற்பனை செய்தேன். நான் எல்லாவற்றுக்காகவும் என் ஆரோக்கியத்திற்காகவும் காலையிலிருந்து இரவுவரை தொடர்ந்து நன்றி கூறிக் கொண்டே இருந்தேன்.

இது பலனளிப்பதற்கு சுமார் ஆறு வாரங்களாவது ஆகும் என்பதை நான் அறிந்தேன். என் மருத்துவர் என்னை அழைத்து, ஒருசில நாட்களில் என்னுடைய அறுவைச் சிகிச்சைக்கான தேதியை நிர்ணயித்துவிட்டு என்னிடம் தெரிவிப்பதாகக் கூறினார். எனவே, என்னை நானே குணப்படுத்திக் கொள்ளுவதற்கு அதிக நேரத்தை உருவாக்கிக் கொள்ளவும் இரகசியத்தை நான் பயன்படுத்தினேன். “நான் குணமாவதற்குத் தேவையான நேரம் எனக்கு இருக்கிறது,” என்று நான் மீண்டும் மீண்டும்

https://telegram.me/aedahamlibrary

கூறினேன். என்னுடைய வேண்டுகோள் பிரபஞ்சத்திற்குக் கேட்டது! என்னுடைய மருத்துவமனையிலிருந்து யாரும் என்னை அழைக்கவில்லை. ஐந்தரை வாரங்களுக்குப் பிறகு நானே அவர்களைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டேன். நீங்கள் நம்புகிறீர்களோ இல்லையோ, என்னுடைய மருத்துவ ஆவணங்களை யாரோ தொலைத்துவிட்டிருந்தனர்!

இதற்கிடையே, என் மார்பகத்தில் எந்தக் கட்டியையும் என்னால் உணர முடியவில்லை!

என்னுடைய அறுவைச் சிகிச்சைக்குப் பிறகு, என்னுடைய மருத்துவர் என் கணவரை அழைத்து, அந்தக் கட்டி எங்கே இருந்தது என்பதைக் கண்டுபிடிப்பது பெரும்பாடாக இருந்ததால் அந்த அறுவைச் சிகிச்சையைச் செய்வது தனக்கு மிகக் கடினமாக இருந்ததாகக் கூறினார். என்னுடைய கட்டி எப்படி அந்த அளவுக்குச் சுருங்கியது என்பதை யாராலும் கண்டுபிடிக்க முடியவில்லை. ஆனால் அதற்கான காரணம் என்ன என்பதை நான் அறிவேன்!

நான் இப்போது ஒவ்வொரு கணமும் மகிழ்ச்சியாக வாழ்ந்து கொண்டிருக்கிறேன். நான் மீண்டும் இதுபோலக் கஷ்டப்பட விரும்பவில்லை என்றாலும்கூட, எண்ணங்களின் சக்தியை நான் கற்றுக் கொண்டது குறித்தும், நம்முடைய வாழ்க்கையில் நம்மால் மேற்கொள்ள முடிகின்ற அற்புதமான தேர்ந்தெடுப்புகள் குறித்தும் நான் அதிக மகிழ்ச்சி கொள்ளுகிறேன்.

**- கேரல் எஸ்., சைரகியூஸ், நியூ யார்க், அமெரிக்கா**

மனமும் மருந்துகளும் இணைந்து இணக்கமாகச் செயல்படுவதன் மூலம் நோய்களை குணமாக்க முடியும் என்பதைக் கேரலின் கதை உணர்த்துகிறது. நீங்கள் ஏதேனும் மருத்துவப் பரிசோதனைக்கோ அல்லது சிகிச்சைக்கோ உட்படும்போது, நீங்கள் விரும்புகின்ற விளைவைக் கற்பனை செய்து, அந்த

https://telegram.me/aedahamlibrary

விளைவை நீங்கள் ஏற்கனவே பெற்றுவிட்டதுபோல உணர்வுபூர்வமாக உணருங்கள். கேரல் தன்னுடைய அறுவைச் சிகிச்சைக்கு உட்பட்டபோது, இரகசியத்தைப் பயன்படுத்தி ஒரு நேர்மறையான விளைவை அவர் ஏற்கனவே தன் மனத்தில் காட்சிப்படுத்தி அதன்மீது முழு நம்பிக்கையை உருவாக்கியிருந்தார். பிரபஞ்சம் துல்லியமாக அந்த விளைவை அவருக்கு உருவாக்கிக் கொடுத்தது.

மன அழுத்தம், எதிர்மறை எண்ணங்கள் ஆகியவை நம்முடைய உடலின்மீது ஏற்படுத்துகின்ற தாக்கம் காலப்போக்கில் ஏதேனும் ஒரு நோயை உருவாக்குகிறது. எதிர்மறை எண்ணங்களை இரண்டு வெவ்வேறு அணுகுமுறைகள் மூலமாக நம்மால் மாற்ற முடியும். ஆரோக்கியம் பற்றிய நேர்மறையான எண்ணங்கள் மற்றும் சுயபிரகடனங்களால் நம் உடலை நிரப்புவதை நாம் தேர்ந்தெடுக்கலாம். இது எதிர்மறை எண்ணங்கள் உருவாவதைத் தடுக்கும். இன்னோர் அணுகுமுறை, எதிர்மறை எண்ணங்களுடன் நம்மை அடையாளப்படுத்திக் கொள்ளாமல் இருப்பது. எதிர்மறை எண்ணங்களை நாம் கண்டுகொள்ளாமல் விட்டுவிடும்போது, அவை தம்முடைய ஆற்றலை இழக்கின்றன. எனவே, அவை உடனடியாகக் கரைந்துவிடுகின்றன. இரண்டு அணுகுமுறைகளுமே பலனளிக்கின்றன. ஆனால், இவ்விரண்டு அணுகுமுறைகளிலும், உங்களுக்கு **விருப்பமில்லாத** விஷயங்கள்மீது நீங்கள் உங்கள் கவனத்தைக் குவிக்காமல் இருக்க வேண்டியது இன்றியமையாதது. இரகசியம் இதைத்தானே கூறுகிறது?

https://telegram.me/aedahamlibrary

அடுத்தக் கதையில், தான் விரும்பிய வகையான ஆரோக்கியத்தைப் பெறுவதற்கு, தன்னுடைய எதிர்மறை எண்ணங்களைத் தான் ஒழித்துக்கட்ட வேண்டும் என்பதை டீனா அறிந்திருந்தார்.

## நான் தோற்கடிக்கப்பட முடியாதவளாக ஆனேன்

எனக்கு அப்போது வெறும் முப்பத்திரண்டு வயது. சமீபத்தில்தான் எனக்கு விவாகரத்து ஆகியிருந்தது. அந்நேரத்தில், வெகு சீக்கிரமாகவே எனக்கு மாதவிடாய் நின்றுவிட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. "இவ்வளவு இளவயதில் மாதவிடாய் நின்று நான் யாரையும் பார்த்ததில்லை," என்று கூறிய என்னுடைய மருத்துவர் என்னை சமாதானப்படுத்த முயற்சித்தது எனக்கு இன்னும் நினைவிருக்கிறது. என்னால் ஒரு தாயாக ஆக முடியாது என்பதை அறிந்து நான் நாட்கணக்கில், வாரக்கணக்கில், மாதக்கணக்கில் அழுதேன். இச்செய்தியை என்னால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. நான் அனுபவித்த வேதனைகளை வார்த்தைகளில் விவரிக்க முடியாது. என்னுடைய பிரச்சனைக்கு எந்தச் சிகிச்சையும் இருக்கவில்லை. என்னுடைய மருத்துவராலும் எனக்கு எதையும் பரிந்துரைக்க முடியவில்லை. என்னை குணப்படுத்துவதற்கு ஒரு சிகிச்சையைத் தேடி உலகம் நெடுகிலும் நான் பயணம் செய்தேன். காலச்சக்கரத்தைப் பின்னோக்கிச் சுழற்றி மீண்டும் எனக்கு இயல்பான மாதவிடாய் ஏற்பட உதவக்கூடிய ஏதேனும் ஒன்று எனக்குக் கிடைக்காதா என்று நான் ஏங்கினேன். மூலிகை மருந்துகள், அக்குபஞ்சர், கருத்தடை மாத்திரைகள், ஹார்மோன் சிகிச்சை போன்ற பலவற்றையும் நான் முயற்சித்துப் பார்த்தேன். என்னவெல்லாம் எனக்குத் தெரிய வந்ததோ, அவை அனைத்தையும் நான் முயற்சித்துப் பார்த்தேன்.

https://telegram.me/aedahamlibrary

ஆனால் உண்மையில், இதில் ஆச்சரியப்பட எதுவும் இல்லை என்பதை நான் அறிந்தேன். ஏனெனில், நான் எப்போதுமே ஓர் எதிர்மறையான பெண்ணாகவே இருந்து வந்திருந்தேன். என்னுடைய நிலைமையைப் பற்றிய செய்தியை என் மருத்துவர் என்னிடம் தெரிவிப்பதற்கு முன்பாக, முப்பதிலிருந்து முப்பத்தைந்து வயதிற்கு உட்பட்டப் பல பெண்களுக்கு மாதவிடாய் நிறுத்தம் ஏற்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டிருந்தது பற்றிய கதைகளை நான் கேள்விப்பட்டிருந்தேன். எனக்கும் அது நிகழக்கூடும் என்று நான் எப்போதும் கவலைப்பட்டு வந்திருந்தேன். நீங்கள் எதையேனும் பற்றிக் கவலைப்பட்டால், அது உங்களுக்கு நிகழும் என்பது இரகசியத்தின் பொன்விதி.

ஐந்து ஆண்டுகள் அடுத்தடுத்துப் பல்வேறு மருந்துகளை முயற்சி செய்துவிட்டு, பல மருத்துவர்களிடம் ஆலோசனை பெற்றப் பிறகு, அதிக மோசமான ஒரு பிரச்சனை எனக்கு ஏற்பட்டது. என் ரத்த அழுத்தம் கூடியது, சுண்ணாம்புச் சத்துக் குறைபாடும் ஏற்பட்டது. நான் கூடுதலாகச் சிறிது நேரம் நடந்தபோதெல்லாம் என் கால்மூட்டுக்கள் வலித்தன. ரத்த அழுத்தத்தைக் கட்டுப்படுத்துவதற்கான மாத்திரைகளை நான் உட்கொள்ளத் தொடங்க வேண்டியதாயிற்று. அப்போது எனக்கு வெறும் முப்பத்தாறு வயதுதான், ஆனால் நான் அறுபத்து மூன்று வயது நபர்போல உணர்ந்தேன். யதார்த்தத்தில், நான் மிக இளவயதிலேயே இறந்துவிடுவேன் என்று நினைத்தபடிதான் தினமும் காலையில் நான் கண்விழித்தேன். ஒவ்வொரு நாளும் நான் மனச்சோர்வால் துன்புற்றேன்.

நான் மறுமணம் செய்து கொண்டேன். நான் அளவுக்கதிகமாக உணர்ச்சிவசப்பட்டபோது என் கணவர் மிகப் பொறுமையாக அதைக் கையாண்டார். அடிக்கடி வெளியே சென்றுவருவதற்கும், உடற்பயிற்சி செய்வதற்கும், ஓர் ஆரோக்கியமான உணவுமுறையைக் கடைபிடிக்கவும் அவர் என்னை ஊக்குவித்தார். ஒரு குறிப்பிட்டக் கட்டத்தில், ஹார்மோன் மாத்திரைகளை

https://telegram.me/aedahamlibrary

உட்கொள்ளுவதை நான் அடியோடு நிறுத்தினேன். என் உடலுக்கு அவற்றிலிருந்து ஓய்வு தேவை என்று நான் கருதினேன்.

நான் அந்த மாத்திரைகளை நிறுத்திச் சில நாட்களுக்குப் பிறகு, ஒரு புத்தகக் கடையில் **சக்தி** புத்தகத்தை நான் பார்த்தேன். **இரகசியம்** புத்தகத்தை நான் ஏற்கனவே படித்திருந்தபோதிலும், நான் மிகவும் எதிர்மறையான மனப்போக்கைக் கொண்ட ஒருத்தியாக இருந்ததால், அப்புத்தகத்தில் கூறப்பட்டிருந்தவற்றைக் கடைபிடிப்பதில் எந்த அர்த்தமும் இல்லை என்று எனக்கு நானே கூறிக் கொண்டேன். ஆனால் இந்தப் புத்தகம்தான் என்னுடைய ஒரே நம்பிக்கை என்றும், அதுதான் என் நோய்க்கான ஒரே தீர்வு என்றும் எனக்குள்ளிருந்து ஏதோ ஒரு வலிமையான குரல் என்னிடம் கூறிக் கொண்டிருந்தது. எந்தச் சிகிச்சையும் எனக்குப் பலனளிக்கவில்லை என்பதால், இனி நானே என்னுடைய சொந்த மருத்துவராக ஆகி, ஒரு வித்தியாசமான வழியில் எனக்குச் சிகிச்சையளித்தாக வேண்டும் என்று எனக்குத் தோன்றியது.

நான் அப்புத்தகத்தைப் படித்தபோது, உடனடியாக அதன்பால் நான் ஈர்க்கப்பட்டேன். நான் அதன் ஆடியோ பதிப்பை வாங்கி, தினமும் அதைக் கேட்டேன். ரயில் பயணங்களின்போதும், மளிகைப் பொருட்களை வாங்கிக் கொண்டிருந்தபோதும், தெருவில் நடந்து சென்று கொண்டிருந்தபோதும், இரவில் தூக்கம் வராமல் தவித்த நேரங்களிலும் நான் அந்த ஆடியோவைக் கேட்டேன். என்னால் எதையும் செய்ய முடியும் என்றும், வாழ்வில் நான் விரும்பும் எதையும் என்னால் அடைய முடியும் என்றும் அதில் கூறப்பட்டதை நான் கேட்ட ஒவ்வொரு முறையும் நான் அழுதேன்.

பிறகு, நேர்மறையாகச் சிந்திக்கவும் நேர்மறையாக மனக்காட்சிப்படுத்தவும் நான் பயிற்சி செய்யத் தொடங்கினேன். என் ரத்த நாளங்கள் ஒழுங்காகவும் வலிமையாகவும் இருந்ததுபோல நான் கற்பனை செய்தேன். நான் எந்த மருந்துகளையும்

https://telegram.me/aedahamlibrary

உட்கொள்ளாததுபோலவும், என்னுடைய ரத்த அழுத்தம் இயல்பாகவும் ஆரோக்கியமாகவும் இருந்ததுபோலவும் நான் கற்பனை செய்தேன். என் கால்மூட்டுக்களில் வலியேதும் இல்லாமல் நான் மகிழ்ச்சியாக ஓடித் திரிந்ததுபோல நான் என் மனத்தில் காட்சிப்படுத்தினேன். எனக்கு ஒவ்வொரு மாதமும் மாதவிடாய் ஒழுங்காக வந்ததுபோல நான் கற்பனை செய்தேன். என் வாழ்வில் முதன்முறையாக, ஒவ்வொரு கணமும் நான் என்னுள் அன்பை உணர்ந்தேன். சிறுசிறு விஷயங்கள் குறித்து மனச்சோர்வு கொள்ளுவதை நான் முற்றிலுமாக நிறுத்தினேன். என் அன்புக்குரியவர்கள் என்னைச் சூழ்ந்திருந்தது எனக்குக் கிடைத்திருந்த ஆசீர்வாதம் என்று கருதி, அது குறித்து நான் மகிழ்ச்சி கொண்டேன்.

மூன்று மாதங்களுக்குப் பிறகு, நான் மருந்துகள் உட்கொள்ளுவதை முற்றிலுமாக நிறுத்தினேன். இன்னும் பல மாதங்கள் நான் அப்படியே தொடர்ந்த பிறகு, என் ரத்த அழுத்தம் இயல்பு நிலைக்குத் திரும்பியது. என் கால்மூட்டுக்கள் இனியும் வலிக்கவில்லை. இதில் நம்புதற்கரிய விஷயம் என்னவென்றால், எனக்கு மீண்டும் மாதவிடாய் ஏற்பட்டது.

என் வாழ்வில் நான் எதிர்கொண்ட சவால்களிலிருந்து மீளுவதற்குத் தேவையான வலிமையை எனக்குக் கொடுத்ததற்காக ஒட்டுமொத்த இரகசியம் குழுவிற்கும் நான் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். நான் வலிமையானவள் என்றும், நான் எல்லாவற்றுக்கும் தகுதியானவள் என்றும், நான் தோற்கடிக்கப்பட முடியாதவள் என்றும் நீங்கள் என்னை நம்ப வைத்துள்ளீர்கள்.

**- டீனா, ஹாங்காங்**

உங்கள் மனத்தை ஆரோக்கியத்தின் பக்கம் திருப்புவதன் மூலம் உங்கள் ஆரோக்கியத்தை உங்களால் மேம்படுத்த முடியும் என்பதை அறிவது அற்புதமாக இருக்கிறதல்லவா? நேர்மறையான

https://telegram.me/aedahamlibrary

எண்ணங்கள் உங்கள் மனத்தில் பொங்கிப் பெருகட்டும். ஆரோக்கியம் தொடர்பான நேர்மறையான காட்சிகளால் உங்கள் மனத்தையும் உடலையும் நிரப்புங்கள். மகிழ்ச்சியான மனநிலையிலும் ஆனந்தமாகவும் இருப்பதன்மீது உங்கள் கவனத்தைக் குவியுங்கள். நீங்கள் இந்த நேர்மறையான உணர்வுகள் பக்கம் உங்கள் கவனத்தைத் திருப்பும்போது, எதிர்மறையானவற்றிலிருந்து நீங்கள் விலகி வந்துவிட்டீர்கள் என்பதை நீங்கள் அறிவீர்கள்.

## வாழ்வின் பரிசைப் பெற்றுக் கொள்ளுதல்

தங்களால் தாய்மையடைய முடியும் என்ற நம்பிக்கையை முற்றிலுமாக இழந்திருந்த பல பெண்கள், **இரகசியம்** புத்தகத்தைப் படித்து அதன் கொள்கைகளைத் தங்கள் வாழ்வில் செயல்படுத்திய பிறகு தாய்மையடைந்தது பற்றிய பல கதைகள் அவர்களிடமிருந்து எங்களுக்கு வந்துள்ளன. ‘மனம் தளரச் செய்கின்ற’ சூழ்நிலை என்று எதுவும் இல்லை என்பதையும், **இரகசியம்** புத்தகத்தில் கூறப்பட்டுள்ள கொள்கைகளை நடைமுறையில் செயல்படுத்தினால் ஒவ்வொரு சூழ்நிலையிலும் நேர்மறையான விளைவுகளை உருவாக்க முடியும் என்பதையும் இக்கதைகள் உணர்த்துவதாக நான் நம்புகிறேன்.

### குழந்தை பாக்கியம்

நான் என் காதலரை மணமுடித்த நாளிலிருந்து என் கதை தொடங்குகிறது. திருமண விழாக் கொண்டாட்டங்கள் முடிந்து, வாழ்வில் எல்லாவற்றையும் ஒழுங்கமைத்தப் பிறகு, ஒரு குழந்தையை எங்கள் வாழ்விற்குள்

https://telegram.me/aedahamlibrary

கொண்டுவருவதுதான் எங்களுடைய முன்னுரிமையாக இருந்தது.

நாங்கள் ஒரு குழந்தையைப் பெற்றுக் கொள்ள முயற்சித்தபோது, ஏதோ காரணத்தால் அது எங்களுக்கு முடியாமல் போனது. எனவே, நாங்கள் ஒரு மருத்துவரை அணுகினோம். குறிப்பிட்ட சில பரிசோதனைகளுக்கு உட்படும்படி அவர் எங்களிடம் கூறினார். நாங்கள் ஏகப்பட்ட மருத்துவச் சிகிச்சைகளுக்கு உட்பட்டோம், ஆனால் என்னால் கருத்தரிக்க முடியாமல் போனதற்கான காரணத்தை யாராலும் கண்டுபிடிக்க முடியவில்லை.

நாங்கள் எப்போது குழந்தை பெற்றுக் கொள்ளவிருந்தோம் என்று எங்கள் பெற்றோரும் உறவினர்களும் அண்டைவீட்டாரும் நண்பர்களும் எங்களிடம் விசாரிக்கத் தொடங்கினர். ஆனால் எங்களால் எதுவும் கூற முடியவில்லை. திருமணமான என் தோழிகளுக்குக் குழந்தைகள் இருந்தனர். ஆனால் நானோ, என்னுடைய குட்டி தேவதைக்காக என் கண்களில் கண்ணீருடன் கடவுளிடம் பிரார்த்தனை செய்து கொண்டிருந்தேன். நான் மனம் தளர்ந்து போனேன், மிகவும் கவலைப்பட்டேன்.

ஒருநாள் என் மருத்துவர் என்னை அழைத்து, அந்த ஆண்டு இறுதிக்குள் நான் கருத்தரிக்காவிட்டால் '**ஐவிஎஃப்** ' சிகிச்சையை நான் துவக்க வேண்டியிருக்கும் என்று கூறினார். இச்செய்தி என்னை முற்றிலுமாக நிலைகுலையச் செய்தது. அந்தச் சிகிச்சைக்கு மிக அதிகச் செலவாகும் என்பதோடு, முதல் முயற்சி வெற்றியில் முடியும் என்பதற்கு எந்த உத்தரவாதமும் இருக்கவில்லை. அப்போது, ஒரு சோதிடரைக் கலந்தாலோசிக்குமாறு என்னுடைய நெருங்கிய தோழிகளில் ஒருத்தி என்னிடம் கூறினாள். அவருடைய அறிவுரை எங்களுக்கு உதவக்கூடும் என்று அவள் கருதினாள்.

என் கணவரும் நானும் முறையாக முன்னனுமதி பெற்று ஒரு சோதிடரைப் பார்க்கச் சென்றோம். அந்த சந்திப்பு

https://telegram.me/aedahamlibrary

எங்கள் வாழ்க்கையை மாற்றியது. எங்களுடைய உடல்நலப் பிரச்சனையை நாங்கள் அவரிடம் விளக்கியபோது, **இரகசியம்** திரைப்படத்தை நான் பார்த்திருந்தேனா என்று அவர் என்னிடம் கேட்டார். உண்மையில், பல ஆண்டுகளுக்கு முன்பு நான் அதைப் பார்த்திருந்தேன். “இரகசியத்தைப் பற்றி உங்களுக்கு ஏற்கனவே தெரியும் என்றால், நீங்கள் ஏன் உங்கள் பிரச்சனையை என்னிடம் கொண்டு வந்திருக்கிறீர்கள்? அதை நீங்களாகவே தீர்த்துக் கொள்ளலாமே,” என்று அவர் கூறினார். இரகசியத்தை எப்படிப் பயன்படுத்த வேண்டும் என்று அவர் எங்களுக்கு வழிகாட்டினார். அக்கணமே, இயற்கை முறையில் கருத்தரிப்பதற்கான உரிமை எனக்கு இருந்ததாக எனக்கு நானே வாக்குக் கொடுத்துக் கொண்டேன்.

அன்றிலிருந்து, என் கணவரும் நானும் இரகசியத்தைக் கடைபிடிப்பதை எங்களுடைய அன்றாட வழக்கத்தில் சேர்த்துக் கொண்டோம். இரகசியம் புத்தகத்தைப் படித்தப் பிறகு, ஒரு கர்ப்பிணிப் பெண்ணை நான் பார்த்தபோதெல்லாம், அவளைக் காணும் வாய்ப்பை எனக்குக் கொடுத்ததற்காகக் கடவுளுக்கு நன்றி கூறினேன். எனக்கு மகள்தான் பிறப்பாள் என்ற உறுதியான நம்பிக்கையுடன் நான் அவளுக்காக ஆடைகளை வாங்கத் தொடங்கினேன். ஒரு குழந்தையின் வளர்ச்சியைக் காட்டிய புகைப்படங்களை நான் சேகரித்து அவற்றை என் அலைபேசியில் சேமித்து வைத்தேன். குழந்தைகளுக்கான சோப்பை நான் பயன்படுத்தத் தொடங்கினேன். என் குழந்தையின் ஆடைகளை வைப்பதற்காக என்னுடைய அலமாரியில் நான் இடம் ஒதுக்கினேன். எங்களுடைய குட்டி தேவதைக்காக நானும் என் கணவரும் தினமும் பிரார்த்தனை செய்தோம். “ஏதேனும் நல்ல செய்தி உண்டா?” என்று என் உறவினர்கள் கேட்டபோதெல்லாம், நான் ஒரு புன்னகையுடன், “மிக விரைவில் எதிர்பாருங்கள்,” என்று அவர்களிடம் கூறினேன். எங்கள்

https://telegram.me/aedahamlibrary

மகள் ஏற்கனவே எங்களிடம் வந்து சேர்ந்துவிட்டாள் என்பதுபோல நாங்கள் நடந்து கொண்டோம்.

நான் இரகசியத்தைப் பயன்படுத்தத் தொடங்கி ஒன்பது மாதங்களுக்குப் பிறகு, வீட்டிலேயே கருத்தரிப்புச் சோதனை ஒன்றை நான் மேற்கொண்டேன். நான் கருவுற்றிருந்ததாக அதன் முடிவு தெரிவித்தது. எந்த மருத்துவ உதவியும் இல்லாமல் இயற்கையாகவே நான் தாய்மை அடைந்திருந்தேன்.

என் கண்கள் குளமாயின. நான் மட்டற்ற மகிழ்ச்சி கொண்டேன். எந்த மருத்துவச் சிகிச்சைக்கும் உட்படாமல் நான் கருவுற்றிருந்தது குறித்து என் கணவரும் பெரிதும் மகிழ்ந்தார். என்னுடைய ஒட்டுமொத்த கர்ப்பகாலமும் எந்தப் பிரச்சனையும் இன்றிச் சென்றது. ஒன்பது மாதங்களுக்குப் பிறகு, ஓர் அழகான, ஆரோக்கியமான பெண்குழந்தை எங்களுக்குப் பிறந்தாள். எனக்கு ஒரு மகன்தான் பிறப்பான் என்று பலர் என்னிடம் சொல்லி வந்திருந்தனர். ஆனால் நான் கருவுறுவதற்கு முன்பாகவே, எனக்கு மகளைக் கொடுத்துக் கடவுள் என்னை ஆசீர்வதிப்பார் என்பதை நான் அறிந்திருந்தேன்.

எனவே, கருவுறுவதில் யாருக்கேனும் பிரச்சனை இருந்தால், நான் அவர்களிடம் கூறிக் கொள்ள விரும்புவதெல்லாம் ஒன்றே ஒன்றுதான்: ஒருபோதும் நம்பிக்கை இழக்காதீர்கள், எப்போதும் நேர்மறையாக இருங்கள். பிரபஞ்சத்திடம் கேளுங்கள், நீங்கள் கேட்டது ஏற்கனவே உங்களுக்கு வழங்கப்பட்டுவிட்டதாக நம்புங்கள். உங்கள் விருப்பம் எதுவானாலும் அது நிச்சயமாக நிறைவேற்றப்படும், நீங்கள் ஆசீர்வதிக்கப்படுவீர்கள்!

**- சமிதா பி., மும்பை, இந்தியா**

பிற கர்ப்பிணிகள் குறித்து சமிதா நன்றி கூறிக் கொண்டிருந்தபோது, கருத்தரிப்புக் குறித்து அவர் நல்லவிதமாக உணர்ந்தார். இத்தனைக்கும் அவர்

https://telegram.me/aedahamlibrary

அப்போது தாய்மை அடைந்திருக்கக்கூட இல்லை. நீங்கள் எதுவொன்றைக் குறித்து நன்றியை உணருகிறீர்களோ, எதைக் குறித்து நல்லவிதமான உணர்வை அனுபவிக்கிறீர்களோ, அதை நீங்கள் உங்களிடம் கொண்டுவருகிறீர்கள்.

சமிதா தனக்குப் பிறக்கவிருந்ததாக நம்பிய மகளுக்காகப் பிரபஞ்சத்திற்கு நன்றி கூறியதோடு, இரண்டு முக்கியமான நடவடிக்கைகளையும் தன்னுடைய அன்றாட வழக்கத்தில் சேர்த்துக் கொண்டார். ஒன்று, அவர் ஒரு கர்ப்பிணிப் பெண்ணைக் கண்ட ஒவ்வொரு முறையும் கடவுளுக்கு நன்றி கூறினார். இரண்டாவதாக, அவர் தனக்குப் பிறக்கவிருந்த குழந்தைக்காகத் தன்னுடைய அலமாரியில் இடம் ஒதுக்கி அக்குழந்தைக்கு ஆடைகளையும் வாங்கி வைக்கத் தொடங்கினார்.

இவ்விரு நடவடிக்கைகளும், தனக்கு ஒரு குழந்தை பிறக்கவிருந்தது என்று நம்புவதற்கு மட்டுமல்லாமல், அக்குழந்தை **இப்போதே** வந்து கொண்டிருந்ததாக அவர் நம்புவதற்கும் அவருக்கு உதவின. பிரபஞ்சத்திற்கு வெற்றிடம் பிடிக்காது என்றும், அதனால் அது உடனடியாக அதை நிரப்பிவிடும் என்றும் கூறப்படுகிறது. சமிதாவின் விஷயத்தில் துல்லியமாக அதுதான் நிகழ்ந்திருந்தது என்பதை உங்களால் பார்க்க முடியும்.

**எவற்றை நீங்கள் மிக அதிகமாக நம்புகிறீர்களோ, அவைதான் உங்கள் வாழ்விற்குள் மிக வேகமாக வந்து சேருகின்றன. நீங்கள் நம்புகின்ற விஷயங்களை மட்டுமே உங்களால் கொண்டுவர முடியும். எனவே, நீங்கள் விரும்புவதை நீங்கள்**

https://telegram.me/aedahamlibrary

**பெறுவதற்கு, அதன்மீது நீங்கள் நம்பிக்கை கொள்ள வேண்டும்.**

**- இரகசியம் தினசரி போதனைகள்**

அடுத்தக் கதையில், **இரண்டு** முறை தாய்மையடைய விரும்பிய ஆன்ட்ரியா, அதற்கான பொருட்களையும் மனக்காட்சிப்படைப்பின் சக்தியையும் பயன்படுத்தி அதைச் சாதித்தார்.

## கற்பனையின் சக்தி

2003ம் ஆண்டின் கோடைக்காலம் அது. நான் அப்போது ஓர் உல்லாச விடுமுறையில் இருந்தேன். பொன்னிற மணலைக் கொண்ட ஒரு கடற்கரையில் இளவெயிலில் நானும் என் தாயாரும் அமர்ந்திருந்தபோது, ஓர் அற்புதமான செய்தியை அவர் என்னிடம் கூறினார். அவர் தன்னுடைய ஆறாவது குழந்தையைத் தன் வயிற்றில் சுமந்து கொண்டிருந்தார். எங்கள் இருவருக்குமே குழந்தைகள் என்றால் மிகவும் பிடிக்கும். எனவே, புதிதாகப் பிறக்கவிருந்த அக்குழந்தையின் வரவை நாங்கள் மிகுந்த ஆவலோடு எதிர்பார்த்துக் காத்திருந்தோம். என்னுடைய கடைசித் தம்பிக்கு அப்போது பதினோரு வயது.

மூன்று மாதங்களுக்குப் பிறகு நாங்கள் எடுத்த ஸ்கேனில், குழந்தைக்கு இதயத்துடிப்பு இல்லை என்பது தெரிய வந்தது. இது எங்கள் தலைமீது இடி விழுந்ததுபோல இருந்தது. என் தாயாருக்குக் கருச்சிதைவு ஏற்பட்டது. நாங்கள் நிலைகுலைந்து போனோம்.

2004ம் ஆண்டு கிறிஸ்துமஸ் பண்டிகையின்போது என் தாயார் மீண்டும் கருவுற்றார். பிறகு நான்கே மாதங்களில் அவர் அக்குழந்தையை இழந்தார். அப்போது அவருக்கு நாற்பத்திரண்டு வயது. அவருக்கு அதிக வயதாகிவிட்டது என்றும் அவருடைய சினைமுட்டைகள் போதுமான அளவு வலிமையாக இல்லை என்றும் மருத்துவர்கள்

https://telegram.me/aedahamlibrary

கூறினர். எனவே, நாங்கள் நம்பிக்கை இழந்தோம். எங்கள் வீட்டில் இனி ஒருபோதும் ஒரு குழந்தை பிறக்காது என்ற கசப்பான உண்மையை நாங்கள் ஏற்றுக் கொண்டோம்.

இரண்டு ஆண்டுகள் கழிந்தன. நாங்கள் இருவரும் இன்னும் அந்தக் குழந்தைக்காக ஏங்கினோம். அப்போதுதான் **இரகசியம்** எங்கள் வாழ்விற்குள் வந்தது. முதலில் நான் அதை சந்தேகித்தேன். பிறகு, அத்திரைப்படத்தின் டிவிடியைப் பார்க்கும்படி என் தாயார் என்னிடம் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டார். முதல் ஐந்து நிமிடங்களுக்குப் பிறகு, திரையிலிருந்து என் பார்வையை என்னால் அகற்ற முடியவில்லை. என் இதயத்திலும் மனத்திலும் ஏதோ ஒரு துள்ளல் ஏற்பட்டது. பல வாரங்கள் நான் புன்னகைத்துக் கொண்டே இருந்தேன்.

ஒருசில வாரங்களுக்குப் பிறகு நான் மனக்காட்சிப் படைப்பில் ஈடுபடத் தொடங்கினேன். பல ஆண்டுகளாக என்னிடம் இருந்து வந்திருந்த ஒரு பழைய பொம்மையை வெளியே எடுத்து, ஒவ்வோர் இரவிலும் நான் தூங்கப் போவதற்கு முன்பாக, நான் அந்த பொம்மையைப் பத்துப் பதினைந்து நிமிடங்கள் என் பக்கத்தில் படுக்க வைத்துக் கட்டியணைத்துக் கொண்டு, என் தம்பிப் பாப்பாவோ அல்லது தங்கைப் பாப்பாவோ என் கைகளில் தவழ்ந்து கொண்டிருந்ததுபோலவும், அக்குழந்தையின் இதயம் என்னுடைய இதயத்தை அடுத்துத் துடித்துக் கொண்டிருந்ததுபோலவும், அதனுடைய கதகதப்பும் அன்பும் என்னை ஆட்கொண்டிருந்ததுபோலவும் நான் கற்பனை செய்தேன். 2007ம் ஆண்டு ஆகஸ்டு 14ம் நாளன்று என்னுடைய பதினேழாவது பிறந்தநாளின்போது என் உண்மையான தம்பியையோ அல்லது தங்கையையோ நான் என் கைகளில் தாங்கிப் பிடித்திருப்பேன் என்று என்னுடைய நாட்குறிப்பேட்டில் நான் எழுதி வைத்தேன். என் தாயாரும் தன்னுடைய நாட்குறிப்பேட்டில், 2007ம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் என் தந்தையின் ஐம்பதாவது பிறந்தநாளன்று தன்னுடைய ஆறாவது

https://telegram.me/aedahamlibrary

குழந்தை தனக்குப் பிறந்திருக்கும் என்று எழுதி வைத்திருந்தார். அதை நான் அறியவில்லை.

நான் மனக்காட்சிப்படுத்தத் தொடங்கி சில மாதங்களுக்குப் பிறகு, அந்த அதிசயம் என் கைகளில் தவழ்ந்து கொண்டிருந்தது. என் தங்கைப் பாப்பாவின் இதயம் என்னுடைய இதயத்துடன் சேர்ந்து துடித்துக் கொண்டிருந்தது, அவளுடைய கதகதப்பான முகம் என் கன்னத்தோடு இழைந்து கொஞ்சியது. என் தங்கை மிக அழகாக இருந்தாள், இப்போதும் மிக அழகாக இருக்கிறாள். அவளுடைய அழகையும் கச்சிதத்தையும் வர்ணிக்க வார்த்தைகள் இல்லை. அவள்தான் எங்களுடைய நம்பிக்கையாகவும் விசுவாசமாகவும் அன்பாகவும் இருக்கிறாள். வாழ்வின் அதிசயம் அவள்.

என் வாழ்வில் உள்ள இன்னொரு கதை, இரகசியம் உண்மையிலேயே எவ்வளவு சக்திவாய்ந்தது என்பதை எடுத்துக்காட்டுகிறது. என்னுடைய இருபதாவது வயதில், கருவுறுதிறன் தொடர்பான பிரச்சனைகள் எனக்கு இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. நான் என்னுடைய வியாபாரத்தை நடத்துவதில் மும்முரமாக இருந்தேன். அதை நான் என்னுடைய பதினெட்டாவது வயதில் துவக்கியிருந்தேன். **இரகசியம்** புத்தகத்திலிருந்து நான் கற்றுக் கொண்ட விஷயங்கள்தான் அதற்கு உதவின. ஆனால் எனக்குக் கருத்தரிப்புப் பிரச்சனைகள் இருந்தது என்ற செய்தி என் இதயத்தைச் சுக்குநூறாக நொறுக்கியது. நான் ஒரு தாயாக ஆக வேண்டும் என்று எப்போதுமே விரும்பி வந்திருந்தேன். நான் என் தொழிலின்மீது என் கவனத்தைக் குவித்தேன். ஆனால் ஓரிரு ஆண்டுகளுக்குப் பிறகு, மேலும் பல பிரச்சனைகள் என் உடலில் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. நான் உடனடியாக ஏதேனும் நடவடிக்கை எடுத்தாக வேண்டியிருந்தது. எனவே, நான் தேர்ந்தெடுப்பதற்கு என்னென்ன விஷயங்கள் இருந்தன என்று நான் ஆய்வு செய்யத் தொடங்கினேன். என் வாழ்க்கை குறித்தும், பல்வேறு அற்புதமான குழந்தைகளை நேசிக்கவும் அவர்களுக்குக் கற்றுக் கொடுக்கவும் எனக்குக்

https://telegram.me/aedahamlibrary

கிடைத்திருந்த வாய்ப்புக் குறித்தும் நான் தொடர்ந்து நன்றியுடன் இருந்தேன். சரியான பாதையை நான் எப்படியும் கண்டுபிடிப்பேன் என்று நான் உறுதியாக நம்பினேன். நான் கருவுற்றிருந்ததுபோலவும் ஒரு குழந்தை என் கைகளில் தவழ்ந்ததுபோலவும் நான் மனக்காட்சிப்படுத்தத் தொடங்கினேன். என் கண்முன்னே தோன்றத் தொடங்கியிருந்த பாதை அதிகமாகப் பயணிக்கப்பட்டப் பாதைகளிலிருந்து வித்தியாசமானதாக இருந்தது, ஆனால் அதுதான் எனக்குரியது என்பதை நான் அறிந்து கொண்டேன்.

நான் என்னுடைய கருத்தரிப்புப் பிரச்சனைகளுக்கான சிகிச்சைகளுக்கு உட்படுவதென்று தீர்மானித்தேன். நான் கருவுற விரும்பினேன். நான் தேர்ந்தெடுத்திருந்தது ஒரு கடினமான பாதைதான். அதில் நான் தனியாகப் பயணிக்க வேண்டியிருந்தது அதை மேலும் அதிகக் கடினமானதாக ஆக்கியது. பல தடைகளையும் மனவேதனைகளையும் நான் எதிர்கொள்ள வேண்டியிருந்தது, ஆனால் எதிர்காலம் பிரகாசமாக இருந்ததை என்னால் காண முடிந்தது. நான் தொடர்ந்து மனக்காட்சிப்படுத்திக் கொண்டும் நேர்மறையாக நடந்து கொண்டும் இருந்தேன், ஆனால் ஏதோ விநோதமான ஒன்றை நான் அனுபவித்துக் கொண்டிருந்தேன். ஒரு குழந்தையுடன் என்னுடைய எதிர்காலத்தை நான் கற்பனை செய்ய முயற்சித்தபோது, அதை என்னால் செய்ய முடியவில்லை. என் மனம் இரண்டு குழந்தைகளைப் பார்த்தது. நான் சென்ற இடமெல்லாம் நான் இரட்டைக் குழந்தைகளைப் பார்த்தேன். நான் மனக்காட்சிப்படுத்தியபோதும் இரட்டைக் குழந்தைகளையே பார்த்தேன். நான் அதைக் கண்டுகொள்ளாமல் இருக்க முயற்சித்தேன், ஆனால் என் மனத்தில் அது மிக வலிமையான ஒரு காட்சியாக இருந்தது. எனவே, இரட்டைக் குழந்தைகளை மனக்காட்சிப்படுத்துவதென்று நான் தீர்மானித்தேன். இரட்டைக் குழந்தைகளின் புகைப்படம் ஒன்றை என்னுடைய மனக்காட்சிப் பலகையில் நான் குத்தி

https://telegram.me/aedahamlibrary

வைத்தேன். என்னுடைய கனவு நனவாவதற்கான பாதையில் நான் தொடர்ந்து முன்னேறிச் சென்று கொண்டிருந்தேன். என்னுடைய இரண்டாவது சுற்றுச் சிகிச்சை வெற்றிகரமாக அமைந்திருந்ததாகவும் நான் கருவுற்றிருந்ததாகவும் எனக்குத் தகவல் வந்தபோது என் இதயம் மகிழ்ச்சியால் துள்ளியது. ஆனால், எல்லாவற்றையும்விட மிகச் சிறந்த செய்தி, நான் எட்டு வாரம் கர்ப்பமாக இருந்தபோது எடுக்கப்பட்ட ஸ்கேன் மூலமாக வந்தது. நான் **இரட்டைக் குழந்தைகளைச்** சுமந்து கொண்டிருந்தேன்!

என்னால் அதை நம்ப முடியவில்லை. கடந்த சில மாதங்களாக நான் கற்பனை செய்து வந்திருந்த அனைத்தும் என் கண்களுக்கு முன்னால் மெய்யாகிக் கொண்டிருந்தன. நான் ஒரு தாயாக ஆகவிருந்தேன் என்பதோடு மட்டுமல்லாமல், நான் இரட்டைக் குழந்தைகளுக்குத் தாயாகவிருந்தேன். இப்போது என் மகன்களுடன் நான் செலவிடுகின்ற ஒவ்வொரு கணமும் என்னுள் நன்றியும் அன்பும் ஊற்றெடுத்து என்னைத் திக்குமுக்காடச் செய்கின்றன. **உங்களால் எதை நம்ப முடிகிறதோ அதை உங்களால் அடைய முடியும்** என்ற கூற்றின் உண்மையான அர்த்தத்தைப் புரிந்து கொள்ள நான் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பது குறித்து நான் மிகுந்த நன்றியை உணருகிறேன்.

**- ஆன்ட்ரியா, அயர்லாந்து**

நீங்கள் விரும்புவதை நீங்கள் பெற்றிருப்பது போன்ற காட்சிகளை நீங்கள் உங்கள் மனத்தில் உருவாக்கும்போது, நீங்கள் விரும்புவது இக்கணமே உங்களிடம் இருப்பது போன்ற எண்ணங்களையும் உணர்வுகளையும் நீங்கள் உருவாக்கிக் கொண்டிருக்கிறீர்கள் என்பதுதான் மனக்காட்சிப்படைப்பு மிகவும் சக்திவாய்ந்ததாக இருப்பதற்குக் காரணமாகும். சக்திவாய்ந்த சமிக்கைகளைப் பிரபஞ்சத்திற்கு நீங்கள் அனுப்பிக்

https://telegram.me/aedahamlibrary

கொண்டிருக்கிறீர்கள். ஈர்ப்பு விதி அந்தச் சமிக்கைகளைப் பெற்றுக் கொண்டு, உங்கள் வாழ்வின் சூழல்களாக அவற்றை உங்களிடம் திருப்பி அனுப்பும். அச்சூழல்கள் நீங்கள் உங்கள் மனத்தில் கற்பனை செய்தவற்றைப்போலவே இருக்கும்.

பௌதிகப் பொருட்களை மாற்றுவதற்கான அளப்பரிய சக்தி மனத்திற்கு எங்கிருந்து வந்தது? பௌதிக உலகில் நாம் பார்க்கின்ற எல்லாமே 'மனத்தால்' உருவாக்கப்பட்டதுதான் என்று பண்டைய பாரம்பரியங்கள் ஆணித்தரமாகக் கூறுகின்றன. எல்லாப் பருப்பொருட்களும் உண்மையில் மனப்படைப்புகள்தாம். அதனால்தான் மனத்தால் எதையும் மாற்ற முடிகிறது.

## உங்கள் குழந்தையை குணப்படுத்துதல்

சில சமயங்களில் வாழ்க்கை ஒரு பெரிய சவாலை நம்மை நோக்கி வீசும். பெற்றோர்களுக்கு, தங்கள் குழந்தைகளின் உடல்நலன் உண்மையிலேயே ஆபத்திற்கு உள்ளாகியிருப்பதுபோலத் தோன்றும்போது அது அவர்களுக்கு உச்சகட்ட சவாலாக இருக்கும். நான் இங்கு உங்களோடு பகிர்ந்து கொள்ளவிருக்கின்ற கதைகளில் வரும் பெற்றோர்கள், இரகசியத்தின் ஞானத்தைப் பயன்படுத்தி எப்படித் தங்களை குணப்படுத்திக் கொள்ளுவார்களோ அதே விதத்தில் தங்கள் குழந்தைகளை குணப்படுத்துவதென்று தீர்மானித்தனர்.

### உயிர் மீட்டெடுக்கப்பட்டது

https://telegram.me/aedahamlibrary

ஒருசில ஆண்டுகளுக்கு முன்பு என் தோழி ஒருத்தி **இரகசியம்** புத்தகத்தை எனக்குக் கொடுத்தாள். என்றேனும் ஒருநாள் அதைப் படிக்கலாம் என்று அதை நான் என் அலமாரியில் வைத்துவிட்டேன். அது அங்கேயே உட்கார்ந்திருந்தது. பிறகு ஒருநாள் நான் அதை எடுத்துப் படிக்கத் தொடங்கியபோது, என்னுடைய மூன்று குழந்தைகளில் ஒரு குழந்தை என் கவனத்தைத் திசை திருப்பினான். அன்றிரவு வெகு நேரம் கழித்து, நான் இணையத்தளத்தில் எதையோ பார்த்துக் கொண்டிருந்தபோது மீண்டும் **இரகசியம்** புத்தகத்தை நான் காண நேர்ந்தது. ஒருசில நாட்களுக்குள் நான் அந்தப் புத்தகத்தை முதன்முறையாக முழுமையாகப் படித்து முடித்தேன். பிறகு இரகசியம் திரைப்படத்தை என் கணவரோடு சேர்ந்து டிவிடியில் பார்த்துவிட்டு, என்னுடைய நன்றிக் குறிப்பேட்டில் எழுதத் தொடங்கினேன். “குறிப்பிட்ட ஒரு பொருள் எனக்கு ஒருபோதும் கிடைக்காது” என்ற மனப்போக்கிலிருந்து நான் விலகி, “குறிப்பிட்ட ஒரு பொருள் என்னுடையதாக ஆகப் போகிறது” என்ற மனநிலைக்கு மாறினேன்.

இரண்டு வாரங்களுக்குப் பிறகு, என் கணவர் தொழில் நிமித்தமாகச் சீனாவுக்குச் சென்றார். என் கடைக்குட்டி மகன் லியம் பிறந்து அப்போது ஏழு வாரங்கள்தான் ஆகியிருந்தன. அவன் குறைமாதத்தில் பிறந்திருந்தான். பிறக்கும்போதே நுரையீரல் அழற்சியுடன் அவன் பிறந்தான். எனவே, அவன் உடல்நலம் சரியில்லாமல் இருந்தான். இரண்டு நாட்களுக்குப் பிறகு, இரவு முழுவதும் அவன் தூங்கவில்லை, அவனுடைய நிறமும் மங்கத் தொடங்கியது. எனவே, நான் அவனை எடுத்துக் கொண்டு மருத்துவமனைக்கு விரைந்தேன். நாங்கள் அங்கு போய்ச் சேருவதற்குள் அவன் சுவாசிப்பதை நிறுத்தியிருந்தான். அவனுடைய உடல்நிலை வெகுவாக மோசமடைந்திருந்தது. பற்றுயிரிகளால் அவனுக்கு மூளையுறை அழற்சி ஏற்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

https://telegram.me/aedahamlibrary

அதைத் தொடர்ந்து வந்த ஒருசில மணிநேரத்தில், லியமின் இதயம் நான்கு முறை தன் துடிப்பை நிறுத்தியது. ஒவ்வொரு முறையும் அவனை மீண்டும் உயிர்ப்பிக்க வேண்டியிருந்தது. ஒரு கட்டத்தில், அவனுடைய நிலைமை மிகவும் மோசமாக இருந்ததாகவும், நான் என் கணவரை வரவழைக்க வேண்டும் என்றும் அவனுடைய மருத்துவர் கூறினார்.

அது ஒரு கொடுமையான நேரம். இயல்பாக எனக்குப் பைத்தியம் பிடித்திருந்திருக்க வேண்டும். ஆனால் நான் அவ்வளவு நேரமும் அமைதியாக இருந்தேன். என் மகன் வீடு திரும்பிவிடுவான் என்றும், அவன் விரைவில் முழுமையாக குணமடைந்துவிடுவான் என்றும் நான் உறுதியாக நம்பினேன். முதல் நாள் இரவில் நானும் என் தாயாரும் மருத்துவமனையில் அவனுடன் இருந்தோம். என் கணவர் திரும்பி வருவதற்காக நாங்கள் காத்துக் கொண்டிருந்தோம். அச்சமயத்தில், நான் என் வாழ்வில் எவற்றையெல்லாம் குறித்து நன்றியுடன் இருந்தேனோ, அவற்றை நான் பட்டியலிட்டேன்:

நான் வேகமாக நடவடிக்கை எடுத்து என் மகனை மருத்துவமனைக்கு அழைத்து வந்ததற்காக நான் நன்றியுணர்வு கொண்டேன்.

என் மகனை அக்கறையோடு கவனித்துக் கொண்டிருந்த மருத்துவர்கள் மற்றும் செவிலியர் குறித்து நான் நன்றியுணர்வு கொண்டேன்.

சீனாவிலிருந்து பதினைந்து மணிநேர விமானப் பயணம் மேற்கொண்டிருந்த என் கணவர் திரும்பி வரும்வரை எனக்கு ஆதரவாக இருந்த என்னுடைய தோழியர் குறித்து நான் நன்றியுணர்வு கொண்டேன்.

மோசமான விளைவை நான் ஒருபோதும் நினைக்கவில்லை. நேர்மறையான விளைவைப் பற்றி மட்டுமே நான் சிந்தித்தேன். அது என்னை அதிக வலிமையானவளாக ஆக்கியது. உண்மையில், என்னுடைய அகவலிமை தொடர்ந்து அதிகரித்தபோது என் மகனும் மேன்மேலும் நலமடைந்தான். அவனுடைய

https://telegram.me/aedahamlibrary

உடல்நிலையில் ஏற்பட்டுக் கொண்டிருந்த முன்னேற்றத்தை முகநூலில் தினமும் நான் பதிவு செய்தேன். அவனுடைய நிலைமை எவ்வளவு மோசமாக இருந்தது என்று கூறுவதற்கு பதிலாக, தினமும் நிகழ்ந்த நல்ல விஷயங்களை நான் பதிவு செய்தேன். ஒவ்வொரு பதிவின் முடிவிலும் '**இரகசியம்** ' என்று நான் எழுதினேன்.

இறுதியில், லியம் வீடு திரும்பக்கூடிய அளவுக்கு நலம் பெற்றான். அவன் இப்படிப்பட்ட மகிழ்ச்சியான சூழலில் வீடு திரும்பிக் கொண்டிருந்ததைக் கண்டு தாங்கள் ஆச்சரியம் அடைந்ததாக மருத்துவப் பணியாளர்கள் அனைவரும் என்னிடம் கூறினர். முதல் நாள் இரவைக்கூட அவனால் சமாளிக்க முடியாது என்று உறுதியாக நம்பியிருந்த அவர்கள், நான் முற்றிலும் அமைதியாக இருந்திருந்ததைக் கண்டு வியந்தனர். "நீங்கள் எப்போதும் உங்கள் கையில் வைத்திருக்கின்ற புத்தகம் பைபிளா?" என்று ஒரு மருத்துவர் என்னிடம் கேட்டார். நான் ஏன் அவ்வளவு அமைதியாக இருந்தேன் என்பதையும், நான் எதை நம்பினேன் என்பதையும், நான் என் கையில் வைத்திருந்த புத்தகம் **இரகசியம்** என்றும் நான் அவரிடம் கூறினேன்.

நான் இன்றும் இரகசியத்தைக் கடைபிடித்து வாழ்கிறேன். நான் தினமும் இரவில் அன்றைய நாளுக்கு நன்றி தெரிவித்து என் ஐபோனில் ஒரு குறிப்பை எழுதிக் கொள்ளுகிறேன். என்னுடைய நன்றிக் குறிப்பேட்டிலும் நான் எழுதுகிறேன்.

"பெக்கி, நீ எப்போதும் தேவதைக் கதைகளை விரும்புகிறாய். தேவதைக் கதைகள் ஒருபோதும் உண்மையாவதில்லை," என்று என் தாயார் அடிக்கடிக் கூறுவார். அவர் கூறியதை நான் நம்பியதுபோல நான் பாசாங்கு செய்தேன். ஆனால் ஒவ்வோர் இரவும் நான் தூங்கச் சென்றபோது, எனக்கு நிகழவிருந்த அற்புதமான விஷயங்கள் அனைத்தைப் பற்றியும் சிந்தித்தபடியே நான் தூங்கினேன். நான் கேட்டவற்றில் பெரும்பாலானவற்றை நான் பெற்றுள்ளேன். ஆனால் சில

https://telegram.me/aedahamlibrary

கடினமான சூழ்நிலைகளையும் நான் எதிர்கொண்டுள்ளேன். ஆனால், நல்ல சூழ்நிலைகள், கடினமான சூழ்நிலைகள் ஆகிய இரண்டையுமே நான்தான் என் வாழ்விற்குள் கவர்ந்திழுத்திருந்தேன் என்பதை **இரகசியம்** புத்தகத்தைப் படித்தபோதுதான் நான் புரிந்து கொண்டேன்.

நான் முற்றிலுமாக மாறிவிட்டேன். என்னால் எதையும் செய்ய முடியும். ஏனெனில், முட்டுக்கட்டைகள் என்னுடைய கடந்தகாலத்தோடு போய்விட்டன.

**- ரெபெக்கா டி., பிர்மிங்காம், இங்கிலாந்து**

ரெபெக்காவின் நன்றியுணர்வு, நம்பிக்கை, தடுமாற்றமற்ற நன்னம்பிக்கை மனப்போக்கு ஆகியவைதான் அவர் தன்னுடைய மகனை குணப்படுத்துவதற்கு அவருக்கு உதவிய முக்கியக் காரணிகளாகும். லியமின் உடல்நிலை மிகவும் மோசமடைந்தபோதுகூட, நன்றியுடன் இருப்பதை ரெபெக்கா ஒருபோதும் நிறுத்தவில்லை.

உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள ஆசீர்வாதங்களைக் கணக்கிடுமாறு மக்கள் கூறி நீங்கள் கேட்டிருப்பீர்கள். நீங்கள் எவற்றையெல்லாம் குறித்து நன்றியை உணருகிறீர்களோ, அவற்றை நீங்கள் நினைத்துப் பார்க்கும்போது, நீங்கள் உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள ஆசீர்வாதங்களைக் கணக்கிட்டுக் கொண்டிருக்கிறீர்கள் என்று அர்த்தம். நீங்கள் கடைபிடிக்கக்கூடிய மிகவும் சக்திவாய்ந்த ஒரு நடவடிக்கை இது. இது உங்களுடைய ஒட்டுமொத்த வாழ்க்கையையும் மாற்றியமைக்கும்!

**ஆழ்ந்த நன்றியுணர்வை அனுபவிப்பதற்கு, நீங்கள் ஓரிடத்தில் அமர்ந்து, நீங்கள் எவற்றையெல்லாம் குறித்து நன்றியை உணருகிறீர்களோ அவற்றைப்**

https://telegram.me/aedahamlibrary

**பட்டியலிட்டுக் கொள்ளுங்கள். உங்கள் கண்கள் குளமாகும்வரை உங்கள் பட்டியலில் தொடர்ந்து எழுதிக் கொண்டே இருங்கள். உங்கள் முகத்தில் கண்ணீர் வழிந்தோடும்போது, உங்கள் இதயத்தைச் சுற்றியும் உங்களுடைய அகம் நெடுகிலும் மிக அழகான ஓர் உணர்வை நீங்கள் அனுபவிப்பீர்கள். உண்மையான நன்றியுணர்வு என்பது இதுதான்.**

**- இரகசியம் தினசரி போதனைகள்**

## சிக்கலான மகப்பேறு சுபமாக முடிந்தது

2013ம் ஆண்டு ஜனவரி மாதத்தில், நான் கருவுற்றிருந்ததைப் பரிசோதனை முடிவு உறுதிப்படுத்தியது. எனக்கு ஏற்கனவே ஓர் அழகான மகள் இருந்தாள். நானும் என் கணவரும் இன்னொரு குழந்தை பெற்றுக் கொள்ள மிகவும் ஆர்வமாக இருந்தோம்.

என்னுடைய மகப்பேறு கச்சிதமாகப் போய்க் கொண்டிருந்தது. பன்னிரண்டாவது வாரத்தில் எனக்கு ஒரு ஸ்கேன் எடுக்கப்பட்டது. எங்கள் குழந்தை ஆரோக்கியமாக இருந்ததாக என்னிடம் கூறப்பட்டது. ஆனால், இருபதாவது வாரத்தில் இன்னொரு ஸ்கேன் எடுக்கப்பட்டபோது, எல்லாம் மாறியிருந்தது. என் குழந்தையின் தலையின்மீது ஒரு பெரிய கட்டி இருந்ததை எனக்கு ஸ்கேன் எடுத்தவர் கவனித்தார். அது நல்ல செய்தி அல்ல என்பதை அவருடைய முகத்திலிருந்து நான் அறிந்து கொண்டேன். இருபத்து நான்கு மணிநேரத்திற்குள், நான் ஒரு சிறப்பு மருத்துவரைச் சந்திக்கச் சென்றேன்.

அங்கு எனக்கு இன்னொரு ஸ்கேன் எடுத்தனர். என் குழந்தையின் தலையின்மீது இருந்த கட்டி, உண்மையில், திரவம் அடங்கிய ஒரு பை என்றும், அது என் குழந்தையின் மூளையின்மீது அழுத்தம் ஏற்படுத்தக்கூடிய ஆபத்து இருந்தது என்றும், அவ்வாறு அழுத்தம் ஏற்பட்டால் அது கர்ப்பத்திலேயே என்

https://telegram.me/aedahamlibrary

குழந்தைக்கு ஒரு தீவிர ஊனத்தை ஏற்படுத்தும் என்றும் அந்த மருத்துவர் விளக்கினார். என் குழந்தை அசைந்து கொண்டிருந்ததையும் என்னை எட்டி உதைத்துக் கொண்டிருந்ததையும் என்னால் உணர முடிந்தது. நான் இப்படிப்பட்ட ஒரு மோசமான சூழலில் சிக்குவேன் என்று நான் ஒருபோதும் கற்பனை செய்திருக்கவில்லை. என் குழந்தைக்கு நிச்சயமாக ஏதேனும் ஓர் ஊனம் ஏற்படும் என்று கூறிய அந்த மருத்துவர், ஆனால் அந்த ஊனம் எவ்வளவு தீவிரமானதாக இருக்கும் என்பதை இந்தக் கட்டத்தில் தன்னால் கூற முடியாது என்றும் தெரிவித்தார். என் குழந்தை குருடாகவோ, செவிடாகவோ, அல்லது பேசும் திறன் இன்றியோ பிறப்பதற்கான வாய்ப்பு இருந்தது என்றும் அவர் கூறினார். மூளை எந்த அளவு பாதிக்கப்படும் என்பதைக் காலப்போக்கில்தான் சொல்ல முடியும் என்று அவர் கூறிவிட்டார். என் கருவை அப்போதே கலைத்துவிடும்படி எனக்குப் பரிந்துரைக்கப்பட்டது. என்னுடைய நிலைமையில் இருந்த பெரும்பாலான பெண்கள் கருக்கலைப்பைத்தான் தேர்ந்தெடுப்பர் என்று கூறிய அந்த மருத்துவர், தங்கள் குழந்தை எத்தகைய ஊனத்துடன் பிறக்கும் என்பதைத் தெரிந்து கொள்ளப் பொறுமையாகக் காத்திருப்பதைப் பெரும்பாலான மக்களால் கையாள முடிவதில்லை என்று அதற்குக் காரணம் கற்பித்தார்.

அக்கணத்தில் என் குழந்தைக்கு எந்தக் குறையும் இருக்கவில்லை. அவளுடைய மூளை ஆரோக்கியமாக இருந்தது. நான் என் குழந்தைக்காக அழுதது உண்மைதான், ஆனால் நான் ஓர் ஆரோக்கியமான குழந்தையைப் பெற்றெடுப்பதை உறுதி செய்வதற்கு, **இரகசியம்** புத்தகத்திலிருந்து நான் கற்றுக் கொண்டவற்றை நான் பயன்படுத்தத் தீர்மானித்தேன். நான் கருக்கலைப்புச் செய்ய விரும்பவில்லை என்றும், என் கர்ப்பத்தைத் தொடர விரும்பியதாகவும் நான் என் மருத்துவரிடம் கூறினேன்.

https://telegram.me/aedahamlibrary

பிறகு நான் அந்த மருத்துவமனையிலிருந்து வெளியேறி, என் கணவருடன் ஒரு தெரு வழியாக நடந்து சென்று கொண்டிருந்தபோது, அஞ்சலட்டை ஒன்று காற்றில் பறந்து வந்து என் காலணிக்கு அடியில் மாட்டிக் கொண்டது. நான் குனிந்து அதை எடுத்தேன். அந்த அட்டை வெள்ளை நிறத்தில் இருந்தது. அதில் கருப்பு எழுத்துக்களில், "கருக்கலைப்பு - ஒருபோதும் அதைச் செய்யாதீர்கள்" என்று பெரிதாக எழுதப்பட்டிருந்தது. இது எனக்கு அதிர்ச்சியூட்டியது. என் கர்ப்பத்தைத் தொடருவதென்று நான் மேற்கொண்டிருந்த தீர்மானம் சரியானதுதான் என்பதற்கான ஓர் அறிகுறியாக நான் அதை எடுத்துக் கொண்டேன்.

நான் நேராக வீட்டிற்குச் சென்று, என்னுடைய மகப்பேறுக் காலம் நெடுகிலும், என் குழந்தை ஆரோக்கியமாக வளர்ந்து கொண்டிருந்ததாக நான் என் மனத்தில் காட்சிப்படுத்தத் தீர்மானித்தேன். என் மகளின் மூளையை ஓர் உலோகத் துண்டு மூடியிருந்ததுபோலவும், அது அந்தத் திரவப் பை அவளுடைய மூளையை அழுத்துவதிலிருந்து தடுத்து அவளுடைய மூளையைப் பாதுகாத்துக் கொண்டிருந்ததுபோலவும் நான் கற்பனை செய்தேன். நான் ஓர் ஆரோக்கியமான குழந்தையைப் பெற்றெடுத்ததுபோல நான் கற்பனை செய்தேன். மருத்துவரிடம் செல்லுவதற்கான நாட்களை நான் ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருந்தேன். ஏனெனில், ஒவ்வொரு முறையும், என் குழந்தை ஆரோக்கியமாக இருந்ததாக என்னுடைய மருத்துவர் கூறுவார் என்பதை நான் அறிந்திருந்தேன். என் மகள் தன்னுடைய அக்காவுடன் சேர்ந்து விளையாடிக் கொண்டிருந்ததுபோல நான் என் மனத்தில் காட்சிப்படுத்தினேன். எனக்கு ஓர் ஆரோக்கியமான குழந்தை பிறந்திருந்ததாக நினைத்து தினமும் நான் நன்றி கூறினேன்.

என்னுடைய மகப்பேறுக் காலம் நெடுகிலும் நான் தொடர்ந்து என் மருத்துவரிடம் சென்று என்னைப் பரிசோதித்துக் கொண்டேன். ஒவ்வொரு முறையும், என்

https://telegram.me/aedahamlibrary

குழந்தையிடம் எந்தக் குறையும் இல்லை என்று என் மருத்துவர் கூறினார். ஆனால் என் குழந்தை ஆரோக்கியமாக வளர்ந்து கொண்டிருந்தது அவரை வியப்புக்குள்ளாக்கியது. **முப்பத்தேழாவது வாரத்தில்** நான் கடைசி முறையாக அவரிடம் பரிசோதனைக்குச் சென்றபோது, என் குழந்தையின் தலையின்மீது இருந்த திரவப் பை வளர்ந்திருக்கவே இல்லை என்றும், அது என் குழந்தையின் மூளையின்மீது எந்த அழுத்தத்தையும் ஏற்படுத்தியிருக்கவில்லை என்றும், நான் ஓர் ஆரோக்கியமான குழந்தையைப் பெற்றெடுப்பேன் என்றும் அவர் என்னிடம் தெரிவித்தார். என் குழந்தைக்கு வந்திருந்தது போன்ற ஒரு பிரச்சனை ஒரு நேர்மறையான விதத்தில் முடிந்திருந்ததைத் தான் அரிதாகவே பார்த்திருந்ததாகவும் அவர் கூறினார்.

எங்களுடைய மகள் ஸ்கார்லட் எம்மி, 2013ம் ஆண்டு அக்டோபர் 2ம் நாள் புதன்கிழமையன்று பிறந்தாள். அவள் முற்றிலும் கச்சிதமானவளாக இருக்கிறாள்! அவள் **அழகாகவும் ஆரோக்கியமாகவும்** இருக்கிறாள்! அவளுக்குச் சிகிச்சையளித்திருந்த அனைத்து மருத்துவர்களும் அவளைப் பார்த்துவிட்டு, அவளுடைய மூளை பாதிக்கப்படாமல் இருந்தது குறித்துத் தங்களுடைய ஆச்சரியத்தை வெளிப்படுத்தினர்.

நான் முதன்முறையாகப் பரிசோதனைக்குச் சென்றபோது, என் குழந்தை நிச்சயமாக ஏதோ ஒரு விதத்தில் பாதிக்கப்படுவாள் என்றும், அந்த பாதிப்பு எவ்வளவு தீவிரமானதாக இருக்கும் என்பது தங்களுக்குத் தெரியாது என்றும் மருத்துவர்கள் என்னிடம் கூறினர். அவர்களுடைய கணிப்பு தவறு என்று நிரூபணமாகியது. நான் நேர்மறையாகச் சிந்தித்ததும் நேர்மறையாகச் செயல்பட்டதும் நான் தாக்குப்பிடிப்பதற்கான வலிமையை எனக்குக் கொடுத்திருந்ததோடு, என் குழந்தை எந்தச் சிக்கலுமின்றி ஆரோக்கியமாக வளருவதற்கான வலிமையையும் அவளுக்குக் கொடுத்திருந்தது என்பதில் எனக்கு எந்த சந்தேகமும் இல்லை.

https://telegram.me/aedahamlibrary

அவளுக்கு ஐந்து மாதங்கள் ஆனபோது, அந்தத் திரவப் பையை அகற்றுவதற்கு அவளுக்கு ஒரு சிறிய அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. அவள் இப்போது இயல்பாக வளர்ந்து வருகிறாள்.

அவளுடைய ஆரோக்கியத்திற்கும் என்னுடைய வலிமைக்கும் இரகசியத்திற்குத்தான் நான் நன்றி கூற வேண்டும். அவளை நான் பார்க்கும் ஒவ்வொரு முறையும், அவள் கச்சிதமாக இருப்பதைக் கண்டு நான் பிரமிக்கிறேன்! அதிசயங்கள் நிச்சயமாக நிகழத்தான் செய்கின்றன!

**- எமிலி, லண்டன், இங்கிலாந்து**

அடுத்தக் கதையில், ஃபிரான்ஸியின் மகன் கைல் உயிர்பிழைப்பதற்கு, நம்பிக்கை முற்றிலும் இன்றியமையாததாக இருந்தது. ஏனெனில், அவன் தன் இதயத்தில் ஓர் ஓட்டையுடன் குறைமாதத்திலேயே பிறந்துவிட்டான்.

## கைலின் இதயம்

என் மகன் கைல் ஒன்பது வாரங்கள் முன்னதாகவே பிறந்துவிட்டான். அளவில் அவன் மிகச் சிறியவனாக இருந்தபோதிலும், மிக வலிமையானவனாக இருந்தான். நான் என் பிரசவத்திற்காக அறுவைச் சிகிச்சை அறையில் இருந்தபோது, அவனுடைய நுரையீரல்கள் வளர்ச்சியடைந்திருக்காததால் அவன் அழ மாட்டான் என்று மருத்துவர்கள் என்னை முன்கூட்டியே எச்சரித்திருந்தனர். ஆனால் ஒருசில நிமிடங்களில் ஒரு சத்தம் எனக்குக் கேட்டது. “அது என்ன சத்தம்?” என்று நான் கேட்டதற்கு, “உங்கள் மகன்!” என்று ஒரு செவிலி பதிலளித்தார். அவனுடைய அழுகைச் சத்தம் அறுவைச் சிகிச்சை அறைக்கு வெளியே இருந்த தனக்கும் கேட்டதென்று பின்னர் என் கணவர் கூறினார்.

கைல் நலமடைவதற்கு நீண்ட காலம் ஆகும் என்று எங்களிடம் கூறப்பட்டது. ஒவ்வொரு நாளும்

https://telegram.me/aedahamlibrary

அவனுடைய வலிமையையும் உற்சாகத்தையும் கண்டு நான் அதிசயித்தேன். அவன் பிறந்து ஐந்து வாரங்களுக்குப் பிறகு வீடு திரும்பினான். அவனுக்கு மருத்துவரீதியான வேறு எந்த உதவியும் தேவைப்படவில்லை. மருத்துவர்கள் இதை ஓர் அதிசயம் என்று அழைத்தனர்!

துரதிர்ஷ்டவசமாக, அவனுடைய இதயத்தில் ஓர் ஓட்டை இருந்தது. அவனுக்கு இரண்டு வயது ஆகும்போது அது சரிசெய்யப்பட வேண்டியிருந்தது. அந்த ஓட்டையின் அளவைப் பார்த்த மருத்துவர்கள், அந்த அளவிலான ஓர் ஓட்டை தானாகவே மூடாது என்றும், என் குழந்தைக்கு இதய அறுவைச் சிகிச்சை தேவைப்படும் என்றும் எங்களிடம் கூறினர்.

அவனுடைய இதயம் தானாகவே மூடிக் கொண்டதுபோல தினமும் மனக்காட்சிப்படுத்திக் கொண்டு, "கைலின் இதயம் ஆரோக்கியமாக இருக்கிறது! கைலின் இதயம் ஆரோக்கியமாக இருக்கிறது!" என்று மீண்டும் மீண்டும் கூறும்படி என் அத்தை என்னிடம் கூறினார். அவர் கூறியபடியே நான் தினமும் மனக்காட்சிப்படைப்பில் ஈடுபட்டேன், அவர் கற்றுக் கொடுத்த மந்திரத்தை மீண்டும் மீண்டும் கூறினேன்.

இதய அறுவைச் சிகிச்சைக்கு முன்பாகக் கைலைப் பரிசோதிப்பதற்காக முதன்முறையாக நாங்கள் அவனை ஓர் இதயநோய் மருத்துவரிடம் அழைத்துச் சென்றபோது, அவர் வழக்கமான பரிசோதனைகளைச் செய்துவிட்டு, **ஈசிஜி** மற்றும் அல்ட்ராசவுன்டு பரிசோதனைகளையும் மேற்கொண்டார். கைலின் இதயத்தில் இருந்த ஓட்டை 50 சதவீதத்திற்கும் அதிகமாக மூடிவிட்டிருந்தது அப்பரிசோதனைகளின் வாயிலாகத் தெரிய வந்தது. எனவே, அவனுடைய அறுவைச் சிகிச்சை ஆறு மாதங்களுக்குத் தள்ளிப்போடப்பட்டது. இதயத்தைத் திறந்து அறுவைச் சிகிச்சை செய்வதற்கு பதிலாக, இதயத்தைத் திறக்காமல் மாற்று வழியில் சிகிச்சையளிப்பதற்கான சாத்தியக்கூறு இருந்ததாகவும் கூறப்பட்டது. என் குழந்தையின் இதயம் ஆரோக்கியமாக

https://telegram.me/aedahamlibrary

இருந்ததாக நான் தொடர்ந்து மனக்காட்சிப்படுத்தினேன். ஆறு மாதங்களுக்குப் பிறகு அந்த ஓட்டை மேலும் அதிகமாக மூடியிருந்தது.

அவனுடைய மருத்துவர் மீண்டும், "நாம் சற்றுப் பொறுத்திருக்கலாம்," என்று கூறினார். நாங்கள் காத்திருந்தோம், கைல் ஆரோக்கியமாக வளருவதை கவனித்து வந்தோம். ஓர் அறையின் குறுக்கே நடந்து சென்றால்கூட மூச்சிரைத்த அவன், இப்போது உச்ச வேகத்தில் ஓடிக் கொண்டிருக்கிறான். அவன் மூச்சு வாங்கக்கூட நிற்காமல் ஓடுகிறான். நான் தொடர்ந்து மனக்காட்சிப்படுத்தினேன், தொடர்ந்து நம்பினேன்.

இதய அறுவைச் சிகிச்சை மருத்துவருடனான எங்களுடைய கடைசி சந்திப்பின்போது, வழக்கமான பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டப் பிறகு, அவர் உற்சாகமாக ஓடி வந்து, "நான் உங்களை இங்கு இனி ஒருபோதும் பார்க்க விரும்பவில்லை. ஓட்டை மூடிவிட்டது," என்று கூறினார். அவர் கைலின் எக்ஸ்ரே படத்தை எங்களிடம் காட்டினார். அவனுடைய ஓட்டை உண்மையிலேயே மூடியிருந்தது. அது ஒரு மிகப் பெரிய அதிசயம் என்று அந்த மருத்துவர் கூறினார். அவ்வளவு பெரிய ஓட்டை அவ்வளவு குறுகிய காலத்தில் மூடி அவர் ஒருபோதும் பார்த்திருக்கவில்லை.

இரகசியத்தின் சக்தியால் என் மகனுக்கு உண்மையிலேயே ஒரு புதிய வாழ்க்கை வழங்கப்பட்டுள்ளது.

**- ஃபிரான்ஸி கே., டாயில்ஸ்டவுன், பென்சில்வேனியா, அமெரிக்கா**

ஒருவர் ஆரோக்கியம் தொடர்பான ஒரு நெருக்கடியில் சிக்கியிருக்கும்போது, ஒரு நேர்மறையான விளைவு ஏற்படும் என்று எந்தத் தடுமாற்றமும் இன்றித் தொடர்ந்து எப்படி அவரால் நம்ப முடியும் என்று நீங்கள் யோசிக்கக்கூடும். இந்தக் கதைகள் எடுத்துக்காட்டுவதைப்போல, மன

https://telegram.me/aedahamlibrary

உறுதியின் நோக்கமும் சக்தியும் எந்தவொரு பாதகமான சூழ்நிலையையும் நிகழ்வையும்விட அதிக வலிமையானவையாகும்.

## ஒரு செல்லப் பிராணியை குணப்படுத்துதல்

நம்மையோ அல்லது நம்முடைய குழந்தைகளையோ குணப்படுத்துவதற்கு இரகசியத்தின் எந்தக் கொள்கைகளை நாம் பயன்படுத்துகிறோமோ, நம்முடைய செல்லப் பிராணிகளை குணப்படுத்துவதற்கும் அவற்றை நம்மால் பயன்படுத்த முடியும். நேர்மறையான எண்ணங்களுக்கும் உணர்வுகளுக்கும் விலங்குகள் அதிக ஏற்புத்தன்மை கொண்டவையாக இருக்கின்றன.

### பெரிய கட்டி மறைந்துவிட்டது!

என்னுடைய அல்சேஷியன் நாய்க்குப் பத்து வயதாக இருந்தபோது, ஒரு மாதுளம்பழத்தின் அளவுக்கு ஒரு பெரிய கட்டி அதன் கல்லீரலில் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. எனக்கு அப்போதுதான் விவாகரத்து ஆகியிருந்தது. வேறு வீட்டிற்கு மாறிச் செல்லுவதில் நான் மும்முரமாக இருந்தேன். எனவே, இப்போது நான் பீதியடைக்கூடாது என்று நான் தீர்மானித்தேன். அந்த நேரத்தில் இரகசியத்தைப் பற்றி எனக்குத் தெரியாது. எனவே, நான் என் நாயை குணப்படுத்த முயற்சிக்கவில்லை. நான் அதன்மீது அக்கறைகூடக் காட்டவில்லை.

ஒருசில மாதங்களுக்குப் பிறகு நான் ஒரு புதிய வீட்டில் குடியேறினேன். என் வீட்டிற்குப் பக்கத்தில் இருந்த கால்நடை மருத்துவர் ஒருவரிடம் நான் என் நாயை அழைத்துச் சென்றேன். அதன் கல்லீரலில் இருந்த கட்டியைப் பற்றி நான் அவரிடம் எதுவும் கூறவில்லை. முந்தைய மருத்துவரின் கண்டுபிடிப்பு தவறாக

https://telegram.me/aedahamlibrary

இருந்தால் நன்றாக இருக்கும் என்று நான் ஆசைப்பட்டேன். ஆனால் இப்புதிய மருத்துவரும், என்னுடைய நாயின் கல்லீரலில் ஒரு பெரிய கட்டி இருந்தது என்ற அதே செய்தியைத்தான் தெரிவித்தார். மேலும் சில பரிசோதனைகளை மேற்கொண்டு, அது துல்லியமாக எந்த வகையான புற்றுநோய் என்று கண்டுபிடிக்கலாம் என்று பரிந்துரைத்த அவர், அது மிக 'மோசமான' வகையான புற்றுநோயாகத்தான் இருக்கும் என்று கூறினார். என்னுடைய நாய் ஏற்கனவே அதன் இயல்பான ஆயுட்காலத்தின் முடிவை நெருங்கியிருந்ததால் (அல்சேஷியன்கள் எட்டு ஆண்டுகளிலிருந்து பத்து ஆண்டுகள்வரை மட்டுமே வாழும்), அதற்கு எந்த விதத்திலும் உதவக்கூடிய சாத்தியம் இல்லாத பிற சிகிச்சைகளுக்கு அதை உட்படுத்துவதில் எந்த அர்த்தமும் இல்லை என்று எனக்குத் தோன்றியது. எனவே, நான் என் நாய்க்கு எந்தச் சிகிச்சையும் அளிக்கப் போவதில்லை என்று தீர்மானித்தேன்.

அப்போதுதான் இரகசியம் பற்றி எனக்குத் தெரிய வந்தது. நான் உடனடியாகச் செயலில் இறங்கினேன். என் நாய் முழுமையாக குணமடைந்துவிட்டதாக ஒவ்வோர் இரவிலும் நான் அதனிடம் கூறினேன். கட்டியைப் பற்றி நான் எதுவும் கூற விரும்பவில்லை. ஏனெனில், அதைப் பற்றிக் குறிப்பிடக்கூடாது என்பதை நான் அறிந்திருந்தேன். விஷயங்களை நேர்மறையான விதத்தில் எப்படிக் கூறுவது என்பதைப் பற்றிச் சிந்திப்பது முதலில் கடினமாக இருந்தது. எனவே, நான் சற்று யோசித்துவிட்டு, என் நாயின் அருகில் அமர்ந்து கொண்டு, "உன்னுடைய உறுப்புகள் அனைத்தும் கச்சிதமாக இயங்கிக் கொண்டிருக்கின்றன. உன் செரிமான மண்டலம் கச்சிதமாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. நீ பரிபூரண ஆரோக்கியத்துடன் இருக்கிறாய்," என்று அதனிடம் கூறினேன். அது பரிபூரணமாக குணமாகிவிட்டதை இதயபூர்வமாக நான் அறிந்தேன். ஒவ்வோர் இரவும் நான் அதனிடம் இவ்வாறு

https://telegram.me/aedahamlibrary

பேசினேன். பகலில் எனக்குத் தோன்றியபோதெல்லாம் அதனிடம் அதைக் கூறினேன். நான் என் நாயைப் பற்றிக் கவலைப்படவே இல்லை. எனக்கு எந்த எதிர்மறை எண்ணங்களும் தோன்றவில்லை. என் நாய் முற்றிலுமாக குணமடைந்துவிட்டதாக நான் முழுமையாக நம்பினேன்.

நான்கு மாதங்களுக்குப் பிறகு நான் அதை மீண்டும் அந்த மருத்துவரிடம் அழைத்துச் சென்றேன். அவர் என் நாயை மீண்டும் மீண்டும் பரிசோதித்தார். அதன் கட்டி முற்றிலுமாகக் கரைந்து போயிருந்தது. அதை அவரால் நம்பவே முடியவில்லை. நான் என்ன செய்தேன் என்று அவர் என்னிடம் கேட்டார். நான் பிரார்த்தனை செய்ததாக அவரிடம் கூறினேன். அந்த விவரிப்பை அவரால் புரிந்து கொள்ள முடியும் என்று நான் நினைத்தேன். அவர் "பிரார்த்தனைகள்" என்று தன் குறிப்பேட்டில் குறித்துக் கொண்டதை நான் கண்டேன்.

**- லூசின்டா எம்., கலிபோர்னியா, அமெரிக்கா**

சுயபிரகடனங்கள் பலனளிக்க வேண்டும் என்றால், தன் நாய் பரிபூரண ஆரோக்கியத்துடன் இருந்ததுபோல **நினைத்துக் கொண்டு** தான் அதனிடம் பேச வேண்டும் என்பதை லூசின்டா புரிந்து கொண்டார். கட்டியின்மீது கவனத்தைக் குவிப்பது அந்தக் கட்டிக்கு அதிக சக்தியை மட்டுமே கொடுக்கும்.

**உங்கள் வாழ்க்கைப் பாதையை இருட்டிலிருந்து வெளிச்சத்திற்கும், எதிர்மறையிலிருந்து நேர்மறைக்கும் உங்களால் மாற்ற முடியும். நேர்மறையானவற்றின்மீது நீங்கள் உங்கள் கவனத்தைக் குவிக்கின்ற ஒவ்வொரு முறையும், நீங்கள் அதிக ஒளியை உங்கள் வாழ்விற்குள் கொண்டுவருகிறீர்கள். ஒளி இருளைப் போக்குகிறது என்பதை நீங்கள் அறிவீர்கள். நன்றியுணர்வு, அன்பு, பரிவான எண்ணங்கள், கனிவான வார்த்தைகள்,**

https://telegram.me/aedahamlibrary

**அன்பான நடவடிக்கைகள் ஆகியவை ஒளியைக் கொண்டுவந்து இருளை அகற்றுகின்றன. உங்கள் வாழ்க்கையை நேர்மறை மனப்போக்கு எனும் ஒளியால் நிரப்புங்கள்.**

**- இரகசியம் தினசரி போதனைகள்**

# சிறந்த விளைவு உருவாகும் என்று நம்புதல்

ஒருநாள் என்னுடைய பன்னிரண்டு வயது 'காக்கர் ஸ்பேனியல்' நாய் சாப்பிட மறுத்தது. முன்பு ஒருபோதும் இப்படி நிகழ்ந்ததில்லை. தண்ணீர் குடிப்பதற்குக்கூட அது சிரமப்பட்டது. தண்ணீரை அதனால் விழுங்க முடியவில்லை. மாறாக, அந்தத் தண்ணீர் அதன் வாய்வழியே வெளியே வழிந்தது.

நான் என் நாயை ஒரு கால்நடை மருத்துவரிடம் அழைத்துச் சென்றேன். அங்கு வரவேற்பறையில் நாங்கள் காத்துக் கொண்டிருந்தபோது, அதன் வாயிலிருந்து ரத்தம் அதிக அளவில் வெளியேறத் தொடங்கியது. பரிசோதனை அறைக்கு நாங்கள் அதை விரைவாக எடுத்துச் சென்றோம். அதன் பிரச்சனை என்ன என்பதைக் கண்டுபிடிப்பதற்கு அதற்கு மயக்க மருந்து கொடுக்கப்பட வேண்டும் என்று அந்த மருத்துவர் என்னிடம் கூறினார். அதன் வயதைக் கணக்கில் எடுத்துக் கொண்டால், அழுகிய பல் ஒன்றில் உருவாகியுள்ள சீழ்பிடித்தக் கட்டி ஒன்று அதன் பிரச்சனைக்குக் காரணமாக இருக்கக்கூடும் என்று அவர் கூறினார். நான் என் நாயை அவரிடம் விட்டுவிட்டு, ஒருசில மணிநேரம் கழித்துத் திரும்பி வந்து நான் அதை அழைத்துச் செல்லுவதாகக் கூறிவிட்டு அங்கிருந்து வெளியேறினேன்.

சிறிது நேரத்தில், அதிர்ச்சியூட்டிய ஒரு தொலைபேசி அழைப்பு எனக்கு வந்தது.

அந்த மருத்துவர்தான் பேசினார். என் நாய் அறுவைச் சிகிச்சைக்கான படுக்கையின்மீது கிடத்தப்பட்டிருந்தது என்று கூறிய அவர், அதன் நாக்கிற்கு உள்ளே ஒரு பெரிய

https://telegram.me/aedahamlibrary

கட்டி வளர்ந்து கொண்டிருந்ததாகவும், அதன் நாக்கிற்குக் கீழே இன்னொரு கட்டியும் அதன் நெஞ்சில் ஒரு கட்டியும் வளர்ந்து கொண்டிருந்ததாகவும் தெரிவித்தார். அது மிக மோசமான வகையான ஒரு புற்றுநோய் என்று கூறிய அவர், என் நாய்க்கு மயக்கம் தெளிவிப்பதற்கு பதிலாக, அது அப்படியே தூக்கத்திலேயே இறந்துவிட அனுமதிப்பதுதான் நான் அதற்குச் செய்யக்கூடிய மிக அன்பான காரியமாக இருக்கும் என்று பரிந்துரைத்தார்.

இதைக் கேட்டு நான் திகிலடைந்தேன், அவமானம் கொண்டேன். ஆனாலும், என் நாய்க்கு ஏற்பட்டிருந்ததாகக் கூறப்பட்ட நோய் உண்மையிலேயே புற்றுநோய்தானா என்பதை உறுதி செய்வதற்கு முன்பாக அதைக் கருணைக் கொலை செய்ய என்னால் அனுமதிக்க முடியவில்லை. நான் அந்த மருத்துவரின் பரிந்துரையை ஏற்றுக் கொள்ளவில்லை. என் நாயின் கட்டிகள் அனைத்தையும் உயிர்த்திசுப் பரிசோதனைக்கு அனுப்பும்படி அறிவுறுத்திவிட்டு, அதன் பற்களுக்கு ஏதேனும் சிகிச்சை அளிக்கப்பட வேண்டியிருந்தால் அதையும் செய்யும்படி அவரிடம் கூறினேன். நான் சொன்னவற்றை அவர் அப்படியே செய்தார். நான் என் நாயைத் தேவையில்லாமல் துன்புறுத்தல்களுக்கு ஆளாக்கிக் கொண்டிருந்ததாகவும், பல் சிகிச்சை வெறுமனே எனக்கு அதிகச் செலவுதான் வைக்கும் என்றும், என் நாய் அதிகபட்சமாக ஓரிரு வாரங்கள் மட்டுமே வாழவிருந்ததால் அந்தச் சிகிச்சைகளின் பலன்களை அனுபவிக்க அதற்கு நேரம் இருக்காது என்றும் அந்த மருத்துவர் கூறினார்.

நான் என் நாயை அழைத்துக் கொண்டு வீடு வந்து சேர்ந்தேன். விஷயமறிந்து என்னுடைய ஒட்டுமொத்தக் குடும்பமும் அதிர்ச்சியடைந்தது. அன்றிரவு என் நாய் அளப்பரிய வேதனையை அனுபவித்தது. நான் உண்மையிலேயே சுயநலமாக இருந்திருந்தேனோ என்று எனக்குத் தோன்றியது. என் தீர்மானம் குறித்துச் சிறிது நேரம் நான் பின்வருத்தம் கொண்டேன்.

https://telegram.me/aedahamlibrary

பிறகு, இரகசியத்தின் போதனைகளை நான் நினைத்துப் பார்த்தேன்.

அக்கணத்திலிருந்து, என் நாய்க்கு வந்திருந்தது புற்றுநோய் அல்ல, மாறாக, ஏதோ ஒரு நோய்த்தொற்றுதான் என்றும், என் நாய் பரிபூரணமாக குணமடைந்துவிடும் என்றும் என் ஆற்றல் முழுவதையும் ஒன்றுதிரட்டி நான் நம்பினேன். மற்ற நேரங்களில், என்னுடைய நாய் நலம் பெற்றுப் பழைய இயல்பு நிலைக்குத் திரும்பிவிட்டதாக மனதார நம்பி, அது குறித்துப் பிரபஞ்சத்திற்கு நான் மீண்டும் மீண்டும் நன்றி கூறினேன். நான் மற்றவர்களிடம் பேசியபோதும் என்னுடைய நாய் நலமாக இருந்ததாகவும் அது குணமடைந்து கொண்டிருந்ததாகவுமே நான் கூறினேன்.

ஓரிரு நாட்களுக்குப் பிறகு நான் என் நாயை அழைத்துக் கொண்டு அந்த மருத்துவரைப் பார்க்கச் சென்றேன். அவர் என்னுடைய நாய்க்குச் சில வலிநிவாரணிகளையும் ஆன்டிபயாட்டிக் மருந்துகளையும் கொடுத்துவிட்டு, என்னுடைய நாய் அதிகமாகத் துன்புறாமல் இருப்பதற்குத் தன்னால் வேறு எதுவும் செய்ய முடியாது என்று கூறினார். மறுவாரம் முழுவதும், என் நாய் நலம் பெற்றுவிட்டதாக நான் தொடர்ந்து சுயபிரகடனம் செய்து கொண்டே இருந்தேன். வேறு எந்த விளைவையும் பற்றிச் சிந்திக்க என்னை நான் அனுமதிக்கவில்லை.

இறுதியில், அந்த மருத்துவர் என்னை அழைத்து, உயிர்த்திசுப் பரிசோதனை முடிவுகள் வந்துவிட்டதாகக் கூறினார். என் நாய்க்குப் புற்றுநோய் இல்லை என்று அனைத்துப் பரிசோதனை முடிவுகளும் தெரிவித்திருந்தன. இது அந்த மருத்துவருக்கு அதிர்ச்சியாக இருந்தது.

பரிசோதனைகளைச் செய்தவர்கள் புற்றுநோய் உயிரணுக்களை கவனிக்காமல் விட்டிருப்பதற்கு அதிகச் சாத்தியக்கூறு இருந்ததாகவும், ஆனால் மூன்று பரிசோதனைகளும் என் நாய்க்குப் புற்றுநோய் இல்லை என்று கூறியிருந்தது எதிர்பாராத ஒன்று என்றும் அவர் கூறினார். என்னைப் பொருத்தவரை அது எதிர்பாராததோ

https://telegram.me/aedahamlibrary

அல்லது தவறான முடிவோ அல்ல. அதோடு, என் நாயினுடைய எந்தவொரு பல்லிலும் எந்தப் பிரச்சனையும் இருக்கவில்லை. எனவே, அவற்றை அகற்ற வேண்டிய தேவையும் எழவில்லை!

என் நாயின் ஆரோக்கியத்திற்காகவும், அந்த மருத்துவர் என்னுடைய நாயை முதன்முதலாகப் பரிசோதித்துவிட்டுக் கூறிய மோசமான பரிந்துரையை நான் ஏற்றுக் கொள்ளாமல் போயிருந்ததற்காகவும் பிரபஞ்சத்திற்கு தினமும் நான் நன்றி கூறுகிறேன்.

**- ஜேன் ஜே., ஆஸ்காட், பெர்க்ஷயர், இங்கிலாந்து**

## மகிழ்ச்சிதான் ஆரோக்கியத்திற்கான அருமருந்து

இனிமேல் மகிழ்ச்சியான எண்ணங்கள்மீதே நீங்கள் உங்கள் கவனத்தைக் குவிக்கப் போவதாக இப்போது நீங்கள் ஒரு தீர்மானம் மேற்கொண்டால், உங்கள் உடலைத் தூய்மைப்படுத்துவதற்கான ஒரு செயல்முறையை நீங்கள் துவக்குவீர்கள். அந்த மகிழ்ச்சியான எண்ணங்கள் உங்கள் உடலின் ஆரோக்கியத்திற்கு ஓர் அருமருந்தாக அமையும்.

மகிழ்ச்சியாக இல்லாமல் இருப்பதற்கான சாக்குப்போக்குகளுக்கு முடிவே இல்லை. ஆனால், “எனக்கு . . . கிடைத்தால் நான் மகிழ்ச்சியாக இருப்பேன்,” என்று கூறி நீங்கள் உங்கள் மகிழ்ச்சியைத் தள்ளிப்போட்டால், உங்கள் எஞ்சிய வாழ்நாள் முழுவதும் உங்கள் மகிழ்ச்சியை நீங்கள் தாமதப்படுத்துவீர்கள் என்பதோடு, உங்கள் உடலின் ஆரோக்கியத்தையும் நீங்கள் குன்றச் செய்து கொண்டிருப்பீர்கள். மகிழ்ச்சி என்பது உங்கள் உடலின் ஆரோக்கியத்திற்கான ஓர் அதிசய அருமருந்தாகும். எனவே, இக்கணத்தில்

https://telegram.me/aedahamlibrary

மகிழ்ச்சியாக இருங்கள். மகிழ்ச்சியைத் தள்ளிப்போடுவதற்கு எந்தச் சாக்குப்போக்குகளையும் கூறாதீர்கள்!

**உங்கள் இதயமும் உங்கள் மனமும் ஒரு சமநிலையில் இருக்கும்போது நீங்கள் ஓர் ஆனந்தமான வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருப்பீர்கள். உங்கள் இதயமும் மனமும் ஒரு சமநிலையில் இருக்கும்போது, உங்கள் உடல் முற்றிலும் இணக்கமானதாக இருக்கிறது. உங்கள் வாழ்க்கையும்தான்.**

**- இரகசியம் தினசரி போதனைகள்**

https://telegram.me/aedahamlibrary

## ஆரோக்கியத்திற்கான திறவுகோல்கள்

- ஏதோ ஒரு காலகட்டத்தில், குணப்படுத்தப்பட முடியாததாகக் கூறப்பட்ட ஒவ்வொரு நோயும் குணப்படுத்தப்பட்டுள்ளது. நம்பிக்கையற்றச் சூழல்கள் என்று எதுவும் இல்லை.
- பாரம்பரிய மருத்துவமும் மனமும் இணைந்து இணக்கமாகச் செயல்படும்போது நோய்கள் குணமாகின்றன.
- நீங்கள் நலமாக இருப்பதுபோல உங்களால் கற்பனை செய்யவும் உணரவும் முடிந்தால், அதை உங்களால் சாதிக்க முடியும்.
- நீங்கள் உங்களுடைய ஆரோக்கியத்தைப் பற்றி எதிர்மறையான நம்பிக்கைகளைக் கொண்டிருக்கும் பட்சத்தில், நீங்கள் உங்கள் உடல்நிலையில் மாற்றத்தைப் பார்க்க விரும்பினால், நீங்கள் உங்கள் சிந்தனையை மாற்றியாக வேண்டும்.
- ஆரோக்கியம் பற்றிய எண்ணங்களை எண்ணுங்கள். ஆரோக்கியம் பற்றிய வார்த்தைகளைப் பேசுங்கள். நீங்கள் முற்றிலும் ஆரோக்கியமாக இருப்பதுபோலக் கற்பனை செய்யுங்கள்.
- இதுவரை என்ன நடந்திருந்தாலும் சரி, ஒரு நேரத்தில் ஒரு நேர்மறையான எண்ணம் என்ற அடிப்படையில் உங்களால் அதை மாற்ற முடியும்.
- நீங்கள் உங்கள் உடலையும் மனத்தையும் நலமாக வைத்திருக்க விரும்பினால், எதிர்மறை எண்ணங்களை நம்பாதீர்கள். அழகு,

https://telegram.me/aedahamlibrary

அன்பு, நன்றியுணர்வு, ஆனந்தம் போன்றவற்றைப் பற்றிய நேர்மறையான எண்ணங்களை எண்ணுங்கள்.

- ஆரோக்கியம் பற்றிய நேர்மறையான காட்சிகளைக் கற்பனை செய்து, அக்காட்சிகளால் உங்கள் மனத்தையும் உடலையும் நிரப்புங்கள்.
- மகிழ்ச்சிதான் உங்கள் உடலின் ஆரோக்கியத்திற்கான அதிசய அருமருந்து. மகிழ்ச்சியான எண்ணங்கள்மீது உங்கள் கவனத்தைக் குவியுங்கள். அதன் மூலம், உங்கள் உடலைத் தூய்மைப்படுத்துவதற்கான செயல்முறையைத் துவக்குங்கள்.
- நேர்மறையான எண்ணங்களையும் உணர்வுகளையும் பயன்படுத்தி உங்களை நீங்கள் எப்படி குணப்படுத்திக் கொள்ளுவீர்களோ, அதேபோல அவற்றைப் பயன்படுத்தி ஒரு குழந்தையையோ அல்லது ஒரு செல்லப் பிராணியையோ உங்களால் குணப்படுத்த முடியும்.

https://telegram.me/aedahamlibrary



https://telegram.me/aedahamlibrary

நீங்கள் ஒரு குறிப்பிட்ட வேலையை விரும்பியிருந்து, அது உங்களுக்குக் கிடைக்காமல் போயிருந்தால், அது உங்களுக்கு உகந்ததல்ல என்றும், அது உங்கள் கனவுக்குப் பொருத்தமானது அல்ல என்றும் பிரபஞ்சம் உங்களிடம் சொல்லிக் கொண்டிருக்கிறது என்று பொருள். மேலும், அதைவிட அதிகச் சிறப்பான ஏதோ ஒரு வேலை, நீங்கள் பெறத்தக்க மதிப்பு வாய்ந்த ஒரு வேலை உங்களுக்காகக் காத்துக் கொண்டிருக்கிறது என்றும் அது கூறிக் கொண்டிருக்கிறது.

அதிகச் சிறப்பான ஏதோ ஒன்று வந்து கொண்டிருக்கிறது . . .

நீங்கள் உற்சாகமாக இருக்கலாம்!

**- இரகசியம் தினசரி போதனைகள்**

https://telegram.me/aedahamlibrary

## தொழில்வாழ்க்கையில் சிறப்புறுவதற்கு இரகசியத்தை நான் எவ்வாறு பயன்படுத்தினேன்

நீங்கள் உங்கள் வாழ்விற்குள் கொண்டுவர விரும்புகின்ற எதுவொன்றையும் கவர்ந்திழுப்பதற்கு இரகசியத்தின் கொள்கைகளையும் செயல்முறைகளையும் உங்களால் பயன்படுத்த முடியும் என்பதால், உங்களால் தப்பிக்க முடியாத 'சலிப்பூட்டும்' வேலை எதுவும் இல்லை; உங்களால் தகர்க்க முடியாத 'தடை' எதுவும் இல்லை; உங்களால் கைவசப்படுத்த முடியாத 'மனங்கவர்ந்த வேலை' எதுவும் இல்லை.

## நேர்மறையானவற்றின்மீது கவனத்தைக் குவியுங்கள்; எதிர்மறையான எதுவொன்றையும் புறக்கணித்துவிடுங்கள்

உங்கள் வாழ்வின் சூழல்கள் நீங்கள் எதிர்பார்த்தபடி போய்க் கொண்டிருக்கவில்லை என்றால், நீங்கள் மிகச் சுலபமாக மனச்சோர்வு கொண்டுவிடக்கூடும். ஆனால், எதிர்மறை எண்ணங்கள் எப்போதும் எதிர்மறையான சூழல்களையே கவர்ந்திழுக்கின்றன என்பதை நீங்கள் இப்போது அறிந்துள்ளீர்கள். உலகம் நெடுகிலும் பலரும் அதை அறிந்துள்ளனர். எதிர்மறை எண்ணங்கள்மீது உங்கள் கவனத்தைக் குவிப்பதை விடுத்து, அதற்கு பதிலாக, நீங்கள் விரும்புகின்ற ஒன்றின்மீது நீங்கள் உங்கள் எண்ணங்களைக் குவிக்கும்போது, நீங்கள் விரும்புவதைப் பிரபஞ்சத்தின் சக்தியைக் கொண்டு உங்கள் வாழ்விற்குள் கொண்டுவருகிறீர்கள்.

https://telegram.me/aedahamlibrary

# ஒவ்வொரு வேலையிலும் நான் துன்புறுத்தப்பட்டேன்

பல ஆண்டுகளாக, ஒவ்வொரு வேலையிலும் நான் மேன்மேலும் கோபமடைந்து கொண்டே இருந்தேன். நான் எந்த வேலையில் சேர்ந்தாலும், மிக மோசமான ஒருவர்தான் எனக்கு முதலாளியாக வாய்த்தார். இதெல்லாம் கடவுளின் தவறு என்று நான் கருதினேன். நான் கடவுள்மீது எவ்வளவு அதிகக் கோபம் கொண்டேனோ, விஷயங்கள் அவ்வளவு அதிகமாக மோசமடைந்தன. இதனால் நான் கடவுளை மேலும் அதிகமாக வெறுத்தேன்.

உள்ளூர் அச்சகர் ஒருவரிடம் நான் வேலைக்குச் சேர்ந்தபோது, **இந்த** இடம் நான் முன்பு வேலை பார்த்திருந்த மற்ற எல்லா இடங்களையும்போலவே மோசமாக இருக்குமா அல்லது வித்தியாசமான ஓர் இடமாக இருக்குமா என்று நான் எப்போதும் கண்காணித்துக் கொண்டே இருந்தேன். இந்த அச்சகத்தில் எல்லா ஊழியர்களும் இணக்கமானவர்களாகத் தெரிந்தனர். நான் உண்மையில் இங்கு மகிழ்ச்சியாக இருந்தேன். என்னுடைய சக ஊழியர்களுடனும் மேற்பார்வையாளருடனும் இணைந்து வேலை செய்வதை நான் உண்மையிலேயே விரும்பினேன். ஆனால், நான் வேலையில் சேர்ந்து மூன்று மாதங்களுக்குப் பிறகு, எங்கள் அச்சகர், அதே அச்சகத்தின் வேறொரு துறையில் வேலை செய்ய எனக்கு விருப்பம் இருந்ததா என்று என்னிடம் கேட்டார். “நிச்சயமாக,” என்று நான் பதிலளித்தேன்.

யாரோடும் இணக்கமாகப் பழக முடியாத ஒருவர் என்னுடைய மேற்பார்வையாளராக நியமிக்கப்பட்டார். அவர் என்னைப் பெரிதும் துன்புறுத்தினார். நான் மதிய உணவருந்தச் சென்ற நேரத்தில், அவர் என்னைப் பற்றி மரியாதையின்றிப் பலவற்றை எழுதி என்னுடைய நாற்காலியில் விட்டுச் சென்றார். தான் செய்த ஏராளமான தவறுகளுக்கான பழியை அவர் என்மீது போட்டார்.

https://telegram.me/aedahamlibrary

சுருக்கமாகக் கூறினால், ஆறு மாதங்களுக்குப் பிறகு நான் வேலையைவிட்டு நீக்கப்பட்டேன்.

தற்கொலை எண்ணம் என்னுள் தலைதூக்கியது. என் வாழ்க்கை முடிந்துவிட்டதாக நான் நினைத்தேன். எந்த வேலையிலும் என்னால் நீடிக்க முடியாதது குறித்து நான் விரக்தி அடைந்தேன். கடவுள் மேலேயிருந்து என்னைப் பார்த்துச் சிரித்துக் கொண்டிருந்ததை நான் கண்டேன். நான் அவரை மனதார வெறுத்தேன்.

அச்சமயத்தில்தான் என் தோழி ஒருத்தி **இரகசியம்** திரைப்படத்தின் டிவிடியை எனக்குக் கொடுத்தாள். நான் சேர்ந்த ஒவ்வொரு வேலையிலும் நான் துன்புறுத்தல்களுக்கு ஆளானதற்கு நான்தான் காரணம் என்பதை முதன்முறையாக அப்போதுதான் நான் உணர்ந்தேன். என்னுடைய அந்த மோசமான யதார்த்தத்தை நான்தான் உருவாக்கியிருந்தேன். இப்போது எனக்கு எல்லாம் புரிந்தது. நான் வேலை செய்த இடங்களில் என் எண்ணங்கள் இப்படி அமைந்திருந்தன: **அவர் இதுபோல இனியொரு முறை என்னிடம் பேசினால் நடப்பதே வேறு; எனக்கு ஏன் எப்போதும் ஒரு மோசமான மேலாளரோ அல்லது மேற்பார்வையாளரோ வாய்க்கிறார்?; நான் அவ்வளவு தகுதி வாய்ந்தவள் அல்ல, எனவே நான் வேலையிலிருந்து நீக்கப்படாமல் இருந்தால் அதுவே போதும்; நான் பார்க்கும் வேலை எனக்குச் சரியாகத் தெரியாது என்பதை அவர்கள் கண்டுபிடித்துவிடாமல் இருந்தால் நல்லது; நான் ஒரு போலி என்பதை அவர்கள் தெரிந்து கொள்ளாமல் இருக்க வேண்டும் . . .** இத்தகைய **எதிர்மறை** எண்ணங்கள்தான் எப்போதும் என் மனத்தில் ஓடிக் கொண்டிருந்தன.

நான் அந்த எண்ணங்கள் அனைத்தையும் ஒரு தாளில் எழுதினேன். அவை எவ்வளவு மோசமாக இருந்தன என்பதை என்னால் பார்க்க முடிந்தது. பிறகு, அத்தாளின் மறுபக்கத்தில், அவற்றுக்கு நேரெதிரான நேர்மறையான எண்ணங்களை நான் எழுதினேன். முதலில் அது என்னை மேலும் விரக்தியடையச் செய்வதாக இருந்தது. எனவே,

https://telegram.me/aedahamlibrary

நான் அந்த நேர்மறையான எண்ணங்களைக் கேள்விகளாகவும் விருப்பங்களாகவும் மாற்றி எழுதினேன்: “பழகுவதற்கு இனிமையான, அறநெறிப்படி வாழுகின்ற மக்களுடன் சேர்ந்து வேலை செய்வதற்கான வாய்ப்பு எனக்குக் கிடைத்தால் எப்படி இருக்கும்? நான் இதுவரை சம்பாதித்துள்ளதைவிட மிக அதிகப் பணத்தை என்னால் சம்பாதிக்க முடிந்தால் எப்படி இருக்கும்? எதிர்காலத்தில் என்றேனும் ஒருநாள் நான் ஒரு பதிப்பாளரிடம் வேலை செய்ய விரும்புகிறேன். அது அற்புதமானதாக இருக்கும். ஒரு குறிப்பிட்ட நாளுக்குள் [நான் ஒரு தேதியை அதில் எழுதி«ன்] நான் ஒரு பதிப்பாளரிடம் வேலையில் சேர்ந்திருக்க விரும்புகிறேன்.”

கோடிட்ட இடத்தில் நான் எந்தத் தேதியை நிரப்பியிருந்தேனோ, அந்தத் தேதியில் ஒரு பதிப்பாளருடன் ஒரு நேர்முகத் தேர்வுக்கான அழைப்பு எனக்கு வந்தது. எனக்கு அந்த வேலை கிடைத்தது. இப்போது நான் அந்த வேலையில் இல்லை என்றாலும், அங்கு என்னுடன் வேலை செய்தவர்கள் பழகுவதற்கு இனியவர்களாகவும் புரிந்துணர்வு கொண்டவர்களாகவும் இருந்தனர், **அறநெறிப்படி** வாழ்ந்தனர். அப்படிப்பட்ட நிறுவனங்கள் இவ்வுலகில் இருந்தன என்பதை அதற்கு முன்புவரை நான் அறிந்திருக்கவில்லை.

மேலும், கடந்தகாலத்தில் நான் சம்பாதித்திருந்ததைவிட **அதிகப்** பணத்தை அந்த வேலையில் நான் சம்பாதித்துக் கொண்டிருந்தேன்.

இப்போதும் பய எண்ணங்கள் எனக்குத் தோன்றுகின்றனவா? ஆமாம். அவற்றை நான் ஊக்குவிக்கிறேனா? அவை அதிக நேரம் நீடிக்க நான் அனுமதிப்பதில்லை. நான் அவற்றை ஊக்குவிக்க வேண்டியதில்லை என்பதை நான் அறிவேன். தேர்ந்தெடுப்பதற்கான சுதந்திரம் எனக்கு இருந்ததை முன்பு நான் அறியவில்லை. ஆனால் இப்போது, என் மனத்தில் ஓர் எதிர்மறை எண்ணம் தோன்றும்போது, அதற்கு நேரெதிரான எண்ணத்தின்மீது நான் என்

https://telegram.me/aedahamlibrary

கவனத்தைக் குவிக்கிறேன். அல்லது, அந்த எதிர்மறை எண்ணத்தைப் புரிந்து கொள்ளுவது அக்கணத்தில் எனக்குக் கடினமாக இருந்தால், நான் அதை ஒரு கேள்வியாக மாற்றுகிறேன்: "ஒருவேளை அது [இப்படி இருந்தால்] எப்படி இருக்கும்?" இது எனக்கு ஒரு சக்திவாய்ந்த உத்தியாக இருந்து வந்துள்ளது.

நான் கச்சிதமானவள் அல்ல. சில நாட்கள், நான் ஒப்புக் கொள்ள விரும்புவதைவிட அதிகமாகவே நான் தடம் புரண்டுவிடுகிறேன். ஆனால் இப்போது நான் சொந்தமாக ஒரு சிறு தொழிலை நடத்திக் கொண்டிருக்கிறேன், முன்பு எப்போதையும்விட அதிகமாகச் சம்பாதித்துக் கொண்டிருக்கிறேன். என் தொழில் வேகமாக வளர்ந்து கொண்டிருக்கிறது. அதை அடுத்த நிலைக்கு விரிவுபடுத்துவது பற்றிச் சிந்திக்கத் தொடங்க வேண்டிய நிலையை நான் அடைந்துள்ளேன்.

எல்லோரும் இரகசியத்தை ஒருமுறையாவது முயற்சித்துப் பார்க்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். அது உண்மையிலேயே பலனளிக்கிறது. அது உங்கள் விஷயத்தில் வேலை செய்யவில்லை என்றால், "இரகசியம் எனக்குப் **பலனளித்தால்** எப்படி இருக்கும்?" என்று உங்களை நீங்களே கேட்டுக் கொள்ளுங்கள். அது நிச்சயமாகப் பலனளிக்கும்.

**- அனெட், ஃபுளோரிடா, அமெரிக்கா**

**ஈர்ப்பு விதி வேலை செய்யவில்லை என்று உங்களால் ஒருபோதும் கூற முடியாது. ஏனெனில், அது எல்லா நேரமும் வேலை செய்து கொண்டிருக்கிறது. நீங்கள் விரும்பும் ஒன்று உங்களிடம் இல்லை என்றால், ஈர்ப்பு விதியை நீங்கள் பயன்படுத்தியுள்ள விதத்தின் விளைவை நீங்கள் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள் என்று பொருள். நீங்கள் விரும்புவது உங்களிடம் இல்லை என்றால், அது உங்களிடம் இல்லாத நிலைமையையும் நீங்கள்தான் உருவாக்கிக் கொண்டிருக்கிறீர்கள். நீங்கள் இன்னும் தொடர்ந்து**

https://telegram.me/aedahamlibrary

**படைத்துக் கொண்டிருக்கிறீர்கள், ஈர்ப்பு விதி உங்கள் விருப்பப்படியே இன்னும் உங்களுக்குச் செயல்விடை அளித்துக் கொண்டிருக்கிறது.**

**இதை நீங்கள் புரிந்து கொண்டால், நீங்கள் விரும்புவதைக் கவர்ந்திழுப்பதற்கு உங்களுடைய அளப்பரிய சக்தியைச் சரியான திசையை நோக்கி உங்களால் முடுக்கிவிட முடியும்.**

**- இரகசியம் தினசரி போதனைகள்**

## எது உங்களை நம்ப வைக்கிறது?

நான் கல்லூரியிலிருந்து பட்டம் பெற்றப் பிறகு, எந்த வேலையும் கிடைக்காமல் பல மாதங்கள் நான் போராடினேன். **இரகசியம்** புத்தகத்தை நான் பல முறை படித்தேன், இரகசியம் திரைப்படத்தை நான் பார்த்தேன். அது நான் சிந்தித்த விதத்தை மாற்றி, வாழ்க்கையைப் பற்றிய ஒரு சிறந்த கண்ணோட்டத்தை எனக்கு வழங்கியபோதிலும், உண்மையில் எனக்கொரு வேலை கிடைத்திருக்காத நிலையில், நான் ஏற்கனவே ஒரு வேலையில் இருந்ததாக நம்புவது எனக்குக் கடினமாக இருந்தது. ஆனால் ஒரு வேலையைத்தான் பிரபஞ்சத்திடமிருந்து நான் பெரிதும் எதிர்பார்த்தேன்.

ஒரு வாரமாக ஏகப்பட்ட வேலைகளுக்கு விண்ணப்பித்தும் யாரிடமிருந்தும் எந்தவொரு பதிலும் வராமல் போன நிலையில், ஒருநாள், திடீரென்று ஒரு விஷயம் எனக்குப் புரிந்தது. எனக்கு ஒரு வேலை கிடைத்துவிடும் என்று நான் நன்னம்பிக்கையோடு இருக்க முயற்சித்துக் கொண்டிருந்தபோதிலும், எனக்கு ஏற்கனவே ஒரு வேலை கிடைத்துவிட்டதாக நினைத்து அதற்காக என் நன்றிக் குறிப்பேட்டில் நான் தினமும் நன்றி தெரிவித்து வந்திருந்தபோதிலும், உண்மையில் நான் அதற்கு ஏற்றபடி சிந்திக்கவும் செயல்படவும் இல்லை. வீட்டில் உட்கார்ந்து வேலைகளுக்கு விண்ணப்பித்து கொண்டு, ஏதோ ஒரு வேலை தானாக என்னைத் தேடி வரும் என்று நம்பிக் கொண்டிருப்பது

https://telegram.me/aedahamlibrary

என்னை எங்கும் அழைத்துச் செல்லாது; ஏனெனில், நான் என்னுடைய எண்ணங்கள் மற்றும் செய்கைகள் மூலம், நான் எப்போதுமே ஒரு வேலையைத் தேடிக் கொண்டிருப்பேன் என்று எனக்கு நானே கூறிக் கொண்டிருந்தேன் என்பதை நான் உணர்ந்தேன். எனக்கு ஏற்கனவே வேலை கிடைத்துவிட்டதுபோல நான் வாழ வேண்டும் என்பதை நான் உணர்ந்து கொண்டேன்.

எனவே, நான் தினமும் காலையில் வேலைக்குப் போக வேண்டியிருந்தால் எவ்வளவு சீக்கிரமாக எழுந்திருப்பேனோ, அதுபோலவே எழுந்தேன். தினமும் வேலை தேடிக் கொண்டும், எனக்கு ஒரு வேலை கிடைக்கவிருந்தது குறித்து நன்றி தெரிவித்து என்னுடைய குறிப்பேட்டில் எழுதிக் கொண்டும் இருப்பதற்கு பதிலாக, தினமும் நான் என் வேலையில் வெற்றிகரமாகத் திகழ்ந்தது குறித்தும், நான் வேலை செய்த இடத்தையும் என் சக ஊழியர்களையும் எனக்குப் பிடித்திருந்தது குறித்தும் நான் நன்றி கூறினேன். வேலைக்குச் செல்லும்போது அணிவதற்குப் பொருத்தமான ஆடைகளை நான் தேர்ந்தெடுத்தேன். என்னுடைய சம்பளப் பணத்தைப் போட்டு வைப்பதற்காக வங்கியில் ஒரு சேமிப்புக் கணக்கையும் நான் துவக்கினேன். வேலைக்குச் சென்று வந்த என்னுடைய தோழிகளை மாலையில் சந்தித்து, அவர்கள் தங்கள் வேலைகளைப் பற்றிப் பேசுவதை எந்தவிதமான பொறாமையோ அல்லது போதாமையுணர்வோ கொள்ளாமல் நான் காதுகொடுத்துக் கேட்டேன். முன்பெல்லாம் நான் பொறாமை கொண்டேன், நான் எதற்கும் தகுதியானவள் அல்ல என்ற உணர்வால் துன்புற்றேன். ஆனால் இப்போது நானும் ஒரு வேலையில் இருந்ததை நான் அறிந்திருந்ததால் அடுத்தவர்மீது பொறாமையோ அல்லது கோபமோ கொள்ளுவதற்கு எனக்கு எந்தக் காரணமும் இருக்கவில்லை. நான் என்னுடைய தட்டச்சுத் திறமையையும் கணினித் திறமையையும் மேம்படுத்திக் கொண்டேன்.

https://telegram.me/aedahamlibrary

விரைவில், நான் உண்மையிலேயே ஒரு வேலையில் இருந்ததாகவும், அன்றாடம் நான் ஒரு கால அட்டவணைப்படிப் பலவற்றைச் செய்ய வேண்டியிருந்ததாகவும் நான் நம்பினேன்.

நான் உண்மையிலேயே ஒரு வேலையில் இருந்ததுபோலப் 'பாசாங்கு' செய்யத் தொடங்கிய இரண்டு வாரங்களுக்குப் பிறகு, யாரோ ஒருவர் என்னைத் தொலைபேசியில் அழைத்து, எனக்குப் பொருத்தமான ஒரு வேலை இருந்ததாகக் கூறினார். நான் அந்த நேர்முகத் தேர்வுக்குச் செல்லுவதற்கு முன்பாகவே, அந்த வேலை எனக்குக் கிடைத்துவிடும் என்பதை நான் அறிந்திருந்தேன். நான் நினைத்தபடியே எனக்கு அந்த வேலை கிடைத்தது! என்னுடைய புதிய வேலையில் விஷயங்கள் எப்படி இருக்கும் என்று நான் என்னுடைய நன்றிக் குறிப்பேட்டில் எழுதி வைத்திருந்தேனோ, உண்மையில் அவை அப்படியே இருந்தன. எனவே, இப்போது, தினமும் என் அலுவலகத்தில் விஷயங்கள் எப்படிப் போக வேண்டும் என்று நான் விரும்புகிறேனோ, அதைப் பற்றி நான் எழுதுகிறேன். அது எப்போதும் அப்படியே நடக்கிறது.

இரகசியத்திற்கு நான் என்றென்றும் நன்றியுடையவளாக இருப்பேன். ஏனெனில், நான் அதன் போதனைகளைப் படித்திருக்காவிட்டால், எதுவொன்றும் நிகழுவதற்கு முதலில் நான் அதை நம்ப வேண்டும் என்பது எனக்கு ஒருபோதும் தெரிய வந்திருக்காது, என் வாழ்க்கை இதுபோல ஒருபோதும் இருந்திருக்காது.

**- கேட், லாங் ஐலேண்ட், நியூ யார்க், அமெரிக்கா**

துவக்கத்தில், கேட்டின் நடவடிக்கைகள் அவருடைய விருப்பங்களுடன் இசைவாக இருக்கவில்லை. எனவே, தான் பெற விரும்பியதைப் பெறுவதிலிருந்து தன்னைத் தானே அவர் தடுத்துக் கொண்டிருந்தார். தனக்கு ஒரு வேலை கிடைத்துவிட்டதைப்போல அவர் **நடந்து**

https://telegram.me/aedahamlibrary

**கொள்ளத் தொடங்கியபோது**, அவர் அதை உண்மையிலேயே நம்பத் தொடங்கினார். அவர் அதை ஆழமாக நம்பியபோது, அது அவருக்குக் கிடைத்தது.

## வேறு வழி எதுவும் இல்லாமல் போகும்போது, இரகசியம் உதவிக்கு வருகிறது!

நான் மிகவும் விரும்பிய, நல்ல சம்பளத்துடன்கூடிய ஒரு வேலையிலிருந்து நான் நீக்கப்பட்டப் பிறகு, இன்னொரு முழுநேர வேலை கிடைப்பதற்கு எனக்குப் பதினைந்து மாதங்கள் ஆயின. அந்தப் பதினைந்து மாதங்களும் நான் மனவேதனையாலும் மனச்சோர்வாலும் பெரிதும் துன்புற்றேன். ஆனால் அந்த வேலையில் முன்னேற்றத்திற்கான எந்த வாய்ப்பும் இருக்கவில்லை. முன்பு நான் வாங்கிக் கொண்டிருந்த சம்பளத்தில் பாதிதான் இந்த வேலையில் எனக்குக் கிடைத்தது. இந்த வேலை என் தகுதிக்குக் குறைவானதாக இருந்தது. நான் அதை வெறுத்தேன். ஆனால், இதிலிருந்து ஏதேனும் ‘நல்லது பிறக்கும்’ என்ற நினைப்பில் நான்கு நீண்ட வருடங்கள் நான் அதில் தொடர்ந்து நீடித்தேன். ஆனால் என் எண்ணம் **தவறு** என்று நிரூபணமாகியது.

“கையில் இருப்பது குறித்து நன்றியுடன் இரு, எந்தப் பிரச்சனையையும் உருவாக்காதே,” என்பதுதான் என்னுடைய தாரக மந்திரமாக இருந்தது. என்னுடைய வேலைநாளின் ஒவ்வொரு மணிநேரத்தையும் நான் வெறுத்தபோதிலும், என்னுடைய உணர்ச்சிகளை அடக்கிக் கொண்டு, என்னுடைய நிறுவனத்திற்குள்ளேயே வேறு ஏதேனும் ஒரு நல்ல வேலை வாய்ப்பு உருவாகும் என்ற நம்பிக்கையுடன் இருக்க நான் பழகிக் கொண்டேன்.

இறுதியில், எழுபத்தைந்துக்கும் மேற்பட்டப் பதவிகளுக்கு விண்ணப்பித்து, சுமார் ஐந்து நேர்முகத் தேர்வுகளுக்குப் போய்வந்த பிறகும் எனக்கு யாரும் எந்த

https://telegram.me/aedahamlibrary

வேலையையும் வழங்கவில்லை. எனக்குச் சாவுமணி அடிக்கப்பட்டுவிட்டதாக நான் நினைத்தேன். ஒருநாள், **வாழ்க்கையின் போக்கில்** போவதை விடுத்து, **என்னுடைய** விருப்பப்படி விஷயங்களை நிகழ்த்தத் தொடங்க வேண்டும் என்று நான் தீர்மானித்தேன்.

அப்போதுதான் இரகசியம் என் வாழ்விற்குள் வந்தது. ஓராண்டுக்கு முன்பு நான் **இரகசியம்** புத்தகத்தைப் படித்திருந்தேன். வேறு வழியின்றி, இப்போது நான் அதைப் பயன்படுத்தத் தீர்மானித்தேன். நான் ஒரு தினசரிக் குறிப்பேட்டை உருவாக்கினேன். அதில் எனக்குப் பிடித்தமான ஒரு வேலையையும் வேலைச் சூழலையும் பற்றி நான் விரிவாக விவரித்தேன். நானாக ஒரு புதிய உலகத்தை உருவாக்கினேன். **இரகசியம்** புத்தகத்தில் கொடுக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைப் பயன்படுத்தி, நான் உருவாக்கியிருந்த உலகிற்குள் என்னை நான் முழுவதுமாக மூழ்கடித்துக் கொண்டேன். அப்புதிய உலகில் நான் என்னுடைய ஐம்புலன்களையும் பயன்படுத்தி வாழ்ந்தேன். அதில் நான் என்னுடைய புதிய அலுவலகத்தைப் பார்த்தேன்; என் கணினியின் தட்டச்சுப் பலகையை நான் தொட்டேன்; மஹோகனி மரத்தாலான என்னுடைய மேசையிலிருந்து வெளிவந்த நல்ல நறுமணத்தை நான் முகர்ந்தேன்; என்னுடைய குழுவினருடன் நான் சத்தமாக உரையாடினேன் (அவர்கள் ஒவ்வொருவருக்கும் நான் ஒரு பெயரையும் உருவத்தையும் ஆளுமையையும்கூடக் கொடுத்தேன்); மதிய இடைவேளைகளின்போது நான் சாப்பிட்ட டாக்கோஸை நான் சுவைத்தேன்; நான் சந்திப்புக்கூட்டங்களில் கலந்து கொண்டேன், விளக்கவுரைகளைக் கொடுத்தேன். நான் உண்மையில் **அந்த உலகத்தில்** வாழ்ந்து கொண்டிருந்தேன்!

அப்போது, பிரபஞ்சம் விஷயங்களை நிகழ்த்தத் தொடங்கியது. அதிகமான நேர்முகத் தேர்வுகளில் கலந்து கொள்ளுவதற்கான அழைப்புகள் எனக்கு வந்தன. பிறகு, இரண்டாம் சுற்று நேர்முகத் தேர்வுகளில் நான் பங்கு கொண்டேன். இறுதியாக, நான் எப்போதும் விரும்பி

https://telegram.me/aedahamlibrary

வந்திருந்த **இரண்டு** வேலைகளுக்கான அழைப்புகள் எனக்கு வந்தன. அவற்றில் ஒன்றை நான் மகிழ்ச்சியாக ஏற்றுக் கொண்டேன்.

இரகசியம்: அதை நம்புங்கள்! உணருங்கள்! பாருங்கள்! தொடுங்கள்! வாழுங்கள்! எதிர்பாருங்கள்!

**- கெல்லி, இன்டியானா, அமெரிக்கா**

கெல்லி தான் வாழ்ந்து கொண்டிருந்த வாழ்க்கைக்கு முற்றிலும் நேரெதிரான வாழ்க்கையை உருவாக்கிக் கொள்ளத் தன்னை அதில் மூழ்கடித்துக் கொண்டார். தான் விரும்பிய வேலையின் ஒவ்வோர் அம்சத்தையும் தன்னுடைய புலன்கள் அனைத்தையும் பயன்படுத்தி அவர் மனக்காட்சிப்படுத்தினார். தான் உண்மையிலேயே அந்த வேலையைச் செய்து கொண்டிருந்ததுபோல உண்மையிலேயே அவருக்கு நம்பிக்கை ஏற்படும்வரை அவர் அந்த மனக்காட்சிப்படைப்பில் ஈடுபட்டார். ஒவ்வொரு கணமும், உங்கள் வாழ்க்கையை மாற்றுவதற்கு உங்களுக்குக் கிடைத்துள்ள ஒரு வாய்ப்பு என்பதற்கான ஒரு நேர்மறையான ஆதாரமாக அவர் இருக்கிறார்.

**உங்கள் நாள் மோசமாகப் போய்க் கொண்டிருந்தால், நீங்கள் செய்து கொண்டிருப்பதை அப்படியே நிறுத்திவிட்டு, பிரக்ஞையோடு உங்கள் எண்ணங்களையும் உணர்ச்சிகளையும் மாற்றுங்கள். உங்கள் நாள் அற்புதமாகப் போய்க் கொண்டிருந்தால், நீங்கள் இப்போது என்ன செய்து கொண்டிருக்கிறீர்களோ, அதைத் தொடர்ந்து செய்யுங்கள்.**

**- இரகசியம் தினசரி போதனைகள்**

https://telegram.me/aedahamlibrary

## எப்படி என்பதைப் பற்றி நீங்கள் கவலைப்பட வேண்டியதில்லை

உங்கள் வாழ்விற்குள் நீங்கள் கொண்டுவர விரும்புகின்ற பிற எதுவொன்றையும்போலவே, நீங்கள் எந்த வேலையை அல்லது தொழில் வாய்ப்பைப் பெறத் துடித்துக் கொண்டிருக்கிறீர்களோ, அதை **எப்படி** நீங்கள் பெறுவீர்கள் என்பதைப் பற்றி நீங்கள் கவலைப்பட வேண்டியதில்லை. உங்கள் விருப்பத்தை நிறைவேற்றுவதற்குப் பிரபஞ்சம் அனைத்து மக்களையும் சூழல்களையும் நிகழ்வுகளையும் அதற்கேற்றவாறு இயக்கும். உங்கள் விருப்பம் நிறைவேற்றப்படுவதற்குப் பிரபஞ்சம் செய்கின்ற ஏற்பாடுகளை உங்களால் ஒருபோதும் செய்ய முடியாது, அது சாத்தியமே இல்லை. எனவே, நீங்கள் கேட்டது உங்களுக்கு எப்படிக் கிடைக்கும் என்பதைப் பற்றி நினைப்பதை மறந்துவிட்டு, அதற்கு பதிலாக, நீங்கள் கேட்டது ஏற்கனவே உங்களுக்குக் கிடைத்துவிட்டதுபோல உணருங்கள்.

### என்னுடைய இருபத்தைந்தாவது வயதில் என் புத்தகம் பிரசுரிக்கப்பட்டது!!!

**இரகசியம்** திரைப்படத்தைப் பார்த்தப் பிறகு, நான் என்னுடைய அனைத்து இலக்குகளையும் ஒரு தாளில் எழுதி, அதை என்னுடைய மேசைக்கு மேலாகச் சுவரின்மீது ஒட்டி வைத்தேன். என்னுடைய ஏழு முக்கிய இலக்குகளில், என்னுடைய கவிதைத் தொகுப்பை ஒரு மிகப் பெரிய பதிப்பகம் பிரசுரிக்க வேண்டும் என்பதும் ஒன்றாக இருந்தது. **இரகசியம்** திரைப்படத்தைப் பார்த்தப் பிறகு இரண்டு மாதங்களாக, என் புத்தகம் வெளியிடப்பட்டுவிட்டதாக நான் என் மனத்தில் காட்சிப்படுத்தினேன், என்னுடைய புத்தகம்

https://telegram.me/aedahamlibrary

பிரசுரமானால் அது எத்தகைய உற்சாகத்தையும் சக்தியையும் எனக்குக் கொடுக்குமோ அந்த உற்சாகத்தையும் சக்தியையும் என்னுள் தூண்டினேன். இவற்றைத் தவிர நான் வேறு எதுவும் செய்யவில்லை.

என் புத்தகம் எப்படி வெளியாகும் என்பதை நான் அறியவில்லை, ஆனால் அது நிச்சயமாக நடக்கும் என்பதை மட்டும் நான் அறிந்திருந்தேன். பொதுவாக, உங்களுடைய புத்தகத்தில் எந்தக் கவிதைகள் இடம்பெற வேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்களோ, அவற்றில் பெரும்பாலானவை பிரபலமான பத்திரிகைகளில் ஏற்கனவே பிரசுரமாகியிருக்க வேண்டும், இல்லாவிட்டால் அவற்றை ஒரு புத்தகத்தின் வடிவில் பிரசுரிப்பதைப் பற்றி உங்களால் நினைத்துப் பார்க்கக்கூட முடியாது என்பதை வெற்றி பெற்றுள்ள கவிஞர்கள் நன்றாக அறிவர்.

ஆனால் நான் அதை நம்ப மறுத்தேன். என்னுடைய புத்தகம் பிரசுரிக்கப்படும் என்றும், ஓராண்டுக்குள் அது ‘பார்ன்ஸ் - நோபிள்’ புத்தகக் கடையின் அலமாரிகளில் கொலுவேற்றப்பட்டிருக்கும் என்றும் நான் நம்பினேன்.

நான் மனக்காட்சிப்படுத்தத் தொடங்கி இரண்டு வாரங்களுக்குப் பிறகு, பிரபல பதிப்பகம் ஒன்றின் பதிப்பாசிரியரிடமிருந்து எனக்கு ஒரு மின்னஞ்சல் வந்தது. இரண்டு மாதங்களுக்கு முன்பு நான் அவருக்கு அனுப்பி வைத்திருந்த கவிதைத் தொகுப்பை அவர் முற்றிலுமாக மறந்து போயிருந்ததாகவும், அதை வெளியிடுவதைப் பற்றி இப்போது அவர் தீவிரமாக யோசித்துக் கொண்டிருந்ததாகவும் அந்த மின்னஞ்சலில் கூறப்பட்டிருந்தது. இதைக் கேட்டு நான் மகிழ்ச்சியில் திக்குமுக்காடிப் போனேன்.

எனவே, என் புத்தகத்தின் முன்னட்டையில் எந்த ஓவியம் இடம்பெற வேண்டும் என்று நான் விரும்பினேனோ, அதை நான் அச்சிட்டு, புத்தகத்தின் தலைப்பை அதன்மீது எழுதினேன். நான் யாருக்கெல்லாம் நன்றி கூற விரும்பினேனோ, அவர்களுடைய பெயர்களையும் அவர்கள் செய்த உதவிகளையும் நான் பட்டியலிட்டேன்.

https://telegram.me/aedahamlibrary

அந்தப் பதிப்பாசிரியர் என்னுடைய புத்தகத்தைப் பிரசுரிக்க ஒப்புதல் தெரிவித்து எனக்கு ஒரு மின்னஞ்சலை எழுதி அனுப்பியிருந்ததுபோல எனக்கு நானே ஒரு மின்னஞ்சலை எழுதி, அதை என் படுக்கைக்கு மேலே சுவர்மீது ஒட்டி வைத்தேன். என் புத்தகம் வெளியான நல்ல செய்தி எனக்குக் கிடைத்தவுடன் நான் என்ன செய்வேன் என்று நான் தொடர்ந்து என் மனத்தில் காட்சிப்படுத்தினேன். என்னுடைய வெற்றியைக் கொண்டாடுவதற்காக நான் என்னுடைய வகுப்பிற்குச் சென்று, என்னுடைய மாணவர்களுடன் சேர்ந்து ஒரு ஷாம்பெயின் பாட்டிலைத் திறந்ததுபோலவும், என்னுடைய பெற்றோரைத் தொலைபேசியில் அழைத்து என் மகிழ்ச்சியை அவர்களோடு பகிர்ந்து கொண்டதுபோலவும் நான் கற்பனை செய்தேன். வெற்றிக் கொண்டாட்டத்திற்கான அழைப்பிதழ்களை நான் வடிவமைத்தேன். என் புத்தகம் பிரசுரமாகியிருந்ததாக நான் என்னுடைய மாணவர்கள் ஒருசிலரிடம் கூறினேன்.

விரைவில் எனக்கு ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது. அதே பதிப்பாசிரியர்தான் அழைத்திருந்தார். தான் என்னுடைய கவிதைத் தொகுப்பை ஒரு புத்தமாக வெளியிடத் தயாராக இருந்ததாகத் தெரிவித்த அவர், அதற்கான ஒப்பந்தத்தையும் மற்றத் தகவல்களையும் மிக விரைவில் எனக்கு அனுப்பி வைப்பதாகக் கூறினார். இரகசியம் நிச்சயமாக வேலை செய்கிறது!

**- மரியா, நியூ யார்க், அமெரிக்கா**

உங்கள் விருப்பம் **எப்படி** நிறைவேறும் என்று எப்போதும் கவலைப்பட்டுக் கொண்டு, அதை நிறைவேற்றுவதற்கு நீங்கள் ஏதேனும் செய்தாக வேண்டும் என்று நினைத்து அச்செயல்முறையில் ஒருபோதும் குறுக்கிடாதீர்கள். உங்கள் விருப்பத்தை நிறைவேற்றுவது பிரபஞ்சத்தின் வேலை. அதில் நீங்கள் ஓரடி முன்னெடுத்து

https://telegram.me/aedahamlibrary

வைத்து அதன் பாதையில் குறுக்கிட்டால், நீங்கள் உங்கள் படைப்பை ரத்து செய்கிறீர்கள். ஏன்? ஏனெனில், நீங்கள் விரும்புவது உங்களிடம் இல்லை என்று உங்கள் நடவடிக்கைகள் கூறுகின்றன. எனவே, நீங்கள் விரும்புவது உங்களிடம் இல்லாத ஒரு சூழலைத்தான் நீங்கள் தொடர்ந்து கவர்ந்திழுத்துக் கொண்டிருப்பீர்கள்.

கவிஞரான மரியா, தன்னுடைய கவிதைகள் ஒரு புத்தகத்தின் வடிவில் வெளியிடப்பட வேண்டும் என்று விரும்பினார். ஆனால் அக்கனவு **எப்படி** நிறைவேறும் என்பதை அவர் அறியவில்லை. இருந்தாலும், அது ஏற்கனவே நிறைவேறிவிட்டதுபோல அவர் நடந்து கொண்டார், சில குறிப்பிட்ட நடவடிக்கைகளை அவர் மேற்கொண்டார். அந்த மாதிரியான நடவடிக்கைகள்தான் படைப்பைத் துரிதப்படுத்துகின்றன!

## நம்பிக்கை

நான் பல ஆண்டுகளாக சுயமுன்னேற்ற நூல்களைப் படித்தேன். அவற்றில் நான் கற்றிருந்த எல்லாவற்றையும் நான் என் வாழ்வில் ஆண்டுக்கணக்கில் கடைபிடித்து வந்திருந்தேன். ஆனாலும் எதுவும் எனக்குச் சரியான விளைவுகளைப் பெற்றுக் கொடுக்கவில்லை. பிறகு, ஒருசில ஆண்டுகளுக்கு முன்பு, **இரகசியம்** பற்றி எனக்குத் தெரிய வந்தது. இத்தனை ஆண்டுகளாக நான் கற்று வந்திருந்த அனைத்தும் இரகசியத்தில் உள்ளடங்கியிருந்ததால், அவற்றைப் புரிந்து கொண்டு நடைமுறையில் செயல்படுத்துவது எளிதாக இருந்தது. ‘கேட்டல், நம்புதல், பெறுதல்’ என்ற மூன்று அம்சச் செயல்முறைதான் எனக்கு அதுவரை தெரியாமல் இருந்தது. இரகசியம் **அதை எனக்குக் கற்றுக் கொடுத்தது.** இரகசியத்தின் ஒட்டுமொத்த சாராம்சம்

https://telegram.me/aedahamlibrary

அதுதான். இரகசியத்தின் போதனைகள் அதை எளிதாக்கின. அற்புதமான விஷயம் இது.

**இரகசியம்** பற்றி நான் தெரிந்து கொண்ட நேரத்தில், என் திருமண வாழ்க்கை மிகக் கொடூரமான ஒன்றாக இருந்தது, முன்னேற்றத்திற்கான எந்த வாய்ப்பும் இல்லாத ஒரு வேலையில் நான் இருந்தேன். நான் முயற்சித்த எல்லாவற்றிலும் நான் தோல்வியுற்றேன். அதற்கான காரணம் எனக்குப் புரியவில்லை. ஏனெனில், நான் ஒரு நேர்மறையாளன் என்றும் சுயமுன்னேற்றத்தில் கரை கண்டவன் என்றும் என்னைப் பற்றி நான் எப்போதும் எண்ணி வந்திருந்தேன்.

இரகசியத்தின் கொள்கைகளை என் வாழ்வின் அனைத்து அம்சங்களிலும் நான் செயல்படுத்தத் தொடங்கினேன். விளைவுகளை உடனடியாக நான் பார்க்கத் தொடங்கினேன்.

முதல் மாற்றம் என்னுடைய தொழில்வாழ்க்கையில்தான் ஏற்பட்டது. என்னுடைய இருபதுகளில் நான் ஒரு தொழில்முறை நடிகனாக இருந்திருந்தேன். ஆனால், முப்பது வயதில் எங்களுக்குக் குழந்தைகள் பிறந்தபோது, எனக்கு ஓர் ‘உண்மையான வேலை’ கிடைத்தது. நான் மிகுந்த மன உளைச்சலுக்கு ஆளானேன், ஆனால் வாழ்க்கை என்றால் அப்படித்தான் இருக்கும்போலும் என்று நான் நினைத்துக் கொண்டேன். **இரகசியம்** புத்தகத்தைப் படித்தப் பிறகு, நல்ல சம்பளத்துடன்கூடிய அந்த ‘நிலையான’ வேலையிலிருந்து நான் விலகினேன். உண்மையான திட்டங்களோ அல்லது உத்தியோ இல்லாமல், வெறும் நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டு, எனக்கு மிகவும் பிடித்தமான நடிப்புத் தொழிலில் எனக்கு ஒரு நல்ல எதிர்காலத்தை உருவாக்கிக் கொடுக்கும்படி பிரபஞ்சத்திடம் நான் ஒரு கோரிக்கையை முன்வைத்தேன்.

மூன்று மாதங்களுக்குள், குறைந்த பட்ஜெட் திரைப்படம் ஒன்றில் ஒரு சிறிய பாத்திரத்தில் நடிப்பதற்கான வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அதற்கடுத்த ஆறு மாதங்களில்

https://telegram.me/aedahamlibrary

இன்னும் இரண்டு பாத்திரங்கள் எனக்குக் கிடைத்தன. பிறகு நான் பிரபஞ்சத்திடம் பெரிய கோரிக்கைகளை வைக்கத் தொடங்கினேன். மன அழுத்தமற்ற ஒரு வாழ்க்கை, பெரும்பணம் ஆகியவற்றை நான் கேட்டேன். என் வீட்டுத் தவணைகள் அனைத்தும் கட்டி முடிக்கப்பட வேண்டும், என் வாழ்க்கைச் செலவுகளை என்னால் சிறப்பாகச் சமாளிக்க முடிய வேண்டும் என்றும் நான் கோரினேன்.

பிறகு ஒருநாள், நான் கலந்து கொண்ட நடிப்புத் திறன் தேர்வு என் வாழ்க்கையை மாற்றியது. சிங்கப்பூரில் ஓராண்டுகால நடிப்பு வேலை ஒன்று எனக்குக் கிடைத்தது! பிரபஞ்சத்திடம் நான் கேள்வி எதுவும் கேட்கவில்லை, மாறாக, நான் நன்றி கூறினேன். அன்றிலிருந்து என் தொழில்வாழ்க்கையில் நான் ஒரு சூறாவளிப் பயணம் மேற்கொண்டு வந்துள்ளேன்.

நான் என்னுடைய கொடூரமான திருமண வாழ்க்கையிலிருந்து விடுபட்டேன். முன்பைவிட இப்போது என் முன்னாள் மனைவிக்கும் எனக்கும் இடையே அதிக இணக்கமான ஓர் உறவு நிலவுகிறது. என் குழந்தைகளுக்கும் எனக்கும் இடையே ஒரு நெருக்கமான உறவு நிலவி வந்துள்ளது. நான் அவர்களை உலகின் பல இடங்களுக்கும் அழைத்துச் சென்றேன். முன்பு எனக்கு அது சாத்தியப்பட்டிருக்காது. நான் நடிப்பின் மூலம் வாழ்க்கை நடத்துகிறேன். அதாவது, நான் மிகவும் விரும்புகின்ற ஒரு வேலையை நான் செய்து கொண்டிருக்கிறேன். என்னுடைய அன்றாடச் செலவுகளை மற்றவர்கள் பார்த்துக் கொள்ளுகின்றனர். ஓர் அழகான அடுக்குமாடிக் கட்டடத்தில் ஒரு தனி வீட்டில் நான் வாழுகிறேன். அதற்கு வாடகைகூடக் கிடையாது. நான் மிக அதிகச் சம்பளம் வாங்குகிறேன். முன்பைவிட மிகக் குறைவான நேரமே நான் வேலை செய்கிறேன். என் வேலை ஒரு வேலைபோலவே எனக்குத் தெரியவில்லை. நான் அதை மிகவும் மகிழ்ச்சியாகச் செய்கிறேன். உலகம் நெடுகிலும் பயணிப்பதற்கான வாய்ப்பு எனக்குக் கிடைக்கிறது.

https://telegram.me/aedahamlibrary

என் வயது வெகுவாகக் குறைந்து நான் இளமையாக இருப்பது போன்ற ஓர் உணர்வை நான் அனுபவிக்கிறேன். என் மன அழுத்தம் வெகுவாகக் குறைந்துவிட்டது. என்றென்றைக்குமாக!

இவை எல்லாவற்றையும் என்னால் பெற முடியும் என்று உண்மையிலேயே நம்பாத ஒருவனாக நான் இருந்தேன். ஆனால் அவன் 'வேறு' ஒரு நபர். நான் இப்போது உண்மையிலேயே நம்பிக்கை கொண்டுள்ளேன்.

என் வாழ்வில் கிடைத்துள்ள ஆசீர்வாதங்களுக்காக ரோன்டாவுக்கும் பிரபஞ்சத்திற்கும் நான் நன்றி கூற விரும்புகிறேன். லௌகிகப் பொருட்களுக்கு மட்டுமல்லாமல், தொட்டுணரப்பட முடியாத விஷயங்கள், உணர்ச்சி சார்ந்த விஷயங்கள், ஆன்மிக ஆசீர்வாதங்கள் ஆகியவற்றுக்காகவும் நான் நன்றி கூறுகிறேன்.

**- டேரல் பி., சிங்கப்பூர்**

டேரல் தான் விரும்பிய எல்லாவற்றையும் பெற்றார். அவையெல்லாம் **எப்படி** நிகழும் என்பது அவருக்குத் தெரிந்திருக்கவில்லை. பின்வரும் கதையில் வரும் ரோலன்டின் விஷயத்திலும் இதுதான் நடந்தது. தாங்கள் உண்மையிலேயே எதை விரும்பினோம் என்பது பற்றிய ஒரு தெளிவான யோசனையும், தாங்கள் விரும்பியதைத் தாங்கள் நிச்சயமாகப் பெறுவோம் என்ற ஆணித்தரமான நம்பிக்கையும் அவ்விருவரிடமும் இருந்த இன்னொரு பொதுவான விஷயமாகும்.

## மனமிருந்தால் மார்க்கமுண்டு!

இரகசியத்தை இவ்வுலகிற்குக் கொடுத்து, அதை சுயமுயற்சியால் ஒருபோதும் கண்டுபிடித்திருக்க முடியாத என்னைப் போன்ற நபர்களிடம் அதைக்

https://telegram.me/aedahamlibrary

கொண்டுவந்து சேர்த்துள்ளதற்காக இரகசியம் குழுவினருக்கு நான் முதலில் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

என்னுடைய பன்னிரண்டாவது வயதிலிருந்தே, லாஸ் ஏஞ்சலீஸ் நகரத்தில் வாழ நான் எப்போதும் விரும்பி வந்துள்ளேன். நான் தொழில்முறைரீதியாக 'டிரம்ஸ்' வாசிக்கும் கலைஞனாக ஆக விரும்பினேன். இசைக் கலைஞர்களில் 1 சதவீதத்திற்கும் குறைவானவர்களே உண்மையில் இசையின் மூலம் பணம் சம்பாதித்து வாழ்க்கை நடத்துகின்றனர். நான் வாழ்ந்த இடத்தில் நான் சிறிதளவு பணம் சம்பாதித்தேன், ஆனால் கூடுதலாகப் பகுதிநேர வேலை செய்யாமல் என்னால் வாழ்க்கை நடத்த முடியவில்லை. இசையும் இசைத் துறையும் தழைக்கின்ற லாஸ் ஏஞ்சலீஸ்தான் நான் இருக்க வேண்டிய இடம் என்று நான் எப்போதுமே உணர்ந்து வந்துள்ளேன்.

ஏதோ ஒரு நிலையில், இரகசியத்தின் விதிமுறைகளில் சிலவற்றை நான் பிரக்ஞையின்றிக் கடைபிடித்து வந்துள்ளதாக நான் நினைக்கிறேன். ஏனெனில், நான் பணத்தைப் பற்றி ஒருபோதும் கவலைப்படுவதில்லை. எனக்குத் தேவையான நேரத்தில் அது எப்போதும் என்னிடம் இருக்கிறது. ஆனால், **இரகசியம்** திரைப்படத்தைப் பார்த்ததிலிருந்து, நான் முன்பு எப்போதையும்விட அதிக சக்திவாய்ந்தவனாக ஆகியிருக்கிறேன். நான் இரகசியத்தின் ஆடியோ பதிப்பை வாங்கி, தினமும் அதைக் கேட்கத் தொடங்கினேன். இன்றும் என்னால் முடிந்தபோதெல்லாம் அதை நான் கேட்கிறேன். இரகசியத்தின் அனைத்து அம்சங்களையும் கற்றுக் கொண்டு அவற்றைச் செயல்படுத்துவதன்மீது நான் கவனம் செலுத்தி வந்திருக்கிறேன்.

மூன்று மாதங்களுக்கு முன்பு நான் என் வேலையிலிருந்து நின்றுவிட்டேன். அதுதான் சரி என்று நான் இதயபூர்வமாக உணர்ந்தேன். பணத்திற்கு நான் என்ன செய்வேன் என்பது பற்றியோ, நான் இனி அங்கிருந்து எங்கே போகவிருந்தேன் என்பது பற்றியோ

https://telegram.me/aedahamlibrary

எனக்கு எந்த யோசனையும் இருக்கவில்லை. ஆனாலும், நான் மிகவும் ஆசுவாசமாக இருந்தேன். தானாகவே எல்லாம் நல்லபடியாக நடக்கும் என்று மட்டும் நான் முழுமையாக நம்பினேன். அதன் விளைவாக, எனக்கு ஒரு தற்காலிக வேலை கிடைத்தது. இரண்டு மாதங்களில் 10,000 டாலர்களுக்கும் அதிகமாக நான் சம்பாதித்தேன். அது முன்பு நான் சம்பாதித்துக் கொண்டிருந்ததைவிட அதிகம். அந்த வேலை முடிவடைந்தபோது, அடுத்து நான் என்ன செய்வேன் என்பதோ, என்னுடைய அடுத்த மாதச் சம்பளம் எங்கிருந்து வரும் என்பதோ எனக்குத் தெரியவில்லை. அப்போது, லாஸ் ஏஞ்சலீஸ் நகரில் இயங்கிக் கொண்டிருந்த உல்லாசக் கப்பல் நிறுவனம் ஒன்றிலிருந்து எனக்கு ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது. தங்களுடைய கப்பல்களில் இசை நிகழ்ச்சிகளை நடத்த விரும்பிய அவர்கள், அதற்காகப் புதிய நிகழ்ச்சிகளைத் தயாரிப்பதற்கு ஓர் இசைக்குழுவை உருவாக்க விரும்பினர். லாஸ் ஏஞ்சலீஸ் நகரில் அவர்களுடைய பெரிய ஸ்டூடியோவில் நாங்கள் வேலை செய்யவிருந்தோம்.

நான் எப்போதும் உற்சாகமாக இருந்தேன். மேலும், நான் லாஸ் ஏஞ்சலீஸ் நகரில் வாழ்ந்து கொண்டிருந்ததுபோலவும், ஓர் இசைக் கலைஞனான வேலை செய்து கொண்டிருந்ததுபோலவும், நான் செழிப்பாகவும் வெற்றிகரமாகவும் இருந்ததுபோலவும் நான் கற்பனை செய்தேன். இப்போது எல்லாமே ஒவ்வொன்றாகக் கச்சிதமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. என்னால் கற்பனை செய்திருக்க முடியாத விதங்களில் அவை நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. அவை மெய்யாகிக் கொண்டிருக்கும் விதத்தைக் கண்டு நான் வியந்து நிற்கிறேன். இது வெறும் துவக்கம்தான் என்ற உணர்வு என்னுள் எழுகிறது.

இரகசியம் ஆடியோ பதிப்பை வெறுமனே கேட்பது என்னுள் மகிழ்ச்சியைத் தூண்டி, என் மனத்தில்

https://telegram.me/aedahamlibrary

உற்சாகத்தைத் தோற்றுவிக்கிறது. என் மனம் நெகிழுவதில் என் கண்கள் குளமாகின்றன. அதை வார்த்தைகளில் விவரிப்பது கடினம். இவை எல்லாவற்றிலிருந்தும், நேர்மறையாகச் சிந்திக்கவும் வாழ்க்கையை நேர்மறையாகப் பார்க்கவும் மட்டுமே நான் கற்றுக் கொள்ளுகிறேன் என்றால், அதுவே ஓர் அற்புதமான பரிசாக இருக்கும். ஆனால், அதைவிட அதிகமானவற்றை நான் பெற்றுக் கொண்டிருக்கிறேன். அதற்காக நான் நன்றி கூறுகிறேன்.

**- ரோலன்ட் சி., நனாய்மோ, கனடா**

இரகசியத்தைப் பற்றித் தெரிந்து கொண்டதன் மூலம், தான் விரும்பிய தொழிலைக் கவர்ந்திழுப்பதற்கான சக்தி தனக்குள் இருந்ததை ரோலன்ட் அறிந்து கொண்டார். நம்மால் யாராக வேண்டுமானாலும் ஆக முடியும், எதையும் கைவசப்படுத்த முடியும், எதையும் செய்ய முடியும். அவற்றுக்கு எந்த எல்லையும் இல்லை. நாம் செய்ய வேண்டியதெல்லாம், நமக்கு **உண்மையிலேயே** என்ன வேண்டும் என்பதைக் கண்டுபிடிப்பதும், பிரபஞ்சத்திடம் அதைக் கேட்பதும் மட்டும்தான்.

சில சமயங்களில், நாம் விரும்புவதை நாம் எப்படிப் பெறுவோம் என்று யோசிப்பதற்கு நமக்கு நியாயமான காரணங்கள் இருக்கக்கூடும். அடுத்தக் கதையில் வரும் நபரின் விஷயத்தில் அது நிச்சயமாக உண்மையாக இருந்தது. குறிப்பிட்ட ஒரு நடனத் திறன் தேர்வுக்கான முன்தேவைகள் ஒவ்வொன்றும், அவருக்கு அந்த வேலை கிடைப்பது சாத்தியமில்லை என்று திட்டவட்டமாகத் தெரிவித்தபோதிலும், தன் விஷயத்தில் இரகசியத்தை சோதித்துப் பார்ப்பதென்று அவர் தீர்மானித்தார்.

https://telegram.me/aedahamlibrary

# துணிச்சலான திறன் தேர்வு

**இரகசியம்** புத்தகத்தைப் படித்தப் பிறகு, அதன்மீது எனக்கு ஒரு லேசான சந்தேகம் இருக்கத்தான் செய்தது என்பதை நான் ஒப்புக் கொண்டாக வேண்டும். எனவே, சிறிய விஷயங்களில் அதை முயற்சித்துப் பார்ப்பதென்று நான் தீர்மானித்தேன். யாரேனும் என்னைத் தொலைபேசியில் அழைக்க வேண்டும், என்னுடைய ரயிலை நான் தவறவிட்டுவிடக்கூடாது போன்ற விஷயங்களுக்கு இரகசியத்தை நான் பயன்படுத்தி அதில் வெற்றியும் கண்டேன். ஆனாலும் அவையெல்லாம் வெறும் தற்செயலான நிகழ்வுகள் என்று நினைத்து, ஏதேனும் ஒரு பெரிய விஷயத்திற்கு இரகசியத்தைப் பயன்படுத்தி அதை சோதிக்க நான் முடிவு செய்தேன்.

என்னுடைய முகவர் என்னைத் தொலைபேசியில் அழைத்து, ஒரு விளம்பரத்தில் நடிப்பதற்கு ஒரு பெண் நடனக் கலைஞர் தேவை என்று தெரிவித்தார். அவர் என்னை அந்த வேலைக்கு அனுப்ப விரும்பினார், **ஆனால்** பொன்னிறத் தலைமுடியையும் வெளிர்நிறத் தோலையும் கொண்ட ஒரு பெண்ணைத்தான் அந்த விளம்பரத்திற்குத் தேடிக் கொண்டிருந்தனர். என் நிறம் கருப்பு. எனவே, என்னை ஏன் அந்த முகவர் அழைத்தார் என்று நான் யோசித்தேன். இருந்தாலும் நான் அங்கு போக ஒப்புக் கொண்டேன்.

எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல் நான் அந்த நடனத் திறன் தேர்வுக்குச் சென்றேன். எதிர்பார்ப்புடன் சென்று ஒரு வேலை கிடைக்காவிட்டால் அது ஏமாற்றத்தை ஏற்படுத்துமல்லவா? அங்கு வந்திருந்த எல்லோரும் வெள்ளைத் தோல் கொண்டவர்களாக இருந்தனர். நான் அங்கு அமர்ந்திருந்தபோது, நான் உண்மையிலேயே அந்த வேலையைப் பெற விரும்பியதை நான் உணர்ந்தேன். எனவே, இரகசியத்தை சோதிப்பதற்கான சரியான நேரம் இதுதான் என்று எனக்குத் தோன்றியது. எனக்கு அந்த வேலை கிடைத்து, என் முகம் தொலைக்காட்சியில் தோன்றியதைப் போலவும், மக்கள்

https://telegram.me/aedahamlibrary

என்னை அழைத்துப் பாராட்டியதைப் போலவும், இந்த வேலை எனக்கு வேறு பல வேலைகள் கிடைக்க வழி வகுத்ததுபோலவும் நான் கற்பனை செய்யத் தொடங்கினேன்.

தேர்வுக்காக நான் மேடையேற வேண்டிய நேரம் வந்தபோது, நான் முற்றிலும் தன்னம்பிக்கையுடன் இருந்தேன். நான் என் ஆற்றல் முழுவதையும் ஒன்றுதிரட்டி உற்சாகமாகவும் மகிழ்ச்சியாகவும் நடனமாடிவிட்டு அங்கிருந்து போய்விட்டேன்!

வீட்டிற்குச் செல்லும் வழி நெடுகிலும் அந்த வேலையைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்த நான், என் வீட்டிற்குள் நுழைந்தவுடன், நான் எந்தப் பொருளின் விளம்பரத்திற்காக நடனமாடிவிட்டு வந்திருந்தேனோ, அந்தப் பொருளின் பெயரை ஓர் ஒட்டுக்காகிதத்தில் எழுதி அதை என் அலமாரியில் ஒட்டி வைத்தேன். அந்த வேலை எனக்குக் கிடைத்ததாகவும், அச்செய்தி என்னிடம் தெரிவிக்கப்படும்போது நான் எவ்வாறு எதிர்வினையாற்றுவேன் என்றும் நான் தொடர்ந்து கற்பனை செய்து கொண்டே இருந்தேன்.

மறுநாள் நான் வேறொரு வேலையில் இருந்தபோது, என் முகவர் என்னை அழைத்தார். “உங்களுக்கு ஒரு நல்ல செய்தி-” என்று அவர் கூறத் தொடங்கியவுடனேயே, அவர் ஏன் அழைத்திருந்தார் என்பது எனக்குப் புரிந்துவிட்டது. **எனக்கு அந்த வேலை கிடைத்துவிட்டது!** நான் மிகவும் உற்சாகமாக இருந்தேன். அந்த வேலை என்னுடையதுதான் என்று எனக்கு நானே கூறி வந்திருந்தபோதிலும், என்னுடைய முகவர் அச்செய்தியைத் தெரிவித்ததை நான் என் காதுகுளிரக் கேட்டபோது வியப்படைந்தேன்.

இன்னும் பெரிய லட்சியங்களை என்னால் சாதிக்க முடியும், என் எதிர்காலத்தை உண்மையிலேயே என்னுடைய கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவர முடியும் என்பதை நான் அறிந்தேன். அது மிகவும் உற்சாகமூட்டுவதாக இருக்கிறது.

https://telegram.me/aedahamlibrary

**- கே., லண்டன், இங்கிலாந்து**

## நீங்கள் விரும்பும் சம்பளத்தை நீங்கள் உருவாக்கிக் கொள்ளுங்கள்

நம்முடைய அடுத்தக் கதையில், ஒரு குறிப்பிட்ட வேலையைப் பற்றிய விருப்பம் யானாவின் மனத்தில் இருந்தது. தான் விரும்பியதை சுயபிரகடனத்தின் சக்தியைக் கொண்டு அவர் கவர்ந்திழுத்தார்.

### அந்த வேலை

நல்ல சம்பளத்துடன்கூடிய ஒரு வேலையை நான் இழந்த பிறகு, அடுத்தடுத்துப் பல தற்காலிகமான வேலைகளை நான் பார்த்தேன். கடைசியில் எனக்கு எந்த வேலையும் இல்லாமல் போனது. இறுதியாக, ஒரு மணிநேரத்திற்குப் பத்து டாலர்கள் சம்பளத்தில் நிரந்தரமான பகுதிநேர வேலை ஒன்று எனக்குக் கிடைத்தது. நான் அந்த வேலையில் சேர்ந்து இரண்டு நாட்களுக்குப் பிறகு, என் வேலை நேரம் வாரத்திற்கு இருபது மணிநேரத்திலிருந்து பத்து மணிநேரமாகக் குறைக்கப்பட்டிருந்ததாக என்னிடம் கூறப்பட்டது. வாரத்திற்கு 100 டாலர்கள் பணத்தைக் கொண்டு நிச்சயமாக என்னால் வாழ்க்கை நடத்த முடியாது.

அன்று நான் மிகுந்த வருத்தத்தோடும் மனச்சோர்வுடனும் நடந்து வீடு திரும்பினேன். நான் என் வீட்டிற்குள் நுழைந்தபோது, இரகசியம் திரைப்படத்தைப் பார்ப்பதற்கான ஒரு தீவிரத் தூண்டுதல் என்னுள் எழுந்தது. நான் மிகவும் களைப்பாகவும் சோர்வாகவும் உணர்ந்தபோதிலும், நான் அந்தத் திரைப்படத்தைப் பார்த்தப் பிறகு என்னுடைய குறிப்பேட்டை எடுத்து, பின்வரும் சுயபிரகடனத்தை எழுதினேன்:

“அடுத்த ஒருசில நாட்களுக்குள், என் வீட்டிலிருந்து நடந்து செல்லும் தூரத்தில் ஒரு நிறுவனத்தில் ஒரு

https://telegram.me/aedahamlibrary

பெரிய நிர்வாகப் பதவியில் நான் வேலைக்குச் சேருகிறேன். அந்த வேலையில் ஆண்டொன்றுக்குக் குறைந்தபட்சமாக 30,000 டாலர்கள் வருமானத்தை நான் ஈட்டுகிறேன். என்னுடன் வேலை செய்கின்றவர்கள் மகிழ்ச்சியும் பரிவும் கொண்டவர்களாக இருக்கின்றனர். அவர்கள் என்னோடு ஒத்துழைக்கின்றனர். நான் செய்யும் வேலை எனக்கு சுவாரசியமூட்டுவதாக உள்ளது. என் சக ஊழியர்களும் மேற்பார்வையாளர்களும் என்னைப் பெரிதும் பாராட்டுகின்றனர். வாரந்தோறும் எனக்குச் சம்பளம் வழங்கப்படுகிறது. ஒவ்வொரு வாரமும் திங்கட்கிழமை காலையில் முன்னதாகவே நான் வேலைக்கு வந்துவிடுகிறேன். திங்கள் முதல் வெள்ளி வரை நான் கடினமாக உழைக்கிறேன். நான் தினமும் அந்த வேலையைப் பெரிதும் ரசித்துச் செய்கிறேன். எனக்கு மிகப் பொருத்தமான அந்தப் புதிய வேலையை உருவாக்கிக் கொடுத்துள்ள தெளிவான செயல்முறைக்கு நான் நன்றி கூறுகிறேன்."

மறுநாள் முழுவதும் நான் அந்த சுயபிரகடனத்தைக் கூறினேன். அதைக் கூறியபோது என் மனம் மகிழ்ச்சியால் **நிரம்பியதை** நான் கவனித்தேன். அந்தப் புதிய வேலையைப் பற்றி நான் நினைத்த ஒவ்வொரு முறையும் என்னுள் உற்சாகம் பெருக்கெடுத்தது. நான் உண்மையிலேயே உற்சாகமடைந்திருந்தேன்!

அன்று நான் என்னுடைய அப்போதைய வேலையில் ஈடுபட்டிருந்தபோது, என்னுடைய அலைபேசி ஒலித்துக் கொண்டே இருந்தது. ஒருசில நிமிடங்களுக்குள் ஒரே எண்ணிலிருந்து மூன்று அழைப்புகள் எனக்கு வந்திருந்தன. வேலையில் இடைவேளையின்போது நான் என்னுடைய குறுஞ்செய்திகளைப் படித்தேன். ஒருசில ஆண்டுகளுக்கு முன்பு, வேலை தேடித் தரும் நிறுவனம் ஒன்றில் நான் என் விபரங்களைப் பதிவு செய்து வைத்திருந்தேன். அந்த நிறுவனத்திடமிருந்துதான் அந்த மூன்று அழைப்புகளும் வந்திருந்தன.

https://telegram.me/aedahamlibrary

நான் அந்த எண்ணுக்கு பதிலழைப்பு விடுத்தபோது, எனக்குப் பொருத்தமான ஒரு வேலை தங்களிடம் இருந்ததாகவும், மறுநாளே நான் அந்த வேலையில் சேர வேண்டும் என்றும் அந்நிறுவனத்தின் வரவேற்பாளினி என்னிடம் கூறினார். என்னுடைய சுயபிரகடனத்தில் நான் கேட்டிருந்த அதே சம்பளத்துடன்கூடிய வேலையாக அது இருந்தது. அந்நிறுவனம் எங்கே இருந்தது என்று நான் அவரிடம் கேட்டபோது, அது ஒரு வடிவமைப்பு நிறுவனம் என்றும், என் வீட்டிலிருந்து ஐந்து நிமிடங்களில் நான் அங்கு நடந்து சென்றுவிடலாம் என்றும் அவர் கூறினார். இவை எல்லாவற்றையும்விட மிக முக்கியமாக, அது ஒரு நிரந்தரமான வேலை என்று அவர் தெரிவித்தார். சம்பளம் இருமடங்கானது!

நான் என்னுடைய சுயபிரகடனத்தை எழுதி வெறும் இரண்டு நாட்களுக்குப் பிறகு நான் அந்தப் புதிய வேலையில் சேர்ந்தேன். முதல் நாளன்று அந்த வேலை எவ்வளவு அற்புதமானதாக இருந்ததோ, இன்றும் அது அதேபோல அற்புதமானதாக இருக்கிறது.

**- யானா எஃப்., பால்டிமோர், மேரிலேன்ட், அமெரிக்கா**

தன்னுடைய புதிய வேலை குறித்தும் தன்னுடைய புதிய சம்பளம் குறித்தும் தான் நன்றியுடன் இருந்ததாக யானா தன்னுடைய சுயபிரகடனத்தில் கூறியிருந்தார். தான் அவற்றை **ஏற்கனவே** பெற்றிருந்ததுபோல அவர் அந்த சுயபிரகடனத்தை அமைத்தார். நன்றியுணர்வு உங்களை ஏழ்மையிலிருந்து செழிப்பிற்குக் கூட்டிச் செல்லுகின்ற ஒரு பாலமாகும். உங்களிடம் இப்போது இருக்கும் பணம் எவ்வளவு குறைவாக இருந்தாலும் சரி, அப்பணத்திற்கு நீங்கள் எவ்வளவு அதிக நன்றியுடன் இருக்கிறீர்களோ, அவ்வளவு அதிகமான செல்வத்தை நீங்கள் பெறுவீர்கள்.

https://telegram.me/aedahamlibrary

பணத்தைப் பற்றி நீங்கள் எவ்வளவு அதிகமாகக் குறை கூறுகிறீர்களோ, நீங்கள் அவ்வளவு அதிக ஏழ்மையை அனுபவிப்பீர்கள்.

## சம்பளம் இருமடங்கானது!

நான் முதன்முதலாக ஒரு பத்திரிகையாளராக என்னுடைய வேலையைத் துவக்கியபோது, என் குடும்பத்தினர் என்னை வெகுவாக ஆதரித்தனர். நான் என்னுடைய இலக்கைப் பின்தொடர்ந்து செல்லுவதற்குத் தேவையான ஊக்கத்தை அது எனக்குக் கொடுத்தது. உள்ளூர் பத்திரிகை நிறுவனம் ஒன்றில் எனக்கு ஒரு வேலை கிடைத்தது. சம்பளம் குறைவாக இருந்தாலும், முன்னேற்றத்திற்கான அதிக வாய்ப்புகள் அதில் இருந்ததுபோலத் தெரிந்தது. என்னுடைய வீட்டு வாடகைக்குப் போதுமான பணத்தை நான் சம்பாதித்தேன். மற்றச் செலவுகளுக்குப் போதுமான பணத்தை என் பெற்றோர் எனக்குக் கொடுத்து உதவினர்.

மாதங்கள் செல்லச் செல்ல, என் தந்தை என்னுடைய பெரும்பாலான செலவுகளுக்குப் பணம் கொடுத்து கொடுத்துச் சலிப்படையத் தொடங்கியிருந்தார். அதை அவர் என்னிடம் வெளிக்காட்டவும் செய்தார். நான் என் சொந்தக் காலில் நிற்க வேண்டும் என்று அவர் விரும்பியதை நான் புரிந்து கொண்டேன், ஆனால் நான் பதற்றமும் பரிதவிப்பும் கொள்ளத் தொடங்கினேன். நான் என் பெற்றோரை மகிழ்ச்சிப்படுத்த விரும்பினேன், சொந்தமாகப் போதுமான பணம் சம்பாதிக்க விரும்பினேன். அந்த ஆண்டு இறுதியில் என்னுடைய பரிதவிப்பு மனச்சோர்வாக மாறியது. எனக்கு ஊதிய உயர்வு கொடுப்பதாக என் நிறுவனத்தினர் எனக்குக் கொடுத்திருந்த வாக்கு நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. அது நிறைவேறும் என்ற நம்பிக்கையையும் நான் இழந்தேன். இதைத் தொடர்ந்து, மோசமான

https://telegram.me/aedahamlibrary

விஷயங்களை மட்டுமே நான் எதிர்பார்க்கத் தொடங்கினேன். துல்லியமாக அவைதான் நிகழ்ந்தன.

என்னுடைய மனச்சோர்வு தீவிரமடைந்ததில், எல்லா நேரமும் நான் களைப்பாக உணர்ந்தேன். என் உடல்நலம் சீர்கெடத் தொடங்கியது. எதிர்காலம் அவ்வளவு ஒளிமயமானதாகத் தெரியவில்லை. இந்த மோசமான சூழ்நிலையிலிருந்து விடுபடுவதற்கு ஒரு வழி பிறக்காதா என்ற ஏக்கம் என்னுள் பிறந்தது. பிறகு, திடீரென்று ஒருநாள், என்னுடைய சூழ்நிலையைப் பற்றி அறிந்திருந்த என்னுடைய நண்பன் ஒருவன், **இரகசியம்** புத்தகத்தைப் பற்றி எனக்குத் தெரியுமா என்று என்னிடம் கேட்டான். அவன் அதன் டிவிடி ஒன்றை எனக்குக் கொடுத்துவிட்டு, அதைப் பார்க்கும்படி பரிந்துரைத்தான். சுயமுன்னேற்றம் தொடர்பான விஷயங்களில் எனக்கு அவ்வளவு ஈடுபாடு கிடையாது என்றபோதிலும், அந்தத் திரைப்படத்தை தினமும் இரவில் நான் பார்த்தேன். அதில் தோன்றியவர்கள் கூறிய அனைத்து விஷயங்களும் என்னைப் பற்றியவையாகவே இருந்ததாக எனக்குத் தோன்றியது. என்னுடைய எண்ணங்கள் மூலமாக நான்தான் என் வாழ்வில் மோசமான விஷயங்களை விளைவித்துக் கொண்டிருந்தேன். அன்றிரவு நான் அழுதேன், ஆனால் அது வருத்தத்தால் உண்டான அழுகை அல்ல, மாறாக, அது ஆனந்தக் கண்ணீர். என் நிலைமை சீரடைந்துவிடும் என்பதை நான் அறிந்தேன்.

இரகசியத்தை தினமும் இரவில் நான் பயன்படுத்தத் தொடங்கினேன். நல்ல எண்ணங்களையும் செல்வம் மற்றும் மகிழ்ச்சி பற்றிய எண்ணங்களையும் நான் சிந்திக்கத் தொடங்கினேன். என்னுடைய பரிபூரணமான ஆரோக்கியம், நண்பர்களின் அன்பு, என் வேலை ஆகியவற்றைக் குறித்தும், என் வாழ்வில் நான் கண்டுகொள்ளாமல் விட்டிருந்த பிற ஆசீர்வாதங்கள் குறித்தும் பிரபஞ்சத்திற்கு நான் நன்றி கூறினேன்.

டிசம்பர் மாதத்தின் முடிவில், என்னுடைய நிறுவன மேலாளர் என்னைத் தன் அறைக்கு அழைத்து, எனக்கு

https://telegram.me/aedahamlibrary

ஊதிய உயர்வு வழங்கப்படவிருந்ததாக என்னிடம் கூறினார். அது ஒன்றும் அவ்வளவு பெரிய தொகை அல்ல என்பதையும், அது என்னுடைய எல்லாச் செலவுகளையும் சமாளிக்கப் போதுமானதாக இருக்காது என்பதையும் நான் அறிந்திருந்தபோதிலும், நான் அவருக்கு நன்றி தெரிவித்துவிட்டுப் பிரபஞ்சத்திற்கும் நன்றி கூறினேன். ஏனெனில், நான் ஒன்றைக் கேட்டு, அதை நம்பி, இறுதியில் அதைப் பெற்றுவிட்டேன். இது துவக்கம்தான் என்பதை நான் அறிவேன்.

ஜனவரி மாதத் துவக்கத்தில், என் சம்பளம் இரட்டிப்பாக வேண்டும் என்று பிரபஞ்சத்திடம் நான் கேட்டேன். அது எப்படி நிகழும் என்பது பற்றி எனக்கு எந்த யோசனையும் இருக்கவில்லை என்றாலும், அது நிச்சயமாக நடக்கும் என்று நான் உறுதியாக நம்பினேன். பிரபஞ்சம் உடனடியாகச் செயலில் இறங்கியது. அது இயங்கிக் கொண்டிருந்ததை என்னால் பார்க்க முடியவில்லை என்றாலும், அது இயங்கிக் கொண்டிருந்ததை நான் இதயபூர்வமாக உணர்ந்தேன்.

நான்கு மாதங்கள் கழித்து, ஏப்ரல் மாதத்தில், அதே நிறுவனத்தின் இன்னொரு பத்திரிகைக்கு நான் மாற்றப்பட்டேன். அந்த நேரத்தில் அந்தப் பத்திரிகையில் அந்த வேலைக்கு என் சம்பளத்தைப்போல இருமடங்கு சம்பளம் எனக்கு வழங்கப்பட்டது. நான் நம்பியது கைகூடியது. உடனே, **இது ஒருமுறை பலனளித்துள்ளது என்றால், மீண்டும் ஒருமுறை இதனால் பலனளிக்க முடியும்** என்று நான் நினைத்தேன். என்னுடைய புதிய சம்பளத்தை இரட்டிப்பாக்கும்படி பிரபஞ்சத்திடம் நான் மீண்டும் கேட்டேன். நீங்கள் நம்ப மாட்டீர்கள், ஆனால் நான்கு மாதங்களுக்குப் பிறகு, டிஜிட்டல் துறையின் மேலாளர் தன்னுடைய குழுவில் சேர்ந்து கொள்ளும்படி என்னிடம் கூறினார். சம்பளம்? ஆம், உங்கள் கணிப்பு சரிதான்: என்னுடைய தற்போதைய சம்பளத்தைப்போல இரண்டு மடங்கு!

https://telegram.me/aedahamlibrary

இரகசியம் என்னுடைய வாழ்க்கையை முற்றிலுமாக மாற்றியது. ஓராண்டு முழுவதும் என் வாழ்க்கை எந்த அளவு மோசமாக இருக்க வேண்டும் என்று நான் நினைத்தேனோ, அது அவ்வளவு மோசமானதாக இருந்தது. மறு ஆண்டு எவ்வளவு அற்புதமானதாக இருக்க வேண்டும் என்று நான் விரும்பினேனோ, நான் நம்பி மனக்காட்சிப்படுத்தியதுபோலவே அது அவ்வளவு அற்புதமாக இருந்தது. இது நம்புதற்கரியதாக இருக்கிறது. இப்போதெல்லாம் ஒவ்வொரு நாளும் எனக்கு ஒரு பரிசாக அமைகிறது. நான் தனிச்சிறப்புக் கொண்டவன், தனித்துவமானவன் என்பதை நான் அறிவேன். பிரபஞ்சம் என்னுடைய நண்பன். என் எண்ணங்களுக்கு அது செயல்விடை அளிக்கிறது. இரகசியம் உண்மையிலேயே பலனளிக்கிறது என்பதற்கு என்னுடைய கதை ஒரு சான்று.

என்னுடைய சம்பளத்தை மீண்டும் இரட்டிப்பாக்கும்படி நான் பிரபஞ்சத்திடம் கேட்டேனா என்று நீங்கள் யோசிக்கக்கூடும். இல்லை. மாறாக, மகிழ்ச்சியும் அபரிமிதமும் வேண்டும் என்று நான் கேட்டேன். அவற்றை நான் தினமும் பெற்றுக் கொண்டிருக்கிறேன்.

**- ஆலன், நைரோபி, கென்யா**

தன்னிடம் ஏற்கனவே இருந்தவற்றுக்காகவும், தான் பெற விரும்பியவற்றுக்காகவும் ஆலன் பிரபஞ்சத்திற்கு நன்றி கூறினார். பிறகு அது எப்படிச் சாத்தியமாகும் என்று கவலைப்படுவதற்கு பதிலாகவும், உடனிருந்து உதவ முயற்சிப்பதற்கு பதிலாகவும், ஈர்ப்பு விதி தன்னுடைய வேலையைச் செய்யட்டும் என்று அவர் ஒதுங்கி இருந்துவிட்டார்.

## வெற்றிக் கூட்டணி

பல ஆண்டுகளுக்கு முன்பு, நான் வேலை பார்த்த, கை-கால் மூட்டுச் சிகிச்சைக்கான மருத்துவமனையில் லாபம் குறைந்து கொண்டே போனதை எல்லா

https://telegram.me/aedahamlibrary

ஊழியர்களும் கவனித்தனர். மூன்று ஆண்டுகளில் ஒருவருக்குக்கூட ஊதிய உயர்வு கொடுக்கப்பட்டிருக்கவில்லை. ஏதோ ஒன்று அங்கு மாற வேண்டியிருந்தது மட்டும் உறுதியாகத் தெரிந்தது. நாங்கள் எங்கள் வேலையை நேசித்தோம், ஆனால் வாழ்க்கைச் செலவுகள் அதிகரித்துக் கொண்டே போனதால், நாங்கள் எல்லோரும் புதிய வேலைகளையோ அல்லது கூடுதல் வேலைகளையோ தேடத் தொடங்கினோம்.

ஒருநாள், மருத்துவர்கள் யாரும் இல்லாத ஒரு நேரத்தில் எல்லா ஊழியர்களும் ஒன்றுகூடி, ஊதிய உயர்வு வேண்டும் என்பது பற்றிப் பேசினர். ஊதிய உயர்வு கிடைக்க வேண்டும் என்றால், நாங்கள் எங்கள் மருத்துவமனைக்கு இலக்குகளை நிர்ணயித்தாக வேண்டும் என்பதையும், எல்லா மருத்துவர்களுடைய கால அட்டவணைகளையும் நிரப்பியாக வேண்டும் என்பதையும் நாங்கள் அறிந்திருந்தோம். மருத்துவர்கள் அனைவருக்கும் போதிய நோயாளிகள் இருப்பதை நாங்கள் உறுதி செய்ய வேண்டியிருந்தது. நாங்கள் வாராந்திர இலக்குகள் மற்றும் மாதாந்திர இலக்குகளிலிருந்து துவக்கினோம். அவற்றை நாங்கள் நிர்ணயித்தவுடன், ஒரு 25 சதவீத ஊதிய உயர்வு, கடந்த சில ஆண்டுகளாக எந்த ஊதிய உயர்வும் வழங்கப்பட்டிராததை ஈடு செய்யும் என்று நாங்கள் கணக்கிட்டோம். ஆனால், எல்லாவற்றையும்விட மிக முக்கியமாக, எவ்வளவு சீக்கிரம் எங்களுக்கு ஊதிய உயர்வு கிடைக்க வேண்டும் என்று நாங்கள் விரும்பினோம் என்பதை நாங்கள் தீர்மானிக்க வேண்டியிருந்தது. அக்டோபர் 15ம் தேதியை நாங்கள் தேர்ந்தெடுத்தோம். ஆனால், பொதுவாக, ஆண்டின் அந்த நேரத்தில் ஊதிய உயர்வுகள் வழங்கப்படும் வழக்கம் இருக்கவில்லை. நாங்கள் எங்கள் திட்டத்தைச் செயல்படுத்தத் தொடங்கினோம். “25 சதவீத உயர்வால் வாழ்க்கை இனிமையாக இருக்கிறது,” என்ற ஒரு வாசகத்தை நாங்கள் உருவாக்கி, அதை ஒரு தாளில்

https://telegram.me/aedahamlibrary

எழுதி, எங்கள் ஒவ்வொருவருடைய மேசையின்மீதும் ஒட்டி வைத்தோம். எல்லா மருத்துவர்களுடைய கால அட்டவணைகளும் நிரம்பியிருப்பதன்மீது நாங்கள் எங்கள் கவனத்தைக் குவித்தோம். அட்டவணைகள் போதிய அளவு நிரம்பியிருக்கவில்லை என்றால், "பழைய நோயாளிகள் இன்னும் பத்துப் பேரும், இரண்டு புதிய நோயாளிகளும் நமக்கு வேண்டும்," என்று நாங்கள் கூறுவோம். ஒருசில கணங்களில் தொலைபேசி ஒலிக்கத் தொடங்கிவிடும். விரைவில் எல்லா மருத்துவர்களும் நாள் முழுவதும் மும்முரமாக இருப்பர். நாளின் முடிவில், தாங்கள் மிகவும் களைத்துப் போயிருப்பதாக அவர்கள் ஒவ்வொருவரும் குறைபட்டுக் கொள்ளுவர்.

அக்டோபர் மாதத்தின் துவக்கத்தில், ஊழியர்கள் அனைவரும் மீண்டும் ஒன்றுகூடி, எங்களுடைய இலக்குகளை மறுபரிசீலனை செய்தோம். அதோடு, நாங்கள் எவற்றைக் குறித்து நன்றியுடன் இருந்தோமோ, அவற்றையும் நாங்கள் பரிசீலித்தோம். அடுத்த முறை ஒட்டுமொத்த மருத்துவமனையும் கலந்து கொள்ளவிருந்த சந்திப்புக்கூட்டத்தில் எங்கள் இலக்குகளையும் அவை நிறைவேறிய விதத்தையும் பற்றி எல்லோர் முன்னிலையிலும் ஒரு விளக்கவுரையை வழங்க நாங்கள் தீர்மானித்தோம். சந்திப்புக்கூட்டம் நடக்கவிருந்த நாளன்று நாங்கள் தயாராக இருந்தோம், ஆனால் மருத்துவர்கள் பேச வேண்டிய விஷயங்கள் ஏராளமாக இருந்ததால், எங்களால் எங்கள் விளக்கவுரையைக் கொடுக்க முடியவில்லை. இதனால் நாங்கள் ஏமாற்றமடைந்தோம். அக்டோபர் 15க்கு இன்னும் இரண்டு நாட்கள்தான் இருந்தன. ஆனால் நாங்கள் தொடர்ந்து, "25 சதவீத உயர்வால் வாழ்க்கை இனிமையாக இருக்கிறது," என்று கூறி வந்தோம், அந்த 25 சதவீதத்தின்மீது எங்கள் கவனத்தைக் குவித்தோம்.

அக்டோபர் 15 வந்து போயிற்று. எங்களுக்கு அடுத்தச் சம்பளம் வழங்கப்பட வேண்டிய நாள் நெருங்கிக்

https://telegram.me/aedahamlibrary

கொண்டிருந்தது. அது தொடர்பாக எங்கள் மருத்துவர்கள் எங்களுடைய கணக்காளர்களை சந்தித்திருந்தனர். ஒருசில நாட்களுக்குப் பிறகு, தன்னை சந்திக்க வருமாறு எங்கள் முதலாளி என்னை அழைத்தார். அவர் என்னை எதற்காக அழைத்தார் என்பது பற்றி எனக்கு எந்த யோசனையும் இருக்கவில்லை. நான் அவருடைய அறைக்குள் நுழைந்தபோது, நாங்கள் எல்லோரும் மிகச் சிறப்பாக வேலை செய்து கொண்டிருந்ததாகவும், எங்கள் அனைவருக்கும் ஊதிய உயர்வு கிடைக்கவிருந்ததாகவும், அக்டோபர் 15ம் நாளிலிருந்து கணக்கிட்டு அது வழங்கப்படும் என்றும் அவர் கூறினார். மேலும், ஒரே ஓர் ஊழியரைத் தவிர மற்ற எல்லோருக்கும் 25 சதவீத ஊதிய உயர்வு வழங்கப்படும் என்றும், அந்த நபருக்கு 20 சதவீத உயர்வு வழங்கப்படும் என்றும் அவர் கூறினார். நாங்கள் எங்கள் மருத்துவமனைக்கு நிர்ணயித்திருந்த இலக்குகளையும் எங்களுடைய 25 சதவீத ஊதிய உயர்வையும் அடைவதற்கு நாங்கள் இரகசியத்தைப் பயன்படுத்தியிருந்தோம் என்று நான் அந்த மருத்துவரிடம் கூறியபோது என் கண்களில் கண்ணீர் பெருகியது.

நாங்கள் எங்கள் வேலைகளைத் தக்கவைத்துக் கொண்டோம், எங்கள் ஊதியத்தையும் உயர்த்தினோம், மருத்துவமனை ஊழியர்கள் அனைவருடைய மனநிலையையும் மேம்படுத்தினோம். ஊழியர்களாகிய நாங்கள் அனைவரும் இப்போது ஒன்றுகூடி, இரகசியத்தைப் பயன்படுத்தி எங்களுடைய தனிப்பட்ட வாழ்க்கையை மேம்படுத்திக் கொண்டிருக்கிறோம். இரகசியம் திரைப்படத்தின் டிவிடியை எங்கள் மருத்துவமனையிலிருந்து எந்த நேரத்தில் வேண்டுமானாலும் இரவல் வாங்கிச் சென்று பார்க்க எங்கள் நோயாளிகளை நாங்கள் ஊக்குவிக்கிறோம்.

**- லோரெட்டா, வாஷிங்டன், அமெரிக்கா**

https://telegram.me/aedahamlibrary

இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்கள் ஒரே விருப்பத்தைக் கவர்ந்திழுப்பதன்மீது தங்கள் கவனத்தைக் குவிக்கும்போது, சக்திவாய்ந்த ஓர் ஆற்றலை அவர்கள் உருவாக்குகின்றனர். ஒவ்வொரு நபரும் தன்னுடைய ஆற்றலையும் நம்பிக்கையையும் அதிகரித்துக் கொள்ளுகிறார். இது ஒரு வெற்றிக் கூட்டணியாக உருவாகிறது.

லோரெட்டாவின் கதை நிச்சயமாக உங்களுக்கு உத்வேகம் அளிக்கும். நீங்கள் ஒரு குழுவுடன் இணைந்து செயல்பட்டால், எல்லோருக்கும் நன்மை பயக்கக்கூடிய ஒரு பொது விருப்பத்தின்மீது உங்கள் அனைவராலும் கவனம் செலுத்த முடியும். எல்லோரும் ஒன்றுசேர்ந்தால் உங்களால் என்னவெல்லாம் சாதிக்க முடியும் என்று கற்பனை செய்து பாருங்கள்.

சுருக்கமாகக் கூறினால், நீங்கள் விரும்பும் எதுவொன்றையும் நீங்களாகவே உருவாக்கிக் கொள்ளுவதற்கான சக்தி உங்களுக்கு இருக்கிறது, ஆனால் நாம் மற்றவர்களுடன் இணைந்து செயல்படும்போது, அது நம்முடைய நம்பிக்கை பன்மடங்கு அதிகரிக்க உதவுகிறது. அதன் விளைவாக, நம்முடைய விருப்பம் மிக விரைவாக நிறைவேறும்.

## நீங்கள் நேசிக்கின்ற வேலையைச் செய்யுங்கள்

நான் இப்போது உங்களோடு பகிர்ந்து கொள்ளவிருக்கின்ற கதைகளில் வரும் மக்களைப் பொருத்தவரை, தாங்கள் நேசித்த ஒரு வேலையைத் தங்களால் செய்ய முடிவதுதான் அவர்களுடைய மிகப் பெரிய விருப்பமாக இருந்தது.

https://telegram.me/aedahamlibrary

சிலருக்குப் பணமும் முக்கியமானதாக இருந்தது. ஆனால் மற்றவர்கள், தாங்கள் தங்கள் கனவுகளைப் பின்தொடர்ந்தால் தங்களுக்குத் தேவையான பணத்தைப் பிரபஞ்சம் தங்களுக்கு வழங்கும் என்று நம்பினர். கீழே கொடுக்கப்பட்டுள்ள கதை இதற்கான ஒரு கச்சிதமான எடுத்துக்காட்டு.

## இரண்டே வாரங்களில் ஒரு புதிய வாழ்க்கை

நான் கனவு கண்ட ஒரு வாழ்க்கையை வாழ்ந்த பிறகு, இரண்டு ஆண்டுகள் நான் நடுத்தெருவில் வாழ வேண்டியிருந்தபோது, ஈர்ப்பு விதியின்மீதான நம்பிக்கையை நான் கிட்டத்தட்ட இழந்தேன். எல்லோரும் என்னைக் கைவிட்டுவிட்டதுபோல எனக்குத் தோன்றியது. அப்போது கடுமையான குளிர்காலம். போவதற்கு எனக்கு எந்த இடமும் இருக்கவில்லை. எனவே, நான் ஒரு வேலை தேடி நாடெல்லாம் பயணம் செய்தேன், ஆனால் எனக்கு எந்த அதிர்ஷ்டமும் வாய்க்கவில்லை.

ஈர்ப்பு விதியைப் பயன்படுத்தி முப்பது நாட்களில் உங்கள் வாழ்க்கையை மாற்றிவிடலாம் என்று நான் கேள்விப்பட்டிருந்தேன். எனவே, அதை இப்போது உச்சகட்டச் சோதனைக்கு உட்படுத்துவதென்று நான் தீர்மானித்தேன். நான் தினமும் **இரகசியம்** புத்தகத்தைப் படித்தேன், ஆடியோவில் அதைக் கேட்டேன். நான் கேட்ட எல்லாவற்றையும் நடைமுறையில் நான் செயல்படுத்தினேன். ஆனால், என் விருப்பம் அவ்வளவு வேகமாக நிறைவேறும் என்று நான் எதிர்பார்க்கவே இல்லை.

எனக்கு ஒரு வேலை **வேண்டியிருந்தது** . அது எந்த வேலையாக இருந்தாலும் சரி, அது எனக்கு சுதந்திரத்தைக் கொடுக்கக்கூடிய ஒன்றாகவும், என்னை மும்முரமாக வைத்திருக்கக்கூடியதாகவும், என்னுடைய நிறுவனத்திற்குப் பங்களிக்கவும் அதை விரிவுபடுத்தவும்

https://telegram.me/aedahamlibrary

எனக்கு வாய்ப்புக் கொடுக்கின்ற ஒன்றாகவும், நான் சிறப்பாக வேலை செய்யும்போது எனக்குப் பாராட்டுக்களை வழங்குவதாகவும் இருக்க வேண்டும் என்று நான் **விரும்பினேன்** . அப்படிப்பட்ட ஒரு வேலை என்னைத் தேடி வந்து கொண்டிருந்ததை நான் அறிந்திருந்தது குறித்து நான் மகிழ்ச்சியடைந்தேன். நான் அந்த வேலையைப் பற்றி இவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கும்பட்சத்தில், அந்த வேலை நிச்சயமாக நான் விரும்பியபடிதான் **இருந்தாக** வேண்டும்.

இரண்டு வாரங்களுக்குள், ஒரு தற்செயலான சந்திப்பின் விளைவாக, ஒரு வானொலி நிலையத்தில் பாடல் அறிவிப்பாளராக எனக்கு வேலை கிடைத்தது. ஏழு மாதங்களுக்குப் பிறகு, விளம்பரத்தினால் கிடைத்த வருவாயை 2,000 சதவீதமாக நான் அதிகரித்திருந்தேன். பாடகர்களுக்குப் பணம் திரட்டிக் கொடுக்க உதவிய ஒரு புதிய பிரிவையும் நான் உருவாக்கினேன் (அவர்கள் தங்கள் வருமானத்திற்கு வெறும் சிடிக்களின் விற்பனையையோ அல்லது பாடும் வாய்ப்பையோ சார்ந்திருக்கக்கூடாது என்று நான் நினைத்தேன்). வளர்ந்து வரும் இசைக் கலைஞர்களை நான் நிர்வகிக்கிறேன். இசைத் துறையில் திறமையான புதிய பாடகர்கள் வெற்றிகரமாகக் காலூன்ற உதவக்கூடிய ‘இசைக் கலைஞர்கள் கூட்டணி அமைப்பு’ ஒன்றையும் நான் உருவாக்கினேன். தற்போது, நான் ஒரு வியாபாரக் கூட்டாளியுடன் சேர்ந்து நவீன ஆடைகளைத் தயாரிக்கும் ஒரு தொழிலையும் நடத்தி வருகிறேன். என்னுடைய மேலதிகாரிக்கு என் வேலை மிகவும் பிடித்திருக்கிறது. எங்கள் வானொலி நிலையத்தின் மிகச் சிறந்த பாடல் அறிவிப்பாளர் நான்தான் என்று அவர் கூறினார். அந்த நிலையை அடைவதுதான் என்னுடைய நோக்கமாக இருந்தது.

இப்போதும் நான் என் மனத்திற்குப் பிடித்தமான வேலையில் இருக்கிறேன். அது குறித்து நான் மகிழ்ச்சியும் நன்றியுணர்வும் கொள்ளுகிறேன். மாபெரும்

https://telegram.me/aedahamlibrary

விஷயங்கள் என் வழியே தொடர்ந்து வருகின்றன. நான் எப்போதும் பெரிய பெரிய கனவுகளையே காணுகிறேன். இரகசியம் பலனளிக்குமா என்று சந்தேகிப்பவர்களுக்கு நான் ஒன்றைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன் . . . ஆமாம், அது **நிச்சயமாகப்** பலனளிக்கிறது.

**- டல்லாஸ் சி., வின்னிபெக், மேனிடோபா, கனடா**

தனக்குப் பணம் தேவை என்பதை டல்லாஸ் அறிந்திருந்தபோதிலும், தான் நேசித்த ஒரு வேலையைச் செய்வதுதான் அவருடைய முதன்மை விருப்பமாக இருந்தது. அதன் விளைவாக, அந்த இரண்டையுமே அவர் பெற்றார்.

நீங்கள் மிகவும் விரும்பும் ஒன்றை வழங்குவதற்குப் பிரபஞ்சம் தயாராக இருப்பதை நீங்கள் உணரும்போதுகூட, சில சமயங்களில் உங்களுக்குள் சந்தேகம் ஊடுருவக்கூடும். குறிப்பாக, நீங்கள் உங்களுடைய கனவைப் பின்தொடருவதற்காகப் பொருளாதாரரீதியாகப் பாதுகாப்பான ஒரு வேலையைக் கைவிடுவதால் ஏற்படக்கூடிய பின்விளைவுகளைப் பற்றி நீங்கள் சிந்தித்துக் கொண்டிருக்கும்போது அந்த சந்தேகம் உங்களுக்குள் எழக்கூடும்.

உங்களுக்குள் எப்போதேனும் சந்தேகம் முளைப்பதை நீங்கள் உணர்ந்தால், நீங்கள் சரியான தீர்மானத்தைத்தான் எடுத்துக் கொண்டிருக்கிறீர்கள் என்பதற்கான ஆதாரத்தைக் காட்டும்படி பிரபஞ்சத்திடம் கேளுங்கள். பிரபஞ்சத்திடம் நீங்கள் எதையும் கேட்கலாம் என்பதை நினைவில் வைத்திடுங்கள்.

https://telegram.me/aedahamlibrary

அடுத்தக் கதையில், ஹெலன் தன்னுடைய வேலையைவிட்டு விலகுவதற்குச் சற்று முன்பாகத் தீவிர சந்தேகங்கள் அவருக்குள் தோன்றின. அப்போது பிரபஞ்சம் தலையிட்டு, அவர் சரியான தீர்மானத்தை மேற்கொள்ள அவருக்கு உதவுவதற்காக, தொழில்நுட்பரீதியான ஒருசில விஷயங்களை அவர் பக்கமாக வீசியது.

## பிரபஞ்சத்திடமிருந்து வந்த மின்னஞ்சல்கள்

**இரகசியம்** புத்தகத்தை என்னுடைய சக ஊழியர் ஒருவர்தான் பல ஆண்டுகளுக்கு முன்பாக எனக்கு முதன்முதலில் அறிமுகப்படுத்தினார். ஆனால், துரதிர்ஷ்டவசமாக, அச்சமயத்தில் நான் மிகவும் எதிர்மறையான ஒரு மனநிலையில் இருந்தேன். எனவே, இரகசியம் புத்தகத்தில் ஒருசில பக்கங்களைப் படித்தப் பிறகு, அந்த முழுப் புத்தகத்தையும் படிப்பது என் வாழ்க்கையின்மீது எப்படிப்பட்டத் தாக்கத்தை ஏற்படுத்துமோ என்று உண்மையிலேயே பயந்தேன். இப்போது அதை நினைத்துப் பார்க்கும்போது, அது மிகவும் அபத்தமானதாகத் தோன்றுகிறது. நல்ல வேளையாக, இன்னொரு நண்பர் எனக்கு அப்புத்தகத்தை மீண்டும் பரிந்துரைத்தார். இம்முறை, நான் அதைப் படிக்க உண்மையிலேயே ஆர்வமாக இருந்தேன்.

நான் ஒவ்வோர் அத்தியாயமாகப் படித்து முடித்தபோது நான் அடைந்த அளவிலா மகிழ்ச்சியையும் உற்சாகத்தையும் என்னால் வார்த்தைகளில் விவரிக்க முடியாது. எனக்குக் கிட்டத்தட்டத் தலை சுற்றியது. அப்புத்தகத்தைப் படித்த மறுநாள், என் வாழ்க்கையை மாற்றிய ஒரு தீர்மானத்தை நான் மேற்கொண்டேன்.

நான் பார்த்துக் கொண்டிருந்த பகுதிநேர வடிவமைப்பாளர் வேலையை விட்டுவிட்டு, புத்தகங்களுக்கும் பத்திரிகைகளுக்கும் படங்களை வரைந்து கொடுக்கின்ற முழுநேர ஓவியக் கலைஞராக நான் சுயதொழில் புரிய விரும்பினேன். அந்த வேலையைச் செய்ய

https://telegram.me/aedahamlibrary

நீண்டகாலமாக நான் விரும்பி வந்திருந்தேன். ஆனால், பொருளாதாரரீதியான கடமைகள் எனக்கு இருந்ததால், நிரந்தர வருமானத்தைக் கொடுத்த ஒரு முழுநேர வேலையை இழக்க எனக்குத் தயக்கமாக இருந்தது. நான் போதுமான பணத்தைச் சேமிக்கும்வரை நான் காத்திருக்க வேண்டும் என்று என்னிடம் நானே தொடர்ந்து கூறி வந்தேன். வேலையை விடுவதுதான் சரியான காரியம் என்று என் உள்ளுணர்வு காட்டுக்கூச்சல் போட்டுக் கொண்டிருந்தபோதிலும், எனக்கு மிகவும் பயமாக இருந்தது.

முன்பு, என் தொழில்வாழ்க்கையில் நான் எப்போதும் துரதிர்ஷ்டத்தையே அனுபவித்து வந்திருந்தேன். மோசமான முதலாளிகள், மன அழுத்தத்தை ஏற்படுத்திய வேலைச் சூழல்கள், வேலை நீக்கங்கள் போன்றவற்றைக் கூறலாம். நான் தனித்து இயங்க வேண்டும் என்று நான் உந்தித் தள்ளப்பட்டுக் கொண்டிருந்ததை என் மனத்தின் அடியாழத்தில் நான் உணர்ந்தபோதிலும், எனக்கும் என் குடும்பத்திற்கும் நான் ஏமாற்றத்தை ஏற்படுத்திவிடுவேனோ என்று நான் மிகவும் பயந்தேன்.

**இரகசியம்** புத்தகத்தைப் படித்தப் பிறகு, நான் சுதந்திரமாக வேலை செய்தாக வேண்டும் என்பதை நான் தெளிவாக அறிந்தேன். நான் வெற்றி பெறுவேனா இல்லையா என்பது பற்றிய சந்தேகம் எதுவும் எனக்கு இருக்கவில்லை என்பது விநோதமான விஷயம். நான் வெற்றி பெறுவேன் என்று நான் உறுதியாக நம்பினேன்.

ஆனால் நான் என்னுடைய ராஜினாமா கடிதத்தை சமர்ப்பிக்கவிருந்த நேரத்தில், பழைய சந்தேகம் மீண்டும் என்னுள் தலைதூக்கியது. நான் வழக்கம்போல ரயிலில் வேலைக்குச் சென்று கொண்டிருந்தபோது, என் வயிற்றுக்குள் பட்டாம்பூச்சிகள் படபடத்தன. நான் சரியான காரியத்தைத்தான் செய்து கொண்டிருந்தேனா என்று என்னை நானே தொடர்ந்து கேட்டுக் கொண்டே இருந்தேன். நான் ஆராயாமல் அவசரமாகச் செயல்பட்டுக் கொண்டிருந்தேனோ, நான் சுயநலமாக இருந்தேனோ, பணத்திற்கு நான் என்ன செய்வது போன்ற எண்ணங்கள்

https://telegram.me/aedahamlibrary

என் மனத்தைக் குடைந்தெடுத்தன. என் வேலையை ராஜினாமா செய்யும் எண்ணத்தை நான் கைவிடவிருந்த கணத்தில் பிரபஞ்சம் குறுக்கிட்டு, எனக்கு ஒரு பெரிய அதிர்ச்சி வைத்தியத்தைக் கொடுத்தது.

அந்த பயங்கரமான எண்ணங்கள் என் தலையைக் கிறுகிறுக்க வைத்துக் கொண்டிருந்த நேரத்தில், தற்செயலாக நான் என் ஐபோனைப் பார்த்தேன். முப்பத்தேழு புதிய மின்னஞ்சல்கள் எனக்கு வந்திருந்ததாக அதில் ஓர் அறிவிப்பு இடம்பெற்றிருந்தது. எனக்கு அது விநோதமாகத் தெரிந்தது. ஏனெனில், பொழுது இன்னும் முழுதாக விடிந்திருக்கக்கூட இல்லை. மேலும், ஒருசில நிமிடங்களுக்கு முன்னால் நான் என் ஐபோனைப் பார்த்தபோது, அதில் எந்த மின்னஞ்சலும் வந்திருக்கவில்லை. என்னுடைய ‘புதிய’ மின்னஞ்சல்கள் அனைத்தும் உண்மையில் என்னிடமிருந்தே எனக்கு வந்திருந்தன! கடந்த **ஐந்து ஆண்டுகளாக** நான் பல்வேறு மக்களுக்கு அனுப்பியிருந்தவை அவை. ஒரே நேரத்தில் அவை அனைத்தும் இப்போது எனக்கு வந்திருந்தன. எல்லா மின்னஞ்சல்களும் ஒரே விஷயத்தைச் சுற்றித்தான் அமைந்திருந்தன. அவை அனைத்துமே, நான் என் வேலையிலிருந்து விலகி சுயதொழிலில் ஈடுபட விரும்பியது தொடர்பானவையாக இருந்தன. நான் படித்த முதல் மின்னஞ்சல், மூன்றாவது முறையாக நான் ஒரு வேலையிலிருந்து நீக்கப்பட்டபோது, வேலைக்குப் பணியாளர்களை நியமித்த ஒரு நிறுவனத்திற்கு நான் அனுப்பியிருந்த ஒன்று. “மேலேயிருந்து யாரோ என்னிடம் எதையோ கூற முயற்சித்துக் கொண்டிருக்கிறார்கள்!” என்ற எண்ணம்தான் உடனடியாக என் மனத்தில் தோன்றியது. நான் அந்த மின்னஞ்சலைப் படித்த மறுகணம் என் உடல் நடுங்கியது (இதை நான் எழுதிக் கொண்டிருக்கும் நேரத்தில் இன்னொரு மின்னஞ்சல் வந்துள்ளது). நான் வாயடைத்துப் போனேன். வேலைக்கு ஆட்களை நியமிக்கும் இன்னும் சில நிறுவனங்களுக்கு நான் அனுப்பியிருந்த மின்னஞ்சல்களும் இப்போது எனக்கு

https://telegram.me/aedahamlibrary

வந்திருந்தன (நான் எத்தனை முறை வேலையிலிருந்து நீக்கப்பட்டிருந்தேன் என்பதை அவை எனக்கு நினைவூட்டின). ஒரு மின்னஞ்சலில் நான் பல்வேறு மேலதிகாரிகளின்கீழ் வேலை செய்ய வேண்டியிருந்தது குறித்துக் குறைபட்டிருந்தேன். இன்னும் சிலவற்றில், குழந்தைகளுக்கான புத்தகங்களை உருவாக்குவதில் நான் ஈடுபட்டிருந்தது குறித்தும் அது எனக்கு மிகவும் பிடித்திருந்தது என்றும் நான் எழுதியிருந்தேன். ஆனால், பல ஆண்டுகளுக்கு முன்பு, நான் ஓர் ஓவியராக சுயமாக வேலை செய்ய விரும்பியதாகவும், அதற்கு அவர்களால் எனக்கு உதவ முடியுமா என்று கேட்டும் ஒரு நிறுவனத்திற்கு நான் மின்னஞ்சல் அனுப்பியிருந்தேன். அந்த மின்னஞ்சலை நான் என் கணினியிலும் பதிவு செய்து வைக்கவில்லை, என் ஐபோனிலும் பதிவு செய்து வைக்கவில்லை. அந்த மின்னஞ்சலை நான் அனுப்பியதுகூட எனக்கு நினைவில்லை. ஆனால், இப்போது அது ஒரு ‘புதிய’ மின்னஞ்சலாக எனக்கு வந்திருந்தது.

நான் சரியான காரியத்தைத்தான் செய்து கொண்டிருந்தேன் என்றும், எல்லாம் நல்லபடியாக நடந்தேறும் என்றும் யாரோ என்னிடம் கூற முயற்சித்துக் கொண்டிருந்ததை நான் அறிந்தேன். அன்று முழுவதும் நான் புன்னகைத்துக் கொண்டே இருந்தேன். பிறகு, எந்தத் தயக்கமும் இன்றி நான் என்னுடைய ராஜினாமா கடிதத்தை என்னுடைய மேலதிகாரியிடம் சமர்ப்பித்தேன்.

இரண்டு மாதங்களுக்குப் பிறகு, நான் எக்கச்சக்க வேலைகளில் மும்முரமாக இருந்ததை என்னாலேயே நம்ப முடியவில்லை! என் செலவுகளைச் சமாளிப்பதற்குப் போதுமான பணத்தை என்னால் சம்பாதிக்க முடியுமா என்று நான் சந்தேகித்திருந்ததைப் பற்றி இப்போது நினைத்துப் பார்த்தால் அபத்தமாகத் தெரிகிறது. இரகசியம் இணையத்தளத்திலிருந்து பிரபஞ்சக் காசோலையைத் தரவிறக்கம் செய்து அச்சிட்டு, என்னுடைய முதல் வருட வருமானமாக நான்

https://telegram.me/aedahamlibrary

எவ்வளவு பணம் சம்பாதிக்க விரும்பினேனோ அந்தத் தொகையை அதில் நிரப்பினேன். ஆனால், அது என் சக்திக்கு மீறிய தொகை என்று எனக்குத் தோன்றியது. ஆனால், அந்த ஆண்டின் துவக்கத்திலிருந்து நான் சம்பாதித்திருந்த பணத்தை நான் கூட்டிப் பார்த்தபோது, அந்தக் காசோலையில் நான் நிரப்பியிருந்த தொகையைச் சம்பாதிப்பதற்கான பாதையில் நான் பயணித்துக் கொண்டிருந்ததை நான் அறிந்தேன். பல மாதங்கள் என்னை மும்முரமாக வைக்கத் தேவையான வேலைகள் ஏற்கனவே என்னிடம் ஒப்படைக்கப்பட்டுவிட்டன. என் வெற்றி மேன்மேலும் தொடரும் என்பதில் எனக்கு எந்த சந்தேகமும் இல்லை.

நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு, நான் இன்னும் சுயமாகப் படங்களை வரைந்து கொடுத்துக் கொண்டிருக்கிறேன். என்னுடைய கனவும் இந்த ஆண்டு நிறைவேறியுள்ளது. நான் முதன்முதலாகக் குழந்தைகளுக்கான புத்தகம் ஒன்றை எழுதி, அதற்கான படங்களையும் நானே வரைந்தேன். அப்புத்தகம் வெளிவந்து இப்போது உலகம் நெடுகிலும் விற்பனையாகிக் கொண்டிருக்கிறது.

அன்று ரயிலில் பிரபஞ்சத்திடமிருந்து எனக்குக் கிடைத்த அந்தப் பெரிய செய்திக்காகவும், என் வாழ்வில் உள்ள எல்லா நல்ல விஷயங்களுக்காகவும் நான் இப்போது நன்றியுடன் இருக்கிறேன். என்னுடைய அற்புதமான எதிர்காலத்தை நான் உற்சாகமாக மனக்காட்சிப்படுத்திக் கொண்டிருக்கிறேன்!

**- ஹெலன், லிவர்பூல், இங்கிலாந்து**

சந்தேகங்கள் உங்களுடைய நம்பிக்கையை உண்மையிலேயே குன்றச் செய்து கொண்டிருப்பதை நீங்கள் கண்டால், மனக்காட்சிப்படைப்பு மற்றும் சுயபிரகடனங்கள் மூலமாக உங்கள் நம்பிக்கையை அதிகரியுங்கள். உங்களுக்கு மகிழ்ச்சியை உண்டாக்கக்கூடிய எதையேனும் செய்யுங்கள். ஏனெனில், நீங்கள்

https://telegram.me/aedahamlibrary

மகிழ்ச்சியான மனநிலையில் இருக்கும்போது சந்தேகங்கள் மறைந்துவிடும்! சந்தேகம் ஓர் எதிர்மறையான மனநிலை. மகிழ்ச்சி எனும் நேர்மறையான மனநிலை குடிகொண்டிருக்கும் இடத்தில் சந்தேகத்தால் தலைகாட்ட முடியாது.

## என் மனங்கவர்ந்த வேலையை நான் கவர்ந்திழுத்தது எப்படி

இரகசியம் முதன்முதலாக எனக்கு அறிமுகப்படுத்தப்பட்டபோது, அது உண்மையிலேயே பலனளிக்கும் என்று நான் நம்பவில்லை. எனவே, இரகசியம் வேலை செய்யாது என்பதை நிரூபிக்கும் நோக்கத்துடன் நான் அப்புத்தகத்தைப் படிக்கத் தொடங்கினேன்.

அந்த நேரத்தில், என மனத்திற்கு மிகவும் பிடித்தமான ஒரு வேலையைப் பெற நான்கு ஆண்டுகளாக நான் முயற்சி செய்து வந்திருந்தேன். நான் அப்புத்தகத்தைப் படித்துக் கொண்டிருந்தபோது, நான் ஒரு விளையாட்டை விளையாடத் தீர்மானித்தேன். எனவே, நான் வேலை செய்ய விரும்பிய நாடு, நான் வகிக்க விரும்பிய பதவி, நான் வாங்க விரும்பிய சம்பளம் ஆகியவற்றை உள்ளடக்கிய 'ஊதிய விபரக் குறிப்பு' ஒன்றை நான் என் பெயரில் உருவாக்கி, அதை என்னுடைய கண்ணாடியின்மீது ஒட்டி வைத்தேன். தினமும் காலையில் நான் அதைப் பார்த்துவிட்டு, நான் என்னுடைய புதிய வேலையில் என் மேசைக்குப் பின்னால் அமர்ந்திருந்ததுபோல மனக்காட்சிப்படுத்தினேன். நாட்கள் செல்லச் செல்ல, என் வாழ்வில் நான் எவற்றைக் குறித்தெல்லாம் நன்றியுடன் இருந்தேனோ அவற்றைப் பட்டியலிட்டேன். "நான் செய்கின்ற எல்லாவற்றுக்காகவும், எனக்கு நிகழுகின்ற எல்லாவற்றுக்காகவும் நன்றி," என்று நான் கூறினேன்.

ஐந்து நாட்களுக்குள், நான் கனவு கண்டு வந்திருந்த வேலைக்கான வாய்ப்பு என் மின்னஞ்சலில் எனக்கு

https://telegram.me/aedahamlibrary

வந்தது.
இரகசியத்தை என்னோடு பகிர்ந்து கொண்டதற்கு நன்றி.

**- மீரே டி., லெபனான்**

நீங்கள் இரகசியம் பற்றித் தெரிந்து கொண்டுவிட்டால், உங்கள் நம்பிக்கைக்கு வலுவூட்டுவதற்கு நீங்கள் பயன்படுத்தக்கூடிய பல வழிமுறைகள் இருக்கின்றன என்பதையும், அதன் மூலம் ஈர்ப்பு விதியை உங்களால் துரிதப்படுத்த முடியும் என்பதையும் நீங்கள் புரிந்து கொள்ளுவீர்கள். நீங்கள் விரும்புவதை நீங்கள் ஏற்கனவே பெற்றுவிட்டதுபோல **நடந்து கொள்ளுவது** மிகவும் சக்திவாய்ந்த வழிமுறைகளில் ஒன்று.

## பாசாங்கு செய்தல்

சில மாதங்களுக்கு முன்பு நான் எல்லாவற்றையும் கைவிட்டேன். நான் பார்த்துக் கொண்டிருந்த கேக் தயாரிக்கும் வேலையிலிருந்து நான் விலகினேன். கேக் மற்றும் பிறவற்றைத் தயாரிக்கக் கற்றுக் கொடுக்கும் பள்ளியைவிட்டும் நான் விலகினேன். இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு என் காதலருடனான உறவை நான் முறித்துக் கொண்டேன். எனக்கு ஒரு நல்ல வாழ்க்கை அமையும் என்ற நம்பிக்கையை நான் துறந்தேன். நான் முற்றிலும் மதிப்பற்றவள் என்று நான் நம்பினேன். ஒரு மாதம் நான் தீவிர மனச்சோர்வால் துன்புற்றப் பிறகு, திடீரென்று ஒருநாள் **இரகசியம்** புத்தகத்தைப் பற்றிய நினைப்பு எனக்கு வந்தது. அதற்கான காரணம் எனக்குத் தெரியவில்லை, ஆனால் இணையத்தளத்திற்குச் சென்று அதைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும் என்று நான் முடிவு செய்தேன். இணையத்தளத்தில் நேரடியாக நான் அந்தத் திரைப்படத்தைப் பார்த்தேன். அது என்னை மிகவும்

https://telegram.me/aedahamlibrary

நெகிழச் செய்ததால், ஐடியூன்ஸ் வலைத்தளத்திற்குச் சென்று அதன் ஆடியோ பதிப்பை நான் வாங்கினேன்.

என் வாழ்வில் அக்கணம்வரை நான் மும்முரமாக வேலை தேடி வந்திருந்தும்கூட யாரிடமிருந்தும் எந்த பதிலும் எனக்கு வரவில்லை. எனவே, ஒரு வேலையை என்னிடம் கவர்ந்திழுப்பதற்கு இரகசியத்தைப் பயன்படுத்துவதென்று நான் தீர்மானித்தேன். விலங்குகள் மற்றும் பறவைகளுக்கான மருத்துவமனை ஒன்றில் நான் வேலை பார்க்க விரும்பினேன். எனவே, என் வீட்டிற்குப் பக்கத்தில் இருந்த ஒரு மருத்துவமனைக்கு என்னுடைய தன்விபரக் குறிப்பை நான் அனுப்பி வைத்தேன். இப்படித்தான் எல்லாம் தொடங்கியது.

ஒருசில நாட்களுக்குப் பிறகு, நான் என் வீட்டில் படுத்திருந்தபோது என்னுடைய தொலைபேசி ஒலித்தது. **எனக்கு ஒரு வேலை கொடுப்பதற்காக யாரோ அழைக்கிறார்கள்** என்று எனக்கு நானே கூறிக் கொண்டு அந்த அழைப்புக்கு பதிலளித்தேன். விலங்குகள் மற்றும் பறவைகளுக்கான அந்த மருத்துவமனையின் மேலாளர்களில் ஒருவர்தான் எனக்கு அழைப்பு விடுத்திருந்தார். ஒரு நேர்முகத் தேர்வுக்கு வரும்படி அவர் என்னிடம் கூறினார். அந்த நேர்முகத் தேர்வின்போது நான் மிகவும் பதற்றமாக இருந்தேன். அது வெளிப்படையாகத் தெரிந்தது. அது அவ்வளவு சிறப்பாக அமையவில்லை என்றாலும், நான் வீட்டிற்குத் திரும்பிச் சென்றவுடன், “நான் . . . . . . . . . மருத்துவமனையில் வேலை செய்கிறேன். அது இல்லினாய் மாநிலத்தில் சிக்காகோ நகரில் . . . . . . . . . தெருவில் அமைந்துள்ளது. அதன் தொலைபேசி எண் . . . . . . . . . ,” என்று எழுதினேன். நான் அதை உண்மையிலேயே நம்பும்வரை பல முறை எழுதினேன்.

மறுநாள் அந்த மேலாளர் என்னை மீண்டும் அழைத்து, இரண்டாவது சுற்று நேர்முகத் தேர்வுக்கு வரும்படி அழைத்தார். நான் அதை மகிழ்ச்சியாக ஏற்றுக் கொண்டேன். அந்த வேலை ஏற்கனவே எனக்குக் கிடைத்திருந்ததுபோல நான் உணர்ந்தேன். ஆனால்

https://telegram.me/aedahamlibrary

இப்போது, நான் எவ்வளவு சம்பாதிக்க விரும்பினேன் என்று நான் தீர்மானிக்க வேண்டியிருந்தது. இரண்டாவது சுற்று நேர்முகத் தேர்வுக்கு ஒருசில நாட்கள் இருந்தன. ஒரு குறிப்பிட்டத் தொகையை என் மனத்தில் நிர்ணயித்துக் கொண்டு, அதை அடிப்படையாக வைத்து என் வாழ்க்கைச் செலவுக்கான ஒரு பட்ஜெட்டை நான் திட்டமிட்டேன். தினமும் ஒருசில முறை நான் அதை எடுத்துப் பார்த்துவிட்டு, அது ஏற்கனவே என் வாழ்வில் புழக்கத்தில் வந்துவிட்டிருந்ததுபோல நான் பாசாங்கு செய்யத் தொடங்கினேன்.

அந்த இரண்டாவது நேர்முகத் தேர்வின்போது, அந்த வேலையில் ஏற்கனவே நான் நியமிக்கப்பட்டுவிட்டதாகவும், என்னுடைய சக ஊழியர்கள் என்னுடைய புதிய அலுவலகத்தை எனக்குச் சுற்றிக் காட்டிக் கொண்டிருந்ததாகவும் நான் பாசாங்கு செய்தேன். அன்றைய நாளின் முடிவில், மறுவாரம் திங்கட்கிழமையன்று தன்னுடைய முடிவை எனக்குத் தெரிவிப்பதாக அந்த மேலாளர் என்னிடம் கூறினார். அதன்படி அவர் என்னை அழைத்து, எனக்கு அந்த வேலையைக் கொடுத்தார். அதோடு, நான் எந்தத் தொகையை மனத்தில் வைத்து ஒரு பட்ஜெட்டைத் தயாரித்திருந்தேனோ, அந்தத் தொகையை அவர் எனக்குச் சம்பளமாக வழங்கவிருந்தார். என்னவோர் அற்புதமான உணர்வு அது!

தற்சமயம், நன்றியுடன் இருப்பது எப்படி என்பதை நான் கற்றுக் கொண்டிருக்கிறேன், அதைப் பயிற்சி செய்து கொண்டிருக்கிறேன். என் வாழ்வின் ஒவ்வொரு கணத்தையும் நான் மகிழ்ச்சியாக அனுபவித்துக் கொண்டிருக்கிறேன். இதுவரை, இக்கணத்தில் எனக்குத் தேவையான எல்லாவற்றையும் நான் கேட்டுப் பெற்றுள்ளேன். எதிர்காலத்தில் எனக்கு ஏதேனும் தேவைப்பட்டால், நான் அதைப் பிரபஞ்சத்திற்குத் தெரியப்படுத்தினால் போதும் என்பதை நான் அறிவேன்.

**- லின்ட்ஸி, சிக்காகோ, இல்லினாய், அமெரிக்கா**

https://telegram.me/aedahamlibrary

ஒரு குறிப்பிட்ட வேலை உங்களுக்குக் கிடைத்திருப்பதைப்போல மனக்காட்சிப்படுத்துவது சுலபமானது. நீங்கள் உங்கள் அலுவலகத்திற்கு வந்து சேர்ந்து அதன் கதவின் வழியாக உள்ளே நுழைவதைப்போலவும், உங்களுடைய சம்பள விபரக் குறிப்பு அடங்கிய உறையை நீங்கள் திறப்பதைப்போலவும், அதில் ஒரு குறிப்பிட்டத் தொகையை நீங்கள் பார்ப்பதைப்போலவும், உங்களுக்குப் பதவி உயர்வு கொடுக்கப்பட்டுள்ளது என்ற செய்தி உங்களுக்குத் தெரிவிக்கப்படுவதுபோலவும் உங்கள் மனத்தில் காட்சிப்படுத்துவது மிகவும் சுலபம். நீங்கள் விரும்புவது இக்கணத்தில் உங்கள் வசம் இருப்பதுபோல நீங்கள் மனக்காட்சிப்படுத்தி, அதை உணர்வுபூர்வமாக **உணரும்போது** , அது உங்கள் வாழ்வில் மெய்யாவதை நீங்கள் காணுவீர்கள்!

**ஈர்ப்பு விதி உங்களுடைய எண்ணங்களுக்கும் வார்த்தைகளுக்கும் ஏற்றபடி துல்லியமாகச் செயல்விடை அளிக்கிறது. எனவே, ஒரு விஷயம் எதிர்காலத்தில் இருப்பதைப்போல நீங்கள் மனக்காட்சிப்படுத்தினால், அவ்விஷயம் இப்போது நிகழுவதிலிருந்து நீங்கள் அதைத் தடுத்துக் கொண்டிருக்கிறீர்கள் என்று பொருள்.**

**அவ்விஷயம் இப்போதே உங்களிடம் இருப்பதுபோல நீங்கள் உணர வேண்டும்.**

**- இரகசியம் தினசரி போதனைகள்**

https://telegram.me/aedahamlibrary

## உங்கள் தொழில்வாழ்க்கையை உருவாக்குவதற்கான திறவுகோல்கள்

- நீங்கள் விரும்புகின்ற வேலையைக் கவர்ந்திழுப்பதற்கான சக்தி உங்களுக்குள் இருக்கிறது. உங்களுக்கு என்ன வேலை வேண்டும் என்பதை நீங்கள் கண்டுபிடித்து, பிரபஞ்சத்திடம் அதைக் கேட்க வேண்டும், அவ்வளவுதான்.
- உங்களால் பெற முடியாத வேலை அல்லது சம்பளம் என்று எதுவும் இல்லை. அதை உங்களால் பெற முடியும் என்று நீங்கள் நம்ப வேண்டும், அதன் வரவை நீங்கள் எதிர்பார்க்க வேண்டும், அவ்வளவுதான்.
- உங்களுடைய வேலையில் அல்லது தொழில்வாழ்க்கையில் நீங்கள் எதை அடைய விரும்புகிறீர்களோ, அதன்மீது உங்கள் எண்ணங்களைக் குவியுங்கள்.
- நீங்கள் பெற விரும்புகின்ற வேலை அல்லது தொழிலின் அனைத்து அம்சங்களையும் உங்களுடைய புலன்கள் அனைத்தையும் கொண்டு உங்கள் மனத்தில் காட்சிப்படுத்துங்கள். நீங்கள் உண்மையிலேயே அந்த வேலையில் இருப்பதைப் போன்ற உணர்வு உங்களுக்குள் எழும்வரை மனக்காட்சிப்படுத்துங்கள்.
- உங்களுடைய சம்பளக் காசோலையையும், அதில் நீங்கள் காண விரும்புகின்ற தொகையையும் கற்பனை செய்யுங்கள்.

https://telegram.me/aedahamlibrary

- நீங்கள் விரும்புகின்ற வேலையை அல்லது தொழில் வாய்ப்பை நீங்கள் எப்படிப் பெறுவீர்கள் என்பது பற்றி நீங்கள் கவலைப்பட வேண்டியதில்லை.
- சந்தேகத்தைப் போக்குவதற்கு, உங்களுக்கு மகிழ்ச்சியை உண்டாக்கக்கூடிய எதையேனும் செய்யுங்கள். அல்லது, மனக்காட்சிப்படைப்பு மற்றும் சுயபிரகடனங்களின் மூலமாக உங்கள் நம்பிக்கையை அதிகரியுங்கள்.
- நீங்கள் பெற விரும்புகின்ற வேலையை விரைவாகப் பெறுவதற்கு, அந்த வேலை ஏற்கனவே உங்களுக்குக் கிடைத்துவிட்டதுபோல நடந்து கொள்ளுங்கள்.
- நீங்கள் செய்யும் வேலையை நீங்கள் நேசிக்கும்போது, பணம் தானாக வரும்.
- நீங்கள் யாராக வேண்டுமானாலும் ஆக முடியும், எதை வேண்டுமானாலும் செய்ய முடியும் - அதற்கு எந்த எல்லையும் இல்லை.

https://telegram.me/aedahamlibrary



https://telegram.me/aedahamlibrary

உங்களால் இயன்ற அளவு சிறப்பாக நீங்கள் செயல்பட்டால், மிகச் சிறப்பானவை உங்கள் வாழ்விற்குள் வருகின்ற வேகத்தைக் கண்டு நீங்கள் மலைத்துப் போவீர்கள்.

**- இரகசியம் தினசரி போதனைகள்**

https://telegram.me/aedahamlibrary

# என் வாழ்க்கையை மாற்றுவதற்கு இரகசியத்தை நான் எவ்வாறு பயன்படுத்தினேன்

உங்களுக்குள் மிக ஆழத்தில் ஓர் உண்மை ஒளிந்திருக்கிறது. நீங்கள் அதைக் கண்டுபிடிப்பதற்காக அது காத்துக் கொண்டிருக்கிறது. அந்த உண்மை இதுதான்: **வாழ்க்கை வழங்கக்கூடிய அனைத்து நல்ல விஷயங்களுக்கும் நீங்கள் தகுதியானவர்தான்.** அதை நீங்கள் இயல்பாகவே அறிந்திருக்கிறீர்கள். ஏனெனில், நல்ல விஷயங்கள் உங்கள் வாழ்வில் இடம்பெற்றிராத ஒரு நிலைமையை நீங்கள் அனுபவிக்கும்போது, நீங்கள் கடுந்துயரம் கொள்ளுகிறீர்கள். அனைத்து நல்ல விஷயங்களும் உங்களுடைய பிறப்புரிமை! நீங்கள்தான் உங்கள் வாழ்க்கையை உருவாக்குகிறீர்கள். ஈர்ப்பு விதிதான் நீங்கள் விரும்பும் எதுவொன்றையும் உருவாக்குவதற்கு உங்களுக்கு உதவக்கூடிய மிக அற்புதமான கருவி.

அடுத்தக் கதையில் இடம்பெற்றுள்ள ஜென்னியைப்போல, தங்களுடைய கதைகளை என்னிடம் பகிர்ந்து கொண்டுள்ள பலர், தங்களுடைய வாழ்க்கையை மாற்ற நான் உதவியதாகக் கூறி எனக்கு நன்றி தெரிவிக்கின்றனர். ஆனால் உண்மையில், அவர்கள் தங்களைத் தாங்களே மாற்றிக் கொண்டதன் மூலம் தங்கள் வாழ்வில் மாற்றத்தைக் கொண்டுவந்துள்ளனர். இரகசியத்தை அவர்கள் அனைவரோடும் என்னால் பகிர்ந்து கொள்ள

https://telegram.me/aedahamlibrary

முடிந்ததற்காக மட்டும் நான் அளப்பரிய நன்றியை உணருகிறேன்.

## வாழ்வில் அதளபாதாளத்திலிருந்து நான் மீண்டேன்

என்னுடைய முப்பதாவது பிறந்தநாளுக்கு ஒரு நாளுக்கு முன்பு, "விஷயங்கள் மாறியாக வேண்டும். ஏனெனில், இனியும் என்னால் தொடர்ந்து தாக்குப்பிடிக்க முடியும் என்று எனக்குத் தோன்றவில்லை," என்று நான் நினைத்தேன். நான் சிறந்த கல்வித் தகுதிகளைப் பெற்றிருந்தும்கூட, நிரந்தரமான முழுநேர வேலை எதையும் என்னால் தேடிக் கொள்ள முடியவில்லை. அப்போது எனக்குத் திருமணமாகியிருக்கவில்லை. நான் திருமணம் செய்து கொள்ள விரும்பவும் இல்லை. நான் என் பெற்றோருடன் வாழ்ந்து கொண்டிருந்தேன். மொத்தத்தில், நான் மிக அவலமான ஒரு நிலையில் இருந்தேன். எனக்கு மகிழ்ச்சியையும் மனநிறைவையும் கொடுப்பதற்கு எனக்கு அதிகமாக எதுவும் தேவைப்படவில்லை, ஆனால் எனக்குத் தேவையானது எனக்கு ஒருபோதும் கிடைக்கப் போவதில்லை என்று எனக்குத் தோன்றியது.

**இரகசியம்** உண்மையிலேயே என் உயிரைக் காப்பாற்றியது. நான் வாழ்வில் அதளபாதாளத்தில் போய் விழுந்தபோது, வேறு வழியின்றி, 'கடைசி முயற்சியாக' இரகசியம் புத்தகத்தைப் படிப்பதென்று தீர்மானித்தேன். இரகசியம் புத்தகம்தான் என்னுடைய **முதல் நடவடிக்கையாக** இருந்திருக்க வேண்டுமே அன்றி, கடைசி முயற்சியாக அல்ல! அப்புத்தகம் கொடுத்த உண்மையான உத்வேகத்தால் என்னுள் உடனடி மாற்றம் நிகழ்ந்தது. **இந்த "இரகசியம்" வேறு எந்த விதத்திலும் எனக்கு நன்மை பயக்கத் தவறினால்கூட, குறைந்தபட்சம் அது என் மனநிலையை மேம்படுத்தி எனக்கு நம்பிக்கையைக் கொடுத்துள்ளது** என்று நான் நினைத்தேன்.

https://telegram.me/aedahamlibrary

ஆனால் அது எனக்கு உத்வேகத்தைக் கொடுத்ததோடு நின்றுவிடாமல் என்னுடைய ஒட்டுமொத்த வாழ்க்கையையும் மாற்றியது. இதைவிட அதிக அற்புதமான விஷயம் என்னவென்றால், என் வாழ்க்கை எப்படி இருக்க வேண்டும் என்று நான் கற்பனை செய்திருந்தேனோ, **துல்லியமாக** அதே விதத்தில் அது என் வாழ்க்கையை மாற்றியது!

நான் இரகசியத்தைக் கடைபிடிக்கத் தொடங்கி இரண்டு மாதங்களுக்குப் பிறகு, நேர்முகத் தேர்வுக்கு வரும்படி ஒரு சிறந்த நிறுவனத்திலிருந்து எனக்கு ஓர் அழைப்பு வந்தது. இறுதியில், நான் நீண்டகாலமாகக் கனவு கண்டு வந்திருந்த அந்த வேலை எனக்குக் கிடைத்தது. அந்த நேர்முகத் தேர்வுச் செயல்முறையின் ஊடாக, நான் ஓர் அற்புதமான மனிதரை சந்தித்தேன். ஒரு வாழ்க்கைத்துணைவரிடம் என்னவெல்லாம் இருக்க வேண்டும் என்று நான் விரும்பினேனோ, அவர் அவற்றின் மொத்த உருவமாக இருந்தார். விரைவில் நான் என் பெற்றோரின் வீட்டிலிருந்து வெளியேறி என்னுடைய சொந்தக் காலில் நிற்கப் போகிறேன். நான் விரும்பி வந்திருந்த வாழ்க்கையை நான் வாழத் தொடங்கப் போகிறேன். நான் விரும்பும் எதுவொன்றையும் பெறுவதற்கான அளப்பரிய சக்தி என்னுள் இருந்ததை உணருவதற்கு பதிலாக, கழிவிரக்கம் கொள்ளுவதில் நான் ஏகப்பட்ட நேரத்தை விரயமாக்கியிருந்தேன்.

இரகசியம் எனும் அற்புதமான பரிசு எனக்குக் கொடுக்கப்பட்டதற்காக நான் நன்றி கூறுகிறேன். ஏனெனில், இரகசியம் மட்டும் எனக்குக் கிடைக்காமல் போயிருந்தால் எனக்கு என்ன நேர்ந்திருக்கும் என்று எனக்குத் தெரியாது.

**- ஜென்னி எல்., டெட்ராய்ட், மிச்சிகன், அமெரிக்கா**

### நீங்கள் அறிந்திருக்க வேண்டிய, அனைத்துக் கேள்விகளுக்குமான துல்லியமான விடைகள்

https://telegram.me/aedahamlibrary

**உங்களுக்குள்தான் இருக்கின்றன. எனவே, விடைகளை நீங்களே கண்டுபிடித்துக் கொள்ள வேண்டியது இன்றியமையாதது. நீங்கள் உங்கள்மீதும் உங்களிடம் உள்ள சக்தியின்மீதும் நம்பிக்கை கொள்ள வேண்டும்.**

**- இரகசியம் தினசரி போதனைகள்**

## வாழ்வில் நீங்கள் இப்போது எந்த நிலையில் இருந்தாலும் சரி, எல்லாம் மாறுவதற்கான சாத்தியம் இருக்கிறது

இனிவரும் பக்கங்களில் இடம்பெற்றுள்ள கதைகளை எழுதியுள்ளவர்கள், தங்களைப் பற்றி விவரிக்கும்போது, தாங்கள் அழிவுபூர்வமானவர்கள், போதைப் பொருட்கள் அல்லது ஏதோ ஒன்றுக்கு அடிமையானவர்கள், வீடு வாசல் இல்லாதவர்கள், அவல நிலையில் இருப்பவர்கள் என்று தங்களை விவரிக்கின்றனர். இரகசியத்தைப் பற்றித் தங்களுக்குத் தெரிய வந்தபோது, தங்களுடைய எண்ணங்களை மாற்றியதன் மூலம் தங்கள் வாழ்க்கையைத் தங்களால் மாற்றிக் கொள்ள முடிந்ததாக அவர்கள் அனைவருமே கூறினர். அதாவது, அவர்கள் தங்களை மாற்றிக் கொண்டதன் மூலம் தங்களுடைய வாழ்க்கையை மாற்றினர்.

## கோழிக் கழிவிலிருந்து கோழி சூப்

நான் என்னுடைய கடந்தகால வாழ்க்கையைத் திரும்பிப் பார்க்கும்போது, நான் இப்போது முற்றிலும் வேறொரு நபராக ஆகியிருப்பதை என்னால் நம்ப முடியவில்லை. நான் மிகவும் மகிழ்ச்சியாகவும் மனநிம்மதியோடும் இருக்கிறேன்! நான் எப்போதும் இப்படி இருந்ததில்லை. முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக, என் வாழ்வில்

https://telegram.me/aedahamlibrary

இடம்பெற்றிருந்த நல்ல விஷயங்களை நான் கவனிக்கத் தவறியிருந்தேன்.

நான் ஒரு சிறுமியாக இருந்தபோது, நூற்றுக்கணக்கான முறை நான் என் தந்தையால் கற்பழிக்கப்பட்டேன். விரைவில் எனக்கு வலிப்பு நோய் ஏற்பட்டது (தப்பிப்பதற்கான ஒரு வழிபோல அது தோன்றியிருக்கலாம் என்று நான் நினைக்கிறேன்). நான் சமூகத்தினரால் ஒதுக்கி வைக்கப்பட்டேன். என் தாயார் தன் வாழ்நாள் நெடுகிலும் ஒரு மனநல மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார். பெரும்பாலான நாட்களை அவர் அங்குதான் கழித்தார். நகரத்திற்கு வெளியே இருந்த குப்பை மேட்டின் அருகே நாங்கள் நிறுத்தி வைத்திருந்த ஒரு பழைய கார்தான் சிறிது காலம் என்னுடைய வீடாக இருந்தது. அருகிலிருந்த கேஃப்சி துரித உணவகத்தில் மீந்து போன உணவை நான் உட்கொண்டேன். நான் என்னுடைய பதின்பருவத்தில் உயர்நிலைப் பள்ளியைவிட்டு நின்றுவிட்டேன், போதைப் பொருட்களுக்கு அடிமையானேன், அனைத்து வகையான அழிவுபூர்வமான நடவடிக்கைகளிலும் ஈடுபட்டேன்.

என் எதிர்காலம் மிகவும் மங்கலானதாகத் தெரிந்தது. நான் அளவுக்கதிகமாகத் துன்புற வேண்டும் என்றும், வாழ்வில் கடுந்தோல்வி அடைய வேண்டும் என்றும் என் தலையில் எழுதப்பட்டிருந்ததாக நான் உறுதியாக நம்பினேன்.

நான் தட்டுத்தடுமாறி எப்படியோ ஒரு கல்லூரியில் படித்துப் பட்டம் பெற்றேன். ஆனால், மூன்று மாதங்களுக்கு மேல் எந்த வேலையிலும் என்னால் நீடிக்க முடியவில்லை. என்னுடைய முப்பத்து நான்காவது வேலையிலிருந்து நான் நீக்கப்பட்டப் பிறகு, நான் முற்றிலுமாக நம்பிக்கை இழந்து, தீவிர மனச்சோர்வால் பாதிக்கப்பட்டேன். என் வாழ்க்கையை மேம்படுத்திக் கொள்ள நான் கடுமையாக முயற்சித்துக் கொண்டிருந்தேன். என்னை இயல்பு நிலைக்குக் கொண்டுவருவதற்கு, புரோசாக், வெல்பட்ரின் உட்பட, மருத்துவர்கள் கொடுத்தப் பல்வேறு மாத்திரைகளையும்

https://telegram.me/aedahamlibrary

மருந்துகளையும் நான் உட்கொண்டேன். ஆனால் எந்த மருந்தும் வேலை செய்யவில்லை. கடவுள் என்னைத் தன்னிடம் அழைத்துக் கொண்டால் நல்லது என்று தினமும் நான் பிரார்த்தனை செய்தேன்.

பிறகு, நான் நேசிக்காத ஒருவரை நான் திருமணம் செய்து கொண்டேன். ஏனெனில், வீடின்றித் தெருவில் வசிப்பதைவிட அது மேல் என்று நான் நினைத்தேன். அதையடுத்து, நான் என் போதை மருந்துப் பழக்கத்தைக் கைவிட்டேன், ஆனால் தூங்குவதிலும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பார்ப்பதிலும் நான் என்னுடைய நாட்களைச் செலவிட்டேன். யதார்த்தத்தை மறக்க எனக்கு உதவிய எல்லாவற்றிலும் நான் ஈடுபட்டேன்.

என்னுடைய சகோதரியின் தூண்டுதலால் ‘சமய அறிவியல் தேவாலயம்’ ஒன்றுக்கு நான் முதன்முதலாகச் சென்றபோதுதான் என்னுடைய மாற்றம் தொடங்கியது. அந்த தேவாலயத்தின் போதனைகள் இரகசியம் புத்தகத்தில் இடம்பெற்றிருந்த போதனைகளை ஒத்திருந்தன. அந்த தேவாலயத்தில் கூறப்பட்டப் பல ஆழமான விஷயங்கள் சரியான திசையில் என்னைச் சிந்திக்கத் தூண்டின. அவ்விஷயங்கள் யாவும் எனக்குப் புதியவையாக இருந்தன. “நீ இவ்வுலகில் அவதரித்திருப்பதாலேயே நீ மகத்தானவள்தான்,” என்பது போன்ற புதுமையான விஷயங்களை அவர்கள் கூறினர்.

ஆனால் **இரகசியம்** திரைப்படத்தைப் பார்த்தப் பிறகுதான் உண்மையான மாற்றத்தை நான் அனுபவித்தேன். நான் என் சொந்தக் காலில் நிற்கப் போதுமான பணத்தை என்னால் ஒருபோதும் சம்பாதிக்க முடியாமல் இருந்தது நான் எதிர்கொண்டிருந்த பல சவால்களில் ஒன்று. ஒருநாள் இரவில், **இரகசியம்** திரைப்படத்தை இருபத்து மூன்றாவது முறையாகப் பார்த்தப் பிறகு, நான் என்னுடைய கணினிக்குச் சென்று, குதூகலமூட்டுகின்ற, சுலபமான, உயர்வான சம்பளத்துடன்கூடிய ஒரு வேலையைக் கண்டுபிடிக்க என்னை வழிநடத்தும்படி பிரபஞ்சத்திடம் நான் கோரிக்கை விடுத்தேன்.

https://telegram.me/aedahamlibrary

**தடயவியல், காணொளியியல்** (இவ்விரண்டு விஷயங்களும் எனக்கு மிகவும் பிடிக்கும்) போன்ற வார்த்தைகளை என்னுடைய தேடல் பொறியில் நான் தட்டச்சு செய்தேன். தடயவியல் காணொளித் துறை பற்றிய விபரங்கள் என் கணினித் திரையில் தோன்றின. நான் மிகவும் உற்சாகமடைந்தேன்! அந்த வேலையில் உண்மையிலேயே என்னவெல்லாம் அடங்கியிருந்தது என்பது பற்றித் தெரியாமலேயே, அதுதான் எனக்கான வேலை என்பதை நான் அறிந்திருந்தேன்.

சான்றிதழ் பெற்றத் தடயவியல் காணொளியாளராக ஆவதற்குத் தேவையான நடவடிக்கைகளை நான் எடுத்தேன். பிறகு, ஒரு மணிநேரத்திற்கு 75 டாலர்கள் பணத்தை நான் சம்பாதிக்கத் தொடங்கினேன் (என் வாழ்நாளில் அவ்வளவு பெரிய தொகையை நான் அதுவரை ஒருபோதும் சம்பாதித்ததில்லை)!

சமீபத்தில் நான் அந்த வேலையை விட்டுவிட்டு, வீடுகளில் முதியவர்களை கவனித்துக் கொள்ளுகின்ற வேலையைச் செய்யத் தொடங்கினேன். ஏனெனில், தடயவியல் காணொளியாளராக மேலும் அதிகமானவற்றைச் செய்வதற்கு ஒரு சான்றுறுதி உரிமம் எனக்குத் தேவைப்பட்டதை நான் தெரிந்து கொண்டேன். ஆனால் அந்த உரிமத்தை வாங்குவதற்கு நான் தகுதி பெற்றிருக்கவில்லை. எனவே, முதியவர்கள் சிறப்பாக வாழுவதற்கு அவர்களுக்கு உதவும் வேலையை நான் தேர்ந்தெடுத்தேன். இது எனக்குப் பிடித்தமான இன்னொரு வேலை. இந்த வகையான வேலையைச் செய்வதற்குச் சம்பளம் கொடுக்கப்பட்டது என்பது முன்பே எனக்குத் தெரிந்திருந்தால், நான் இந்த வேலையைத்தான் முதலில் தேர்ந்தெடுத்திருந்திருப்பேன்.

எனவே, நான் இன்னொரு தொழிலைத் துவக்கியுள்ளேன். உதவி தேவைப்படுகின்ற முதியவர்கள், ஊனமுற்ற முதியவர்கள், அறுவைச் சிகிச்சைக்குப் பிறகு கவனிப்பு தேவைப்படுகின்ற முதியவர்கள் போன்ற அனைவருக்கும் அவர்களுடைய வீட்டில் வைத்து

https://telegram.me/aedahamlibrary

அவர்களை அன்போடும் அக்கறையோடும் கவனித்துக் கொள்ளுவதற்கும் அவர்களுக்குத் துணையாக இருப்பதற்கும் பயிற்றுவிக்கப்பட்டுள்ளவர்களைக் கொண்டு அந்த முதியவர்களுக்குக் கட்டணத்துடன்கூடிய சேவையை வழங்கும் தொழில் அது. நான் செய்யும் வேலையை நான் மிகவும் நேசிக்கிறேன். இது அற்புதமானதாகவும் வெகுமதியளிப்பதாகவும் இருக்கிறது. அன்பு செலுத்துவதன் மூலம் பணம் சம்பாதிப்பதற்கு நான் அதிர்ஷ்டம் செய்திருப்பதாக நான் எல்லோரிடமும் கூறுகிறேன்.

என் வாழ்வின் பிற பகுதிகளும் மாற்றமடைந்தன. மகிழ்ச்சியைக் கைவசப்படுத்துவதற்கு நான் இனியும் மருந்து எதையும் உட்கொள்ளுவதில்லை. தினமும் நான் என் சொந்த மகிழ்ச்சியை உருவாக்கிக் கொள்ளுகிறேன்! புகை பிடிப்பதையும் நான் நிறுத்திவிட்டேன். வாரத்திற்கு ஐந்து நாட்கள் நான் உடற்பயிற்சி செய்கிறேன். அது எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது. நான் எந்த ஆண்மகனை முழுவதுமாகச் சார்ந்திருந்தேனோ, அந்த நபரை நான் விவாகரத்து செய்தேன். என்னை நான் உள்ளது உள்ளபடியே நேசிக்கிறேன் என்று இப்போது என்னால் கூற முடியும். (என்னைப் பொருத்தவரை, இது ஒரு **பெரிய** விஷயம். ஏனெனில், சிறு வயதில் என்னை நான் நெருப்பால் சுட்டேன், கண்ணாடியின் முன்னால் நின்று கொண்டு '**உன்னை** நான் வெறுக்கிறேன்,' என்று கூறிக் கொண்டே என் சக்தி முழுவதையும் ஒன்றுதிரட்டி என்னை நானே ஓங்கிக் குத்தினேன். என்னை நான் அவ்வளவு தூரம் வெறுத்தேன்.)

இப்போது நேர்மறையான, அற்புதமான தோழிகள் பலர் எனக்கு அமைந்திருக்கின்றனர். வாழ்க்கையை நான் நேசிக்கிறேன். திங்கட்கிழமைகளை நான் விரும்புகிறேன். என் தந்தையுடன் நான் சமாதானம் செய்து கொண்டேன். சிறுசிறு விஷயங்களில் நான் மகிழ்ச்சியைக் காணுகிறேன். என் கழுத்தின்மீது பட்டுச் செல்லுகின்ற மெல்லிய குளிர்காற்றுக்கூட என் கண்களில் ஆனந்தக் கண்ணீரை வரவழைத்துவிடுகிறது!

https://telegram.me/aedahamlibrary

என் வாழ்க்கை இப்போது எவ்வளவு அற்புதமானதாக இருக்கிறது என்பதை வார்த்தைகளில் விவரிப்பது உண்மையிலேயே கடினமாக இருக்கிறது. நான் ஆரோக்கியமாகவும், மகிழ்ச்சியாகவும், செழிப்பாகவும், தன்னம்பிக்கையோடும், ஆற்றலோடும் இருக்கிறேன். உள்ளது உள்ளபடியே மற்றவர்களை நான் ஏற்றுக் கொள்ளுகிறேன், மற்றவர்களை நம்புகிறேன். எல்லாவற்றையும்விட முக்கியமாக, என் வாழ்வில் உள்ள **எல்லாவற்றுக்காகவும் எல்லோருக்காகவும்** நான் **நன்றியுடன்** இருக்கிறேன்! இரகசியமும் அவற்றில் ஒன்று. நன்றி.

**- கே., கலிபோர்னியா, அமெரிக்கா**

குழந்தைப்பருவத்தில் ஏற்பட்ட அனுபவங்களால், நாம் எதற்கும் தகுதியற்றவர்கள் என்று நம்மைப் பற்றி நாம் நினைக்கிறோம். உங்களை நீங்கள் அன்போடும் மரியாதையோடும் நடத்தவில்லை என்றால், நீங்கள் போதிய அளவு முக்கியமானவர் அல்லர் என்றும், போதிய அளவு தகுதிவாய்ந்தவர் அல்லர் என்றும், நீங்கள் மதிப்பற்றவர் என்றும் பிரபஞ்சத்திடம் நீங்கள் கூறிக் கொண்டிருக்கிறீர்கள். மக்கள் உங்களை ஒழுங்காக நடத்தாத சூழ்நிலைகளை அதிகமாக நீங்கள் எதிர்கொள்ளுவீர்கள். முப்பத்து நான்கு வேலைகளிலிருந்து நீக்கப்படுவது இதற்கான ஓர் எடுத்துக்காட்டு. நீங்கள் உங்களைப் பற்றி நினைக்கும் விதத்தை மாற்றுவதன் மூலம் நீங்கள் உங்களைப் பற்றி உணரும் விதத்தை மாற்றினால், மற்றவர்கள் உங்களை நடத்தும் விதத்தையும் உங்களால் மாற்ற முடியும்.

**இந்த ஒட்டுமொத்த உலகமும், தினமும் உங்கள் வாழ்வில் நிகழுகின்ற ஒவ்வொரு சம்பவமும், உங்களுக்குள் இருக்கும் அலைவரிசையை**

https://telegram.me/aedahamlibrary

**வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றன. நீங்கள் எதிர்கொள்ளுகின்ற மக்கள், சூழல்கள், நிகழ்வுகள் ஆகியவற்றின் மூலம், உங்களுடைய அலைவரிசைக்கான ஆதாரம் ஒவ்வொரு கணமும் உங்களிடம் பேசிக் கொண்டிருக்கிறது.**

**நீங்கள் அகரீதியாக எத்தகைய உணர்வுகளை அனுபவிக்கிறீர்களோ, வாழ்க்கை அவற்றை உங்களுக்குப் பிரதிபலித்துக் கொண்டிருக்கிறது.**

**- இரகசியம் தினசரி போதனைகள்**

## என்னுடைய ஒரே வாய்ப்பு

எனக்கு இருபத்தொன்பது வயதாகிறது. ஆஸ்திரேலியாவில் மெல்போர்ன் நகரில் ஓர் அருமையான வீட்டில் நான் என் காதலருடன் வாழுகிறேன். அவர் ஒரு காவல்துறை அதிகாரியாக இருக்கிறார். மெலின்டா, மேடலீன் ஆகிய அழகான இரண்டு மகள்கள் எங்களுக்கு இருக்கின்றனர். அவர்கள் ஒரே மாதிரியான தோற்றத்தைக் கொண்ட இரட்டையர்கள்.

நான் ஒரு மகிழ்ச்சியான வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருப்பதாக உங்களுக்குத் தோன்றுகிறது, இல்லையா? ஆமாம், என் வாழ்க்கை மகிழ்ச்சியாகத்தான் போய்க் கொண்டிருக்கிறது. ஆனால் அது எப்போதும் இப்படி இருந்ததில்லை. நான் பல காதல் தோல்விகளைச் சந்தித்துள்ளேன், தீவிர மனச்சோர்வுக்கு ஆளாகியுள்ளேன். எனக்கு நான்கு வயதாக இருந்தபோது என் பெற்றோர் இருவரும் பிரிந்துவிட்டனர். என் குழந்தைப்பருவம் மகிழ்ச்சியானதாக இருக்கவில்லை. மிக இளவயதிலிருந்தே ஆண்களுடன் நான் உறவுகளை வளர்த்துக் கொள்ளத் தொடங்கினேன். அவர்கள் என்னை மகிழ்ச்சியாக வைத்துக் கொள்ளுவார்கள் என்ற நினைப்பில் நான் அதில் ஈடுபட்டேன். குழந்தைப்பருவத்தில் எனக்குக் கிடைத்திராத மகிழ்ச்சியை நான் அவர்களிடம் தேடினேன். அந்த

https://telegram.me/aedahamlibrary

உறவுகள் எனக்கு மகிழ்ச்சியைக் கொடுப்பதற்கு பதிலாக, அதிகத் துயரத்திற்கும் ஏமாற்றத்திற்குமே வழி வகுத்தன.

எனக்கு இருபத்து நான்கு வயது ஆனபோது, என்னைத் தற்கொலைக்குத் தூண்டும் அளவுக்கு என் வாழ்க்கை மிகவும் மோசமடைந்திருந்தது. நான் என் காதலரிடமிருந்து பிரிந்திருந்தேன், என் கையில் சல்லிக்காசுகூட இருக்கவில்லை, நான் தீவிர மனச்சோர்வால் துன்புற்றேன், என் தாயாருடன் வாழ்ந்து கொண்டிருந்தேன். எல்லாவற்றுக்கும் மேலாக, எனக்கு எந்த வேலையும் கிடைக்கவில்லை.

ஒருநாள், ‘புதுயுகச் சிந்தனை’ தொடர்பானவற்றை விற்ற ஒரு கடைக்கு நான் சென்றேன். **இரகசியம்** திரைப்படத்தின் டிவிடி ஒன்றை அதன் உரிமையாளர் எனக்குப் பரிந்துரைத்தார். நான் அதை வாங்கிக் கொண்டு வீட்டிற்குச் சென்று அதைப் போட்டுப் பார்த்தேன். அதன் கொள்கைகளில் எனக்கு உடன்பாடு இருந்தது, ஆனால் “இது ஒரு நல்ல படம்,” என்று நினைத்து, அலமாரியில் என்னுடைய மற்ற டிவிடிக்களுடன் அதை வைத்துவிட்டேன்.

வாழ்க்கை தொடர்ந்து மனச்சோர்வூட்டுவதாகவே இருந்தது. இறுதியில் ஒருநாள், என்னால் இதற்கு மேல் தாங்கிக் கொள்ள முடியாது என்ற உணர்வு எனக்கு ஏற்பட்டது. அப்போதுதான், மகிழ்ச்சியாக இருப்பதற்கு எனக்குக் கிடைத்திருந்த ஒரே வாய்ப்பு இரகசியம்தான் என்பதை நான் உணர்ந்தேன். நான் அதன் கொள்கைகளை உண்மையிலேயே கடைபிடிக்கத் தொடங்கினேன். வாழ்விலிருந்து நான் உண்மையிலேயே எவற்றைப் பெற விரும்பினேன் என்பதை நான் திட்டவட்டமாகத் தீர்மானித்தேன். பிறகு, அவற்றை உள்ளடக்கி ஒரு மனக்காட்சிப் பலகையை நான் உருவாக்கினேன். அவற்றில் இடம்பெற்றிருந்த அனைத்து விஷயங்களும் இப்போதே நிஜமாகியிருந்ததுபோல நான் வாழவும் உணரவும் நடந்து கொள்ளவும் தொடங்கினேன். இவையெல்லாம் “எப்படி” மெய்யாகும் என்பது பற்றி எனக்குள் எழுந்த சந்தேகங்களையும் பயங்களையும்

https://telegram.me/aedahamlibrary

ஒதுக்கித் தள்ளுவது துவக்கத்தில் கடினமாக இருந்தது. ஆனாலும் நான் விடாப்பிடியாக அதைச் செய்தேன். நான் விரும்பிய வாழ்க்கை ஏற்கனவே எனக்குக் கிடைத்திருந்ததாக நினைத்து அதற்காக நன்றி கூறினேன். தினமும் என்னுடைய நன்றிக் குறிப்பேட்டில் நான் எழுதினேன். நான் விரும்பியவற்றை நான் ஏற்கனவே பெற்றிருந்தால் என்னுள் எத்தகைய உணர்வுகள் தலைதூக்கியிருக்குமோ, அவற்றை இப்போது நான் **உணர்ந்து** நன்றி கூறினேன்.

அந்நேரத்தில் நான் சிட்னி நகரில் வாழ்ந்து கொண்டிருந்தேன். நான் வேறு நகரத்திற்குக் குடிபெயர்ந்து, மீண்டும் புதிதாக என் வாழ்க்கையைத் துவக்க விரும்பினேன். எனக்கு ஒரு காதலரும் என் மனத்திற்குப் பிடித்தமான ஒரு வேலையும் வேண்டும் என்று நான் விரும்பினேன்.

மெல்போர்ன் நகரைச் சேர்ந்த ஒருவரை நான் சந்தித்தேன். உடனடியாகவே எங்கள் இருவருக்கும் நன்றாக ஒத்துப் போனது. இவை அனைத்தும் மிக வேகமாகவும் நான் எதிர்பார்த்திராத ஒரு வழியிலும் நிகழ்ந்தன. அவர் மெல்போர்னுக்குத் திரும்பிச் செல்ல வேண்டியிருந்தது. நான் சிட்னியில் வாழ்ந்ததால், தொலைபேசி அழைப்புகள், குறுஞ்செய்திகள், மின்னஞ்சல்கள் ஆகியவற்றின் மூலமாக மட்டுமே நாங்கள் ஒருவரோடு ஒருவர் பேசிக் கொள்ள வேண்டியதாயிற்று. நாங்கள் தினமும் தொலைபேசியில் பேசினோம். வெறும் நான்கு வாரங்களுக்குப் பிறகு, நான் மெல்போர்னுக்கு இடம்பெயர்ந்து தன்னோடு சேர்ந்து வாழ எனக்கு விருப்பம் இருந்ததா என்று அவர் கேட்டார். நாங்கள் மிகக் குறுகிய காலம் மட்டுமே பழகியிருந்தபோதிலும், எனக்கு அது சரியானதாகத் தோன்றியதால், நான் மெல்போர்னுக்கு இடம்பெயர்ந்தேன்.

நான் அங்கு போய்ச் சேர்ந்தவுடன், வேலை தேடிக் கொடுத்த நிறுவனங்களோடு நான் தொடர்பு கொண்டு வேலை தேடத் தொடங்கினேன். வேலையில்

https://telegram.me/aedahamlibrary

என்னவெல்லாம் இருக்க வேண்டும் என்று நான் விரும்பினேனோ அவற்றை நான் ஏற்கனவே எழுதி வைத்திருந்தேன். அதற்காக இரகசியத்தின் கொள்கைகளை நான் பயன்படுத்தியிருந்தேன். சிறிதளவு பணம் சம்பாதிப்பதற்காக ஓரிரு தற்காலிக வேலைகளை நான் ஒப்புக் கொண்டேன். பிறகு ஓர் அருமையான வேலை எனக்குக் கிடைத்தது. நான் விரும்பிய அனைத்து அம்சங்களும் அதில் இருந்தன. எனக்கு வாய்த்திருந்த மிகச் சிறந்த வேலை அதுதான்.

இரகசியம் இணையத்தளத்திலிருந்து நான் பிரபஞ்சக் காசோலையைத் தரவிறக்கம் செய்து அதை அச்சிட்டுக் கொண்டேன். பிறகு அதை என்னுடைய மனக்காட்சிப் பலகையின்மீது குத்தி வைத்துவிட்டு, நான் விரும்பிய பணத்தை நான் பெற்றுவிட்டதுபோல நடந்து கொள்ளத் தொடங்கினேன். செழிப்பைப் பற்றி நான் நல்லவிதமாக உணர்ந்தேன். விரைவில், என் தந்தை என்னை அழைத்து, ‘பவர்பால்’ என்ற அமெரிக்க லாட்டரி விளையாட்டில் தான் ஓரளவு பணத்தை வென்றிருந்ததாக உற்சாகமாக என்னிடம் கூறினார். அப்பணத்தில் சிறிதளவை அவர் எனக்குக் கொடுக்க விரும்பினார். அதைத் தொடர்ந்து, ஐயாயிரம் டாலர்களுக்கான ஒரு காசோலையைத் தான் எனக்கு அனுப்பி வைப்பதாக அவர் என்னிடம் கூறினார்!

நான் என் காதலருடன் மகிழ்ச்சியாக வாழ்ந்தேன். என் வேலையும் எனக்கு மகிழ்ச்சியளித்தது. நான் மெல்போர்னில் வாழ்ந்து கொண்டிருந்தது எனக்கு மிகவும் பிடித்திருந்தது. எங்கள் வீட்டை நான் மிகவும் நேசித்தேன். நான் குழந்தை பெற்றுக் கொள்ள விரும்பினேன். எனக்கு இரட்டைக் குழந்தைகள் பிறக்க வேண்டும் என்றும், அவர்கள் இருவரும் பெண்களாக இருக்க வேண்டும் என்றும் நான் எப்போதும் விரும்பி வந்திருந்தேன். எனவே, புதிதாகப் பிறந்திருந்த இரட்டைப் பெண்குழந்தைகளின் புகைப்படம் ஒன்றை ஒரு பத்திரிகையிலிருந்து கத்தரித்து எடுத்து, அதை என் மனக்காட்சிப் பலகையின்மீது குத்தி வைத்தேன். குழந்தைகளுக்கான ஆடைகளையும் முன்கூட்டியே நான்

https://telegram.me/aedahamlibrary

வாங்கினேன். நான் என்ன வாங்கினாலும் இரண்டாக வாங்கினேன். நான் மீண்டும் **இரகசியம்** புத்தகத்தின் கொள்கைகளைப் பயன்படுத்தி, நான் விரும்பியது ஏற்கனவே மெய்யாகிவிட்டதுபோல உணர்வுபூர்வமாக உணர்ந்தேன்.

நான் மெல்போர்னுக்கு இடம்பெயர்ந்து வெறும் எட்டு வாரங்களுக்குள், நான் கருவுற்றிருந்ததை நான் கண்டறிந்தேன். விரைவில் எனக்கு மசக்கை உண்டானது. அது கடுமையானதாக இருந்தது (மசக்கையின்போது எனக்கு எந்தச் சிரமமும் இருக்கக்கூடாது என்று பிரபஞ்சத்திடம் கேட்க நான் மறந்துவிட்டிருந்தேன்!). நான் கருவுற்றுப் பன்னிரண்டு வாரங்கள் ஆகியிருந்த நிலையில், எனக்கு இரட்டைக் குழந்தைகள் பிறக்கவிருந்ததாக அல்ட்ராசவுன்டு ஸ்கேன் உறுதிப்படுத்தியது. என் காதலர் இதைக் கேட்டு ஆச்சரியமடைந்தார். ஆனால், நான் **இரகசியம்** புத்தகத்தின் கொள்கைகளைக் கடைபிடித்து வந்திருந்ததால் அதை நான் முன்பே அறிந்திருந்தேன். அன்றிலிருந்து, என்னுடைய கர்ப்பகாலம் முழுவதும் சுமூகமானதாக இருக்கும் என்று நான் தினமும் எழுதினேன், அதை மனதார நம்பினேன் (அந்த நம்பிக்கை மெய்யாயிற்று). ஓர் ஆரோக்கியமான கர்ப்பகாலம், முப்பத்தெட்டு வாரங்களில் சுகப்பிரசவம், ஆரோக்கியமான இரட்டைப் பெண்குழந்தைகள் என்று நான் கேட்ட அனைத்தும் எனக்குக் கிடைத்தன.

நான் இப்போது தொலைதூரக் கல்வியின் மூலம் சமூக சேவைக்கான பட்டப்படிப்பு ஒன்றில் ஈடுபட்டுள்ளேன் (இதையும் நான் கேட்டு, நம்பி, பெற்றேன்). நான் பல நல்ல நண்பர்களையும் தோழிகளையும் பெற்றுள்ளேன். நான் மகிழ்ச்சியாகவும் பொருளாதாரரீதியாகப் பாதுகாப்பாகவும் இருக்கிறேன். அற்புதமான சிறுசிறு விஷயங்கள் இப்போது ஏராளமாகவும் அடிக்கடியும் நிகழுகின்றன. இரகசியத்தை நான் என்னுடைய ஒட்டுமொத்த வாழ்க்கைக்கும் செயல்படுத்துவதுதான் அதற்குக் காரணம் என்பதை நான் அறிவேன்.

https://telegram.me/aedahamlibrary

இரகசியம் என்னுடைய வாழ்க்கையை மாற்றியது. அதை நீங்கள் பயன்படுத்தினால், அது உங்களுடைய வாழ்க்கையையும் மாற்றும்.

**- பெலின்டா, மெல்போர்ன், ஆஸ்திரேலியா**

தன் வாழ்வில் உண்மையிலேயே தான் எவற்றைப் பெற விரும்பினோம் என்பதைப் பற்றிய ஒரு திட்டவட்டமான தீர்மானத்தை பெலின்டா மேற்கொண்டபோது, தன்னுடைய வாழ்க்கையை மாற்றிக் கொள்ளுவதற்கும் எதிர்மறையான எண்ணங்களால் தூண்டப்படுவதைவிட நேர்மறையான எண்ணங்களை எண்ணும் ஒருவராக மாறுவதற்கும் அவர் தன்னுடைய சந்தேகங்களையும் பயங்களையும் ஒதுக்கித் தள்ளினார். பிறகு, பிரபஞ்சக் காசோலை, ஒரு மனக்காட்சிப் பலகை, தனக்கு விருப்பமானவற்றை எழுதிக் கொள்ளுதல், ஒரு நன்றிக் குறிப்பேட்டில் எழுதுதல் ஆகியவை உட்பட, **இரகசியம்** புத்தகத்திலிருந்து தான் கற்றுக் கொண்டிருந்த அனைத்து வழிமுறைகளையும் அவர் பயன்படுத்தினார்.

**நீங்கள் எதுவொன்றையும் உங்களுடைய எண்ணங்கள் மூலமாகவும் உணர்வுகள் மூலமாகவும் உருவாக்குகிறீர்கள். உங்களுடைய எண்ணங்களை வேறொருவரால் சிந்திக்க முடியாது, உங்களுடைய உணர்வுகளை வேறு யாராலும் உணர முடியாது.**

**- இரகசியம் தினசரி போதனைகள்**

## நடுத்தெருவில் இருந்த என்னை மீட்ட இரகசியம்

https://telegram.me/aedahamlibrary

என் வாழ்வில் பத்து ஆண்டுகளாக நான் போதைப் பொருட்களுக்கும் மதுவுக்கும் அடிமையாகியிருந்தேன், ஒரு விலைமாதுவாகவும் இருந்து வந்தேன். அந்தப் பத்து ஆண்டுகளில் கடைசி மூன்று ஆண்டுகள் நான் வீடிழந்து தெருவில் வாழ்ந்தேன். அதற்கு மேலும் நான் உயிர்வாழ விரும்பவில்லை. அப்போது, ஒரு சமூக சேவைக் குழுவினர் **இரகசியம்** புத்தகத்தை என்னிடம் கொடுத்து, அதைப் படிக்கும்படி கூறினர். இரகசியத்தை நான் பயன்படுத்தத் தொடங்கி ஆறு மாதங்களுக்குப் பிறகு என் வாழ்க்கை நம்புதற்கரிய விதத்தில் மாறியது. நான் போதைப் பழக்கத்தையும் குடிப் பழக்கத்தையும் கைவிட்டேன். என் மகளும் என் குடும்பத்தினரும் மீண்டும் என் வாழ்விற்குள் வந்தனர். பிறகு, **இரகசியம்** புத்தகத்தை எனக்குக் கொடுத்த அந்த சமூக சேவைக் குழுவில் எனக்கு ஒரு வேலையும் கிடைத்தது.

நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு, என் வாழ்க்கை இன்னும் நம்புதற்கரியதாக இருக்கிறது. நான் சற்றுமுன் என்னுடைய மின்னஞ்சலைத் திறந்து பார்த்தபோது, நீண்டகாலமாக நான் பெற விரும்பி வந்திருந்த ஒரு வேலை எனக்குக் கிடைத்திருந்ததை நான் கண்டேன். கடந்த மூன்று ஆண்டுகளாக என்னுடன் வாழ்ந்து வருகின்ற என் மகளுக்கும் எனக்கும் இடையேயான உறவு அற்புதமாக உள்ளது. என் வாழ்க்கையும் அற்புதமாக இருக்கிறது.

நான் என் இதயபூர்வமாக உங்களுக்கு நன்றி கூறுகிறேன்.

**- தியா சி., விக்டோரியா, கனடா**

## எல்லாமே உங்களுக்காக நிகழ்ந்து கொண்டிருக்கிறது

மேற்குறிப்பிடப்பட்டக் கதைகளில் இடம்பெற்றிருந்த மக்களுடைய ஆரம்பகால வாழ்க்கை மிகக் கடினமானதாக இருந்திருந்தது. மற்றவர்களுக்கு, விஷயங்கள் சிறப்பாகப் போய்க்

https://telegram.me/aedahamlibrary

கொண்டிருப்பதுபோலத் தோன்றினாலும், திடீரென்று ஏதோ ஒரு சவால் முளைக்கிறது. அப்படிப்பட்ட நேரங்களில், எல்லாமே **உங்களுக்காக** நிகழ்ந்து கொண்டிருப்பதாக உங்களுக்கு நீங்களே நினைவூட்டிக் கொள்ள வேண்டும்.

> **எதிர்மறையானதுபோலத் தெரிகின்ற ஒவ்வொரு விஷயத்தின்கீழும் நல்லது ஒளிந்து கொண்டிருக்கிறது. ஓர் எதிர்மறையான சூழ்நிலை உட்பட எல்லாச் சூழ்நிலைகளிலும் நல்லது மட்டுமே இருக்கிறது என்பதை நம்மால் உணர்ந்து கொள்ள முடிந்தால், அப்போது ஓர் எதிர்மறையான சூழ்நிலை நல்லதாக மாறுவதை நாம் காணுவோம்.**
>
> **- இரகசியம் தினசரி போதனைகள்**

பின்வரும் கதையில் வருகின்ற கேட் என்ற பெண்ணைப்போல, நீங்கள் உங்கள் வேலையை இழந்து, அதோடு சேர்த்து உங்கள் தன்னம்பிக்கையையும் இழந்திருக்கக்கூடும். ஆனால் அதற்கான காரணம் எதுவாக இருந்தாலும், நீங்கள் உங்களைப் பற்றி எதிர்மறையாகச் சிந்திக்கத் தொடங்கினால், இன்னும் அதிகமான எதிர்மறையான விஷயங்களைத்தான் நீங்கள் கவர்ந்திழுப்பீர்கள்.

## ஒரு புதிய துவக்கம்

நான் ஒரு தொலைக்காட்சி நிறுவனத்தில் ஒரு துறைத் தலைவராக வேலை செய்து கொண்டிருந்தேன். திடீரென்று, தேவைக்கு அதிகமான ஊழியர்கள் இருந்ததாகக் கூறி அவர்கள் என்னை வேலையிலிருந்து நீக்கினர். என் ஒருத்தியின் சம்பளத்தில்தான் என் குடும்பம் ஓடிக் கொண்டிருந்தது. எனவே, நல்ல சம்பளத்துடன்கூடிய ஒரு முழுநேர வேலையை

https://telegram.me/aedahamlibrary

விரைவில் நான் தேடிக் கொள்ளாவிட்டால், என் குடும்பம் துன்புறும் என்பதை நான் அறிந்திருந்தேன்.

நான் நேர்மறையானவள். ஆனால், திடீரென்று நான் வேலையிலிருந்து நீக்கப்பட்டது என்னை முற்றிலுமாகப் புரட்டிப் போட்டது, என் தன்னம்பிக்கையைத் தவிடுபொடியாக்கியது. என்னை வேலையிலிருந்து தூக்க வேண்டும் என்பதற்காக அவர்கள் அப்படிச் செய்யவில்லை, மாறாக, அந்த வேலை தேவையில்லை என்பதால்தான் அவர்கள் அவ்வாறு செய்தனர் என்றாலும்கூட, நான் ஏதோ தவறு செய்திருந்ததால்தான் நான் பணிநீக்கம் செய்யப்பட்டேன் என்பதுபோல நான் **உணர்ந்தேன்** .

நான் மூன்று வாரங்கள் மும்முரமாக வேலை தேடி வந்திருந்த நிலையில்தான், **'த அப்சர்வர்'** பத்திரிகையில் **இரகசியம்** புத்தகத்தைப் பற்றிய விமர்சனத்தை நான் தற்செயலாகப் பார்த்தேன். அப்புத்தகம் படிக்க சுவாரசியமானதாக இருக்கும்போல எனக்குத் தோன்றியதால், அது வெளியானவுடன் அதை வாங்க வேண்டும் என்று என் மனத்தில் குறித்துக் கொண்டேன். ஆனால், நான் செய்ய வேண்டியிருந்த மற்ற பிற விஷயங்களை நான் செய்யத் தவறியிருந்ததுபோலவே, இதையும் நான் செய்யவில்லை.

அப்போது ஒருநாள், 'தற்செயலாக,' நான் என் வேலை தொடர்பாக இன்னொரு நேர்முகத் தேர்வில் கலந்து கொண்டுவிட்டு ரயிலில் வீடு திரும்பிக் கொண்டிருந்தேன். அந்த நேர்முகத் தேர்வு எனக்கு அவ்வளவு சிறப்பாக அமையவில்லை. ரயிலில் யாரோ விட்டுச் சென்றிருந்த **'த லண்டன் ஈவினிங் ஸ்டேன்டர்டு'** பத்திரிகையை எடுத்துப் படித்தேன். அந்தப் பத்திரிகையிலும் **இரகசியம்** புத்தகத்திலிருந்து சில வரிகள் மேற்கோள் காட்டப்பட்டிருந்தன. என்னுடைய அன்றைய நாள் சிறப்பானதாக அமைந்திருக்காததால், இது 'மேலேயிருந்து' வந்த தூண்டுதல்போல எனக்குத் தோன்றியது. எனவே, நான் ரயிலைவிட்டு

https://telegram.me/aedahamlibrary

இறங்கியவுடன், நேராக ஒரு புத்தகக் கடைக்குச் சென்று இரகசியம் புத்தகத்தை வாங்கினேன்.

வீட்டிற்கு வந்தவுடனேயே நான் அதைப் படிக்கத் தொடங்கினேன், பிறகு மனக்காட்சிப்படைப்பிலும் ஈடுபட்டேன். நான் விரும்பியதைப் பெற்றுக் கொள்ள நான் தயாராக இருந்ததாகப் பிரபஞ்சத்திடம் நான் கூறினேன். மாலை 5:30 மணிக்கு நான் அப்புத்தகத்தைப் படித்து முடித்தபோது (அதை நான் இன்னும் கீழேகூட வைத்திருக்கவில்லை), என் தொலைபேசி மணி ஒலித்தது. நான் வேலை செய்ய விரும்பிய நிறுவனத்தின் நிர்வாகத் துணைத் தலைவரே என்னை அழைத்திருந்தார், அவருடைய உதவியாளர் அல்ல. மறுநாள் தன்னுடனும் அதற்கடுத்த நாள் காலை 9:30 மணிக்குத் தங்கள் நிறுவனத்தின் தலைவருடனும் ஒரு நேர்முகத் தேர்வில் கலந்து கொள்ளும்படி அவர் என்னிடம் அன்புடன் கேட்டுக் கொண்டார்.

இது எனக்குப் பெரும் வியப்பூட்டியது. நான் உடனடியாக வீட்டைவிட்டுப் புறப்பட்டு, அந்தப் புத்தகத்தையும் அந்தத் தொலைபேசி அழைப்பையும் பற்றி என் காதலரிடம் கூறுவதற்காக அவருடைய பேருந்து வரவிருந்த பேருந்து நிலையத்தை நோக்கி விரைந்தேன். நாங்கள் இருவரும் வீடு திரும்பிக் கொண்டிருந்த வழியில், சிறிது காலம் நாங்கள் பார்த்திராத எங்கள் தோழி ஒருத்தியை நாங்கள் சந்தித்தோம். உள்ளூர் இத்தாலிய உணவகம் ஒன்றில் அவள் வேலை செய்து கொண்டிருந்தாள். காரணம் ஏதுமின்றி, தங்கள் உணவகத்திற்கு வந்து ஷாம்பெயின் பருகிச் செல்லும்படி அவள் எங்களை அழைத்தாள்.

நான் என்னுடைய நேர்முகத் தேர்வுக்குக் காரோட்டிச் சென்று கொண்டிருந்ததுபோலவும், அந்த நேர்முகத் தேர்வு எனக்கு மிகச் சிறப்பாக அமைந்ததுபோலவும், அந்த வேலை எனக்குக் கிடைத்ததுபோலவும் அன்றிரவு நான் கற்பனை செய்தேன். மறுநாள், நான் எந்தப் பிரச்சனையும் இன்றி என் காரில் அங்கு போய்ச் சேர்ந்தேன். போக்குவரத்து நெரிசல் அவ்வளவாக

https://telegram.me/aedahamlibrary

இருக்கவில்லை. நேர்முகத் தேர்வு நன்றாகச் சென்றபோதிலும், அது மிக நீண்ட நேரம் நீடித்தது. மறுநாள், எனக்கு வேலை கொடுக்கத் தாங்கள் தயாராக இருந்ததாகக் கூறி என்னுடைய சம்மதத்தைக் கேட்டு வேலை வாய்ப்புக் கடிதம் ஒன்று அவர்களிடமிருந்து எனக்கு வந்தது. என்னுடைய பழைய வேலையில் நான் வாங்கியிருந்த சம்பளத்தைவிட 20 சதவீதம் அதிகமாகத் தர அவர்கள் ஒப்புக் கொண்டிருந்தனர்.

நான் அந்த வேலையில் மகிழ்ச்சியாக ஐந்து ஆண்டுகள் உழைத்தேன். பிறகு நான் வேறொரு வேலையில் சேர்ந்தேன். ஒன்பது ஆண்டுகள் என்னோடு சேர்ந்து வாழ்ந்திருந்த என்னுடைய காதலர், திடீரென்று ஒருநாள் என்னைவிட்டுப் பிரிந்து சென்றுவிட்டார். இது என்னைப் பெரும் துயரத்தில் ஆழ்த்தியது. ஆனால் எங்கள் உறவு முறியவில்லை என்று நான் என் இதயபூர்வமாக உணர்ந்தேன். அப்போதுதான், இத்தனை ஆண்டுகளாக என்னுடைய புத்தக அலமாரியில் தூங்கிக் கொண்டிருந்த **இரகசியம்** புத்தகம் என் பார்வையில் பட்டது. நான் **இரகசியம்** புத்தகத்தைக் கீழே இறக்கி, மீண்டும் படிக்கத் தொடங்கினேன். பிறகு அதை இன்னும் ஒருமுறை படித்தேன். நான் இரகசியம் திரைப்படத்தின் ஆடியோவையும் தரவிறக்கம் செய்து, தினமும் வேலைக்குச் செல்லும் வழியில் அதைப் போட்டுக் கேட்டேன். நானும் என் காதலரும் மீண்டும் இணைந்து மகிழ்ச்சியாக வாழ்ந்ததைப்போல நான் மனக்காட்சிப்படுத்தினேன்.

மனக்காட்சிப்படைப்பு உண்மையிலேயே கடினமாக இருந்தது. நானும் என் காதலரும் பிரிந்திருந்தது சரியல்ல என்று உள்ளுணர்வுரீதியாக நான் உணர்ந்தபோதிலும், அதற்கான காரணம் எனக்குத் தெரியவில்லை.

அவர் என்னைவிட்டுப் பிரிந்து சென்று பதினைந்து மாதங்களுக்குப் பிறகு, மீண்டும் என்னிடம் திரும்பி வந்தார். இதைக் கண்டு நான் பெரிதும் மகிழ்ந்தேன். என் வேலை என்னைக் கசக்கிப் பிழிந்தெடுத்தது. அவர்

https://telegram.me/aedahamlibrary

எனக்குத் துணையாக இருந்தார். ஏழு மாதங்களுக்குப் பிறகு ஒருநாள், அதிகாலை ஒரு மணிக்கு, என் காதலர் நிச்சயமாகத் திரும்பி வந்தாக வேண்டும் என்பதை என் ஆன்மா அறிந்திருந்ததற்கான காரணத்தை நான் கண்டுபிடித்தேன்.

திடீரென்று எனக்கு மாரடைப்பு ஏற்பட்டது. பிறகு என் இதயம் துடிப்பது நின்றுவிட்டது.

மருத்துவ உதவியாளர்கள் வரும்வரை இதய சுவாசமூட்டல் செயல்முறையை என் காதலர் என்மீது பிரயோகப்படுத்தினார். நான் மூன்று நாட்கள் சுயநினைவின்றி இருந்தபோது, அவர் என்னைவிட்டு அசையவே இல்லை. நான் **முழுமையாக** நலம் பெறும்வரை அவர் எனக்குத் துணையாக இருந்தார்.

அவர் எப்படியும் என்னிடம் திரும்பி வந்துவிடுவார் என்பதை நான் அறிந்திருந்தேன், அவர் வீடு திரும்பி வருவதை நான் என் மனத்தில் காட்சிப்படுத்தினேன். நான் என்னுடைய உண்மையைப் பின்தொடர்ந்தேன். இப்போது இரகசியம் எனக்காக மீண்டும் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. பாருங்கள், நம்புங்கள், நிகழ்த்துங்கள்!

என் இதயத்தில் பிரச்சனை ஏற்பட்டதைத் தொடர்ந்து, சில விஷயங்கள் மாற்றப்பட்டாக வேண்டும் என்பதை நான் அறிந்தேன். நான் இன்னும் ஒரு முழுநேரத் தொலைக்காட்சித் தயாரிப்பாளராக வேலை செய்து கொண்டிருக்கிறேன். அந்த வேலையை நான் நேசிக்கிறேன். ஆனால் அதே சமயத்தில், நான் ஒரு மனவசியச் சிகிச்சையாளராகவும் அது தொடர்பான பயிற்றுவிப்பாளராகவும் பேச்சாளராகவும் ஆவதற்கான பயிற்சியையும் நான் மேற்கொண்டு வருகிறேன். இந்த வேலையைச் செய்ய நான் எப்போதுமே விரும்பி வந்திருந்தேன், ஆனால் என்னால் அது முடியும் என்று நான் ஒருபோதும் நினைத்ததில்லை.

ஆனால் நான் அதை என் மனக்கண்ணில் பார்த்தேன், கற்பனை செய்தேன், அந்தப் பயிற்சி வகுப்பில் கலந்து கொண்டு பயிலுவதற்காக நேரத்தை (மாலை நேரங்கள்

https://telegram.me/aedahamlibrary

மற்றும் வார இறுதி நாட்கள்) ஒதுக்கினேன். அதே நேரத்தில், படிப்பதற்கும், அந்தச் சிகிச்சையை மற்றவர்களுக்கு வழங்க என்னைத் தகுதியுடையவளாக ஆக்கிக் கொள்ளுவதற்கும்கூட நான் நேரம் ஒதுக்கினேன்.

நானும் என் காதலரும் இன்றும் சேர்ந்து வாழ்ந்து கொண்டிருக்கிறோம். பதினோரு வயதுப் பூனைக்குட்டிகள் இரண்டையும் ஒன்பது மாத நாய்க்குட்டி ஒன்றையும் நாங்கள் வளர்த்து வருகிறோம்.

இரகசியம் பலனளிக்கிறது. நீங்கள் புன்னகை புரியுங்கள், அப்போது வருத்தம் காணாமல் போய்விடும். எப்போதும் நன்றியுடன் இருங்கள். அதிகமான நல்ல விஷயங்களை உங்கள் வாழ்வில் உருவாக்குங்கள்.

**- கேட் எல்., லண்டன், இங்கிலாந்து**

கேட் தான் விரும்பியதை மனக்காட்சிப்படுத்திய ஒவ்வொரு முறையும், அவர் கேட்டதை அவருக்குக் கொடுத்ததன் மூலம் பிரபஞ்சம் செயல்விடை அளித்தது. அவருடைய காதலன் வீடு திரும்பியதும் அதில் அடங்கும். தேர்ந்தெடுப்பதற்கு அடுத்தவருக்கு இருக்கும் சுதந்திரத்தில் நம்மால் குறுக்கிட முடியாது என்பதால், கேட்டின் விருப்பம் நிறைவேறுவதற்கு, தான் தன் காதலியிடம் திரும்பிச் செல்ல வேண்டும் என்ற விருப்பம் அந்தக் காதலருக்கும் உண்டாகியிருக்க வேண்டியது அவசியம். அவர்கள் இருவருமே பரஸ்பரம் ஒருவருக்கொருவர் மிகப் பொருத்தமானவர்களே!

## விலை மதிப்பிடப்பட முடியாத ஒரு படிப்பினை

என்னுடைய கதையை உங்களோடு பகிர்ந்து கொள்ளுவதற்கான உத்வேகத்தால் நான் ஆட்கொள்ளப்பட்டுள்ளேன். அது முன்பு எந்த அளவு

https://telegram.me/aedahamlibrary

உத்வேகமூட்டுவதாக இருந்ததோ, இன்றும் அதே அளவு உத்வேகமூட்டுவதாக இருக்கிறது. என்னுடைய கதையின் படைப்பாளி நான்தான் என்ற புரிதிலிலிருந்து நான் இப்போது பெற்றுள்ள மன அமைதி என்னுடைய வாழ்க்கையைப் பரிபூரணமாக மாற்றியுள்ளது, அது மேலும் தொடரும். இக்கணத்தில் எனக்குள் பெருக்கெடுக்கின்ற நன்றியுணர்வை இதற்கு முன்பு ஒருபோதும் நான் அனுபவித்ததில்லை.

எனக்கு முப்பத்தோரு வயது ஆகிறது. முன்பு ஹெராயின், கோக்கெயின் ஆகிய போதைப் பொருட்களுக்கு அடிமையாகியிருந்த நான் இப்போது அவற்றிலிருந்து மீண்டு கொண்டிருக்கிறேன்.

மூன்றரை ஆண்டுகளுக்கு முன்பு, நான் ஓர் அற்புதமான வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருந்தேன். எனக்கு ஓர் அன்பான வாழ்க்கைத்துணைவர் கிடைத்திருந்தார். மிக அழகான, மிகவும் உத்வேகமூட்டுகின்ற ஒரு குழந்தை எனக்கு மகனாகப் பிறந்தான். டேவன் என்பது அவனுடைய பெயர். நாங்கள் ஓர் அழகான வீட்டில் வாழ்ந்து கொண்டிருந்தோம். சிறப்பான இரண்டு கார்களும் ஒரு ஹார்லே-டேவிட்சன் பைக்கும் எங்களுக்குச் சொந்தமாக இருந்தன. பலர் 'அமெரிக்கக் கனவு' என்று அழைக்கின்ற ஒன்றை நான் வாழ்ந்து கொண்டிருந்தேன்.

என் வாழ்வில் நான் பெற்றிருந்த அற்புதமான விஷயங்கள் குறித்து நான் நன்றியில்லாமல் இருந்ததன் மூலமாக "எல்லாவற்றையும் நான் இழந்தேன்." ஆனால் இப்போது நான் அதை "எல்லாவற்றையும் பிறருக்குக் கொடுத்துவிட்டேன்," என்று கூறுகிறேன். "தன்னிடம் இருக்கும் ஒன்று முற்றிலுமாகத் தன்னைவிட்டுப் போகும்வரை, அந்த விஷயத்தை ஒருவர் அறிவதில்லை," என்ற கூற்றை நாம் எல்லோரும் பல முறை கேட்டிருக்கிறோம். அதை நான் இப்போது இப்படிக் கூற விரும்புகிறேன்: தன்னிடம் இருப்பதை ஒருவர் நன்றாக அறிந்திருக்கிறார், ஆனால் அது அவரைவிட்டுப்

https://telegram.me/aedahamlibrary

போகும்வரை அவர் நன்றியுணர்வு இல்லாதவராக இருக்கிறார்.

நான் என் வாழ்க்கையை இப்போது திரும்பிப் பார்க்கும்போது, நான் அடைந்திருந்த வெற்றிகள் எதையும் நான் பெரிதாகக் கருதியிருக்கவில்லை என்பது எனக்கு ஆச்சரியமூட்டுகிறது. லௌகிகப் பொருட்களைக் கைவசப்படுத்துவதில் நான் தலைசிறந்து விளங்கினேன். ஆனால், உண்மையிலேயே மிக முக்கியமான ஒன்றை, அதாவது, அப்பொருட்களையும் என் வாழ்வில் நான் அனுபவித்திருந்த சூழல்களையும் உருவாக்குவதற்கான என்னுடைய திறனை மெச்சுவதற்கு நான் ஒருபோதும் நேரம் ஒதுக்கிக் கொள்ளவில்லை. அப்பொருட்களை உருவாக்குவதில் எனக்கு ஆதரவு கொடுத்த மக்களைக் குறித்தோ, அல்லது ஓர் அற்புதமான வாழ்க்கையை உருவாக்குவதற்கு என் முன்னால் வீசப்பட்டிருந்த வாய்ப்புகள் குறித்தோ நான் நன்றியை உணரவில்லை.

நான் எவற்றையெல்லாம் விரும்பியிருந்தேனோ, எவற்றைக் கைவசப்படுத்துவதற்காகக் கடுமையாக உழைத்திருந்தேனோ, அவை அனைத்தையும் விட்டுக்கொடுத்ததன் விளைவாக வாழ்க்கையைத் தெளிவாகப் பார்க்க எனக்குக் கிடைத்துள்ள ஒரு புதிய கண்ணோட்டத்திற்காக இப்போது நான் மிகுந்த நன்றியை உணருகிறேன். 'மீண்டும் முதலிலிருந்து துவக்கியதன்' மூலமாக மட்டுமே நான் எவ்வளவு தூரம் ஆசீர்வதிக்கப்பட்டுள்ளேன் என்பதை என்னால் பார்க்க முடிகிறது.

ஹெராயின், கோக்கெயின் ஆகிய போதைப் பொருட்கள் என்னிடம் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டதற்காக நான் ஓராண்டுகாலச் சிறைவாசம் அனுபவித்தேன். என் வாழ்வில் இடம்பெற்றிருந்த பொருட்கள் மற்றும் மக்கள் குறித்து நான் நன்றியின்றி இருந்தேன்.

என்னுடைய சூழ்நிலைக்கு மற்றவர்களையும் புறச்சூழல்களையும் குறைகூறுவதில் என்னுடைய சிறைவாசத்தின் முதல் ஆறு மாதங்களை நான் கழித்தேன். அப்போது ஒருநாள் இரகசியம் புத்தகத்தை

https://telegram.me/aedahamlibrary

நான் படித்தேன். மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு எனக்குள் சென்று பார்ப்பது, என்னுடைய வாழ்க்கைக்கு நான் பொறுப்பேற்றுக் கொள்ளுவது போன்ற, இரகசியத்தில் இடம்பெற்றிருந்த கொள்கைகளை நான் கடைபிடிக்கத் தொடங்கியபோதுதான் என் வாழ்க்கை உண்மையிலேயே மாறத் தொடங்கியது. சரியான கணத்தில்தான் இப்புத்தகம் என் வாழ்விற்குள் நுழைந்திருந்தது. நான் உண்மையிலேயே என் வாழ்வில் ஒரு முக்கியத் தீர்மானம் எடுத்தாக வேண்டிய ஒரு கட்டத்தில் இருந்தேன்.

அளவுக்கதிகமாக போதைப் பொருட்களை உட்கொண்டதால் நான்கு முறை நான் மரணத்தின் விளிம்பைத் தொட்டுவிட்டு வந்தேன், நுரையீரலில் தமனி அடைப்பால் பாதிக்கப்பட்டேன், ஓராண்டு சிறைவாசம் அனுபவித்தேன். இத்தனைக்கும் பிறகு, இந்தப் புத்தகத்தை உருவாக்கிய குழுவினருக்கும் இப்புத்தகத்தைச் சரியான கணத்தில் என் வாழ்க்கைக்குள் கொண்டுவந்த பிரபஞ்சத்திற்கும் என்னால் உண்மையாக நன்றி கூற முடியும். நான் உயிர் பிழைத்தது குறித்தும், என் வாழ்வில் சரியான விஷயங்களைக் கேட்கத் தொடங்குவதற்கு எனக்குக் கிடைத்திருக்கும் வாய்ப்புக் குறித்தும் நான் நன்றியை உணருகிறேன்.

தங்கள் வாழ்க்கையை ஆய்வு செய்யப் போதுமான துணிச்சல் உள்ள எவரொருவரும் இரகசியத்தைப் பயன்படுத்தும்போது அற்புதமான அனுபவத்தைப் பெறுவர் என்பதற்கான ஒரு கச்சிதமான எடுத்துக்காட்டாக நான் திகழுகிறேன். இன்று நான் எந்த அளவு நன்னம்பிக்கையையும் நன்றியையும் உணருகிறேனோ, அதே அளவு நன்னம்பிக்கையையும் நன்றியையும் இந்த ஒட்டுமொத்த மனிதகுலமும் அனுபவிக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

**- ஏவரி எச்., சால்ட் லேக் சிட்டி, யூட்டா, அமெரிக்கா**

https://telegram.me/aedahamlibrary

## நன்றியுணர்வு: வாழ்க்கையை மாற்றுகின்ற ஒரு காரணி

சிலருக்கு நன்றியுணர்வு இயல்பாகவே தோன்றுகிறது. மற்றவர்களுக்கு, ஈர்ப்பு விதியில் நன்றியுணர்வு எத்தகைய முக்கியப் பங்கு வகிக்கிறது என்பதைப் புரிந்து கொள்ள அதிக காலம் ஆகிறது. ஆனால் நீங்கள் எவ்வளவு கடினமான சூழ்நிலையை எதிர்கொண்டிருந்தாலும், இறுதியில், நன்றியுணர்வைக் கடைபிடிப்பது நீங்கள் அச்சூழ்நிலையிலிருந்து மீள ஒரு வழியைக் கண்டுபிடிக்க உங்களுக்கு உதவும்.

### நன்றியுடன் இருத்தல் என்றால் என்ன என்பதைப் புரிந்து கொண்டேன்

உண்மையில் என்னால் அதை விளக்க முடியாது. உங்களிடம் ஏற்கனவே இருக்கின்ற எல்லாவற்றுக்காகவும் நீங்கள் கைவசப்படுத்த விரும்புகின்ற எல்லாவற்றுக்காகவும் நீங்கள் நன்றியுடன் இருக்க வேண்டும் என்று கூறிய இரகசியம், அதை உண்மையிலேயே எந்த அர்த்தத்தில் கூறியது என்பதை நான் புரிந்து கொள்ள விரும்பினேன். என்னால் அவ்வாறு நன்றியை உணர முடியாது என்று நான் உறுதியாக நம்பினேன். இரகசியம் புத்தகத்தையும் அதன் ஆடியோ பதிப்பையும் நான் வாங்கினேன். இரண்டு வாரங்கள் நான் மீண்டும் மீண்டும் அப்புத்தகத்தைப் படித்தேன், அந்த ஆடியோவை மீண்டும் மீண்டும் கேட்டேன். அவர்கள் என்ன கூறிக் கொண்டிருந்தார்கள் என்பதைப் புரிந்து கொள்ள நான் துடியாய்த் துடித்தேன். நான் என் சொந்த விருப்பத்தை யதார்த்தமாக்க விரும்பினேன். உங்களிடம் ஏற்கனவே இருப்பவற்றுக்காகவும் நீங்கள் இனி பெற விரும்புபவற்றுக்காகவும் நீங்கள் நன்றியோடு இருந்தாலொழிய உங்களால் எதையும் பெற முடியாது என்பதை நான் உணரவில்லை.

https://telegram.me/aedahamlibrary

திடீரென்று ஒருநாள் எல்லாம் மாறியது. அன்று அதிகாலையில் என்னுடைய அலாரம் அடித்தபோது நான் கண்விழித்துவிட்டு, இவ்வளவு சீக்கிரமாக நான் எழுந்திருக்க வேண்டியிருந்தது குறித்து லேசாக விரக்தி கொண்டேன். ஆனால் நான் உடனடியாக என்னுடைய மனநிலையை மாற்றிக் கொண்டு, மகிழ்ச்சியாகப் படுக்கையைவிட்டு எழுந்தேன். நான் என்னுடைய தோட்டத்தில் நடந்து கொண்டிருந்தேன். என் முகத்தின்மீது வீசிச் சென்ற மெல்லிய காற்றின் வருடலையும், என் கால்விரல்களுக்கு இடையே புல்லின் ஸ்பரிசத்தையும் நான் உணரத் தொடங்கினேன். பிறகு நான் நன்றி கூறத் தொடங்கினேன். என்னை இந்த பூமியில் படைத்ததற்காகவும், என் வீட்டிற்காகவும், என் குடும்பத்திற்காகவும், வெளியே தோட்டத்தில் என்னால் மகிழ்ச்சியாக உலவி வர முடிவதற்காகவும் பிரபஞ்சத்திற்கு நான் நன்றி கூறத் தொடங்கினேன். நான் என் வாழ்வில் பெற விரும்பியவை உட்பட, என்னால் சிந்திக்க முடிந்த எல்லாவற்றுக்காகவும் நான் நன்றி கூறத் தொடங்கினேன். அடுத்த இரண்டு நாட்களும் நான் இதுபோலவே செய்தேன். உங்களைச் சூழ்ந்துள்ள எல்லாவற்றைக் குறித்தும் ஆழமான நன்றியுடன் இருப்பது எப்படி இருக்கும் என்பதை ஒருவழியாக இப்போது நான் புரிந்து கொண்டுள்ளேன்.

நன்றியுணர்வும் மகிழ்ச்சியும் அன்பும் இப்போது என்னிடமிருந்து இயல்பாகவே வெளிப்படுவதை என்னால் உணர முடிகிறது. முன்பெல்லாம் எனக்கு மிகச் சுலபமாகக் கோபம் வந்துவிடும். ஆனால் இரகசியத்தைக் கண்டறிந்ததிலிருந்து, இப்போது நான் எல்லாவற்றைக் குறித்தும் நன்றியுடன் இருக்கிறேன், என்னை எதுவும் அவ்வளவாகக் கோபமோ அல்லது வருத்தமோ கொள்ளச் செய்வதில்லை. அப்படியே அவை எனக்குக் கோபத்தையோ அல்லது வருத்தத்தையோ ஏற்படுத்தினாலும், நான் சுதாரித்துக் கொண்டு, அன்பு, மகிழ்ச்சி, நன்றியுணர்வு ஆகியவற்றை நான் உணர்ந்தால் மட்டுமே நான் விரும்புகின்றவற்றை என்னால் பெற

https://telegram.me/aedahamlibrary

முடியும் என்பதை எனக்கு நானே நினைவூட்டிக் கொள்ளுகிறேன்.

எனக்குள் பெருக்கெடுக்கின்ற இந்த நன்றியுணர்வை எல்லோரும் தங்களுக்குள் உணரக் கற்றுக் கொள்ள வேண்டும் என்று நான் விரும்புகிறேன். இந்த ஒட்டுமொத்த உலகமும் ஒளிவீசுகிறது. என்னுடைய தோட்டத்தில் பட்டாம்பூச்சிகள் படபடத்துச் செல்லுவதை அடிக்கடி நான் காணுகிறேன். என்னுடைய சன்னலுக்கு வெளியே கீச்சொலி எழுப்புகின்ற பறவைகள் குறித்தும், என் தலைமுடியை வருடிச் செல்லுகின்ற காற்றைக் குறித்தும், பிரபஞ்சத்திடம் நான் கேட்டுள்ளவை ஏற்கனவே என்னுடையவை ஆகிவிட்டன என்பதை அறிந்திருப்பது குறித்தும், மற்றும் எல்லாவற்றைக் குறித்தும் நான் நன்றியுடையவளாக இருக்கிறேன். உங்களைச் சூழ்ந்திருக்கும் விஷயங்கள் குறித்து நீங்கள் நன்றியுடன் இருக்கும்போது, உங்களுக்குள் அமைதியையும் அன்பையும் நீங்கள் உணருவீர்கள்; அவைதான் நீங்கள் விரும்புகின்றவற்றை உங்களிடம் கொண்டுவரும் என்பதை இறுதியில் நான் புரிந்து கொண்டேன்.

**- எலிசபெத் எம்., சான்டியாகோ, கலிபோர்னியா, அமெரிக்கா**

**உங்களுடைய நாளைய தினத்தை உருவாக்குவதற்கு, இன்றிரவு நீங்கள் உங்கள் படுக்கையில் இருக்கும்போது, நீங்கள் தூங்குவதற்குச் சிறிது நேரம் முன்பாக, உங்களுடைய இன்றைய தினத்தை நினைவுகூருங்கள். இன்று நிகழ்ந்த நல்ல விஷயங்களுக்காக நன்றியை உணருங்கள். நீங்கள் தூங்கவிருக்கும் நேரத்தில், “நான் ஆழ்ந்து உறங்கி, காலையில் முழு ஆற்றலோடு கண்விழிப்பேன். நாளைய தினம் என்னுடைய வாழ்வின் மிக அழகான நாளாக இருக்கப் போகிறது,” என்று கூறுங்கள்.**

https://telegram.me/aedahamlibrary



# நன்றியுணர்வு எவ்வாறு என்னுடைய உயிரைக் காப்பாற்றியது!

அதிக மன அழுத்தம் கொடுத்த ஒரு வேலையில் நான் பணியாற்றிக் கொண்டிருந்தேன். நான் மிக அதிக நேரம் வேலை செய்ய வேண்டியிருந்தது, என்னுடைய வேலைச் சுமையும் அளவுக்கதிகமாக இருந்தது. இதனால் திணறிய நான் தீவிர மனச்சோர்வாலும் பரிதவிப்பாலும் துன்புறத் தொடங்கினேன். என் தலை சுற்றும், என் இதயம் மிக வேகமாகத் துடிக்கும். நான் என் அலுவலகத்திற்குள் நுழைந்த உடனேயே என் உடல் நடுங்கும், தலைவலி மண்டையைப் பிளக்கும், என் மனம் பீதியடையும். நான் என் நண்பர்கள் மற்றும் உறவினர்களிடமிருந்து விலகிச் சென்றேன், சமூக நிகழ்வுகளில் கலந்து கொள்ளுவதை நிறுத்தினேன், உடற்பயிற்சி செய்வதைக் கைவிட்டேன், என்மீது அக்கறை கொள்ளுவதை நிறுத்தினேன்.

பதற்றமும் கவலையும் கொண்டிருந்த என் உடலும் என் மனமும் இனியும் என்னுடைய கட்டுப்பாட்டில் இல்லாததை என்னால் கையாள முடியவில்லை. கவலை என் வாழ்வின் அனைத்துப் பகுதிகளையும் ஆட்கொண்டது. நான் மிகவும் மகிழ்ச்சியற்று இருந்தேன். தப்பிப்பதற்கு எனக்கு எந்த வழியும் தெரியவில்லை. எனவே, தற்கொலை செய்து கொள்ளுவதற்கான திட்டங்களை நான் வகுக்கத் தொடங்கினேன்.

ஆனாலும் ஏதோ ஒன்று என்னைத் தடுத்து, என் முடிவை மறுபரிசீலனை செய்ய என்னைத் தூண்டியது.

நான் இரகசியம் திரைப்படத்தைப் பார்த்துள்ளதாலும், பிரபஞ்சத்தின்மீது ஆழமான நம்பிக்கை வைத்திருப்பதாலும், மாயாஜாலம் புத்தகத்தை வாங்க வேண்டும் என்ற தூண்டுதல் என்னுள் எழுந்தது. நான் அதை வாங்கி, தினமும் நன்றி கூறும் வழக்கத்தைத் துவக்கினேன்.

https://telegram.me/aedahamlibrary

முதலில் எனக்கு அது சவாலானதாக இருந்தது. ஆனால், என் வாழ்வில் விஷயங்கள் மாறத் தொடங்கியபோது அது எனக்கு சுலபமாகியது. துவக்கத்தில் மாற்றங்கள் சிறியவையாக இருந்தன. எனக்கு எதிர்பாராத மகிழ்ச்சியைக் கொண்டுவந்த சமூக நிகழ்ச்சிகள், ஒரு நண்பரிடமிருந்து வந்த அன்பான ஒரு குறுஞ்செய்தி, ஒரு பாராட்டு ஆகியவற்றுக்காக நான் நன்றி கூறினேன். பிறகு அதிக முக்கியமான விஷயங்கள் நிகழத் தொடங்கின.

பத்தாவது நாளன்று, எந்த முன்னறிவிப்புமின்றி, நான் என்னுடைய மன அழுத்தத்திலிருந்து விடுபட்டுப் போதிய ஓய்வு பெறுவதற்காக, சம்பளத்துடன்கூடிய விடுப்பை என் முதலாளி எனக்கு வழங்கினார். இருபதாம் நாளன்று, நான் உண்மையிலேயே எந்த வகையான வேலையை விரும்பினேன் என்பது பற்றிய ஒரு தெளிவு எனக்குப் பிறந்தது. நான் எந்தத் துறையில் நிபுணத்துவம் பெற்றிருந்தேனோ, அந்தத் துறையில் பல அற்புதமான வேலை வாய்ப்புகள் தொடர்ந்து உருவாகிக் கொண்டே இருந்தன. எனக்கு அதிக மன அழுத்தத்தைக் கொடுத்த என்னுடைய வேலையிலிருந்து துணிச்சலாக நான் விலகினேன். அதன் பிறகு நான் மீண்டும் ஒருபோதும் அந்த அலுவலகத்திற்குப் போகவில்லை.

இருபத்து நான்காம் நாளன்று, இரகசியம் பரிந்துரைத்தச் செயல்களை நான் கடைபிடித்ததுதான் என் உயிரைக் காப்பாற்றியிருந்தது என்பதை நான் அறிந்தேன். ஓய்வெடுக்கவும் புத்துணர்ச்சி பெறவும் எனக்குக் கொடுக்கப்பட்டிருந்த நேரத்தில், நன்றியுணர்வைப் பற்றிச் சிந்திக்கவும், நான் வாழ விரும்பிய வாழ்க்கையின் வடிவமைப்பைப் பிரபஞ்சத்திடம் ஒரு கோரிக்கையாக முன்வைப்பதற்குமான நேர இடைவெளி எனக்குக் கிடைத்தது. என்னுடைய பட்டியலில் இருக்கும் அனைத்தும் விரைவில் என்னிடம் வரவிருக்கின்றன என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

ஒரு காலத்தில் மனச்சோர்வுடனும் கவலையுடனும் வாழ்ந்து வந்திருந்த நான், இன்று ஒவ்வொரு நாளும் உற்சாகத்தோடும் மகிழ்ச்சியாகவும் கண்விழிக்கிறேன்.

https://telegram.me/aedahamlibrary

என்னிடம் இருக்கும் எல்லாவற்றுக்காகவும் நான் நன்றி கூறுகிறேன்.

**மாயாஜாலம்** புத்தகத்தைப் படித்து, அது பரிந்துரைத்த வழிமுறைகளை நான் கடைபிடிக்கத் தொடங்கிய பிறகு, இருபத்தெட்டாம் நாளன்று, எனக்கு மிகவும் பிடித்த வேலை ஒன்றில் சேருவதற்கான வாய்ப்பு எனக்குக் கொடுக்கப்பட்டிருந்தது. என்னுடைய 'பிரபஞ்ச விருப்பப் பட்டியலில்' நான் எழுதியிருந்த அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கியவையாக அந்த வேலையும் அந்நிறுவனமும் இருந்தன. பிரபஞ்சக் காசோலையில் நான் எந்தத் தொகையை நிரப்பியிருந்தேனோ, **துல்லியமாக** அதே தொகையை எனக்குச் சம்பளமாகக் கொடுக்க அவர்கள் தயாராக இருந்தனர். வேலையில் சேரும்படி அழைப்பு விடுத்து அந்நிறுவனத்திடமிருந்து எனக்கு அதிகாரபூர்வமான கடிதம் வந்தபோது எனக்குப் புல்லரித்தது. நான் கோரியிருந்த அனைத்தையும் பிரபஞ்சம் எனக்கு வழங்கியிருந்ததை என்னால் நம்ப முடியவில்லை.

நன்றி, நன்றி, நன்றி.

**- ஆலிவியா எம்., கேன்பெர்ரா, ஆஸ்திரேலியா**

## நீங்கள் விரும்புகின்ற அனைத்தும் உங்களுடையவையாக ஆவது சாத்தியம்தான்

பின்வரும் நபர்கள் அனைவரும் கண்டுபிடித்ததுபோல, நீங்கள் எவற்றை விரும்பினாலும் அவை அனைத்தையும் நீங்கள் பெற வேண்டும் என்று பிரபஞ்சம் விரும்புகிறது.

### அபரிமிதமான அற்புதங்கள்!

**இரகசியம்** பற்றி எனக்குத் தெரிய வந்த நேரத்தில், என் வாழ்க்கை ஒரு மிகப் பெரிய குழப்பத்தில் இருந்தது.

https://telegram.me/aedahamlibrary

உணர்ச்சிரீதியான மற்றும் மனரீதியான பிரச்சனைகளிலிருந்தும், வேதனையூட்டிய பல அடிமைப் பழக்கங்களிலிருந்தும் நான் அப்போது மீண்டு கொண்டிருந்தேன். என்னுடைய உறவுகளும் சீர்கெட்ட ஒரு நிலையில் இருந்தன. நான் என் சகோதரியோடு வாழ்ந்து கொண்டிருந்தேன். அவள் அப்போதுதான் முடக்குவாதத்திலிருந்தும் முறிந்து போன ஒரு நிச்சயதார்த்தத்தில் இருந்தும் மீண்டு கொண்டிருந்தாள். அவள் மிக அதிகமான எடையை இழந்து மிகவும் பலவீனமாக இருந்ததால், அவளால் அதிக காலம் தாக்குப்பிடிக்க முடியாததுபோலத் தோன்றியது.

இரகசியம் திரைப்படத்தை நான் முதன்முதலாகப் பார்த்தபோது, நான் மகிழ்ச்சியில் உற்சாகமாகக் கத்தியது எனக்கு நினைவிருக்கிறது. நான் ஒரு குழந்தையாக இருந்தபோது, என் வாழ்வை வடிவமைப்பதற்கான சக்தி எனக்கு இருந்ததை எப்போதும் நான் அறிந்திருந்தேன், ஆனால் காலப்போக்கில் என்னுடைய இந்த தெய்விக அம்சத்துடனான பிணைப்பை நான் இழந்துவிட்டேன்.

**இரகசியம்** திரைப்படத்தை நான் பார்த்த நாளிலிருந்து, என் வாழ்க்கை செம்மையானதாக மாறிக் கொண்டே வந்தது.

இரகசியத்தின் கொள்கைகளையும் வழிமுறைகளையும் என் வாழ்வில் செயல்படுத்தியதன் மூலமும் அவற்றைப் பயன்படுத்தியதன் மூலமும், ஒரு புதிய நகரத்தில் ஓர் அழகான வீட்டிற்கு நான் இடம்பெயர்ந்தேன். வீணான அடிமைப் பழக்கங்களில் சிக்கிக் கிடப்பதிலிருந்து நான் வெகுதூரம் தள்ளி இருந்தேன்.

அன்றிலிருந்து, நான் பல்வேறு விஷயங்களுக்காக இரகசியத்தைப் பயன்படுத்தி வந்துள்ளேன். அவற்றில் சிலவற்றை நான் இங்கு குறிப்பிட்டுள்ளேன்:

- நான் என்னுடைய வருமானத்தை இரட்டிப்பாக்கினேன்.

https://telegram.me/aedahamlibrary

- இருபத்து மூன்று ஆண்டுகளாகப் புகைபிடிக்கும் பழக்கத்திற்கு அடிமையாகியிருந்த நான் அப்பழக்கத்தை முற்றிலுமாகக் கைவிட்டேன்.
- நான் என்னுடைய உணர்ச்சிசார் பிரச்சனைகள் நீங்கப் பெற்று நலமடைந்தேன்.
- மது, போதைப் பொருட்கள், பலரோடு உறவுகள் போன்றவற்றுக்கு அடிமையாகியிருந்த நான் அவற்றிலிருந்து விடுபட்டேன்.
- பல ஆண்டுகளாக நான் கனவு கண்டு வந்திருந்த ஒரு தொழிலைத் துவக்கினேன்.

மிக முக்கியமாக, நான் இப்போது எப்படிப்பட்ட ஒருத்தியாக ஆகியிருக்கிறேனோ, அது குறித்து நான் பெருமிதம் கொள்ளுகிறேன். நான் என்னுடைய வேதனையை சக்தியாக மாற்றியுள்ளேன். வலிமையும் துணிச்சலும் கொண்டவளாக நான் ஆகியுள்ளேன். நான் உண்மையிலேயே மகிழ்ச்சியாக இருக்கிறேன். அன்பையும் வாழ்க்கையையும் நான் மெச்சத் தொடங்கியுள்ளேன்!

என் சகோதரியும் வேகமாக நலமடைந்து வருகிறாள். இப்போது எனக்கோர் அன்பான வாழ்க்கைத்துணைவரைக் கவர்ந்திழுப்பதற்காக இரகசியத்தை நான் செயல்படுத்திக் கொண்டிருக்கிறேன்.

நான் இந்தப் பிரபஞ்சத்தையும் வாழ்க்கையையும் நேசிக்கிறேன். இரகசியம் என் வாழ்வில் கொண்டுவந்துள்ள அனைத்து அதிசயங்களுக்காகவும் நான் மிகுந்த நன்றியுடன் இருக்கிறேன்.

**- எல். லால், புனே, இந்தியா**

**உங்கள் கனவை முதலில் அகரீதியாக முழுமையாக வாழுங்கள். அப்போது அது உங்கள் வாழ்வில் யதார்த்தமாகும். நீங்கள் அகரீதியாக முற்றிலும் இணக்கமாக மாறியிருக்கும்போது, உங்கள் கனவு நனவாவதற்குத் தேவையான**

https://telegram.me/aedahamlibrary

**அனைத்தையும் நீங்கள் காந்தம்போலக் கவர்ந்திழுப்பீர்கள்.**

**இதுதான் விதி. உங்கள் வாழ்வில் அனைத்துப் படைப்புகளும் உங்கள் அகத்திலிருந்துதான் தொடங்குகின்றன.**

**- இரகசியம் தினசரி போதனைகள்**

## என்னுடைய மாபெரும் கனவுகள் நனவாயின!

நான் என் கணவரிடமிருந்து பிரிந்து, இருபது ஆண்டுகளாகத் தனியொருத்தியாக என் குழந்தையை வளர்த்து வந்தேன். பணத்தைப் பற்றி நான் எப்போதுமே கவலைப்பட்டேன். நான் ஒருபோதும் எங்கும் பயணம் செய்ததில்லை. எனக்கென்று சொந்தமாக ஒரு வீடுகூட இருந்ததில்லை. எனவே, என்றேனும் ஒருநாள் நான் இங்கிலாந்துக்குப் பயணம் செய்வேன் என்று எனக்கு நானே வாக்குக் கொடுத்துக் கொண்டேன். அந்தப் பயணம் என்னுடைய மாபெரும் விருப்பங்களில் ஒன்று. நான் வட அமெரிக்காவைவிட்டு ஒருபோதும் வேறெங்கும் சென்றதில்லை. என்னுடைய முதல் அயல்நாட்டுப் பயணமாக நான் லண்டன் நகருக்குப் பயணம் செய்ய விரும்பினேன். நான் சொந்தமாக ஒரு வீட்டையும் வாங்க விரும்பினேன். நான் என் வாழ்வில் பொருளாதாரப் பாதுகாப்புடனும் வசதியாகவும் வாழ விரும்பினேன். ஆனால் பல ஆண்டுகளாக, இவற்றில் எதுவும் என் வாழ்வில் நிறைவேறுவதற்கான எந்தவொரு வழியும் எனக்குத் தென்படவில்லை.

அப்போதுதான் **இரகசியம்** பற்றி நான் அறிந்தேன். அது எனக்கு மிகவும் பிடித்துப் போனது. ஏனெனில், அது எனக்கு உத்வேகமூட்டி, என் சூழ்நிலையை என்னால் மேம்படுத்த முடியும் என்ற நம்பிக்கையையும் எனக்குக் கொடுத்தது. பிறகு, **சக்தி, மாயாஜாலம்** ஆகிய இரண்டு புத்தகங்களையும் நான் வாங்கினேன். நான் எவற்றையெல்லாம் விரும்பினேனோ அவற்றின்மீது

https://telegram.me/aedahamlibrary

நான் கவனம் செலுத்தத் தொடங்கினேன். தினமும் நன்றி கூறும் பழக்கத்தையும் நான் கடைபிடிக்கத் தொடங்கினேன்.

நான் என் உடலையும் மனத்தையும் ஆன்மாவையும் உண்மையிலேயே அன்பாலும் நன்றியுணர்வாலும் நிரப்ப விரும்பினேன். என் வாழ்க்கையை என்னால் மேம்படுத்த முடியும் என்ற நம்பிக்கையையும் நான் என்னுள் வளர்த்தெடுக்க விரும்பினேன். மீண்டும் மீண்டும் செய்வதுதான் இங்கு முக்கியம் என்பதை நான் உள்ளூர அறிந்திருந்தேன். எனவே, நான் இரகசியம் புத்தகத்தை மீண்டும் மீண்டும் படித்தேன், என் வாழ்வில் என்னிடம் இருந்தவற்றுக்காக தினமும் நன்றி கூறினேன், இரகசியம் திரைப்படத்தை மீண்டும் மீண்டும் பார்த்தேன், என் நம்பிக்கைக்கு மேலும் வலுவூட்டிக் கொண்டே வந்தேன்.

அது சிறப்பாகப் பலனளித்தது. இரகசியம் என் வாழ்வில் எவ்வளவு தூரம் அற்புதமாகப் பலனளித்துள்ளது என்பதை நான் நினைத்துப் பார்க்கும்போது, அது இன்றும் சில சமயங்களில் என் கண்களில் கண்ணீரை வரவழைக்கிறது.

காலப்போக்கில், நன்றி கூறுதலையும் மனக்காட்சிப்படைப்பையும் நான் தீவிரப்படுத்தினேன். காலையில் கண்விழித்ததும் முதல் வேலையாகவும், இரவில் தூங்கச் செல்லுவதற்கு முன்பாகவும் என்று தினமும் இரண்டு முறை நான் நன்றி கூறினேன், மனக்காட்சிப்படுத்தினேன். தொடர்ந்து முப்பது நாட்கள் நான் இதைச் செய்தேன்.

அதன் விளைவு என்னவாக இருந்திருக்கும் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்? ஆறு மாதங்களுக்குள், என் வாழ்வில் பின்வரும் அற்புதமான மேம்பாடுகள் நிகழ்ந்தன:

- என் மகன் கல்லூரியிலிருந்து பட்டம் பெற்றான், தான் விரும்பிய வேலையில் சேர்ந்தான், சொந்தமாக ஒரு வீடு வாங்கி

https://telegram.me/aedahamlibrary

அதில் குடியேறினான். அவன் தன் வாழ்வில் மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியமாகவும் வெற்றிகரமாகவும் விளங்குவதைக் காண அற்புதமாக இருக்கிறது.

- என் வேலையில் என்னுடைய வருடாந்திர வருவாய் 30,000 டாலர்கள் அதிகரித்தது.
- வீட்டிலிருந்தபடியே நான் செய்து வந்த பகுதிநேரத் தொழிலிலிருந்து சிறிதளவு கூடுதல் பணத்தையும் நான் சம்பாதித்தேன்.
- ஆடம்பர வசதிகளுடன்கூடிய ஒரு பெரிய பங்களாவைத் தவணை முறையில் வாங்கி, நான் அதில் குடியேறினேன். வீட்டின் அடித்தளத்தில் வாகனங்களை நிறுத்துவதற்கான ஓர் இடமும் அவ்வீட்டில் இருந்தது.
- என்னுடைய கடனட்டையைப் பயன்படுத்தி லண்டனுக்கும் பாரீஸுக்கும் போய்வருவதற்கான விமான ஏற்பாடுகளை நான் செய்தேன். என் சம்பளம் அதிகரித்திருந்ததால் ஆறு மாதங்களில் அந்தக் கடனை என்னால் திருப்பிச் செலுத்திவிட முடியும் என்பதை நான் அறிந்திருந்தேன்.
- என்னுடைய பழைய அறைகலன்கள் அனைத்தையும் நான் என் மகனிடம் கொடுத்துவிட்டு, புதிய அறைகலன்களைத் தவணை முறையில் வாங்கினேன். மொத்தத் தொகையை மூன்று ஆண்டுகளில் செலுத்தி முடிக்கும் விதத்தில் நான் அந்தத் தவணைகளை ஏற்பாடு செய்தேன்.

https://telegram.me/aedahamlibrary

- புதிய ஜீப் ஒன்றையும் நான் வாங்கினேன். அதற்கான தொகையை ஆறு ஆண்டுகளில் அடைக்க நான் ஏற்பாடு செய்தேன்.
- சஸ்கேச்சுவான் பிராந்தியத்தில் பிரின்ஸ் ஆல்பர்ட் நகரின் லாட்டரிக் குலுக்கல் ஒன்றில் என் தாயார் 11.5 லட்சம் டாலர்கள் பணத்தை வென்றார். அவர் அப்பணத்தைத் தன் குழந்தைகளுடன் தாராளமாகப் பகிர்ந்து கொண்டார். எனக்கு அவர் கொடுத்தப் பணத்தைக் கொண்டு, லண்டன் மற்றும் பாரீஸ் நகரப் பயணம், புதிய ஜீப், புதிய அறைகலன்கள் ஆகியவற்றுக்கு நான் வாங்கியிருந்த கடன்கள் உட்பட என்னுடைய கடன்கள் அனைத்தையும் நான் அடைத்தேன். என்னுடைய பங்களாவுக்கு மட்டும் நான் மாதாமாதம் தவணைத் தொகையைச் செலுத்த வேண்டியிருந்தது. மற்றபடி எனக்கு வேறு எந்தக் கடன்களும் இருக்கவில்லை. என் வங்கிக் கணக்கில் நான் ஓரளவு சேமித்து வைத்தேன். நான் மேலும் செலவழிக்கப் போதுமான பணம் என்னிடம் இருக்கிறது.
- என் தாயாரைப்போலவே, இரண்டு மாதங்களுக்குப் பிறகு என்னுடைய மாமாவும் லாட்டரியில் பணம் வென்றார். ஆல்பர்ட்டா பிராந்தியத்தில் மெடிசின் ஹாட் நகரின் லாட்டரி ஒன்றில் 14 லட்சம் டாலர்கள் பணம் அவருக்குப் பரிசாகக் கிடைத்தது.
- நியூ யார்க் நகருக்குப் போய்வர வேண்டும் என்ற என்னுடைய நீண்டநாள் கனவையும் நான் நிறைவேற்றத் தீர்மானித்துள்ளேன்.

https://telegram.me/aedahamlibrary

- என்னுடைய ஆசைகள் நிறைவேறியதோடு மட்டுமல்லாமல், என் மகனும் என் தாயாரும் தங்களுடைய வாழ்க்கையில் வெற்றியையும் மகிழ்ச்சியையும் அனுபவிப்பதைக் காணும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. அது ஓர் அற்புதமான உணர்வு!

என் வாழ்க்கை தொடர்ந்து மனநிறைவு தருவதாக இருக்கிறது. நான் தொடர்ந்து நன்றாகச் சம்பாதித்துக் கொண்டும் பயணித்துக் கொண்டும் இருக்கிறேன். என் மகனுக்கும் எனக்கும் இடையேயான உறவு அற்புதமானதாக இருக்கிறது. அவன் தன் வாழ்வில் வெற்றிகரமாகத் திகழுவதைக் கண்டு நான் புளகாங்கிதம் அடைகிறேன்.

ரோன்டா, நான் உங்களுக்கு மிகவும் நன்றிக்கடன் பட்டுள்ளேன். என் வாழ்க்கையைச் சிறப்பானதாக மாற்றிக் கொள்ள நீங்கள் எனக்கு உதவியிருக்கிறீர்கள். மிக்க நன்றி!

**- கிம் எஸ்., கனடா**

நம் வாழ்விற்குள் வருகின்ற ஒவ்வொன்றையும் நம்மால் கட்டுப்படுத்த முடியாது. ஏனெனில், நம்முடைய வாழ்க்கையில் மற்றவர்களும் சம்பந்தப்பட்டுள்ளனர். அவர்களுடைய நடவடிக்கைகளை நம்மால் கட்டுப்படுத்த முடியாது. ஆனால், பின்வரும் கதையில் சார்லட் அழகாகக் கூறுவதைப்போல, நம் வாழ்வில் நிகழுகின்றவற்றுக்கு நாம் **செயல்விடை அளிக்கும் விதத்தை** நம்மால் எப்போதும் கட்டுப்படுத்த முடியும்.

## பல இழப்புகளிலிருந்து மீளுதல்

https://telegram.me/aedahamlibrary

கடந்த பன்னிரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக, என் வாழ்வில் ஏகப்பட்ட இழப்புகளை நான் சந்தித்து வந்துள்ளேன். என் தாயார், என்னுடைய நான்கு மாமாக்கள், இரண்டு அத்தைகள், நான்கு குடும்ப நண்பர்கள் ஆகியோர் இறந்தனர். இரண்டு செல்லப் பிராணிகளையும் நான் இழந்தேன். மிகச் சமீபத்தில், ரென்னி என்ற என்னுடைய செல்லப் பூனையை நான் பறிகொடுத்தேன். அது பதினான்கு ஆண்டுகாலம் வாழ்ந்தது. இப்போது, என்னுடைய எண்பத்தேழு வயது தந்தையும் ஒரு சகோதரியும் மட்டுமே என் குடும்பத்தில் எஞ்சியுள்ளனர்.

**இரகசியம்** பற்றி எனக்குத் தெரிய வருவதற்கு முன்பு, இவ்வளவு குறுகிய காலத்தில் இவ்வளவு அதிகமான இழப்புகளால் நான் துன்புற்றுக் கொண்டிருப்பேன் என்று யாரேனும் என்னிடம் கூறியிருந்தால் அது என்னை முற்றிலுமாக அழித்திருக்கும் என்று நான் உறுதியாக நம்பியிருப்பேன். அந்த இழப்புகள் ஏற்பட்டபோது, நான் மிகுந்த துக்கம் கொண்டேன், நான் யாருமின்றித் தனிமையில் விடப்பட்டிருந்ததுபோல உணர்ந்தேன். என் இதயம் சுக்குநூறாக நொறுங்கியது என்பதை மறுப்பதற்கில்லை. நான் பல முறை அவர்களை நினைத்து அழுதிருக்கிறேன். அடுத்தடுத்து நிகழ்ந்த அந்த மரணங்களால் தீவிரக் கவலையாலும் மனச்சோர்வாலும் நான் பாதிக்கப்பட்டேன்.

ஆனால் **இரகசியம்** மற்றும் ஈர்ப்பு விதியின் காரணமாக, ஒவ்வொரு முறையும் மிகக் குறுகிய நேரத்தில் என்னால் என் துயரத்திலிருந்து மீளவும் மீண்டும் என் வாழ்க்கையைத் தொடரவும் முடிந்தது. உண்மையில், நான் இப்போது உங்களிடம் கூறப் போகும் விஷயம் அறிவுக்குப் புறம்பானதாக உங்களுக்குத் தோன்றக்கூடும். நான் இவ்வளவு அதிகமான இழப்புகளை அனுபவித்திருந்தும்கூட, முன்பு எப்போதையும்விட சமீப காலங்களில் நான் என் வாழ்க்கையை உண்மையிலேயே அதிக மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்துள்ளேன். நான் அதிக வலிமையானவளாக உணருகிறேன். வாழ்க்கை அதிகச்

https://telegram.me/aedahamlibrary

செழிப்பாகவும் அதிக சுவாரசியமானதாகவும் அதிக உற்சாகமூட்டுவதாகவும் இருக்கிறது.

இரகசியம் எனக்கு ஒரு ஞானோதயமாக அமைந்தது. ஏனெனில், நாம் நம்முடைய சூழல்கள் மற்றும் உணர்ச்சிகளின் ஒரு பலிகடாவாக இருக்க வேண்டியதில்லை என்பதை அது எனக்குக் கற்றுக் கொடுத்தது. நமக்கு நிகழுகின்ற விஷயங்கள்மீது நமக்கு எந்தக் கட்டுப்பாடும் இல்லை, அவற்றுக்கு நாம் செயல்விடை அளிக்கும் விதத்தின்மீதும் நமக்கு எந்தக் கட்டுப்பாடும் இல்லை என்று முன்பு நான் நம்பினேன். எப்போது அடுத்த நெருக்கடி ஏற்பட்டு என்னை உணர்ச்சிரீதியான பாதிப்புக்கு உள்ளாக்குமோ என்ற ஒரு நிரந்தர பயத்துடனேயே நான் எப்போதும் வாழ்ந்து வந்தேன். என்னுடைய மகிழ்ச்சி, மற்றவர்கள் செய்த அல்லது செய்யாமல் போன விஷயங்களைச் சார்ந்திருக்கும்படி நான் நடந்து கொண்டேன். மற்றவர்களை என்னால் கட்டுப்படுத்த முடியாது, ஆனால் அவர்கள் செய்கின்ற விஷயங்களுக்கு நான் அளிக்கின்ற செயல்விடைகளை என்னால் கட்டுப்படுத்த முடியும் என்பதை நான் தெரிந்து கொண்டபோது, நான் உண்மையிலேயே பிரமித்துப் போனேன். அதேபோல, நல்லவையோ அல்லது மோசமானவையோ, என் எண்ணங்கள் மற்றும் உணர்ச்சிகள் மூலமாக நான் கவர்ந்திழுப்பவற்றைக் கொண்டு என் எதிர்காலத்தை என்னால் கட்டுப்படுத்த முடியும் என்ற உண்மை எனக்குத் தெரிய வந்தபோதும் நான் மீண்டும் பிரமித்தேன்.

என் வாழ்வில் உள்ள முதியவர்களும் செல்லப் பிராணிகளும் மரணம் எய்துவதை என்னால் தடுக்க முடியாது என்பதை நான் அறிவேன். ஆனால் அந்நிகழ்வுகளுக்கு நான் செயல்விடை அளிக்கும் விதத்தை என்னால் கட்டுப்படுத்த முடியும் என்பதை **இரகசியம்** எனக்குக் கற்றுக் கொடுத்தது. ஒரு மரணம் நிகழும்போது, நான் அளவுக்கதிகமாக உணர்ச்சிவசப்பட்டு என்னை நானே சீரழித்துக்

https://telegram.me/aedahamlibrary

கொண்டும், கடந்தகாலத்தை உடும்புபோலப் பிடித்துக் கொண்டும், சாத்தியமில்லாத ஒன்று சாத்தியமாக வேண்டும் என்று வீணாக ஆசைப்பட்டுக் கொண்டும் இருக்க விரும்புகிறேனோ, அல்லது என் அன்புக்குரியவர்களின் மரணம் அவர்களுடைய சொந்த ஆன்மிகப் பயணத்தின் ஒரு பகுதி என்று ஒப்புக் கொண்டு அமைதியாக விடைகொடுத்து அவர்களை அனுப்பி வைத்துவிட்டு, எதிர்காலத்தில் நிகழவிருக்கின்ற நல்ல விஷயங்கள்மீது நான் என் கவனத்தைக் குவிக்க விரும்புகிறேனா என்பது முற்றிலும் என்னைச் சார்ந்தது. நமக்கு சக்தியூட்டும் ஒரு மாபெரும் கோட்பாடு இது!

நான் ஓர் இழப்பையோ அல்லது பின்னடைவையோ எதிர்கொண்டுள்ள ஒவ்வொரு முறையும், எனக்குப் புத்துணர்ச்சியூட்டிக் கொள்ளவும், என் வலிமையைத் திரும்பப் பெறவும், வாழ்க்கை குறித்த உற்சாகத்தை என்னுள் மீட்டெடுக்கவும் **இரகசியம்** திரைப்படத்தை நான் மீண்டும் மீண்டும் பார்த்துள்ளேன். ஒவ்வொரு முறையும் அது தவறாமல் பலனளிக்கிறது. அது இரவோடு இரவாக நிகழ்ந்துவிடுவதில்லை, ஆனால், இரகசியம் என் வாழ்விற்குள் வந்திருக்காவிட்டால் இன்று நான் மிக மோசமான ஒரு நிலையில் இருந்திருப்பேன் என்பது மட்டும் உறுதி.

**- சார்லட் பி., ஒன்டாரியோ, கனடா**

இப்புத்தகத்தில் தங்கள் கதையைக் கூறியுள்ள ஒவ்வொருவரும், **உங்களுக்கு** உற்சாகத்தையும் உத்வேகத்தையும் கொடுப்பதற்கான ஓர் ஆழ்விருப்பத்தினால் மட்டுமே தங்களுடைய கதையை உங்களோடு பகிர்ந்து கொண்டுள்ளனர். சில சமயங்களில் அவர்களுடைய கதை அளவிடப்பட முடியாத துயரத்தை உள்ளடக்கியிருந்தது. நம்முடைய துயரம் எவ்வளவு அதிகமாக இருக்கிறதோ, நம்முடைய வாழ்க்கையை முழுமையாக மாற்றிக் கொள்ள

https://telegram.me/aedahamlibrary

வேண்டும் என்பதற்கான தூண்டுதல் அவ்வளவு அதிகமாக நம்முள் எழுகிறது என்பதை நீங்கள் கவனித்திருப்பீர்கள். சாம்பலில் இருந்துதான் ஒரு புதிய ஜீவன் பிறக்கிறது.

உங்கள் வாழ்வில் எதுவொன்றையும் மாற்றுவதற்கு இப்போதுகூடக் காலம் கடந்துவிடவில்லை. மீளப்பட முடியாத ஒரு படுகுழி என்று எதுவும் இல்லை. நிரந்தரமாக இழக்கப்பட்டுவிட்ட வாய்ப்பு என்று எதுவும் இல்லை. ஒரு மாபெரும் செய்தி என்னவென்றால், நீங்கள் மாற்ற வேண்டியது இவ்வுலகத்தை அல்ல. மாறாக, நீங்கள் சிந்திக்கும் விதத்தையும் உணரும் விதத்தையும் நீங்கள் மாற்றினால் போதும். அப்போது உலகம் தானாகவே உங்கள் கண்முன்னே மாறும். பிறகு, **உங்களுடைய** கதை மற்றவர்களுக்கு ஊக்கமும் உத்வேகமும் கொடுக்கும். இவ்வாறு, உங்களை மாற்றுவதன் மூலமாக உண்மையில் நீங்கள் இவ்வுலகத்தை மாற்றுவீர்கள்.

## இரகசியத்துடனான மல்யுத்தம்

என்னுடைய இருபத்திரண்டாவது வயதில், நான் கனவு கண்டிருந்த ஒரு வேலை எனக்குக் கிடைத்தது. ஆம், நான் ஒரு தொழில்முறை மல்யுத்த வீரனாக ஆனேன். துவக்கத்தில் நான் சிறுசிறு போட்டிகளில் பங்கு கொள்ள வேண்டியிருந்தபோதிலும், பெரிய சண்டைகளில் நான் என் முத்திரையைப் பதிக்கக்கூடிய நாள் வரும் என்று நான் நம்பினேன். நான் பன்னிரண்டு வயதுச் சிறுவனாக இருந்த சமயத்திலிருந்து மல்யுத்தம் மட்டுமே என்னுடைய ஒரே கனவாக இருந்து வந்திருந்தது. மல்யுத்தம் உடலை உருவாக்குவதை உள்ளடக்கியிருந்தது எனக்கு மிகவும் பிடித்திருந்தது.

https://telegram.me/aedahamlibrary

கற்றலை நான் விரும்பினேன். ஆனால் இந்த வேலைச் சூழல் முற்றிலும் வித்தியாசமானதாக இருந்தது. இதில் ஈடுபட்டவர்கள் மனரீதியாகவும் உடல்ரீதியாகவும் அளவுக்கதிகமாகத் துன்புறுத்தப்பட்டனர், அவர்களுடைய உணர்ச்சிகள் சித்தரவதைக்கு உள்ளாக்கப்பட்டன. அவர்கள் முற்றிலுமாக மனம் தளர்ந்து போகும் அளவுக்கு அவர்கள் துன்புற வேண்டியிருந்தது.

என்னையும் அறியாமல், நான் மெல்ல மெல்ல ஓர் எதிர்மறை மனப்போக்கைக் கொண்டவனாக ஆகிக் கொண்டிருந்தேன். நாட்கள் செல்லச் செல்ல, நான் படிப்படியாக நம்பிக்கை இழந்து கொண்டிருந்தேன். என்னைச் சூழ்ந்தும் என்னுள்ளும் இருந்த எதிர்மறைப் போக்கின் காரணமாக நான் என்னுடைய தன்னம்பிக்கையை முற்றிலுமாக இழந்தேன். நான் என் முயற்சியைக் கைவிடவில்லை, ஏனெனில் அது என் இயல்பு அல்ல. அவ்வப்போது நான் வெற்றி பெற்றேன், ஆனால் உடனடியாக ஏதேனும் ஒன்று என்னைக் கீழே தள்ளிவிடும்.

நிலைமை இதைவிட மோசமடைய வாய்ப்பில்லை என்று நான் நினைத்த நேரத்தில், அவர்கள் என்னை வேறொரு நகரத்திற்கு மாற்றினர். அப்புதிய நகரில் என்னுடைய புதிய வேலையில் ஓராண்டுகாலம் நான் மிகவும் கஷ்டப்பட்டேன். உடல்ரீதியாக என்னுடைய மல்யுத்தத்தில் விஷயங்கள் மேம்பட்டன, ஆனால் மனத்தளவில் நான் வீழ்த்தப்பட்டேன். நான் எனக்கென்று உண்மையான இலக்குகள் எதையும் நிர்ணயிக்கவில்லை. வாழ்க்கை என்னைக் கட்டுப்படுத்த நான் அனுமதித்துவிட்டேன். நான் அன்றாடச் செய்திகளைப் பார்த்துவிட்டு மனச்சோர்வு அடைந்தேன். நான் உடற்பயிற்சி நிலையத்திற்குச் சென்றுவிட்டு அங்கேயும் மனச்சோர்வு கொண்டேன். நான் சிலரோடு சேர்ந்து இரவு முழுவதும் குடித்துவிட்டு, மறுநாள் காலையில் இன்னும் அதிக மனச்சோர்வுடன் கண்விழித்தேன். எதிர்மறைப் போக்கு என் வாழ்க்கை முழுவதையும் கட்டுப்படுத்தி இயக்கிக் கொண்டிருந்தது.

https://telegram.me/aedahamlibrary

எந்த வேலை எனக்குக் கிடைக்க வேண்டும் என்று சிறுவயது முதலாக நான் கனவு கண்டு வந்திருந்தேனோ, அந்த வேலையிலிருந்து நான் நீக்கப்பட இருந்ததாக ஒவ்வோர் இரவும் எனக்குக் கொடுங்கனவுகள் ஏற்படத் தொடங்கின.

ஒருநாள் நான் பயிற்சியில் ஈடுபட்டிருந்தபோது, என்னுடைய நெருங்கிய நண்பனான பேட்டுடன் நான் பேசிக் கொண்டிருந்தேன். அவன் சம்பளம் எதுவும் வாங்காமல் மல்யுத்தம் செய்து கொண்டிருந்தான். என்னைப்போல ஊதியம் பெறும் நிலையை அடைய அவன் முயற்சித்துக் கொண்டிருந்தான். அந்நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்து கொண்டு அவர்களுடைய தொழில்முறை மல்யுத்த வீரனாக அவன் வேலை செய்ய விரும்பினான். குறிப்பிட்ட அந்த நாளன்று, நாங்கள் அந்த மல்யுத்த மேடையைச் சுற்றி எங்கள் கைகால்களை நீட்டியும் மடக்கியும் எங்களுடைய பயிற்சிக்காக நாங்கள் தயாராகிக் கொண்டிருந்தோம். “இன்று நான் இந்த வேலையிலிருந்து நீக்கப்படப் போகிறேன் என்று நான் பந்தயம் கட்டுகிறேன்,” என்று நான் கூறினேன். பேட் என்னை ஏறிட்டுப் பார்த்துவிட்டு, “உன்னை யாரும் வேலையைவிட்டு நீக்க மாட்டார்கள். இங்கு இருப்பவர்களிலேயே மிகுந்த திறமையும் வெற்றி பெறுவதற்கான ஆற்றலும் கொண்டவன் நீதான்,” என்று கூறினான். ஆனாலும் எதிர்மறை மனப்போக்கு என்னுள் நீடித்தது.

பிறகு, மூன்று பேருடைய வேலை ஒப்பந்தங்கள் ரத்து செய்யப்பட இருந்ததாக அங்கு ஒரு வதந்தி கிளம்பியது. கடுமையான பயிற்சிக்குப் பிறகு நான் மிகுந்த வருத்தத்தோடு வீடு திரும்பினேன். என்னுடைய பிரச்சனைகளிலிருந்து தற்காலிகமாகத் தப்பிப்பதற்காக ஒரு குட்டித் தூக்கம் போடுவதென்று நான் தீர்மானித்தேன். என் அலைபேசியில் ஒரு குரலஞ்சல் வந்து எனக்கு விழிப்பூட்டியது. அது என் முதலாளியிடமிருந்து வந்திருந்தது. நான் என் வேலையிலிருந்து நீக்கப்பட்டிருந்தேன்.

https://telegram.me/aedahamlibrary

என் மனங்கவர்ந்த வேலையை நான் இழந்திருந்தது குறித்து நான் மிகுந்த அவமானம் கொண்டேன். அது என்னை மேலும் மோசமான நிலைக்குத் தள்ளியது. சில ஆண்டுகளுக்கு முன்பு நான் சந்தித்திருந்த ஒரு பெண்ணுடைய வீட்டில் நான் அவளோடு சேர்ந்து வாழத் தொடங்கினேன். இறுதியில், ஸ்மோக்கி போன்ஸ் உணவகத்தில் எனக்கு ஒரு வேலை கிடைத்தது. வாரத்திற்கு ஐம்பதிலிருந்து அறுபது மணிநேரம் நான் அங்கு ஓர் அடிமைபோல உழைத்தேன். எனக்கு அந்த வேலை பிடித்திருந்தபோதிலும், மல்யுத்தத்தை என்னால் மறக்க முடியவில்லை. என்னுடைய நண்பன் பேட்டிற்கு என்னால் அங்கு வேலை வாங்கிக் கொடுக்க முடிந்தது எனக்குச் சிறிது ஆறுதலைக் கொடுத்தது. நாங்கள் இருவரும் எங்களுடைய மல்யுத்தக் கனவுகளையும் எங்களுடைய தோல்விகளையும் பற்றி அடிக்கடிப் பேசினோம்.

நான் மெல்ல மெல்ல மதுவுக்கும் புகையிலைக்கும் அடிமையானேன். அவை என் வாழ்க்கையை மிக மோசமான ஒரு வழியில் கட்டுப்படுத்தத் தொடங்கின.

வேலை முடிந்து தினமும் இரவில் நான் ஒரு பாட்டில் ‘வோட்கா’ மதுவை வாங்கிக் கொண்டு வந்து குடிக்கத் தொடங்கினேன். துவக்கத்தில் அது தீங்கற்றதுபோலத் தெரிந்தது. ஏனெனில், நான் என் காதலியோடு சேர்ந்து குடித்துக் கொண்டிருந்தேன். ஆனால் நாங்கள் பிரிந்தபோது, என் நிலைமை மேலும் தாழ்ந்தது. எனக்கு என் மல்யுத்த வேலையும் இல்லை, என் காதலியும் இல்லை. அவளுடைய பெரிய, அழகான வீட்டில் வாழ்ந்து கொண்டிருந்த நான், ஒரு தொலைக்காட்சியும், ஒரு மலிவான கட்டிலும், என் காதலி எனக்குக் கடனாகக் கொடுத்திருந்த ஒரு சோபாவும் மட்டுமே இருந்த, ஒரே ஒரு பெரிய அறையை மட்டுமே கொண்ட ஒரு சிறிய வீட்டில் குடியேறினேன். என் நிலைமை குறித்து நான் மிகவும் அவமானமாக உணர்ந்ததால் நான் என் பெற்றோரிடம் பேசுவதைத் தவிர்த்தேன். கிட்டத்தட்ட

https://telegram.me/aedahamlibrary

இரண்டு ஆண்டுகளாக நான் என் பெற்றோரின் வீட்டிற்குச் செல்லவில்லை.

நான் வாழ்ந்து கொண்டிருந்த விதத்தைக் கண்டு பேட் உண்மையிலேயே கவலை கொண்டான். அவனுடைய காதலியும் அப்போது அவனைவிட்டுப் பிரிந்து சென்றுவிட்டிருந்ததால், நாங்கள் வேலை செய்த இடத்திற்கு அருகிலேயே எங்களுக்குக் கட்டுப்படியாகக்கூடிய ஒரு சிறிய வீட்டைக் கண்டுபிடிப்பதென்று நாங்கள் தீர்மானித்தோம். என்றேனும் ஒருநாள் எங்களுடைய மல்யுத்தக் கனவை எங்களால் பின்தொடர முடியும் என்று நாங்கள் நம்பினோம். ஒருநாள், நான் என் வேலையில் இருந்தபோது, நெடுங்காலமாக நான் சந்தித்திராத என்னுடைய பழைய நண்பர் ஒருவர் எங்கள் உணவகத்திற்கு வந்தார். அவர் என்னை என்னுடைய தற்போதைய நிலையில் பார்த்துவிட்டு மிகவும் வருந்தினார். அவர் அங்கிருந்து போவதற்கு முன்பாக, **இரகசியம்** என்று அழைக்கப்பட்ட ஒரு புத்தகத்தைத் தான் படித்திருந்ததாகவும், அது தனக்குப் பெரிதும் உதவியிருந்ததாகவும் என்னிடம் கூறினார். அவர் எனக்குச் சிறிது பணத்தைக் கொடுத்துவிட்டு, "இன்றே அந்தப் புத்தகத்தை வாங்கு. அது உனக்கு உதவும்," என்று கூறினார். எனவே, அதில் அப்படி என்னதான் இருந்தது என்று பார்ப்பதற்காக நான் அன்றே **இரகசியம்** புத்தகத்தை வாங்கினேன். அன்றிரவு நான் என் வீட்டிற்குச் சென்றவுடன், ஒரே மூச்சில் அப்புத்தகத்தைப் படித்து முடித்தேன். அது உடனடியாக என்னை ஆட்கொண்டது! **இரகசியம்** புத்தகத்தில் கூறப்பட்டிருந்த ஏராளமான கொள்கைகளை என்னுடைய குழந்தைப்பருவத்தில் நான் பயன்படுத்தியிருந்தேன் என்பதையும், நான் வளர்ந்த பிறகு, "நான் விரும்பும் எதையும் என்னால் செய்ய முடியும்" என்ற நேர்மறையான மனப்போக்கை நான் இழந்திருந்தேன் என்பதையும் நான் உணர்ந்து கொண்டேன். நான் அப்புத்தகத்தை மீண்டும் படித்துவிட்டு, **இரகசியம்**

https://telegram.me/aedahamlibrary

திரைப்படத்தின் டிவிடியை வாங்கினேன். என்னுடைய அனைத்து இலக்குகளையும் மனக்காட்சிப்படுத்துவதற்கு ஒரு மனக்காட்சிப் பலகையையும் நான் உருவாக்கினேன்.

பேட் அப்போது இரவு நெடுநேரம்வரை வேலை செய்து கொண்டிருந்தான். அவன் வீட்டிற்கு வந்தபோது, **இரகசியம்** புத்தகத்தைப் பற்றி நான் அவனிடம் கூறினேன். அவன் அதில் உடனடியாக ஆர்வம் கொண்டான். என்னுள் ஏதோ ஒன்று விழிப்படைந்திருந்ததை அவன் கண்டான் என்று நான் நினைக்கிறேன். அவன் அந்த வீடியோவைப் பார்த்தான், அப்புத்தகத்தைப் படித்தான், பிறகு தனக்கும் ஒரு மனக்காட்சிப் பலகையை உருவாக்கினான். எங்களுடைய ஒட்டுமொத்த வீட்டையும் எங்கள் எதிர்காலத்திற்கான ஒரு மனக்காட்சிப்படைப்புப் பொருளாக நாங்கள் மாற்றினோம். அவ்வீட்டில் எல்லா இடங்களிலும் உத்வேகமூட்டும் காட்சிகளையும் நாங்கள் ஒட்டி வைத்தோம்.

ஒரு மாதத்திற்குள், தன்னோடு வந்து சில நிகழ்ச்சிகளில் மல்யுத்தம் செய்யும்படி பேட் என்னை அழைத்தான். மீண்டும் மல்யுத்தத்தில் நுழைவதற்கு அது எனக்கு உதவும் என்று அவன் எண்ணினான். நான் அந்த அழைப்பை ஏற்றுக் கொண்டேன். நாங்கள் மீண்டும் பழையபடி உற்சாகமாக இருக்கத் தொடங்கினோம். அது குதூகலமூட்டுவதாகவும் நேர்மறையானதாகவும் இருந்தது. நானும் பேட்டும் ஓர் உணவகத்தில் இன்னும் நீண்டநேரம் வேலை செய்து கொண்டிருக்கிறோம், ஆனால் எங்களுடைய ஆற்றல் மாறியது.

ஒருநாள், **டெர்மினேட்டர் 2** திரைப்படத்தை நான் பார்த்துக் கொண்டிருந்தபோது, நான் அர்னால்டுபோல உணர்ந்தேன். நான் தோற்கடிக்கப்பட முடியாதவன் என்ற உணர்வு என்னுள் தலைதூக்கியது. டெர்மினேட்டர் வகையான கதாபாத்திரமாக இருப்பதற்கு நான் ஏராளமானவற்றை ஏற்கனவே என் வாழ்வில் எதிர்கொண்டிருந்ததை நான் அறிந்தேன். எனக்கு நானே

https://telegram.me/aedahamlibrary

இந்தப் புதிய அடையாளத்தைக் கொடுத்துக் கொண்டேன். இரகசியத்தைப் பற்றி எனக்குத் தெரிந்திருந்ததால், மீண்டும் மல்யுத்தக் களத்தில் இரண்டாவது சுற்றுக்கு நான் தயாரானேன்.

சுருக்கமாகக் கூற வேண்டுமென்றால், என்னுடைய பழைய முதலாளிகள் என் அர்ப்பணிப்பைக் கண்டு வியந்தனர். விரைவில், என்னுடைய பழைய வேலை மீண்டும் எனக்குக் கிடைத்துவிட்டது. விரைவில், நான் பெரிய போட்டிகளில் என் முத்திரையைப் பதிக்கத் தொடங்கினேன். என் வாழ்வில் நான் அடைய விரும்பிய அனைத்தும் எனக்குக் கிடைத்தன.

என் வாழ்வில் இன்னும் என்னவெல்லாமோ நிகழ்ந்துள்ளன. ஆனால், ஒரு தொழில்முறை மல்யுத்த வீரனாக ஆக வேண்டும் என்ற ஒரு கனவைக் கொண்டிருந்த ரயன் ரீவ்ஸ் என்ற ஒரு பன்னிரண்டு வயதுச் சிறுவனைப் பற்றிய ஓர் உண்மைக் கதையின் சாராம்சம் இதுதான். அவன் அந்தக் கனவைத் தொலைத்தான், பிறகு இரகசியத்தைக் கண்டறிந்தான், தன் கனவை மீட்டெடுத்தான். இன்று அவன் உலகம் நெடுகிலும் ‘டபிள்யூ டபிள்யூ ஈ சூப்பர்ஸ்டார் ரைபேக்!’ என்று அழைக்கப்படுகிறான்!

பேட் இப்போது இரண்டு தொழில்முறை மல்யுத்த நிறுவனங்களையும் இரண்டு பயிற்சிப் பள்ளிகளையும் நடத்தி வருகிறான். அவன் தன் வாழ்வில் நம்புதற்கரிய விஷயங்களைச் சாதித்திருக்கிறான். ஏழு ஆண்டுகளுக்கு முன்பு நாங்கள் ஒரு சிறிய வீட்டில் மனச்சோர்வுடன் வாழ்ந்து கொண்டிருந்தோம். வாழ்க்கை எங்களைத் தோற்கடித்திருந்ததாக நாங்கள் நம்பினோம். இரகசியம் பற்றிய அறிவால் எவ்வளவு அற்புதங்களை நிகழ்த்த முடிகிறது என்பது வியப்பூட்டுவதாக இருக்கிறது.

**- ரயன் ஆர்., லாஸ் வேகஸ், நெவாடா, அமெரிக்கா**

https://telegram.me/aedahamlibrary

**ஆனந்தமாக இருப்பதுதான் நம்முடைய இயல்பான மனநிலை. எதிர்மறையான எண்ணங்களைச் சிந்திப்பதற்கும், எதிர்மறையான வார்த்தைகளைப் பேசுவதற்கும், வாழ்வில் அவலமாக உணருவதற்கும் அதிக ஆற்றல் தேவைப்படுகிறது. நல்ல எண்ணங்களும் நல்ல வார்த்தைகளும் நல்ல நடவடிக்கைகளும்தான் சுலபமான வழி. எனவே, அந்தச் சுலபமான வழியைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள்.**

**- இரகசியம் தினசரி போதனைகள்**

நீங்கள் விரும்புகின்ற அனைத்தையும் பெறுவது அகம்சார்ந்த ஒரு வேலை! வெளியுலகம் விளைவுகளின் உலகம். எண்ணங்களின் விளைவு அது. மகிழ்ச்சியான எண்ணங்களை எண்ணுங்கள், அவற்றில் மூழ்கித் திளைத்திடுங்கள். மகிழ்ச்சி, பேரானந்தம் ஆகிய உணர்வுகளை வெளிப்படுத்துங்கள். அவற்றை உங்களுடைய ஆற்றல் முழுவதையும் ஒன்றுதிரட்டிப் பிரபஞ்சத்திடம் அனுப்பி வையுங்கள். அப்போது, உண்மையிலேயே பூமியில் சொர்க்கத்தை நீங்கள் அனுபவிப்பீர்கள்.

https://telegram.me/aedahamlibrary

## உங்கள் வாழ்க்கையை மாற்றுவதற்கான திறவுகோல்கள்

- வாழ்க்கை வழங்கக்கூடிய அனைத்து நல்ல விஷயங்களையும் பெற நீங்கள் தகுதியானவர்தான். நீங்கள் ஒன்றை விரும்பினால், நீங்கள் அதைப் பெற வேண்டும் என்று பிரபஞ்சம் விரும்புகிறது.
- மற்றவர்கள் உங்களை எப்படி நடத்த வேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்களோ, உங்களை நீங்கள் அவ்வாறு நடத்துங்கள்.
- நீங்கள் உங்களைப் பற்றி எதிர்மறையாகச் சிந்தித்தால், எதிர்மறையான சூழல்களையே நீங்கள் உங்களிடம் கவர்ந்திழுப்பீர்கள்.
- நீங்கள் அகரீதியாக எத்தகைய உணர்வுகளை அனுபவித்துக் கொண்டிருக்கிறீர்களோ, வாழ்க்கை அப்படியே அவற்றை உங்களிடம் பிரதிபலித்துக் கொண்டிருக்கிறது.
- உங்கள் வாழ்வில் அனைத்துப் படைப்புகளும் உங்களுக்குள் இருந்துதான் தொடங்குகின்றன.
- நீங்கள் எத்தகைய வாழ்க்கையை வாழ வேண்டும் என்று நீங்கள் கனவு காணுகிறீர்களோ, அந்த வாழ்க்கையை முதலில் அகரீதியாக வாழுங்கள். அப்போது அது நிஜ உலகில் வடிவம் பெறும்.
- எல்லாமே உங்களுக்காகத்தான் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. ஆனால் சில சமயங்களில் உங்களுக்கு அப்படித் தோன்றாது.
- நீங்கள் எத்தகைய கடினமான சூழ்நிலையில் சிக்கியிருந்தாலும்கூட, எல்லாவற்றைக்

https://telegram.me/aedahamlibrary

குறித்தும் தொடர்ந்து நன்றியுடன் இருப்பது நீங்கள் அச்சூழ்நிலையிலிருந்து மீளுவதற்கான ஒரு வழியைக் கண்டுபிடிக்க உங்களுக்கு உதவும்.

- உங்களுக்கு என்ன நிகழுகிறது என்பது இங்கு பிரச்சனையல்ல. மாறாக, உங்கள் வாழ்வில் நிகழுகின்ற விஷயங்களுக்கு நீங்கள் எவ்வாறு செயல்விடை அளிக்கிறீர்கள் என்பதுதான் இங்கு முக்கியம்.
- உங்கள் வாழ்வில் எல்லாவற்றையும் மாற்றுவதற்கு இப்போதுகூடக் காலம் கடந்துவிடவில்லை. நீங்கள் சிந்திக்கும் விதத்தையும் நீங்கள் உணரும் விதத்தையும் நீங்கள் மாற்றினால் போதும்.

https://telegram.me/aedahamlibrary



https://telegram.me/aedahamlibrary

# நன்றியுரை

சிறப்புமிக்க இந்த நூலுக்கு ஆதரவையும் பங்களிப்புகளையும் வழங்கியுள்ள பின்வரும் மக்களுக்கு என்னுடைய உண்மையான நன்றியை வெளிப்படுத்துவதை நான் ஒரு மிகப் பெரிய கௌரவமாகக் கருதுகிறேன்:

தங்களுடைய கதைகள் மற்றவர்களுக்கு உதவும், அவர்களை ஊக்குவிக்கும் என்ற ஒரே நோக்கத்தில் தங்களுடைய 'இரகசியம் கதைகளை' எங்களோடு தாராளமாகப் பகிர்ந்து கொண்ட அற்புதமான மக்களுக்கு நான் என் இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். தங்களுடைய 'இரகசியம் கதைகளை' எங்களுடைய வலைத்தளத்தில் பகிர்ந்து கொண்டுள்ள பல்லாயிரக்கணக்கான மக்களுக்கும் என் மனமார்ந்த நன்றி!

இப்புத்தகம் ஒரு குழு முயற்சியினால் விளைந்த ஒரு படைப்பு. அதனால்தான், துவக்கத்திலிருந்து முடிவுவரை இந்த வேலை மிகவும் குதூகலமூட்டுவதாக இருந்தது. இரகசியம் குழு உறுப்பினர்களின் அர்ப்பணிப்பிற்காகவும் விலை மதிப்பிடப்பட முடியாத பங்களிப்புகளுக்காகவும் நான் அவர்களுக்கு நன்றி கூற விரும்புகிறேன். நாங்கள் ஒரு சிறு குழுதான், ஆனால் அதில் இருப்போர் மிகுந்த திறமைசாலிகள். தயாரிப்பாளர் பால் ஹேரிங்டன், பதிப்பாசிரியர் ஸ்கை பைர்ன் ஆகியோர் இப்புத்தகத்தை உருவாக்குவதில் என்னோடு சேர்ந்து மிகக் கடுமையாக உழைத்தனர். இதில் என் பங்களிப்புக்கு இணையாக அவர்கள் பங்களித்துள்ளனர். முதன்மை நிதி அதிகாரியான

https://telegram.me/aedahamlibrary

கிளெண்டா பெல், டான் சைக், சமூக வலைத்தள ஒருங்கிணைப்பாளரான ஜாஷ் கோல்டு, ‘இரகசியம் கதைகள்’ வலைத்தளத்தின் பதிப்பாசிரியரும் என் உயிர்த்தோழியுமான மார்சி கோல்டன்-கிரில்லி ஆகிய அனைவருக்கும் என் நன்றி.

இப்புத்தகத்தின் அட்டைக்கும் உள்வடிவமைப்பிறகும் காரணமான, **இரகசியம்** குழுவின் படைப்பாற்றல்மிக்க ஓவியக் கலைஞரான நிக் ஜார்ஜுக்கு என் நன்றி. இப்புத்தகத்தின் அட்டையை வடிவமைப்பதில் நிக்குடன் இணைந்து பணியாற்றிய, ‘ஏட்ரியா புக்ஸ்’ நிறுவனத்தின் கலை இயக்குநரான ஆல்பர்ட் ரேங்கிற்கும் என் நன்றி.

எங்களுடைய பதிப்புக் கூட்டாளிகளான சைமன்-ஷூஸ்டர் பதிப்பகத்திற்கும், குறிப்பாக ஏட்ரியா புக்ஸ் குழுவினருக்கும் என் நன்றி. ஏட்ரியா புக்ஸ் நிறுவனத்தின் தலைவரும் சக ஆஸ்திரேலியரும் சிறப்புக் கொண்ட மனிதருமான ஜூடித் கர்ருக்கு என் நன்றி. ஏட்ரியா புக்ஸ் நிறுவனத்தின் தயாரிப்புக் குழுவில் இடம்பெற்றிருந்த பின்வரும் நபர்களுக்கும் என் நன்றி: லிசா கீம், டார்லீன் டிலைலோ, ராகேஷ் சத்யால், லோன் லே, கிம்பர்லி கோல்டுஸ்டைன், பெயிஜ் லைட்டில், ஜிம் தியல், இஸோல்டு சாவர், இ. பெத் தாமஸ், கார்லி சோமர்ஸ்டைன், டானா ஸ்லோஆன், எழுத்தாளர் ஜூடித் கெர்ன். உங்கள் எல்லோருக்கும் மிக்க நன்றி!

சைமன்-ஷூஸ்டர் பதிப்பகத்தின் தலைவரான கேரலைன் ரைடிக்கு என் நன்றி!

எங்களுடைய சட்டப் பிரிவைச் சேர்ந்த போனி எச்கெனாஸி, ஜூலியா ஹேயி, கிரீன்பர்க் கிளஸ்கர் நிறுவனத்தைச் சேர்ந்த ஜெஸ் டேவியர்,

https://telegram.me/aedahamlibrary

ஏட்ரியா புக்ஸ் நிறுவனத்தைச் சேர்ந்த எலிசா எம். ரிவ்லின் ஆகியோருக்கு என் நன்றி.

கடந்த பத்து ஆண்டுகளுக்கும் மேலாக, பல ஆன்மிக ஆசான்கள் மற்றும் பாரம்பரியங்களிடமிருந்து, என் வாழ்க்கையை மாற்றிய பல சிந்தனைகளையும் அறிவுத் தெளிவையும் நான் பெற்றுள்ளேன். குறிப்பாக, என் நண்பரும் என் ஆலோசனையாளருமான, ரோஸ் கிராஸ் ஆர்டரைச் சேர்ந்த ஏஞ்சல் மார்ட்டின் வெலயோஸுக்கும், இப்புத்தகத்தின் உருவாக்கத்தின்போது என்னுடைய ஆன்மிகப் புரிதல்மீது தாக்கம் ஏற்படுத்திய ஆசான்களான செயிலர் பால் ஆடம்சன், ராபர்ட் ஆடம்ஸ், டேவிட் பிங்காம் ஆகியோருக்கு என் நன்றி.

என்னுடைய அன்பான குடும்பத்தைச் சேர்ந்த பின்வரும் நபர்களுக்கு நான் நன்றி கூற விரும்புகிறேன்: என்னுடைய மகள்கள் ஹெய்லி பைர்ன் மற்றும் ஸ்கை பைர்ன்; என் அழகான சகோதரிகள் பாலீன் வெர்னன், கிளெண்டா பெல், ஜேன் சைல்டு; பீட்டர் பைர்ன், ஓகு டென், கெவின் ‘கிட்’ மெக்கெமி, பால் குரோனி; என்னுடைய அற்புதமான பேரக்குழந்தைகள் சவானா மற்றும் ஹென்லி. இவர்கள் ஒவ்வொருவரையும் என் வாழ்வில் பெற்றிருப்பதற்கு நான் பெரிதும் ஆசீர்வதிக்கப்பட்டுள்ளேன்.

ஆன்மிக உண்மைகளைப் பற்றி விவாதிப்பதற்கு நான் கொண்டுள்ள தனிப்பெரும் விருப்பத்தை நிறைவேற்றுகின்ற என்னுடைய நீண்டகாலத் தோழிகள் மற்றும் தோழர்களுக்கு என் நன்றி: எலைன் பேட், மார்க் வீவர், ஃபிரெட் நால்டர், ஃபாரஸ்ட் கோல்ப், ஆன்ட்ரியா கெயர், மற்றும்

https://telegram.me/aedahamlibrary

கேத்தி கேப்லன். என் தொழிலின் மூலம் எனக்குக் கிடைத்தப் பல தொடர்புகள் மிக இனிமையானவை. பின்வரும் நபர்கள் என் வாழ்க்கையை அதிக அற்புதமானதாக ஆக்குகின்றனர்: ராபர்ட் கோர்ட், கெவின் மர்ஃபி, நெகின் ஜான்ட், டேனி பயோலா, என்னுடைய தனிப்பட்ட உதவியாளரான பமீலா வேன்டர்வார்ட், ஐலீன் ரேன்டால், மற்றும் எலீஜியா டுரூஜில்லோ.

இறுதியாக, என் மகள் ஸ்கையின் உதவி இல்லாமல் போயிருந்தால், இப்புத்தகத்தை இப்போது நீங்கள் உங்கள் கையில் பிடித்துக் கொண்டிருக்க மாட்டீர்கள். அவள் இப்புத்தகத்தைத் திருத்தியமைத்ததோடு மட்டுமல்லாமல், ‘இரகசியம் கதைகளை’ ஒரு புத்தகமாகக் கொண்டுவர வேண்டும் என்ற யோசனையை முன்வைத்ததும் அவள்தான். இதன் தொடக்கத்திலிருந்து முடிவுவரை அதன் ஒவ்வோர் அம்சத்திலும் அவள் உற்சாகமாகப் பங்களித்தாள். நாங்கள் வெளியிட்டுள்ள மிகச் சிறந்த புத்தகங்களில் இதுவும் ஒன்று. ஏனெனில், இது உங்களைப் போன்ற மக்களிடமிருந்து வந்துள்ளது.

https://telegram.me/aedahamlibrary

# பங்களித்துள்ளவர்கள் குறித்த விபரம்

## ஆப்பிரிக்கா

**ஆலன், நைரோபி, கென்யா**
சம்பளம் இருமடங்கானது!

## ஆசியா

**டீனா, ஹாங்காங்**
நான் தோற்கடிக்கப்பட முடியாதவளாக ஆனேன்
**எல். லால், புனே, இந்தியா**
அபரிமிதமான அற்புதங்கள்!
**சமிதா பி., மும்பை, இந்தியா**
குழந்தை பாக்கியம்
**என்னி, கோலா லம்பூர், மலேசியா**
இது ஓர் அதிசயம்
**டேரல் பி., சிங்கப்பூர்**
நம்பிக்கை

## ஆஸ்திரேலியா மற்றும் நியூ சிலாந்து

**பெலின்டா, மெல்போர்ன், ஆஸ்திரேலியா**
என்னுடைய ஒரே வாய்ப்பு
**ஜான் பி., சிட்னி, ஆஸ்திரேலியா**
ஸ்டீவி வொன்டருடன் இணைந்து பாடுதல்
**கேரன் சி., சிட்னி, ஆஸ்திரேலியா**
இரகசியம் எவ்வாறு என் வாழ்க்கையை விரிவுபடுத்தியது
**ஆலிவியா எம்., கேன்பெர்ரா, ஆஸ்திரேலியா**
நன்றியுணர்வு எவ்வாறு என்னுடைய உயிரைக் காப்பாற்றியது!

https://telegram.me/aedahamlibrary

**கிளென்டா, நியூ சிலாந்து**
என் அருமைத் தாயாருக்கு

## கனடா

**சார்லட் பி., ஒன்டாரியோ, கனடா**
பல இழப்புகளிலிருந்து மீளுதல்
**ஜெஸிக்கா டி., வான்கூவர், பிரிட்டிஷ் கொலம்பியா, கனடா**
அற்புதமாக குணமடைந்தேன்
**டல்லாஸ் சி., வின்னிபெக், மேனிடோபா, கனடா**
இரண்டே வாரங்களில் ஒரு புதிய வாழ்க்கை
**கிம் எஸ்., கனடா**
என்னுடைய மாபெரும் கனவுகள் நனவாயின!
**திருமதி. அபரிமிதம், ஒட்டாவா, ஒன்டாரியோ, கனடா**
உங்களுடைய சொந்தக் காசோலையை எழுதுங்கள்
**ரோலன்ட் சி., நனாய்மோ, கனடா**
மனமிருந்தால் மார்க்கமுண்டு!
**தியா சி., விக்டோரியா, கனடா**
நடுத்தெருவில் இருந்த என்னை மீட்ட இரகசியம்

## ஐரோப்பா

**ஆன்ட்ரியா, அயர்லாந்து**
கற்பனையின் சக்தி
**எவாஞ்சலியா கே., ஏதென்ஸ், கிரீஸ்**
எங்கிருந்தோ வந்து குதித்தக் காதல்!
**மிக்கி, சுவீடன்**
ஒரு புதிய துவக்கம்!
**நியா, ஜெர்மனி**
நான் நம்புகிறேன்!

https://telegram.me/aedahamlibrary

**சப்ரீனா, டென்மார்க்**
மன்னித்தலின் மூலம் குணமாதல்
**டிரேசி, கனேரி தீவுகள்**
இரகசியம் என் உயிரைக் காப்பாற்றியது!

## மத்தியக் கிழக்கு

**மீரே டி., லெபனான்**
என் மனங்கவர்ந்த வேலையை நான் கவர்ந்திழுத்தது எப்படி

## இங்கிலாந்து

**எமிலி, லண்டன், இங்கிலாந்து**
சிக்கலான மகப்பேறு சுபமாக முடிந்தது
**ஹெலன், லிவர்பூல், இங்கிலாந்து**
பிரபஞ்சத்திடமிருந்து வந்த மின்னஞ்சல்கள்
**ஜேன் ஜே., ஆஸ்காட், பெர்க்ஷயர், இங்கிலாந்து**
சிறந்த விளைவு உருவாகும் என்று நம்புதல்
**கே., லண்டன், இங்கிலாந்து**
துணிச்சலான திறன் தேர்வு
**கேட் எல்., லண்டன், இங்கிலாந்து**
ஒரு புதிய துவக்கம்
**மெலிசா பி., எஸ்ஸெக்ஸ், இங்கிலாந்து**
என் தோழியிடமிருந்து ஒரு சிறு உதவி
**ரெபெக்கா டி., பிர்மிங்காம், இங்கிலாந்து**
உயிர் மீட்டெடுக்கப்பட்டது
**ரெபெக்கா, லண்டன், இங்கிலாந்து**
ஒரு வீட்டை எவ்வாறு விற்பது
**ஜீ, லண்டன், இங்கிலாந்து**
ஒரு வாழ்க்கைத்துணைவருக்காகக் காத்திருக்கும் பெண்களுக்கு!

https://telegram.me/aedahamlibrary

**அமெரிக்கா**

**ஏமி, மேக்னோலியா, ஆர்கென்சா**
என் தந்தையுடனான சமரசம்
**டயானா ஆர்., ஃபீனிக்ஸ், அரிசோனா**
உடனடிக் கர்மவினைப் பயன்
**அலெக்ஸ், லாஸ் ஏஞ்சலீஸ், கலிபோர்னியா**
இரகசியம் என் குடும்பத்தின் வாழ்க்கையை மாற்றியது
**அம்பிகா என்., லாஸ் ஏஞ்சலீஸ், கலிபோர்னியா**
ஒரு கிரீன் கார்டு அதிசயம்
**செல்ஸீ, சான் பிரான்சிஸ்கோ, கலிபோர்னியா**
பணம் சுலபமாகக் கிடைத்துக் கொண்டே இருக்கிறது!
**எலிசபெத் எம்., சான்டியாகோ, கலிபோர்னியா**
நன்றியுடன் இருத்தல் என்றால் என்ன என்பதைப் புரிந்து கொண்டேன்
**ஹைடி டி., சீக்கோ, கலிபோர்னியா**
மகிழ்ச்சியின் சக்தி
**கே., கலிபோர்னியா**
கோழிக் கழிவிலிருந்து கோழி சூப்
**கேத்தி, சான் பிரான்சிஸ்கோ, கலிபோர்னியா**
காலி நாற்காலிகள்
**லார்னி ஆர்., கலிபோர்னியா**
ஒரு சிறிய விஷயம்
**லாரென் டி., லகூனா கடற்கரை, கலிபோர்னியா**
என்னுடைய அதிசய இதயம்
**லூசின்டா எம்., கலிபோர்னியா**
பெரிய கட்டி மறைந்துவிட்டது!
**டேமி எச். ஃபுல்லர்டன், கலிபோர்னியா**

https://telegram.me/aedahamlibrary

காதலின்மீது ஒருபோதும் நம்பிக்கை இழக்காதீர்கள்

**டிரிசியா, பிரென்ட்வுட், கலிபோர்னியா**

ஒருமுறை கேளுங்கள், பிறகு கவலையை விட்டுத்தள்ளுங்கள்

**நைட் ஏ., கொலொராடோ ஸ்பிரிங்ஸ், கொலொராடோ**

அது ஓர் அதிசயம் என்று மருத்துவர்கள் கூறுகின்றனர்

**ஜேன் ஜி., புவெப்லோ, கொலொராடோ**

நம்புதற்கரிய ஓர் ஆச்சரியம்

**அமேன்டா, கனெட்டிகட்**

ஒரு ‘பென்னி’ நாணயத்தைக் கண்டுபிடித்தது எல்லாவற்றையும் மாற்றியது

**ஏஞ்சி, ஃபோர்ட் லாடர்டேல், ஃபுளோரிடா**

எதிர்மறை மனப்போக்கு மறைந்தது

**அனெட், ஃபுளோரிடா**

ஒவ்வொரு வேலையிலும் நான் துன்புறுத்தப்பட்டேன்

**நேட்டலி எஃப்., சவானா, ஜார்ஜியா**

தேதியைச் சரிபார்த்துக் கொள்ளுங்கள்

**பேட், ஜார்ஜியா**

சொர்க்கத்திலிருந்து வந்த பணம்

**லின்ட்ஸி, சிக்காகோ, இல்லினாய்**

பாசாங்கு செய்தல்

**கெல்லி, இன்டியானா**

வேறு வழி எதுவும் இல்லாமல் போகும்போது, இரகசியம் உதவிக்கு வருகிறது!

**யானா எஃப்., பால்டிமோர், மேரிலேன்ட்**

அந்த வேலை

https://telegram.me/aedahamlibrary

**ஜேசன், மிச்சிகன்**
நம்புவதை நான் நிறுத்தியிருந்தேன். பின்னர் ஒருநாள். . .
**ஜென்னி எல்., டெட்ராய்ட், மிச்சிகன்**
வாழ்வில் அதளபாதாளத்திலிருந்து நான் மீண்டேன்
**மார்த்தா, மிஸ்ஸிஸிப்பி**
பாப்பை
**ரயன் ஆர்., லாஸ் வேகஸ், நெவாடா**
இரகசியத்துடனான மல்யுத்தம்
**கேரல் எஸ்., சைரகியூஸ், நியூ யார்க்**
அதிர்ச்சி வைத்தியம்
**ஹேனா, நியூ யார்க், நியூ யார்க்**
என் வாழ்வின் மிகச் சிறந்த ஆண்டு
**ஹெதர் எம்., பஃபலோ, நியூ யார்க்**
புதிய வீடு, புதிய குழந்தை
**கேட், லாங் ஐலேன்ட், நியூ யார்க்**
எது உங்களை நம்ப வைக்கிறது?
**மரியா, நியூ யார்க்**
என்னுடைய இருபத்தைந்தாவது வயதில் என் புத்தகம் பிரசுரிக்கப்பட்டது!!!
**ஃபிரான்ஸி கே., டாயில்ஸ்டவுன், பென்சில்வேனியா**
கைலின் இதயம்
**ஜீனா, பிளைமவுத், பென்சில்வேனியா**
இரகசியம் எவ்வாறு எங்களை இடம்பெயர்த்தது
**டுரெல் பி., டல்லாஸ், டெக்சாஸ்**
பரிசு
**ஏவரி எச்., சால்ட் லேக் சிட்டி, யூட்டா**
விலை மதிப்பிடப்பட முடியாத ஒரு படிப்பினை

https://telegram.me/aedahamlibrary

**ஆஷ்லி எஸ்., சியாட்டில், வாஷிங்டன்**
பயணம் குறித்த நீண்டகாலக் கனவுகள்
**லோரெட்டா, வாஷிங்டன்**
வெற்றிக் கூட்டணி

https://telegram.me/aedahamlibrary

## இரகசியத்தைப் பின்தொடருங்கள்

இன்ஸ்டாகிராம்: @thesecret365

முகநூல்: facebook.com/thesecret/

டுவிட்டர்: @thesecret